# சமூக ஒளி

1988/1989

இதழ் 1

சமூக [illegible]ஞ்ஞான மன்றம்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

# சமூக ஒளி

1988 / 1989

இதழ் 1

SOCIAL SCIENCE UNION
VIRTUE IS KNOWLEDGE
UNIVERSITY OF JAFFNA

இதழாசிரியர்கள்
இரா. நெடுஞ்செழியன்
சு. கௌரி

சமூக விஞ்ஞான மன்றம்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

# இதழின் ஒளியில்........


| | | | பக்கம் |
|---|---|---|---|
| 1. | யாழ்ப்பாணக் குடாநாட்டிற்கு ஒரு சுற்றுப் புகையிரதப் பாதை | ...பொ. பாலசுந்தரம்பிள்ளை ... | 1 |
| 2. | சனசவிய ஒரு பொருளாதாரக் கண்ணோட்டம் | ... க. தெய்வேந்திரம் ... | 7 |
| 3. | சமூக நலன் குறித்து நிறை போட்டிச் சந்தை தனியுரிமைச் சந்தை ஆகிய வற்றிற் கிடையேயான ஓர் ஒப்பீட்டு ஆய்வு | ... ந. பேரின்பநாதன் ... | 17 |
| 4. | பத்திர(ம்) பண்பு | ... ச. தேவதாஸ் ... | 27 |
| 5. | 'ரூகிங்' பற்றிய பிரச்சனைகள் ஓர் அறிமுகம் | ... இ. இராஜ்மோகன் ... | 29 |
| 6. | இலங்கையில் திறைசேரி உண்டியல்களின் வளர்ச்சியும், போக்கும் | ... பாமதி. இராஜதுரை ... | 36 |
| 7. | இந்தியத் தோட்டத் தொழிலாளரும் சர்வசன வாக்குரிமையும் | ... ச. சத்தியசீலன் ... | 44 |
| 8. | வெளிநாட்டு உதவி உதவியல்ல; வர்த்தகம் / பொறி | ... தி. யசோதை ... | 50 |
| 9. | இலங்கையின் வடக்கு கிழக்குத் தமிழர்கள் மத்தியில் அடையாளம் காணக்கூடிய சாதியமைப்பின் பரிமாணம் பற்றிய ஒரு நோக்கு | ... அ. விஜயகிருஷ்ணன் ... | 56 |
| 10. | அரசு பற்றிய மாக்சிச கோட்பாடு | ... கு. ரஞ்சகுமார் ... | 66 |
| 11. | இலங்கையில் திட்டமிடலும் பொருளாதார அபிவிருத்தியும் | ... வி. நித்தியானந்தன் ... | 79 |
| 12. | உரும்பிராய் மக்களின் வாழ்க்கைத் தரமும் அடிப்படைத் தேவைகளும் ஒரு சமூக பொருளாதார மதிப்பீடு | ... நந்தினி. சிவசுப்பிரமணியம் ... | 92 |

யாழ்ப்பாணப் பல்கலைக் கழக துணைவேந்தர்

பேராசிரியர்

**அ. துரைராஜா அவர்கள்**

வழங்கிய

# வாழ்த்துச் செய்தி

*யாழ்ப்பாணப் பல்கலைக்கழகச் சமூக விஞ்ஞான மன்றம் 'சமூக ஒளி' என்னுஞ் சஞ்சிகை ஒன்றினை வெளியிடும் இத்தருணத்தில் அதற்கு எனது வாழ்த்துச் செய்தியினை அனுப்புவதில் மகிழ்வடைகின்றேன்.*

*இப்பிரதேசத்தின் சமூக, பொருளாதார, அரசியல், பண்பாட்டு வளர்ச்சி ஆகியன பற்றிய ஆய்வுகளையும் அவை சார்ந்த பிற வேலைகளையும் மேற்கொள்ள வேண்டியது பல்கலைக்கழகத்தினது பொறுப்பாகும், பொருளியல், அரசறிவியல் ஆகிய பிரிவு மாணவர்களும், ஆசிரியர்களும் இணைந்து எமது சமூக வளர்ச்சி சார்பான ஆய்வுத்திட்டங்களில் ஈடுபட்டிருப்பது கண்டு மிகவும் களிப்புறுகின்றேன். இவர்கள் இவ்வாறு மேற்கொண்ட ஆய்வுகளுட் சில இச் சஞ்சிகையில் இடம் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.*

*இன்னல் மிகுந்த இன்றைய கால கட்டத்திலும் அயராது உழைத்து இச்சஞ்சிகையை வெளியிடும் சமூக விஞ்ஞான மன்றத்தினருக்கு எனது பாராட்டுக்கள்.*

*தமது முயற்சிகள் அனைத்திலும் இக்கழகத்தினர் வெற்றியீட்ட எனது வாழ்த்துக்கள்,*

*Standing:* Miss. T. Vasanthaluxmy, Miss. K. Menaha, MR. M. Sundaralingam
*[L-To R]* MR. S. Geethapongalan (Asst. Secretary) MR. N. Thamilchelvan, MR. K. Ithayasivadas, MR. A. Thiruloganathan, MR. R. Nedunchelian (Junior Treasurer) Miss. C. Chanthira Miss. N. Jeyanthy.

*Seated;* MR. P. Maththaspillai (Joint Editor) MR. K. Theivendran (Vice President)
*[L-To-R]* Miss. K. Shanthini (Secretary) Prof A. Thurairajh (Vice Chanceller) MR. S. Sathiaseelan (President) Prof. S. Balakrishnan (Patron) Dr. V. Nithiyananthan (Senior Treasurer) Miss. S. Selvarany (Joint Editor)

*Absent:* Miss. P. Hemalatha, MR. S. Thiruchelvanathan

The Committee Members Of The Social Science Union - 1987 / 1988



University Of Jaffna

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக பொருளியல்.
அரசறிவியல் துறைத் தலைவரும்,
சமூக விஞ்ஞான மன்றப் பெரும் பொருளாளருமான
**கலாநிதி வி. நித்தியானந்தன் அவர்கள்**
*வழங்கிய*

# பாராட்டுரை

யாழ்ப்பாணப்பல்கலைக்கழகத்தில் சமூகவிஞ்ஞானம் கற்கும் மாணவர்கள் தமது மேம்பாட்டுக்கான மன்றம் ஒனறில்லாத குறையினை சில காலமாகவே உணர்ந்திருந்தபோதும் அதனைத்தீர்ப்பதற்குரிய வாய்ப்புக் கடந்த கல்வியாண்டில் தான் கிடைத்தது. அதன் பெறுபேருக உருவாக்கப்பட்டதே சமூகவிஞ்ஞான மன்றமாகும். மன்றம் ஆரம்பிக்கப்பட்டு இருவருடங்கட்குள் தனது பயன்பாட்டை நனகு வெளிப்படுத்தியுள்ளது. அதன் இன்னெரு பரிமாணமாகவே "சமூகஒளி" என்ற பெயரால் சஞ்சிகை ஒன்றை வெளியிட மன்றம் தீர்மானித்தது. சமூகவிஞ்ஞானமன்றம் உருவாக வேண்டுமென்பதில் அக்கறை கொண்டிருந்தவனென்ற வகையிலும், அதன் முதலாவது சிரேஷ்ட பொருளாளன் என்ற வகையிலும அத்தீர்மானம் நிறைவேறுவது குறித்து மகிழ்ச்சியும் மன நிறைவும் அடைகின்றேன்.

இலங்கைத் தமிழ் மக்களைச் சூழ்ந்து கொண்டுள்ள பல்வேறு நெருக்கடிகளுக்குமான தீர்வுகள் சமூகமட்டத்திலிருந்து தான் பிறக்க வேண்டியுள்ளது. இந்நிலையிற் பல பிரச்சனைகள் கூடியளவு தெளிவாக்கப்பட வேண்டிய தேவையும், ஒளியூட்டப்பட வேண்டியதேவையும் உள்ளது. அத்தகைய ஒரு குறிக்கோளுடன் தான் 'சமூகஒளி' தனது கடமையைத் தொடங்குகின்றது. குறிக்கோள் முன்னுரிமையுடைய தொன்ருயினும் அதனை நடைமுறைப்படுத்துவதற்கு துணையாக இதழை வெளிக்கொணருவதென்பது தரப்பட்ட சூழ்நிலைகளின் கீழ் ஒரு பெரும் சவாலென்றே கூறலாம். அதனை மனமுவர்ந்து ஏற்று இச்சஞ்சிகையின் முதலாவது இதழை வெளியிடுவதில் வெற்றி கண்ட மன்றச்செயற்குழுவிற்கும் குறிப்பாக இதழாசிரியருக்கும் எனது பாராட்டுக்கள்.

'சமூக ஒளி' வருடாவருடம் ஒளிபரப்புவதற்கு எனது வாழ்த்துக்கள்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகப் பேராசிரியரும்,
சமூக விஞ்ஞான மன்றத்தின் காப்பாளரும்,
கலைப் பீடாதிபதியுமாகிய

**திரு. என். பாலகிருஷ்ணன் அவர்கள்**

*வழங்கிய*

# ஆசிச் செய்தி

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் அநேகமான மாணவர்கள் சமூக விஞ்ஞான பாடங்களைக் கற்று வருகின்றனர். இப்பின்னணியில், சமூக, விஞ்ஞான மன்றத்தின் பங்களிப்பு முக்கியத்துவம் பெறுகின்றது.

இம் மன்றத்தின் பல வகையான பணிகளில் ஒரு சஞ்சிகையினை முதன் முறையாக வெளியிட முன்வந்தது வரவேற்கத்தக்கது; பாராட்டுக்குரியது. 'சமூக ஒளி' மாணவர்களுக்கும் பயன்படக்கூடிய கட்டுரைகளைக் கொண்டிருப்பதனை அறிய முடிகின்றது.

சமூக விஞ்ஞான மன்றத்தின் இவ்வாறான பணிகள் தொடர்ந்து செல்வதற்கு எனது நல்லாசிகள்.

# மன்றத்தலைவரின் இதயத்திலிருந்து .......

பல்கலைக்கழக வாழ்வில் சந்தர்ப்பம், கடமை, பொறுப்பு என்ற வகையிலும் மன்றத்தலைவர் என்ற நிலையிலும் 'சமூக ஒளி' ஊடாக உங்களுடன் கருத்துப் பரிமாறுவதில் மகிழ்ச்சியடைகிறேன்.

பல்கலைக் கழகம் ஆரம்பிக்கப்பட்ட காலம் தொடக்கம் சமூக விஞ்ஞானத் துறை தொடர்பான கற்கைநெறிகள் இருந்தபோதும், மாணவர்களை அமைப்பு ரீதியாக வழிநடாத்த அமைப்புக்கள் இல்லாத நிலையினை இம்மன்றம் ஓரளவு நிவர்த்தி செய்கின்றதெனலாம்.


மன்றத்தைத் தாபிப்பதற்கு பொருளியற்துறைத் தலைவர் கலாநிதி வி. நித்தியானந்தன் அவர்களின் பங்கும் பொருளியல் அரசறிவியற் துறையின் பங்கும் மதிப்பிடற்கரியது. அத்துடன் எங்கள் சிரேஸ்ட மாணவர்கள் எடுத்த முயற்சிகளும் அவர்களது பங்குகளும் பணிகளும் விரைவான இவ்வளர்ச்சிக்கு வழிசமைத்தது என்பது பெருமைக்குரியதே.

மிகச்சிறுவயதுடைய இம்மன்றம் முதலாவது நிர்வாகக்குழுவிடமிருந்து, இவ் இரண்டாவது நிர்வாகக்குழுவிடம் ஒப்படைக்கப்பட்ட காலத்தில் இருந்து தன்னாலியன்ற பணிகளைச் செய்துள்ளதென்பதையிட்டு மனநிறைவடைகின்றேன். இதற்குப் பெரும் பொருளாளரின் வழிகாட்டலும் முதல நிர்வாகக்குழுவினர் கற்றுத்தந்த அனுபவங்களும் எம் மன்ற உறுப்பினர்களின் ஒத்துழைப்பும் முயற்சியுமே காரணமாகும்.

மாணவர்களின் ஆளுமை வளர்ச்சிக்கு எமது மன்றம் பல்வேறு சந்தர்ப்பங்களை வழங்கி வருகின்றது. எமது செயற்திட்டங்கள் ஒவ்வொன்றும் மாணவர்கட்கு சமூக நோக்கினை ஏற்படுத்துவனவாகவே உள்ளன என்பதில் ஐயமில்லை. அதனை நிரூபிக்கும் இன்னொருவடிவமாக, இம்மலர் சிறு அளவேனும் சமூக ஈடேற்றத்தை மேம்படுத்தும் வகையில், பல்வேறு தனிமனித இலட்சியங்களின் ஒன்று திரட்டல்களான ஆழமான ஆய்வு நோக்கு நிறைந்த ஆக்கங்களைத் தாய் மொழியில் தாங்கி வருகின்றது. இக்கன்னிமலர் மேலும் பற்பல வளர்ச்சிகண்டு என்றென்றும் மங்காத சமூக ஒளியாகத் திகழும் என்ற நம்பிக்கை எனக்குண்டு.

இறுதியாகப் பசுமைநிறைந்த நினைவுகளை நெஞ்சில் சுமந்து யாழ் பல்கலைக்கழக வாழ்வை நிறைவு செய்யும் இவ்வேளையில், தொடரப் போகும் நிர்வாகத்தினர் மன்றத்தினை மேலும் சிறப்பாக வழிநடாத்த வேண்டும். என்று கேட்டு, வாழ்க 'சமூக ஒளி', வளர்க சமூக விஞ்ஞான மன்றம் என நல்வாழ்த்துக்கள் கூறி விடைபெறுகின்றேன்.

க. இதய சிவதாஸ்



மன்றச்செயலாளரின்....

# நன்றி உரை

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் பொருளியல், அரசறிவியல் சிறப்பு மாணவர்களையும், பொதுக்கலையில் சமூகவியலை ஓர் பாடமாகப்பயிலும் மாணவர்களையும் உள்ளடக்கிய வகையில் இயங்கிவரும் சமூகவிஞ்ஞான மன்றத்தின் சார்பில் " சமூகஒளி " எனும் இச்சஞ்சிகையினை மிகுந்த நெருக்கடிகளின் மத்தியில் வெளியிடும் இவ்வேளையில் இம்முயற்சிக்கு பெரிதும் கைகொடுத்த உள்ளங்களை நினைவு கூர்வது எமது கடமை என்று எண்ணுகின்றோம்.

அவ்வகையில் சஞ்சிகைக்கு ஆசிச் செய்தியளித்த துணைவேந்தர் அவர்கட்கும். தக்கசமயத்தில் எமக்கு உதவியளித்துவரும் மன்றத்தின் காப்பாளர் பேராசிரியர் . நா . பாலகிருஷ்ணன் அவர்கட்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்ளும் அதேவேளை எப்பொழுதும் எம்கூடவே இருந்து நல்லாலோசனைகளை வழங்கி எம்மை இயங்கவைக்கும் எமது பெரும்பொருளாளர். கலாநிதி . வி . நித்தியானந்தன் அவர்கட்கும் எமது நன்றிகள் உரித்தாகட்டும்.

மேலும் சஞ்சிகைக்கு வேண்டிய ஆக்கங்களை எழுதி உதவிய விரிவுரையாளர்கள், மாணவர்களுக்கும் மன்றத்தின் நடவடிக்கைகட்கு எப்பொழுதும் கரம் கொடுக்கும் பொருளியற்துறை விரிவுரையாளர்கட்கும் நன்றி கூறக்கடமைப் பட்டுள்ளோம். அத்துடன் எமக்கு விளம்பரங்களையும் நன்கொடைகளையும் தந்துதவிய வர்த்தகப் பெருமக்களுக்கும் சஞ்சிகையை நல்ல முறையில் அச்சிட்டு உதவிய சைவப்பிரகாச அச்சகத்தாருக்கும் எல்லா வகையிலும் எம்முடன் நன்ருக உழைத்த மன்றத்தின் செயற்குழு உறுப்பினர் ஏனைய உறுப்பினர்களுக்கும் நன்றியைத் தெரிவிப்பதுடன் இச்சஞ்சிகையை வாங்கிப்பயனடையப்போகும் உங்களுக்கும் எமது உளமார்ந்த நன்றிகளைத் தெரிவிப்பதில் மகிழ்ச்சியடைகிறோம்.

நன்றி

எஸ் . கீதபொன்கலன்

*Standing:* Miss: S. Dorine Kalarany, Miss. P. Anpumalar. Miss. R. Bamathy


*(L-To R)* MR. S. Kodeeswaran, MR. A. Ketheeswaran, MR. K. Thavakeeswaran, MR. V. Gunaratnam, *(Asst. Secretary)* Miss. K. Indumathy- Miss. A. Loginimalar, Miss. S. Kamalakumary, Miss. S. Moganavathany.

*Seated;* Miss. S. Gowry *(Joint Editor)* MR. S. Geethapongalan *(Secretary)*

*(L-To-R)* Prof S. Balakrishnan *(Patron)* MR. K. Ithayasivadas *(President)* Pro. A. Thurairajah, Vice Chanceller*)* Dr. V. Nithiyanandan *(Senior Trea Surer)* MR. K. Thevakumar *(Junior Treasurer)* MR. R. Neduncheliyan *(Joint Editor)* Miss. K. Menaha *(Vice President)*

*Absent:* Miss. B. Komathy

## The Committee Members Of The Social Science Union - 1988 / 1989



University Of Jaffna

உங்கள் தேவைகளுக்கு
எங்களிடம் வாருங்கள்

பிருந்தா ஜுவல்லறி

★

புதுப் புது டிசைன்களில் தங்க நகைகள் உற்பத்தி செய்பவர்கள் ஓடர் நகைகள் குறித்த தவணையில் உத்தரவாதத்துடன் செய்து கொடுக்கப்படும்.

Biruntha Jewellery

301, Kasturiar Road, Jaffna.

786

நவீன நாகரீகத்திற்கேற்ற புதிய டிசைன்கள், கோட், சூட், ஜீன்ஸ், சேட், தையல் வேலைகளுக்கு

முபீன

ரெய்லேர்ஸ்

104, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
(ஹப்பி ரெக்ஸ் மேல்மாடி)

குறித்த தவணையில் வழங்கப்படும் ஒரே நிறுவனம்

அதி சுவையூட்டும் மிகச் சிறந்த சொக்கிலேட்

ZELLERS

யாழ் குடாநாட்டின் ஸெல்லர்ஸ் சொக்லேட்டின்
ஏக விநியோகஸ்தர்களும்
சிறந்த தேயிலை விற்பனையாளர்களும்

சரணகா ஏஜென்சி

281 A, மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 22896

Space Donated By; ...

ASIAN'S

Commercial Agencies

224 A, Stanley Road, Jaffna.

# இதழாசிரியர்களின் எண்ணம் . . .

சமூகம் என்பது மக்கள் கூட்டமாகும். மனிதனை இச்சமூகத்தின் அங்கமாகக் கொண்டு அவனது நடவடிக்கைகளை விஞ்ஞானரீதியில் ஆராய்வதே சமூகவிஞ்ஞானமாகும். இதில் பொருளியல், அரசியல் சமூகவியல் என்பன முக்கியம் பெறுகின்றன. இவற்றினைப் பிரதிபலிக்கும் வகையில் "சமூகஒளி" யின் முதலாவது இதழை தமிழ்பேசும் நல்லுலகின் முன் சமர்ப்பிக்கின்றோம். வருடத்திற் கொருமுறை மேலும் இதழ்களை வெளியிடத் தீர்மானித்துள்ளோம். இதில் வெளிவரும் ஆக்கங்கள் யாவும் இத்துறைகளில் ஆர்வமுள்ளோருக்கும் ஏனையோருக்கும் பயன்படும் என நம்புகின்றோம். சகலரும் இச்சஞ்சிகையை அன்புடன் வரவேற்று ஆதரிப்பார்கள் என எதிர்பார்த்து இதில் நாம் விட்ட குறைகளையும் சுட்டிக்காட்டி புதிய திட்டங்களையும் வகுத்துத் தருமாறு அனைவரையும் வேண்டுகின்றோம்.

பிரச்சனைகள் நிறைந்துள்ள இக்காலகட்டத்தில் இவ்வாறான சஞ்சிகை ஒன்றினை வெளியிடுவது கடினமான காரியம் என்பதனைச் சொல்ல வேண்டியதில்லை. குறுகிய காலப்பகுதிக்குள் இச்சஞ்சிகையை வெளியிடும் அளவுக்கு சமூகவிஞ்ஞான மன்றம் உயர்ந்து நிற்பதையிட்டுப் பெருமகிழ்ச்சியடைகின்றோம். இச்சஞ்சிகை மாணவர்களுக்கேயுரியது. அவர்களின் ஆக்கங்கள் அதிகளவில் இடம் பெறவேண்டும் என்ற பெரும் பொருளாளரின் எண்ணத்தை முடிந்தவரை பூர்த்தி செய்துள்ளோம்.

இச்சஞ்சிகை சிறப்புடன் வெளிவரப் பல வழிகளிலும் தம் நேரத்தினை எமக்காக ஒதுக்கி பயனுள்ள ஆலோசனைகளை வழங்கிப் பதிப்புத் துறையில் அனுபவமற்ற எம்மை நெறிப்படுத்திய பெரும் பொருளாளர் கலாநிதி வி. நித்தியானந்தன் மற்றும் துணைவேந்தர் பேராசிரியர் அ. துரைராசா மன்றக்காப்பாளர் பேராசிரியர் நா. பாலகிருஷ்ணன் ஆகியோரின் ஆசிகளுடனும் பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள், மாணவர்கள் ஆகியோரின் ஆக்கங்களையும் தாங்கி இச்சஞ்சிகை வெளிவருகின்றது. இவர்கள் அனைவருக்கும் எம் நன்றிகள்.

இறுதியில் மன்றத்தினைப் புதிதாகப் பொறுப்பேற்கும் செயற்குழுவினர் கடந்தகால அனுபவங்களை உரமாகக் கொண்டு நிகழ்கால நிதர்சனங்களைப் புரிந்து கொண்டு எதிர்காலத்தில் நம்பிக்கையுடன் தம்பணியை, எம்மை விடச் சிறப்புடன் செய்வார்கள் என எதிர் பார்த்து உங்களிடம் இருந்து விடைபெறுகின்றோம்.

இரா. நெடுஞ்செழியன்
சு. கௌரி

# யாழ்ப்பாணக் குடாநாட்டிற்கு ஒரு சுற்றுப் புகையிரதப் பாதை

பேராசிரியர். பொ. பாலசுந்தரம்பிள்ளை Phd Dorham

பெரிய நகரங்கள், நகராக்கப்பட்ட பரப்புக்கள், கிராம – நகரங்களுக்கிடையிலான போக்குவரத்துச்செயற்பாடு, இன்று மிக முக்கியமடைந்துள்ளது. நகரப் போக்குவரத்து திட்டமிடல் இன்று மிகவும் சிக்கலான தொருதுறையாக வளர்ச்சி பெற்றுள்ளது. பாதைகள் அமைப்பதில் பெருமளவு நிலப்பரப்பு தேவைப்படுவதும், இவற்றைப் பெறுவதில் ஏற்படும் நிதி, சட்டப் பிரச்சினைகள் ஒரு பக்கமும், எரிபொருள் செலவு அதிகரித்து இருப்பதும், வாகனங்களின் எண்ணிக்கை அதிகமாய் இருப்பதால் வீதிகளில் ஏற்படும் விபத்துக்கள் போன்றன பெரும் பிரச்சினைகளாகவுள்ளன. மக்கள் பெருக்கம், நகராக்கம் போன்றவற்றால் போக்குவரத்து அதிகரித்ததுடன் இது பற்றிய கல்வியும் வளர்ச்சி பெற்றிராததனைக் காணலாம். நகரங்களிலும், நகரைச்சூழவுள்ள பிரதேசத்தில் வாழ்வோர் குறிப்பாக தொழிலாளர்கள், மாணவர்கள், நுகர்வோர் மற்றும் குடிமக்கள் பல தேவைகள் கருதி தினமும் பல பிரயாணங்களை மேற்கொள்ள வேண்டியுள்ளனர். இதனால் நகரப் போக்குவரத்து மலிவானதாகவும், கூடிய நிகழ்தகவு கொண்டதாகவும் எந்நேரமும் கிடைக்கக்கூடியதாகவும், வசதியானதாகவும் இருத்தல் வேண்டும். மேலும் நகரப் போக்குவரத்து பல சிக்கல் தன்மையைக் கொண்டது. குறித்த சில நேரங்களில் நெருக்கடிப் பயணங்கள் காணப்படுகின்றன: காலையில் நகர் நோக்கிய பயணங்களும், மாலையில் நகரிலிருந்து வெளிநோக்கிய பயணங்களும் கூடுதலாகக்காணலாம். இப்பயணஒழுங்கு வாகனங்களின் பயணச்சுமை ஒழுங்கைப் பாதிக்கின்றது. காலையில் நகரில் இருந்து வெளிநோக்கி செல்லும் பிரயாணங்களில், வாகனங்கள் பயணிகள் நிறைந்ததாகவும் மாலையில் இச் செயற்பாடு எதிராக அமைந்து இருப்பது காணக்கூடியதாகவுள்ளது. இதனால் போக்குவரத்து திட்டமிடலில் இருதிசை நோக்கிய பயணத்திலும் பிரயாணச் சுமை ஒழுங்கு ஓரளவுக்கு சரியாக அமைய வேண்டியதொன்றாகவுள்ளது.

வளர்ச்சியடைந்த நாடுகளில் நகர போக்குவரத்தில் தனியார் வாகன உடமை அதிகரித்து இருப்பதும், 1970 களின் பின்னர் வாகன உடமை மேலும் அதிகரித்திருப்பதாகக் காணலாம். இதனால் நகரங்களுக்கிடையிலான போக்குவரத்து சேவையில் பஸ் போக்குவரத்து முக்கியத்துவம் இழந்துள்ளது. எனினும் பெரிய நகரங்களிலும், நகரங்களுக்கிடையிலான போக்குவரத்திலும் புகையிரதம் முக்கியம் பெற்றிருப்பதைக் காணலாம். லண்டன், பரிஸ், நியூயோர்க் போன்ற பெரிய நகரங்களில் தரைக்கீழ் புகையிரதப் போக்குவரத்து முக்கியத்துவம் பெற்றிருப்பதனைக் காணலாம். பெரிய நகரங்கள் எல்லாம், தரைக்கீழ் போக்குவரத்தை விருத்தி செய்து வருகின்றன. அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளில் தனியார் வாகன உடமை குறைவாக இருப்பதும், நகரங்களுக்கிடையிலான போக்குவரத்தில் அரச அல்லது தனியார் பஸ் போக்குவரத்து முக்கியத்துவம் பெற்றிருப்பதனைக் காணலாம். மேலும் வாடகை வாகனங்கள் சைக்கிள், ஓட்டோ, என்பனவும் போக்குவரத்தில் கூடுதலாக பயன்படுத்தப் படுகின்றன. பெரிய அபிவிருத்தியடைந்த அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளில் போக்குவரத்து ஓர் முக்கிய கவனத்தை ஈர்ந்த விடையமாகவுள்ளது.


களான யாழ்ப்பாணம், காங்கேசன்துறை நாவற்குழி என்பவற்றுடன் வடமராட்சி இணைக்கப்படுகின்றது. ஏற்கனவே யாழ்ப்பாண நகரிலிருந்து அலுப்பாந்தி துறைமுகம் வரையும் புகையிரதப்பாதை இருந்து தற்போது கைவிடப்பட்ட நிலையிலுள்ளது. இப்பாதை மீளத்திருத்தப்படுமாயின் அலுப்பாந்தி, காங்கேசன்துறை ஆகிய இரு துறைகளும் புகையிரதப்பாதையால் மீளவும் இணைக்க முடியும்.

மேற்குறிப்பிட்ட புகையிரதப்பாதை செல்லும் பிரதேசம் ஒரு சமதரையாக இருக்கின்றமையால் பாதையமைப்பு இலகுவானதுடன் செலவும் குறைவாக இருக்கும். தொண்டமனாறு, முள்ளி, ஆகிய இடங்களிலேயே மிகவும் ஒடுங்கிய கடல்நீர் ஏரிப்பரப்புக்களை இப்புகையிரதப்பாதை கடக்கவேண்டியுள்ளது.

இப்பாதை அமையவிருக்கும் வழிப்பிரதேசத்தில் கூடுதலான வீதப்பரப்பு தற்பொழுது தரவை, கடல் நீர், ஏரிப்பரப்பு, மற்றும் வயல், தோட்டக்காணிகளாக இருப்பதாலும் குறிப்பாக வாழிட நிலப்பரப்பு குறைவாக இருப்பதாலும் தேவையான நிலங்களைப் பெறக்கூடியதாக இருப்பதுடன் சராசரியில் பெறுவதற்கான நட்டஈடு கொடுத்தல் போன்றன மிகக் குறைவாகவே இருக்கும். முன்மொழியப்பட்ட புகையிரதப்பாதை செல்லவிருக்கும் நிலப்பரப்பின் தற்போதைய நிலப்பயன்பாடு அட்டவணை 1 இல் காட்டப்பட்டுள்ளது. ( படம் 1 )

| இடங்களுக்கிடையில் | தூரளவு | | பிரதான நிலப்பயன்பாடு |
|---|---|---|---|
| காங்கேசன்துறை - பலாலி | 4 | கிலோமீற்றர் | கலடு, விவசாயக்காணி |
| பலாலி - தம்பாளை | 4.5 | ,, | தரவை, நெற்பரப்பு |
| தம்பலை - தொண்டமனாறு | 1.5 | ,, | கடல்நீர் ஏரிப்பரப்பு |
| தொண்டமனாறு - கெருடாவில் | 1.0 | ,, | நெற் பரப்பு |
| கெருடாவில் - தனக்காரக்குறிச்சி | 1.5 | ,, | நெற் பரப்பு |
| தனக்காரக்குறிச்சி - கம்பர்மலை | .75 | ,, | நெற் பரப்பு |
| கம்பர்மலை - கொற்றுவத்தை | 2.25 | ,, | தோட்டக்காணி |
| கொற்றுவத்தை - வதிரி | 1.5 | ,, | வீட்டுத்தோட்டம் குடியிருப்பு |
| வதிரி - அல்வாய் தெற்கு | 1.0 | ,, | நெற்பரப்பு நெருக்கமற்ற குடியிருப்பு |
| அல்வாய்தெற்கு- புலோலிதெற்கு | 2·25 | ,, | வீட்டுத்தோட்டம்/ நெற்பரப்பு |
| புலோலிதெற்கு - வரணி | 7.25 | ,, | நெற்பரப்பு, தரவை கடல்நீர்ப்பரப்பு |
| வரணி - கொடிகாமம் | 5.5 | ,, | தரவை, நெற்பரப்பு வீட்டுத்தோட்டம் |

(iii) இல் உத்தேச புகையிரதப்பாதை செல்லும் பரப்பு காணிகள் கூடுதலாக அரச காணிகளாக இருப்பதால் இப்பாதையமைப்புக்கு தேவையான காணி பெறுவதில் சிரமமும், நட்டஈட்டுச் செலவும் குறைவாக இருக்கும்


PROPOSED CIRCULAR RAILWAY FOR THE JAFFNA PENINSULA
N
POINT PEDRO
PULOLY
NELLIADY
KODIKAMAM
CHAVAKACHCHERI
MIRUSUVIL
ELUTHUMADDUWAL
PALLAI
JAFFNA
TELLIPPALAI
PALALI
KONDAVIL
KOPAY
KAYTS
MAIN ROAD
EXISTING RAILWAY
PROPOSED RAILWAY
PROPOSED STATE DRIVE
PROPOSED TOWNSHIPS
EXISTING RAILWAY STATIONS
PROPOSED RAILWAY STATIONS
AIR PORT
HARBOUR
FISHERY HARBOUR
INDUSTRIAL DEVELOPMENT ZONES

(iv) இப்பாதை பருத்தித்துறை, வல்வெட்டித்துறை, நெல்லியடி, அச்சுவேலி ஆகிய நகர்களுக்கு 1-2 கிலோ மீற்றர் தூரத்தில் செல்ல அமைக்கப்படுமேயல்லாமல், இந் நகர்கள் ஊடாக இப்பாதை அமைக்கப்படமாட்டாது, நகரப்பகுதிகளின் பெறுமானம்மிக்க நிலம் கட்டிடங்கள் பேணப்படும்,

(v) இப்பாதை அமைக்கப்படுமிடத்து குடாநாடு பலாலி விமானநிலையத்துடன் இணைக்கப்படும். மேலும் இவ்விமானநிலையம் எதிர்காலத்தில் சர்வதேச விமானநிலையமாக விருத்தி பெறுவதற்கு வாய்ப்புக்கள் உண்டு.

(vi) இப்பாதை அமைக்கப்படுமிடத்து அச்சுவேலி, கைத்தொழில் பேட்டை காங்கேசன் துறைமுகத்துடனும் பலாலி விமானநிலையத்துடனும் இணைக்கப்படும் இதனால் இத் தொழில்பேட்டைக்குத் தேவையான மூலப்பொருட்களை அனுப்புவதிலும் இலகுவான போக்குவரத்துக் கிட்டலாம். மேலும் குடாநாட்டிலுள்ள தற்போதைய கைத்தொழில் மையங்களான நாவற்குழி, யாழ்ப்பாணம், சுண்ணாகம், காங்கேசன்துறை ஆகியவற்றுடன் புதியதாக அமையவிருக்கும் கைத்தொழில் மையங்களான கொடிகாமம் வரணி போன்றன இணைக்கப்படும் இதனால் குறிப்பாக மக்களும், பொருட்களும் குடாநாட்டில் இலகுவாகச் செல்ல வாய்ப்பேற்படும்

(vii) யாழ்ப்பாண மாவட்டத்தில் புதிய தொழில், சேவைநிலையங்கள் புகையிரத நிலையங்களைச் சார்ந்து அமையக்கூடிய இடவமைவுக் கொள்கையைக் கடைப்பிடிக்கலாம்

(viii) இச் சுற்றுப் புகையிரதப் பாதைக்குள் நடுவில் இருக்கும் பிரதேசம் கிராம-விவசாய பகுதியாக தொடர்ந்து இருக்கும் வாய்ப்பைப் பெறலாம்

இப்பாதை அமைக்க ஒப்பீட்டு ரீதியில் அதிகம் செலவு பிடிக்காது என்பதற்கான பல சாதகமான நிலமைகள் காணப்படுகின்றன இப்பாதை செல்லும் வழிப்பரப்பு சமதரையாக இருப்பதாலும், நீர்நிலைகள், ஆறுகள் போன்றன இல்லாதிருப்பதாலும் கட்டுமானச்செலவு சுருக்கமாக இருக்கலாம். மேலும் இப்பாதை அமைப்பதற்குத் தேவையான கல், மணல் அருகில் எடுக்கக்கூடிய நிலைமைகள் காணப்படுகின்றன. வசாவிளானுக்கும் அச்சுவேலிக்கும் இடைப்பட்ட பரப்பில் பெருமளவு கலட்டுக் காணிகளிருந்தும் வடமராட்சியில் கம்பர்மலைப் பகுதியிலிருந்து கல் பெறக்கூடியதாக இருக்கும். இப் பகுதிகளில் கல் கிளறி எடுக்கப்படுவதுடன், அப்பரப்புக்களை தோட்ட நிலங்களாக மாற்றியமைக்கமுடியும்.

தற்போதைய செலவு அடிப்படையில் ஒரு கிலோமீற்றர் நீளமான புகையிரதப் பாதை யாழ்ப்பாணப்பகுதியில் அமைக்க ஒரு மில்லியன் ரூபா செலவாகும். ஆகவே இத்திட்டத்தை நிறைவேற்ற 40 மில்லியன் வரையில் எடுக்கலாம். இத்திட்டம் இம் மாவட்டத்தின் முன்னுரிமை பெறக்கூடிய தொன்றாக இருப்பதால் இதனை உள்நாட்டு அல்லது வெளிநாட்டு நிதியுடன் நிறைவேற்ற முயற்சி செய்யவேண்டும். இப்பாதை முதலில் ஒற்றைப்பாதையாக அமைக்கப்பட்டு பின்னர் தேவை ஏற்படுமிடத்து இரட்டைப் பாதைகளாக மாற்றியமைக்கலாம் மேலும் மின்சாரமயமாக்கமும் செய்யப்படலாம். ஆகவே இத்திட்டத்தை அரசு ஆராயவேண்டும்.

# சனசவிய:- ஓர் பொருளாதார கண்ணோட்டம்

**க. தெய்வேந்திரம்** பொருளியல் சிறப்பு இறுதி வருடம் (1988)

1988ம் ஆண்டு டிசம்பர் மாதம் நடைபெற்ற சனாதிபதி தேர்தலின் போது மேன்மை தங்கிய சனாதிபதி ஆர். பிரேமதாச அவர்களினால் ஆரம்பித்து வைக்கப்பட்ட ஓர் மாபெரும் திட்டமே சனசவிய எனப்படும் '' வறுமை ஒழிப்பு '' திட்டமாகும். வறுமையால் வாடிக்கொண்டிருக்கும் பல்லாயிரக்கணக்கான மக்களுக்கு விமோசனம் அளிக்கும் திட்டம் என கூறும் சனாதிபதி அவர்கள் அதனை நடைமுறைப்படுத்துவதற்குரிய சகல நடவடிக்கைகளையும் துரிதகதியில் விரைந்து மேற்கொள்கின்றமை குறிப்பிடத்தக்கது.

மனிதனின் அடிப்படைத் தேவைகளை பூர்த்தி செய்யமுடியாத நிலையே ''வறுமை நிலை'' என ஓர் பொதுவான நோக்கில் வரையறை செய்துகொள்வோமாயின் அந்த அடிப்படை தேவைகளான, உணவு, உடை, உறையுள் ஆகியவற்றை சிறப்பான முறையில், அதேநேரம் துரிதகதியில் உயர்ந்த நிலையை அடைந்து கொள்வதையே இதன் முக்கிய குறிக்கோளாக அமைந்துள்ளது.

சனசவிய பொருளாதாரம் என்ற இத் தலைப்பினை விளக்கமான, விபரமான கண்ணோட்டத்தில் வெளிக்கொணர்வதற்காக அதனை இலகுபடுத்தும் வகையில் இக்கட்டுரை மூன்றுபகுதிகளாக பிரிக்கப்பட்டுள்ளது. சனசவிய திட்டத்திற்கான பின்னணி, அதன் உள்ளடக்கம் என்ற வகையில் முதலாவது பகுதியும்; திட்டம் நடைமுறைப்படுத்தப்படும் போது எதிர்பார்க்கப்படும் நன்மைகள், அதனால் ஏற்படும் பிரதிகூலமான விளைவுகள் என்பன இரண்டாவது பகுதியிலும் திட்டத்தின் பொருத்தப்பாடு, அதனைப் செயற்படுத்த கையாண்ட உத்திகள், அதன் சாத்திய தன்மை, அதற்கான சாத்தியமான தீர்வுகள் என்பன இறுதிப்பகுதியிலும் விவரிக்கப்பட்டுள்ளது.

## பகுதி I

### பின்னணி:-

2ம் உலக மகாயுத்தத்தின் விளைவாக பஞ்சம், பட்டினி என்பன மக்களை இறுகப் பற்றிக் கொண்டன. இலங்கையில் இத்தகைய ஒரு நிலை மக்கள் மத்தியில் தொடர்ந்தும் நீடிக்காது அத்தகைய ஒரு பிடியில் இருந்து அவர்களை காப்பாற்றும் பொருட்டு உணவுப் பொருள் பங்கீட்டு விநியோக முறை அமுலுக்கு கொண்டுவரப்பட்டது, யுத்தத்தின் பின்பும் இவ்வாறான பங்கீட்டு முறை தொடர்ந்தும் பின்பற்றப்படலாயிற்று. இலங்கை சுதந்திரம் அடைந்ததைத் தொடர்ந்து கட்சிமுறை ஆட்சி அமைப்பு வளர்ச்சி பெற, உணவுப்பொருள் பங்கீட்டு விநியோக முறை அரசியல் மயமாக மாறுகிறது, அரசியல் கட்சிகள் ஆட்சியைக் கைப்பற்றுவதற்குரிய ஆயுதங்களாக உணவுப்பொருள் விநியோகமுறையும் ஏனைய நலன்புரி நடவடிக்கைகளும் அமைந்திருந்தன. இத்தகைய நலன்புரி நடவடிக்கைகளை நடைமுறைப்படுத்தாத சந்தர்ப்பங்களில் குறிப்பிட்ட சில கட்சிகளை மக்கள் எதிர்த்தமை குறிப்பிடக் கூடியது இதற்கு ஒரு சிறந்த எடுத்துக்காட்டாக, 1952ம் ஆண்டு டீ. எஸ் சேனநாயக்கா தலைமையிலான ஐக்கிய தேசிய கட்சி ஆட்சி காலத்தில் பங்கீட்டுப் பொருட்களின் விலைகள் கூடியபோது மக்களின்

பலத்த எதிர்ப்பினை எதிர்கொள்ள வேண்டியேற்பட்டதுடன் பிலிப்ஸ் குணவர்த்தனு போன்றோர் பதவியை ராஜினமா செய்யவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டமையும் சுட்டிக் காட்டப்படவேண்டிய விடயமாகும். இதனைத் தொடர்ந்து 1956ம் ஆண்டு பொதுத் தேர்தலில் ஐ தே கட்சி அரசாங்கம் படுதோல்வியை எதிர் நோக்கியமைக்கும் எஸ். டபிள்யூ பண்டாரநாயக்கா தலைமையிலான ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி பெரும் பான்மை பலத்தை பெற்று அரசாங்கத்தை அமைத்தமைக்கும் அரசாங்க " பூட்கைகளாக " முன்வைக்கப்பட்ட இத்தகைய உணவுப்பொருள் பங்கீட்டு விநியோக முறையும் இதர நலன்புரி நடவடிக்கைகளுமே காரணமாக அமைந்தன. இவ்வாறே 1970ம், 1977ம் ஆண்டுகளில் நடைபெற்ற பொதுத் தேர்தல்களில் முறையே சி. ல சு. கட்சி, ஐ. தே. கட்சி என்பன 2/3 பெரும்பான்மை பலத்தைப் பெற்று அரசியல் அமைப்பையே மாற்றுவதற்குரிய சந்தர்ப்பங்கள் ஏற்பட்டமையும் மேற்கூறிய நலன்புரி நடவடிக்கைகளே காரணமாக அமைந்தன.

இலங்கையில் இவ்வாறு தேர்தல் காலத்திலான பிரச்சார நடவடிக்கைகளின் போது எந்த கட்சிகள் கூடிய பங்கீட்டு விநியோக முறைகளையும் சிறந்த நலன்புரி நடவடிக்கைகளையும் தமது அரசாங்க பூட்கைகளாக முன்வைக்கின்றனவோ அக்கட்சிகளே அரசாங்கத்தை கைப்பற்றுவதும் அப்பூட்கைகள் மக்கள் மத்தியில் பிரதிபலிக்கும்போது ஆட்சிக் காலத்தை நீட்டுவிப்பதும் இலங்கை அரசியல் வரலாற்றில் அவதானிக்கக் கூடிய முக்கிய விடயங்களாகும். இதற்கு ஒரு சிறந்த உதாரணமாக 1977ம் ஆண்டு ஆட்சியை கைப்பற்றிய ஐ. தே கட்சி பின்பு மக்கள் தீர்ப்பு ஒன்றின் மூலம் ஆட்சியை நீட்டுவித்தும் இறுதியாக நடந்த பொதுத் தேர்தலில் சிறந்த வெற்றியீட்டியமையையும் கூறிக்கொள்ளலாம்.

இத்தகைய ஒரு பின்னணியில் தான் 1988 ம் ஆண்டு டிசம்பர் மாதம் நடைபெற்ற சனுதிபதி தேர்தலின் போதும் " தேர்தல் பிரச்சார வாக்குறுதி " என்ற வகையில் " சனசவிய " என்ற வறுமை ஒழிப்பு திட்டம் மக்கள் மத்தியில் முன்வைக்கப்பட்டது. அன்று நாடு இருந்த நிலையில் கட்சியின் சார்பில் தெரிவு செய்யப்பட்ட பிரேமதாச அவர்கள் நாட்டின் தலைவராக தெரிவு செய்யப்படுவாரா என்ற அச்சம் நிலவியது. ஆனுல் சனசக்தி என்ற அவரது அதிரடி அறிவிப்பு தூங்கிக்கிடந்த ஐ தே. கட்சி தூண்களை தூக்கி நிறுத்தியது. வறிய மக்களுக்கு மத்தியில் 2500/= என்ற திடீர் அறிவிப்பாலும் சுவரொட்டி விளம்பரங்களாலும் பிரேமதாச அவர்கள் சனுதிபதி ஆனுர்.

## திட்டத்தின் உள்ளடக்கம்:-

வறுமைக் கோட்டிற்கு கீழே வாழும் மக்களின் பலம், புத்தி, திறமை, ஆற்றல் என்பவற்றை வளம்படுத்துகின்ற ஒரு கருவியாக திகழுகின்ற சனசவிய திட்டம் இலங்கை சனநாயக குடியரசின் அரசியல் அமைப்பில் 6ம் அத்தியாயத்தில், 27ம் உறுப்புரையின் கீழ் புகுத்தப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் பிரதான மூலகர்த்தாவாக, டாக்டர் கருணுரத்னுவும் வேறும் பல பொருளியல் வல்லுனர்களும் விளங்குவார்கள்.

சனசவிய உதவி இதற்கு முன்னர் உணவு முத்திரை பெற்ற சகலருக்கும் கிடைக்கும் என எவரும் எண்ணிவிடக்கூடாது. ஏனெனில் உணவு முத்திரை வழங்கலானது உற்றுர், உறவினர், நண்பர்கள் என்ற வகையிலும், இலஞ்சம், ஊழல், நிர்வாகச் சீர்கேடு போன்ற காரணங்களினுலும் உணவு முத்திரையைப் பெறுவதற்கு தகுதி அற்றவர்கள் பலர் அதனை பெற்றுக் கொண்டதோடு, பெறத் தகுதி உடையவர்கள் பலர்

இதில் இருந்து விலக்கப்பட்டனர். இத்தகைய நிலை முற்றாகவே ஒழிக்கப்பட்டு, உண்மையாக இவ் உதவியைப் பெறத் தகுதியானவர்களின் வாழ்க்கையை மேம்படுத்தவே சனசவிய திட்டம் முன்வருகிறது. இதனையே கௌரவ, மேன்மை தங்கிய சனாதிபதி ஆர். பிரேமதாச அவர்கள் குறிப்பிடுகையில் "சனசவிய ஒரு நன்கொடைத் திட்டம் அல்ல என்றும் அது கிராம மட்டத்தில் மக்கள் இணைந்து சுய நம்பிக்கையுடன் தமது சமூக பொருளாதார அந்தஸ்தினை உயர்த்தி மக்கள் வாழ்வை மலரச்செய்யும் மூலதனம்" என்று கூறியுள்ளார். இதனைச் செயற்படுத்தும் பொருட்டு 1989ம் வருட வரவு செலவு திட்டத்தில் சனசவிய வறுமை ஒழிப்பு திட்டத்திற்கு முன்னுரிமையளித்து அதற்கு என 1158.6 million ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. இவற்றுடன் தனியார் நிறுவனங்கள் யாவும் இத் திட்டத்திற்கு உதவி வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இத்தகைய ஒரு அடிப்படையில் சனசவிய திட்டத்தில் இடம்பெற தகுதி உடையவர்கள் யார் என்பதை அரசாங்கம் பின்வருமாறு இனம் கண்டுள்ளது.

(1) மிகவறிய குடும்பங்கள்,
(2) வறிய குடும்பங்கள்
(3) ஓரளவு வறிய குடும்பங்கள்
(4) பங்கு கொள்ள விரும்பும் ஏனைய வறிய குடும்பங்கள்.

மேலே இனம் காணப்பட்ட நான்கு பிரிவினர்களில் இருந்து சனசவிய உரித்தாவணம் பெறுவதற்கு தகுதியுடையவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள். இத்திட்டம் பின்வரும் நான்கு பிரதான மூலக்கூறுகளைக் கொண்டுள்ளது.

(1) ஏழைக் குடும்பம் [வறிய குடும்பம்]
(2) குறிக்கப்பட்ட 24 மாதங்கள்.
(3) வளப் பொதி [ 2500/= ]
(4) உதவிக் குழு.

உள்ளூர் முகவர் என்ற அடிப்படையில் கிராமிய மட்டத்தில் இருந்து தெரிவாகும் ஒரு பெண் உட்பட நான்கு பேரும், கிராம சேவக அதிகாரி ( G S N ) யால் நியமிக்கப்படும் வெளியூர் முகவர் ஒருவரும் ஆக மொத்தம் 5 பேர் உதவிக் குழுவில் இடம் பெறுவர். இக்குழுவிற்கு, குறிப்பிட்ட பிரதேச கிராமசேவக அதிகாரியே பொறுப்பாக இருப்பார். இவ் உதவிக்குழுவின் அடிப்படைக் கடமைகளாக சனசக்தியின் பிரதான நோக்கமாகிய, சனசக்தி அபிவிருத்தியையும் குடும்பத்தின் அடிப்படைத் தேவைகளையும் பூர்த்தி செய்தல் போன்ற நடவடிக்கைகளை வெற்றிகரமாக செயற்படுத்தும் பொருட்டு குடும்பங்களுக்கு / கிராமத்தில் உள்ள குழுக்களுக்கு / சமூகங்களுக்கு ஒத்துழைப்பு கொடுத்தல் ஆகும்.

இவ் உதவிக்குழு; காணிகளின் அளவு, வீடமைப்பு, குடும்ப எண்ணிக்கை, போன்றவற்றை அடிப்படைக் காரணிகளாகக் கொண்டு ஏழைக் குடும்பங்கள் யார் என்பதை தெரிவு செய்யும் இவ்வாறு தெரிவு செய்யப்பட்டவர்களே சனசக்தி உரித்தாவணத்தைப் பெறுவதற்கு தகுதி உடையவர்களாகக் கருதப்பட்டு சனசக்தி உதவித்தொகை வழங்கப்படும்.

உதவிக்குழு மூலம் தெரிவு செய்யப்பட்ட ஏழைக் குடும்பங்களுக்கு அரசாங்கத்தால் குறிக்கப்பட்ட 24 (2 வருடம்) மாதங்களுக்கு இவ் உதவி வழங்கப்படும்.

சனசக்தி திட்டத்தின் வளப்பொதி 2500/= உள்ளடக்கிய வகையில் அது இரு கூறுகளாக பிரிக்கப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| 1. | மாதாந்த நுகர்வுச் செலவு | 1458/= |
| 2, | மாதாந்த சேமிப்பு | 1042/= |
| | மொத்தம் | 2500/= |

தெரிவு செய்யப்பட்ட ஒவ்வொரு குடும்பத்தின் பேரிலும் வங்கியில் ஒரு கணக்கு இருக்கும். அக் கணக்கில் கட்டாய சேமிப்பு என்ற வகையில் மாதாந்தம் 1042/= சேமிக்கப்படும். எஞ்சிய 1458/ வும் சனசக்தி எனப்படும் ஒரு அட்டை மூலம் நுகர்வுப் பொருட்களை கொள்வனவு செய்வதற்காக வழங்கப்படும். எனினும் இந்த 1458/= வையும் கட்டாயம் செலவிடவேண்டும் என்ற நிபந்தனை இல்லை. இதில் 458/= வை அண்மையில் உள்ள தபால் நிலையத்தில் தமது பெயரில் வைப்புச் செய்யலாம் என்பதையும் அரசாங்கம் கூறியுள்ளது. மீதியாக உள்ள 1000/= மட்டுமே நுகர்வுச் செலவினமாக வழங்கும் இதற்கு இந் நுகர்வுப் பொருட்களை மக்கள் கொள்வனவு செய்யும் போது அரசாங்கம் பின்வரும் 3 நிபந்தனைகளை விதிக்கின்றது.

1. நுகர்வுப் பொருட்களை ப நோ கூ. சங்கங்களில் அல்லது அதற்கு என ஒழுங்குபடுத்தப்பட்ட வர்த்தக நிலையங்களில் மட்டுமே பெற்றுக்கொள்ள வேண்டும்.
2 இப்பொருட்கள் அத்தியாவசிய பொருட்களாக இருக்க வேண்டும்.
3. அவை உள்ளூர் உற்பத்திப் பொருட்களாக இருக்க வேண்டும்.

இத்தகைய நிபந்தனைகளின் அடிப்படையில்தான் உரியவர்களுக்கு சனசக்தி உரித்நாவணம் வழங்கப்படும்.

கட்டாய சேமிப்பு அடிப்படையில் வங்கியில் வைப்புச் செய்யப்பட்ட 1042/= வானது இரு வருட முடிவில் அதன் பெறுமதி 25000/= வாக உயரும் இதனை ஒரு அடிப்படை முதலீடாக வைத்துக்கொண்டு விவசாயம், மீன்பிடி, வியாபாரம், சிறு கைத்தொழில் போன்ற ஏதாவது ஒரு முயற்சியினை ஆாரம் காட்டி குறிப்பிட்ட 25000/= வையும் வங்கியில் இருந்து பெற்றுக்கொள்ள முடியும், இதன் மூலம் வறியவர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்வடையச் செய்யலாம் என்பதே சனசவிய திட்டத்தின் மூலக்கருத்தாகும்.

## பகுதி II

### நன்மைகள்:-

சனசவியத்திட்டம் நிறைவேற்றப்படும் போது அதிலிருந்து பல நன்மைகள் ஏற்பட வாய்ப்புண்டாகும். அத்தகைய நன்மைகளை பகுதி பகுதியாகப் பிரித்து நோக்கு வது விடையத்தை விளங்கிக் கொள்வதற்கு இலகுவாக அமையும்.

இத் திட்டத்தின் கீழ் உதவி பெறவிருக்கும் ஏழைக் குடும்பங்களுக்கு காணியும் வீடும் வழங்குவதற்கான திட்டமொன்றை மகாவலி அபிவிருத்தி ராஜாங்க அமைச்சர் திரு. காமினி அத்துகோரளை தயாரித்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. அடிக்கடி வெள்ளப் பெருக்குகளால் பாதிக்கப்படும் தாழ்ந்த பிரதேசத்தில் வசிக்கும் குடும்பங்களுக்கு இத்திட்டத்தில் முன்னுரிமை அளிக்கப்படுவதோடு. வீடு கட்டுவதற்குக் கடன்

வசதி வழங்கப்படும் எனவும் எடுத்துரைக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் பல்லாயிரக் கணக்கான வறிய குடும்பங்கள் தமது அடிப்படை வசதிகளை ஏற்படுத்திக் கொள்வதற்குரிய சந்தர்ப்பம் உண்டாகும்.

சனசக்தித் திட்டத்தின் கீழ் உதவி பெறும் குடும்பங்களின் பிள்ளைகள் பல்வேறு சுயதொழில் முயற்சிகளில் பயிற்றுவிக்கப்படுவர் என உயர்கல்வி விஞ்ஞான தொழில் நுட்பத்துறை அமைச்சர் ஜனுப். ஏ. எஸ். ஹமீது அறிவித்துள்ளார். இதன் மூலம் ஆகக் குறைந்தது 2 லட்சம் இளைஞர்களுக்கு பல்வேறு துறைகளில் பயிற்சியளிக்கப்படும் இதனால் வேலைவாய்ப்புக் கிடைப்பது மட்டுமன்றி, உழைப்பாளர் படையில் ஒரு அதிகரிப்பு ஏற்படுவதனூடாக உழைப்பின் மொத்த விளைதிறன் அதிகரிக்க இடமுண்டு.

''குடும்பத்தின் அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றுதல்'' என்ற அம்சத்தின் கீழ் பின்வரும் சாதகமான நன்மைகளைச் சுட்டிக்காட்டலாம்.

1) நல்லதொரு வாழ்க்கை வழியினை ஏற்படுத்திக் கொள்ளல் என்ற வகையில் போதுமான வருமானத்தினைப் பெறல், சிறந்த தொழிலில் ஈடுபடுதல், சமூகப் பாதுகாப்புத் திட்டத்தில் நன்மை பெறல் என்பனவற்றைக் குறிப்பிடலாம்.
2) சிறந்த உணவும், போசாக்கும் கிடைக்கக்கூடிய நிலை உருவாகும். இதன் கீழ் நாள்தோறும் அருந்தும் உணவில் அடங்கும் கலோரி அளவில் போதுமான நிலை குழந்தைகளின் மந்த நிலையை அறிந்து, அதனை நீக்குதல் உணவுப் பாதுகாப்பு என்பன முக்கியம் பெறுகிறது.
3) அடிப்படைச் சுகாதார வசதிகளை இலகுவில் பெறுதல்
4) கல்வி தொடர்பான நன்மைகள் அதிகரிக்கும். அதாவது எழுத வாசிக்கும் ஆற்றல், உரிய வயதில் பிள்ளைகளைப் பாடசாலைக்கு அனுப்புதல், முறைசாராக் கல்வி பெறுவதற்கான வசதிகளையும், சந்தர்ப்பங்களையும் ஏற்படுத்துதல், தொழிற்பயிற்சி வசதிகள், சுயதொழில் பயிற்சிகள் என்பன உருவாக இடமுண்டு.
5 வீட்டு வசதிகளை ஏற்படுத்தற் பொருட்டு, நில உரிமையையும் அதனைப் பாதுகாத்தலும், வீட்டை அபிவிருத்தி செய்தலும், வசதிகளை ஏற்படுத்துதலும், சுற்றுடலைச் சுத்தமாக வைத்திருத்தலும், குடிநீரைப் பாதுகாத்தலும் போன்ற பயன்பாடுகளை எதிர்பார்க்கலாம்.

இவற்றினை விட தனியொருவர் அல்லது குடும்பம் குழுவினதும் சமூகத்தினதும் சொந்தச் சக்தியை அடிப்படையாகக் கொண்ட முழுமையான அபிவிருத்தி கட்டியெழுப்பப்படும் போது அதற்குச் சாதகமான பின்வரும் அரசியல், சமூக, பொருளாதார ரீதியான நன்மைகளையும் சுட்டிக் காட்டலாம்.

1) பிரச்சினைகளைப்பற்றி ஆராய்தல், அதற்கான காரணங்களைக் கண்டுபிடித்தல், அறிவு ரீதியாகச் சிந்தித்துத் தீர்வுகளைத் தேடல், சுதந்திரமாக முடிவெடுத்து அவற்றை நடைமுறைப்படுத்தும் ஆற்றல் என்பன வளர்ச்சி பெறலாம்
2) சொந்த முகாமைத்துவ ஆற்றலை வளர்த்தல்.
3) ஒன்றாக இணைவதன் மூலம் கூட்டான திறமைகளை வளர்த்தல்.
4) தங்கி வாழுதலைக் குறைத்துக் கொள்ளுதல்
5) ஒரு பிரஜையின் உரிமைகளை அறிந்து கொள்ளுதலும், அவற்றைப் பெற்றுக் கொள்ளுதலும்,

6) சமுதாயத் தலைமையை உருவாக்குதல்.
7) சமுதாய வளங்களை சமுதாயத்தின் முன்னேற்றத்திற்காகவே பயன்படுத்திக் கொள்ளும் சக்தியைப் பெறுதல்.
8) சமுதாயத்தில் பெண்களின் முன்னேற்றத்தையும் ஈடுபாட்டையும் கூட்டுதல்.
9) சமூகத்திற்கும் பொருளாதாரத்திற்குமிடையேயான இடைவெளியைக் குறைத்தல்
10) மனித உரிமைகளைப் பாதுகாத்தல்.
11) ஒவ்வொரு தனிமனிதன் அல்லது குடும்பங்களின் திறமை தகுதி, சக்தி என்பவற்றைக் கண்டுபிடித்து அவற்றை முன்னேற்றுவதற்கான சந்தர்ப்பங்களை ஏற்படுத்துதல்.
12) மனித ஆற்றல் மேம்படுதலும், சுய உழைப்பை உருவாக்குதலும்.
13) தொழில் வளத்தைப் பெருக்குதல்.
14) வறுமையை ஒழித்து, வருமானச் சமமின்மையை நீக்கி வாழ்க்கைத் தரத்தை உயர்த்துதல்.

## பிரதிகூலம்:-

சனசவிய நிறைவேற்றப்படும் போது மேற்கூறியவாறு நன்மைகள் அதற்குச் சாதகமான கருத்துக்கள் பலவற்றைச் சுட்டிக் காட்டியமை போல, அதற்கு எதிரான பிரதிகூலமான விளைவுகள் சிலவற்றையும் சுட்டிக்காட்டலாம். இவை யாவும் திட்டத்தின் செயல்விளக்க விளைவின் வெளிப்பாடேயன்றி வேறில்லை. இவ்வகையில்:-

1) கிராமிய மட்டத்தில் குழுக்களை அமைக்கும் போது அக்குழுக்கள் நடுநிலைமை வகித்து உண்மையான வறியவர்களைத் தான் தேர்ந்தெடுக்கும் என்பதனை நாம் எவ்விதத்திலும் எதிர்பார்க்க முடியாது அதற்குப் பதிலாக இலஞ்சம், ஊழல், என்பனவே மலிந்து காணப்படலாம். இதற்கொரு சிறந்த எடுத்துக்காட்டு யாதெனில் அண்மையில் மன்னார் மாவட்டத்தில் சனசவியத் திட்டத்திற்கு தெரிந்தெடுக்கப்பட்டவர்களில் பலர் அரசாங்க உத்தியோகம் பார்ப்பவர்களும், செல்வந்தர்களும், வெளிநாட்டு வருமானம் பெறுபவர்களாகவும் இருந்தமை கண்டுபிடிக்கப்பட்டமையாகும்
2) குறிப்பிட்ட கிராமத்திலிருந்தே குழுக்கள் தெரிவு செய்யப்படுவதனால் பழி வாங்கல் நடவடிக்கைகள் காரணமாக சனசக்தி உரித்தாவணத்திற்கு தகுதியானவர்களில் சிலர் இவ் உதவியைப் பெறுவதிலிருந்து கலைக்கப்படலாம். இந்நிலையில் சமூகக் கொந்தளிப்புகள், குழப்பங்கள் என்பன உருவாவதற்கு இடமுண்டு.
3) குழுக்களின் அங்கத்தவர்களைப் பொறுத்து இன, மத, சாதி வேறுபாடுகள் காட்டப்படலாம்.
4) குழுக்கள் வறிய குடும்பங்களைத் தெரிவு செய்யும்போது அக் குடும்பங்கள் 7000/- க்கும் குறைந்த வருமானம் உடையவர்கள் என்பதனை எந்தவகையில் நிரூபிக்கப் போகின்றார்கள் என்பதும் சர்ச்சைக்குரியதே.
5) வறுமை நிலை என்பதற்கான வரைவிலக்கணத்தின் படி உணவு, உடை, உறையுள் என்ற மூன்றும் சம நோக்கில் ஆராயப்படாது உணவு என்பதை மட்டுமே கருத்தில் கொண்டமையினால் இது சமபக்க முக்கோணியொன்றின் ஒரு பக்க அபிவிருத்தியினை மட்டுமே கவனத்தில் கொண்டுள்ளது என்ற குறைபாடும் ஏற்பட இடமுண்டு.
6) சனசவிய உதவியைப் பெற்றவர்கள் அவ் உதவியின் தத்துவத்திற்கும் நோக்

சுத்திற்கும் அமைய உரியமுறையில் பயன்படுத்துவார்களா என்பதும் சந்தேகத்திற்குரியதே. இதற்கு உதாரணமாக, அண்மையில் வவுனியா மாவட்டத்திலுள்ள செட்டிகுளம் உதவி அரசாங்க அதிபர் பிரிவில், இறுதி நுகர்வுப் பணமாக வழங்கப்பட்ட 1000/= பெறுமதியான சனசக்தி அட்டையொன்றினை 800/=விற்கு விற்று பணம் பெற்றமை வெளியுலகிற்கு கொண்டு வரப்பட்டமையைக் கூறிக்கொள்ளலாம்.

7) இலங்கை அரசாங்கம் அந்நிய நிதி நிறுவனங்களிடமிருந்து நிதி உதவியைப் பெற்று இத்திட்டத்தை நடைமுறைப் படுத்துவதால், தற்போது பாரிய கடன் சுமையில் இருக்கின்ற எமது நாடு அந்நிய நிதி நிறுவனங்களின் கடன் வலைக்குள் மேலும் சிக்குண்டு, அதிலிருந்து மீட்சி பெற முடியாத நிலையில் பரிதவிக்கின்ற ஒரு நிலையை எமது எதிர்காலச் சந்ததி எதிர்கொள்ள வேண்டியிருக்கும்.

## பகுதி III

## திட்டத்தை நடைமுறைப்படுத்தக் கையாண்ட உத்திகள்:-

1988ம் ஆண்டு சனாதிபதித் தேர்தலின் போது பிரேமதாசாவின் வறுமை ஒழிப்புத் திட்டமே அவரது அரசாங்கத்தின் நலன்புரிப் பூட்கையாக முன்வைக்கப்பட்டது. இதனால் அவர் சனாதிபதித் தேர்தலில் வெற்றி பெற்று சனாதிபதியானதும் சனசக்தியின் செயற்பாடுகள் நடைமுறைச் சிக்கல்கள் என்பனபற்றி சிந்திக்க வேண்டிய கட்டாயம் அவருக்கு ஏற்பட்டது. அத்தகைய ஒரு நிலையிலும் அதனை அவரால் வாபஸ் பெற முடியவில்லை. காரணம்: மக்களின் ஆதரவைத் தொடர்ந்து நிலை நிறுத்துவதற்கான ஒரு கருவியாக இது பயன்படுத்தப்பட்டமையினால் ஏதோ ஒரு வகையில் அதனை நிறைவேற்றி முடிக்க வேண்டுமென்ற அவா அவர் மீது பிரதிபலித்தது. இதனால் மாதாந்தம் 2500/= என்ற வறுமை ஒழிப்புத் திட்டம் ஒரு சில மாற்றங்களுடன் பாராளுமன்றத் தேர்தலின் போது முன்வைக்கப்பட்டது. ஆனால் தேர்தல் முடிந்து, பொருளாதார நிபுணர்கள் விழித்துக் கொண்டதும், அரசும் விழித்தெழுந்தது. இதனால் இத்திட்டத்தில் மேலும் பல மாற்றங்கள் அவ்வப்போது அறிவிக்கப்பட்டன. இத்துடன் சனசவியத் திட்டத்தை நிறைவேற்றுவதற்கு பெருந்தொகைப் பணம் தேவைப்படும் என உணர்ந்த U. N. P அரசாங்கம் ஏதோ ஒரு வகையில் அதனை நிறைவேற்ற வேண்டுமென்பதற்காக அத்திட்டத்தின் பயனை அடையவிருக்கும் வறிய குடும்பங்களின் அளவையும், நுகர்வு வளப் பொதியையும் குறைப்பதற்காக பல விலக்குதல் நடவடிக்கைகளை திட்ட உத்திகளாகக் கையாண்டுள்ளது. ரூபா 700/= ற்குக் குறைந்த வருமானமுடையவர்களே சனசக்தி உரித்தாவணத்திற்கு தகுதியானவர்கள் என்பதனால் இந்த விலக்குதல் நடவடிக்கைகள் சாதகமாக அமைந்தன. அவை:

1) இதுவரை காலமும் நடைபெறாத அதிகளவான ஆசிரிய நியமனங்கள் சனசவிய திட்ட காலத்தில் வழங்குவதற்கு உடனடி நடவடிக்கைகள் விரைந்து மேற்கொள்ளப்பட்டன. இதன்படி சனசவிய நடைமுறைப்படுத்துவதற்கு முன் 25000 ஆசிரியர்கள் 1000/= சம்பள அடிப்படையில் வழங்கப்பட வேண்டுமென சிபார்சு செய்யப்பட்டது. ஆனால் இந்த ஆசிரிய நியமனங்கள் உணவு முத்திரை வைத்திருக்கும் மிக வறிய குடும்பங்களிலிருந்து தெரிவு செய்யப்பட வேண்டுமென்ற நிபந்தனை விதிக்கப்பட்டது. இதனால் 2500/= பெறவேண்டிய வறியவர்களாகிய 25000 குடும்பங்களும் இத்திட்டத்திலிருந்து விலக்கப்படுகின்றனர்.

2) இதுவரை காலமும் பல புகையிரத விபத்துக்கள் நடைபெற்றிருந்தும் அதற்கு எவ்வித நடவடிக்கைகளையும் எடுக்காத அரசாங்கம் இவ்வருட நடுப்பகுதியில் (1989) நடைபெற்ற விபத்தில் பல பாடசாலை மாணவர்கள் இறந்தனர் என்பதனை ஆதாரம் காட்டி அல்லது அதனை உடனடிக் காரணமாக வைத்து 4000க்கும் மேற்பட்ட புகையிரதக் கடவைக் காவலாளிகள் நியமிக்கப்பட்டனர். இவர்களும் இத்திட்ட உதவியிலிருந்து விலக்கப்படுகின்றனர்.

3) சம்பளத் திட்டத்தில் இதுவரை காலமும் 1½% மாக இருந்த ஒய்வூதியக் கழிவு இன்று 5% மாக உயர்த்தப்பட்டுள்ளது. இவ்வித உயர் கழிவு வீதம் மறைமுகமாக சனசவியத் திட்டத்திற்காக இடம்பெறுகிறதா? என்ற ஓர் சர்ச்சை இன்று அரசாங்க ஊழியரிடையே இருந்து வருகிறது.

4) அரசாங்க காசோலைகளைப் பெறுவதற்கு 1/= முத்திரை வழங்கப்பட்டு வந்த நிலை மாறி இப்போது அது 2/= வாக அதிகரிக்கப்பட்டுள்ளது. இம் மேலதிகத் தொகை சனசவியத் திட்டத்திற்கென ஒதுக்கப்பட்டு வருகிறது. இதிலுள்ள முக்கியமான விடயம் யாதெனில் வறியவர்களுக்கான உதவிப்பணக் கொடுப்பனவிற்கும் இந்த 2/= முத்திரை வழங்கப்பட வேண்டியுள்ளமையாகும் இதனால் வறியவர்களிடமிருந்து பறிக்கப்பட்டு, வறியவர்களை வாழ வைக்கும் ஒரு திட்டமா? என்ற சந்தேகம் எழுவதிலும் தவறில்லை.

5) நுகர்வுச் செலவினமாக அரசாங்கத்தால் குறிக்கப்பட்ட 1458/= வையும் கட்டாயம் செலவிட வேண்டும் என்ற நிபந்தனையில்லையெனவும், விரும்பினால் அதில் ஒரு பகுதியை சேமிக்கலாம் எனவும் கூறிய அரசாங்கம் இப்போது இரண்டாம் கட்ட கட்டாய சேமிப்பு என்ற வகையில் (முதலாம் கட்டச் சேமிப்பு 1042/=) 458/= வை அண்மையிலுள்ள தபால் கந்தோரில் வைப்புச் செய்ய வேண்டுமென நிபந்தனை விதித்துள்ளது. இதனூடாக நுகர்வுச் செலவினம் 1500/= ஆகக் குறைக்கப்பட்டுள்ளது.

6) இத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு காலம் தாழ்த்தி வருகின்ற தன்மையும் ஒரு வகையில் திட்ட விலக்குதல் நடவடிக்கையேயன்றி வேறில்லை.

## திட்டத்தின் பொருத்தப்பாடும் சாத்தியத் தன்மையும்:-

மேற்கூறிய விலக்குதல் நடவடிக்கைகள் ஒருபுறமிருக்க இத்திட்டத்திற்கு நிதியுதவியளிக்க முன்வந்துள்ள I. M. F, I. B R. D போன்ற நிதி நிறுவனங்கள் இந்த உதவியை இடை நிறுத்தினால் அல்லது முற்றாகவே மறுத்தால் இத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு அரசாங்கத்தால் முடியுமா? அவ்வாறு முடிந்தாலும் அதற்குரிய மார்க்கங்கள் யாவை? அந்த மார்க்கங்களின் சாத்தியமான தன்மைகள், ஒழுங்குகள், விகிதமுறைகள் என்பன யாவை? என்பதற்கான எவ்வித ஆதாரங்களும் அரசாங்கத்தால் முன்வைக்கப்படவில்லை. அவ்வாறு நிறைவேற்ற முன்வந்த இத்தகைய நிறுவனங்கள் பின்வரும் இரு நிபந்தனைகளை விதித்திருக்கின்றன.

1) நாணயப் பெறுமதி இறக்கம் செய்யப்பட வேண்டும்.
2) வரிகளின் அளவை உயர்த்த வேண்டும்.

இதனால் அந்நிய நிதிநிறுவனங்களின் ஆதிக்கத்திற்கு உட்பட வேண்டிய நிலை ஏற்படுவ

தோடு நாட்டின் பணவீக்கநிலை விஷம் போல ஏறிக்கொண்டே போகும். இதற்கேற்ற வகையில் தொழிலாளர்களின் சம்பள அதிகரிப்பையும் அரசாங்கம் வழங்கவேண்டிய நிலை ஏற்படுவதோடு, ஆகக் குறைந்த சம்பளமாக 2500/= வழங்கப்படவேண்டுமென்ற தொழிற்சங்கத்தின் போராட்ட நெருக்கடி நிலையொன்றினையும் அரசாங்கம் எதிர் கொள்ள வேண்டியேற்படும். இதனால் வறுமை ஒழிப்பு ஏற்படுமா? அல்லது வறியவர் களே மேலும் பரிதவிக்க நேருமா? என்ற வினாக்கள் தொடுப்பதும் தவிர்க்க முடியாது.

இவற்றினை விட, திட்டத்திலுள்ள அக முரண்பாடு யாதெனில், திட்ட உதவித் தொகைக்கு உள்ளூர் பொருட்களையே நுகருதல் வேண்டும் என நிபந்தனை விதிக்கின்ற அரசாங்கம், ஏன் அனாவசியமான பொருட்களை இறக்குமதி செய்து வெளிநாட்டுச் செலாவணியை விரையமாக்க வேண்டும் என்ற வினாவிற்குரிய விடை மௌனமாகவே உள்ளது.

திட்டம் அறிமுகப்படுத்தப்படுவதற்கு முன், தமக்கு வேண்டிய தேவைகளை தாமே நிறைவேற்றிக் கொண்டிருந்த ஊழியப்படையானது, இத்திட்டத்தின் பின் சனசவிய உதவியில் தங்கி வாழ முற்படலாம். இதனால் தங்கி வாழ்வோர் வீதம் அதிகரிக்கப்ப டுவதோடு ஊழியவடிவிலான நாட்டின் மொத்த உற்பத்தி வினைதிறன் குறைவதற்கும் வழிவகுக்கும்.

அத்துடன் சனசவியத் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு வரும்போது வருமா னச் சமமின்மை மேலும் அதிகரிக்கலாம். அதாவது சாதாரணமாக 1500/= மாத வருமானமாகப் பெறும் அரசாங்க உத்தியோகஸ்தர் ஒருவரையும், சனசவிய உதவியான 2500/= பெறும் ஒருவரையும் ஒப்பிட்டு நோக்குவோமாயின், அங்கு வருமான ஏற்றத் தாழ்வுகள் ஏற்பட்டு வருமானச் சமமின்மை தோற்றுவிக்கப்படலாம், அல்லது மேலும் உயர்வடையலாம். இதனை அளவிடும் கினிக் குணகப் பெறுமதியும் அதிகரிக்க வாய்ப் புண்டாகும். இரு வருட முடிவில் ஜனசவிய உதவி பெறுபவர்கள் 24000/= பெறுமதி யான சிறு கைத்தொழில் போன்ற ஏதாவதொன்றை உருவாக்கி அவர்களின் வறுமை நிலை ஒளிக்கப்பட்டு வாழ்க்கைத் தரம் உயருகிறது எனக் கொள்வோமாயின் நாம் முன் னர் குறிப்பிட்ட குறைந்த வருமானம் (1500/=) பெறுகின்றவர்கள் மிக வறிய நிலை யொன்றினை எதிர்நோக்க வேண்டியிருக்கும். பின்பு அவர்களின் வறிய நிலையைப் போக்க ஏதாவதொரு புதிய திட்டத்தினை உருவாக்க வேண்டிய நிற்பந்தம் ஒன்றினை அரசாங் கம் எதிர்கொள்ள வேண்டியிருக்கும், இவ்வாறு வறுமை விஷச் சக்கரம் சுழன்று கொண்டேயிருக்கும். ஆகவே இந்த 'வறுமை விஷச் சக்கரம்'' என்பதற்கான அடிப் படைக் காரணிகளை விளங்கிக் கொள்ளாமையே திட்டத்தின் பொருத்தமற்ற தன்மைக் குரிய முக்கிய காரணமாகும்.

மேலும் புதிய விதி விலக்குகளின் படி குடும்ப உறுப்பினர் ஒருவர் வெளிநாடு சென்றிருந்தாலும் அக் குடும்பத்திற்கு நிரந்தர வருமானம் இல்லாத சந்தர்ப்பத்தில் திட்ட உதவியைப் பெறுவதற்கு அக் குடும்பம் அருகதையுடையது எனக் கூறப்பட்டுள் ளது. இதன்படி வெளிநாட்டில் உள்ளவர்களின் மாதாந்த நிரந்தர வருவாயை இவர் களால் எப்படிக் கணிக்க முடியும்? மாதாந்தம் அவர்கள் அனுப்பும் பணத்தொகையை எப்படி அறிவது? வங்கியில் பணம் வைக்கப்பட்டிருந்தாலும், எவராவது அதனை வெளிக் காட்ட முன் வருவார்களா? வெளிநாட்டில் உள்ளவர்கள் ஆகக் குறைந்தது வருடாந் தம் 10,000/= அனுப்ப மாட்டார்களா? அவ்வாறாயின் மாத வருமானம் 800/=விற்கு மேற்படுகிறது. இதனை ஏன் அரசாங்கம் சிந்திக்கவில்லை, என்ற பல்வேறு கருத்துக்கள் முட்டி மோதுகின்றன.

சனசக்தித் திட்டம் போன்று அவசர அவசரமாக ஆரம்பிக்கப்பட்ட மற்ருெரு திட்டம் பாடசாலை மதிய உணவுத் திட்டமாகும். இதில் பல மோசடி நடவடிக்கைகள் இடம்பெற்றதோடு மாணவர்கள், ஆசிரியர்கள், பெற்ருேர்கள் ஆகியோர்களுக்கிடையில் பல கருத்து வேறுபாடுகள், குழப்பங்கள் ஏற்பட்டு மாணவர்களின் கல்வி கற்கும் நேரமும் வீணுக்கப்படுகின்றது. சத்துணவுத் திட்டமெனக் கூறும் அரசாங்கம், ஒரு மாணவருக்கு 3/= மாத்திரமே செலவிட வேண்டுமென்ற கட்டுப்பாட்டை விதித்துள்ளது. இன்றைய பணவீக்க நிலையில் இது சாத்தியப்படுமா? என்பதும் ஆராயப்பட வேண்டிய விடையமாகும்.

எனவே மேலே கூறப்பட்ட விடையங்களிலிருந்து நாம் விளங்கிக் கொள்வது சனசவியத் திட்டம் என்பது வெறும் தேர்தல் பிரச்சார ஏமாற்று வித்தையேயன்றி வேறில்லை. எவ்வாருயினும் தமது கட்சிக்குள்ள ஆதரவைத் தொடர்ந்து நிலை நிறுத்துவதற்காக இதில் ஒரு சிறு பகுதியையாவது நிறைவேற்றுவார் என்பதனை மட்டும் இங்கு நாம் அனுமானத்தின் மத்தியில் சுட்டிக்காட்ட முடியும். இதிலிருந்து திட்டத்தின் பொருத்தப்பாடும் அதன் சாத்தியமான தன்மையினையும் ஒருவாறு உணர்ந்து கொள்ளலாம்.

## சாத்தியமான தீர்வுகள்:-

வறுமை நிலையினை ஒழிப்பதற்கான சாத்தியமான தீர்வுகள் என்ன என்பதனைச் சற்று நோக்குவோமாயின், முதலில் இதனை ஒழிப்பதற்கு எத்தகைய அடிக்கட்டுமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டுமென்பதனை இனம் காணுதல் வேண்டும். இதற்கு அரசாங்கம் பின்வரும் இரு நடவடிக்கைகளை ஒரே நேரத்தில் மேற்கொள்ள வேண்டும்.

1) வறுமையிலுள்ளவர்களுக்கு வேலைவாய்ப்பினை உருவாக்குதல்.

2) தற்போது குறைந்த ஊதியம் பெறுபவர்களுக்கு, ஊதிய அளவை அதிகரித்தல்.

முதலாவது நிலையினை ஏற்படுத்தும் பொருட்டு, பிரதேச ரீதியான வளப் பயன்பாட்டிற்கு ஏற்ப, பொருத்தமான தொழில்நுட்பத்துடன் கூடிய தொழிற்சாலைகளை அல்லது ஏதாவது தொழில் வளத்தைப் பெருக்கக்கூடிய நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம் இந்நிலையில் வறுமை ஒழிக்கப்படலாம். அல்லது தணிக்கப்படலாம். இரண்டாவது நிலைக்குரிய தீர்வினை வழங்கிஞல் வருமானச் சமமின்மை நீக்கப்படலாம். அல்லது குறைக்கப்படலாம் இவையிரண்டும் ஒரே நேரத்தில் மேற்கொள்ளப்பட்டாலன்றி வறுமையை ஒழித்து வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவது என்ற இலக்கை அடைவது சாத்தியமற்றது.

எனினும் இதனை நடைமுறைப்படுத்த முனையும் அரசாங்கம் பாரிய நிதி நெருக்கடியொன்றினை எதிர்நோக்க வேண்டியிருக்கும் இருந்த போதும் இதற்கான இதர தீர்வுகள் இல்லை என்ற காரணத்தினுல் இந்த நெருக்கடியைச் சமாளித்து, வேலைவாய்ப்பினை உருவாக்குவதற்குரிய அடிக்கட்டுமான நடவடிக்கைகளையும், திட்ட உற்பத்தி நடவடிக்கைகளுக்கான ''முன் கொழு'' ''பின் கொழு'' நடவடிக்கைகளையும் உரிய முறையில் மேற்கொண்டு வரின் மேற்கட்டுமானம் தானுகவே வளர்ச்சி பெற்று வறுமைநிலை படிப்படியாக ஒழிக்கப்பட்டு அல்லது தணிக்கப்பட்டு மக்களின் வாழ்க்கைத்தரம் உயர வழி பிறக்கும். இதுவே ''வறுமை நிலை'' என்பதனை ஒழிப்பதற்கான சாத்தியமான தீர்வாக அமைய முடியும்

**_K. THEIVENDRAM_**
Economics Special Final Year (1988)

**க. தெய்வேந்திரம்**
பொருளியல் சிறப்பு இறுதி வருடம் (1988)

# சமூக நலன் குறித்து நிறைபோட்டிச் சந்தை, தனியுரிமைச் சந்தை ஆகியவற்றிற்கிடையேயான ஓர் ஒப்பீட்டு ஆய்வு:-

**ந. பேரின்பநாதன்**
சிரேஷ்ட விரிவுரையாளர் — தரம் I
பொருளியற்றுறை
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.


சந்தை அமைப்பில் நிறை போட்டியும், தனியுரிமையும் எதிர்த் துருவங்கள் எனக் கூறுவர் சமூக நலன் குறித்து எச்சந்தை அமைப்பு கூடிய திறமைவாய்ந்தது என்பது பற்றிய ஆய்வுகள் நடைபெற்றுள்ளன. சில அம்சங்கள் குறித்து நிறை போட்டிச்சந்தை தனியுரிமைச் சந்தையினை விட சமூக நலனை அதிகரிப்பதாக உள்ளது. சில அம்சங்கள் குறித்து தனியுரிமைச் சந்தை சமூக நலனை அதிகரிப்பதில் முன்னணியில் நிற்கின்றது. இக்கட்டுரை இரண்டு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. முதலாவது பகுதியில் நிறை போட்டிச் சந்தை எவ்வழிகளில் தனியுரிமைச் சந்தை அமைப்பைவிட சமூகநலனை அதிகரிப்பதில் முதன்மை பெறுகின்றது என்று எடுத்துக் கூறப்படுகின்றது. வேறு வார்த்தைகளில் கூறின் தனியுரிமை எவ்வகையில் நிறைபோட்டியினை விட சமூகத்தின் நலனைக் குறைக்கின்றது அல்லது சமூக நலனுக்கு தீங்கு விளைவிப்பதாக அமைகின்றது என்பதற்கான கருத்துக்களை இப்பகுதியில் காணலாம். இரண்டாவது பகுதியில் தனியுரிமை எவ்வாறு சமூகத்திற்கு நலனை விளைவிக்கின்றது என்பதற்குச் சாதகமான கருத்துக்கள் ஆராயப்படுகின்றன.

வாசகர்கள் கவனத்தில் கொள்ளவேண்டிய விடயம் யாதெனில் இங்கு தனியுரிமை என்பது எளிய தனியுரிமை (Simple Monopoly) யை மட்டுமே கருதுகின்றது என்பதும் விலை பேதப்படுத்தப்பட்ட தனியுரிமையை அல்ல என்பதுமாகும். விலைபேதப்படுத்தல் சமூக நலனை எவ்வாறு உயர்த்துகின்றது அல்லது குறைக்கின்றது என்பதை அறிய விரும்புகின்றவர்கள் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வணிக மாணவர் மன்றத்தினுல் வெளியிடப்பட்ட 1986ம் ஆண்டுக்குரிய '' விருட்சம் '' என்ற மலரில் இக்கட்டுரையாளரால் எழுதப்பட்ட ' விலை பேதப்படுத்தலும் சமூக நலனும் ' என்ற கட்டுரையை பார்க்கவும்.

## பகுதி I

பல்வேறு காரணங்களால் நிறை போட்டியிலும் பார்க்க தனியுரிமையானது பொது நலனுக்குப் பாதகமாக அமைகின்றது என கருத்துக்கள் தெரிவிக்கப்படுகின்றன. அவற்றில் முக்கியமானதாகக் கூறப்படுவது நிறைபோட்டியுடன் ஒப்பிடுமிடத்து தனியுரிமையானது வெளியீட்டினைக் கட்டுப்படுத்தி விலையினை உயர்த்துகின்றது என்பதாகும். இதனை விளக்குவதற்கு இருவகையான சந்தையமைப்புக்களும் ஒரேவகையான செலவமைப்பை எதிர்நோக்குகின்றன என்று எடுகோள் கொள்வோம். பின்வரும் விளக்கப் படத்தின் உதவியுடன் இதனை நோக்குவோம்.

படம் 1




படம் 1 இல் தனியுரிமை நிறுவனமானது (தொழிலும் அதுவேதான்) எல்லை வருமானமும் (MR) எல்லைச் செலவும் (MC) E என்ற புள்ளியில் சந்திக்கின்றபோது சமநிலை அடைகின்றது. அந்நிலையில் வெளியீடு OQ ஆகவும் விலை PQ ஆகவும் உள்ளன. நிறைபோட்டித் தொழிலைப் பொறுத்த வரையில் அதன் நிரம்பல் கோடென்பது ஒவ்வொரு நிறுவனத்தினதும் எல்லைச் செலவுக் கோட்டினை கிடையச்சு ரீதியாகக் கூட்டவருந் தொகையாகும். MC என்ற எல்லைச் செலவுக் கோட்டையே நிறைபோட்டிக்குரிய நிரம்பல் கோடாகக் கொள்வதால் தான் படம் 1 இல் MC = S எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. நிறைபோட்டித் தொழிலில், தொழிலின் கேள்விக் கோடும், தொழிலின் நிரம்பல் கோடும் ஒன்றையொன்று சந்திக்கும் போது விலை தீர்மானிக்கப்படுகின்றது. படம் 1 இல் MC என்ற எல்லைச் செலவுக் கோடும் D என்ற கேள்விக்கோடும் சந்திக்கும் போது நிறைபோட்டிக்குரிய விலை தீர்மானிக்கப்படுகின்றது. இங்கு விலை $AQ_1$ ஆகும். இவ்விலையானது தனியுரிமை விலையிலும் (PQ) பார்க்க குறைவாக உள்ளது. அத்துடன் நிறைபோட்டி வெளியீடான $OQ_1$ என்பது தனியுரிமை வெளியீடான OQ என்பதிலும் பார்க்க கூடுதலாக உள்ளமையும் கவனிக்கத் தக்கது. கேள்விக்கோடு கீழ்நோக்கிச் சரிந்து செல்வதாக இருக்கும் போது குறைந்தளவு வெளியீட்டினைச் செய்தல் விலையை உயர்த்துவதற்குச் சமமானதாகும். மேலே நாம் பார்த்த விடயம் குறுங்காலத்திற்குரியதொன்றாகும்.

நீண்ட காலத்தில் தனியுரிமையின் விலைக்கும் நிறைபோட்டியின் விலைக்கும் இடையேயுள்ள வேறுபாடு மேலும் அதிகரிக்கக்கூடும், குறுங்காலத்தில் தனியுரிமை வெளியீடு MC = MR என்ற நிலையிலும், நிறைபோட்டி வெளியீடு MC = P என்ற நிலையிலும் (இங்கு P என்பது விலையைக் குறிக்கும்) ஏற்படுகின்றது. நீண்ட காலத்தில் நிறைபோட்டித் தொழிலில் உள்ள நிறுவனங்கள் சாதாரண இலாபத்தினையே உழைக்க முடியும். படம் 1 இன் படி குறுங்காலத்தில் நிறைபோட்டி வெளியீடு $OQ_1$ ஆக உள்ளபோது சராசரிச் செலவு $GQ_1$ ஆகவும் சராசரி வருமானம் $AQ_1$ ஆகவும் இருப்பதால் நிறைபோட்டி நிறுவனம் அசாதாரண இலாபத்தினை உழைக்கின்றது. இவ்வசாதாரண இலாபக்கவர்ச்சியினால் உந்தப்பட்டு வேறுபல புதிய நிறுவனங்களும் குறிப்பிட்ட தொழிலில் உட்புகும். இதன் காரணமாக நிரம்பல் அதிகரிக்க நிரம்பல் கோடு (MC) வலப்புறம் நகரும். இறுதியில் சாதாரண இலாபம் பெறும்போது சமநிலை ஏற்படும். சாதாரண இலாபத்தினை நிறைபோட்டித் தொழில் B என்ற புள்ளியில் பெறும்

தனியுரிமையில் பிரவேசத்தடை இருப்பதால் நீண்ட காலத்தில் கூட தனியுரிமை நிறுவனம் PQ என்ற விலையை தனக்குரிய விலையாகப் பேணிக் கொள்ளலாம். இவ்வாறான நிலையிருப்பின் நீண்டகாலத்தில்,

நிறைபோட்டி விலை $BQ_2$

தனியுரிமை விலை PQ

நிறைபோட்டி வெளியீடு $OQ_2$

தனியுரிமை வெளியீடு OQ என இருக்கும். எனவே நீண்ட காலத்தில் நிறைபோட்டி விலை மிகவும் குறைவாகவும் வெளியீடு மிக அதிகமாக உள்ளதையும் காணலாம்.

மேலும் தனியுரிமையிலும் பார்க்க நிறைபோட்டியில் சமூகத்தின் அருமையான வளங்கள் திறமையாகப் பயன்படுத்தப்படுகின்றன என்று கூறப்படுகின்றது. சாதன ஒதுக்கீட்டில் திறமை காணப்பட வேண்டுமாயின் ஒவ்வொரு பொருளிலிருந்து பெறப்படும் எல்லைப்பயன் (MU) அதனுடைய எல்லைச் செலவுக்குச் (MC) சமமாக அமைதல் வேண்டும் என பொருளியலாளர்கள் கூறுவர். நிறை போட்டியில் இந்நிபந்தனை நிறைவேறுவதைக் காணலாம்.

நிறைபோட்டியில்

$MU = P$ என்பதும் $MC = P$ என்பதும் காணப்படும். இதனால் $MU = MC$ என்பது பெறப்படும்.

தனியுரிமையில் $MC = MR$ என்னுமிடத்தில் சமநிலை ஏற்படுகின்றது அத்துடன் தனியுரிமையின் கீழும் நுகர்வோர் Pக்குச் சமமாக MUஐ சமப்படுத்தும் வரை நுகர்வோர் தமது நலனை உயர்த்திக் கொண்டு செல்கிறார்கள். எனினும் தனியுரிமையில் P என்பதிலும் பார்க்க MR குறைவானதாகும். எனவே தனியுரிமையில்,

$MU = P$ என்பதும $MC = MR$ என்பதும் காணப்படினும், $MR < P$ என்பதால் $MU > MC$ என்ற நிலையே காணப்படுகின்றது இங்கு எல்லைப்பயனனது எல்லைச் செலவை விடக் கூடுதலாக இருப்பதால், குறைந்தளவு சமூக வளங்களே தனியுரிமையின் கீழ் உற்பத்தி செய்வதற்குப் பயன்படுத்தப்படுகின்றது என்ற முடிவினைப் பெறலாம். குறிப்பிட்ட ஒரு பொருளில் ஒரு அலகினை உற்பத்தி செய்வதற்கு ஏற்படுகின்ற செலவிலும் பார்க்க நுகர்வோர்கள் செலுத்த விரும்புகின்ற விலை (MU) கூடுதலாக உள்ளது. இந்நிலையில் MUஐயும் MCஐயும் சமப்படுத்த வேண்டுமாயின் தனியுரிமையாளன் உற்பத்தியினை அதிகரித்தல் வேண்டும். ஆனால் தனியுரிமையாளன் உற்பத்தியை அதிகரிக்க மறுப்பான் ஏனெனில் உற்பத்தியை ஒரு அலகால் அதிகரிப்பின் நுகர்வோர் அதற்குச் செலுத்தும் விலையிலும் (P) பார்க்க அதன் மூலம் தனியுரிமையாளன் குறைந்தளவு எல்லை வருமானத்தினையே (M ) பெறுவான் என்பதாலாகும், எனவே தனியுரிமையில் உற்பத்தி அதிகரிக்கப்படாமல் வளங்கள் திறமையற்ற வகையில் ஒதுக்கப்பட்டிருக்கும்.

எல்லைச் செலவுக்குச் சமமாக விலை இருக்கும் போது உற்பத்தியானது சமூகத்தினால் விரும்பக்கூடியதாக இருக்கும் எனக் கருதப்படுவது ஏன் என நோக்குவோம் $MC = P$ என்ற இந்த நிலைமையின் கீழ் உற்பத்தி நடைபெறும் போது, அதிலிருந்து பெறப்படுகின்ற மொத்தப் பயன் கிடைக்கின்ற வளங்களில் இருந்து உச்சமாகப் பெறும் நிலையினை விளக்குவதனால்தான் சமூக ரீதியாக அது விரும்பப்படுகின்றது எனக் கருதப்படுகின்றது


சமூகத்திற்குக் கிடைக்கும் வளங்கள் அருமையானவையாகும். ஒரு பொருளை உற்பத்தி செய்யப் பயன்படுத்தப்பட்ட உள்ளீட்டினை இன்னொரு பொருளை உற்பத்தி செய்யப் பயன்படுத்த முடியாது. ஒரு பொருளின் மேல் செலவழித்த வருமானம் இன்

ஞெரு பொருளின் மேல் செலவழிக்கப்படமாட்டாது. எனவே உற்பத்தி செய்யப்பட்ட அல்லது நுகர்ந்த ஒரு பொருளின் உண்மைச் செலவை அதற்காக உற்பத்தி செய்யாமல் விடப்பட்ட அல்லது நுகராமல் விடப்பட்ட ஒரு பொருளின் மூலமே அளவிட முடியும். இதனைப் பின்வரும் உதாரணத்தின் மூலம் விளக்குவோம். தனியுரிமையாளன் M என்ற பொருளை உற்பத்தி செய்வதாகக் கொள்வோம். அவருடைய இலாபத்தினை உச்சப்படுத்தும் வெளியீட்டில் விலை 10 ரூபா என்றும் எல்லைச்செலவு 2ரூபா என்றும் கொள்வோம். எனவே அந்நிலையில் P > MC = MR என்பது காணப்படும். நிறைபோட்டியில் உள்ள நிறுவனம் ஒன்று C என்ற பொருளை உற்பத்தி செய்கின்றது எனக்கொள்வோம் நிறைபோட்டி நிறுவனத்தின் சமநிலையில் P = MR = MC என்பது காணப்படும். இங்கு விலையும் எல்லைச் செலவும் 2ரூபா என உள்ளது. இதன்படி நோக்கின் நிறைபோட்டியில் உள்ள விலையிலும் பார்க்க தனியுரிமை விலை 5மடங்கு அதிகமாக உள்ளது. இன்னொரு வகையில் கூறின் M என்ற பொருளில் ஒரு அலகினை நுகர்வு செய்வதற்காக மக்கள் C பொருளில் ஐந்து அலகுகளை விட்டுக் கொடுப்பதற்கு தயாராக இருக்க வேண்டும். எவ்வாறெனினும் எல்லைச்செலவு ரூபா 2 ஆக இருப்பதால் M, C ஆகிய இரு பொருட்களினதும் உற்பத்தியில் ஈடுபடுத்தப்பட்டுள்ள வளங்களின் எல்லைநிலைப் பெறுமதி ரூபா 2 என உள்ளது. ஆதாவது ஒரு அலகு M என்ற பொருளை உற்பத்தி செய்வதற்கு சமூகம் C என்ற பொருளில் ஒரு அலகினைத் தியாகம் செய்கின்றது. இரண்டு பொருட்கள் குறித்தும் ஒரே அளவு செலவே ஏற்படினும் இங்கு நாம் M என்ற பொருளுக்கு C என்ற பொருளிலும் பார்க்க 5 மடங்கு பெறுமதி கூடுதலாகக் கொடுத்துள்ளோம், Cயின் ஒரு அலகிலும் பார்க்க M இன் ஒரு அலகு 5 மடங்கு கூடுதலான பெறுமதியுடையதென சமூகம் கருதுவதால், C என்ற பொருளின் உற்பத்தியில் இருந்து சாதனங்களை எடுத்து அதனை M என்ற பொருளின் உற்பத்தியில் திரும்பவும் செலுத்துகின்றபோது சமூகம் அதிக நன்மையடையமாட்டாதா? என்ற வினா இங்கு எழலாம். ஆனால் தனியுரிமையாளர் உச்ச இலாபத்தினைத் தேடுவதால் சாதனங்களை மறு ஒதுக்கீடு செய்யக்கூடிய பொறிமுறையை நாம் அங்கு காணமுடியாமல் உள்ளது ஒரு பிரச்சினையாகும். MC = P என்ற நிலை எல்லாப் பொருட்கள் குறித்தும் இருக்கின்ற போது, ஒரு பொருளின் ஒரு அலகினை உற்பத்தி செய்வதற்கு ஏற்படும் சந்தர்ப்ப செலவானது அடுத்த பொருள் குறித்தும் சமமாகவே இருக்கும். இந்நிலையில் சாதனங்களின் மறு ஒதுக்கீட்டின் மூலம் பயன்பாட்டினை உச்சப்படுத்த முடியாத நிலை காணப்படும். மொத்த வளங்களை அதிகரிப்பதன் மூலமே இதனைச் செய்யமுடியும். இதனல் MC = P என இருக்கும் போதுதான் சமூகத்தினுல் விரும்பக்கூடிய உற்பத்தி நிலை காணப்படுகின்றது.

சமூகத்தின் நுகர்வு என்ற நோக்கிலும் தனியுரிமை நிறைபோட்டியை விட தீங்கு தரும் விடயமாக இருக்கும் என்பதையும் நோக்குவோம். கேள்விக் கோடானது கீழ் நோக்கிச் சரிந்து செல்லும் நேர்கோடாக உள்ளதென்றும் எல்லைச் செலவு மாறுத நிலையில் உள்ளதென்றும் கொள்வோம். இதனுல் எல்லைச் செலவுக்கோடு, சராசரிச் செலவுக்கோடு என்பன ஒரே கோடாகவும் கிடையச்சுக்குச் சமாந்தரமாகவும் இருக்கும். மேலும் எல்லைச் செலவுக்கோடே நிறைபோட்டியின் நீண்டகால நிரம்பல் வளைகோடாகவும் இருக்கும். இதனை படம் 2இன் உதவியுடன் நோக்குவோம்.

படம் 2

விலை / செலவு / வருமானம்





மேற்கூறிய எடுகோள்களின் அடிப்படையில் தனியுரிமை வெளியீட்டின் அளவு நிறைபோட்டி வெளியீட்டின் அளவிலும் பார்க்க பாதியாக உள்ளது. அது எவ்வளவு குறைவாக இருக்கும் என்பது கேள்விக்கோடு செலவுக்கோடுகளின் வடிவத்தினைப் பொறுத்து அமைந்திருக்கும் என்பது குறிப்பிடத் தக்கது படம் 2 இன் உதவியுடனும் நுகர்வோன் மிகையின் உதவியுடனும் தனியுரிமையால் பொதுநலன் எவ்வளவுக்குக் குறைவாக உள்ளது என நோக்குவோம். தனியுரிமையில் வெளியீடு OQ ஆகவும் நிறைபோட்டியில் வெளியீடு $OQ_1$ ஆகவும் உள்ளது அதாவது நிறைபோட்டி நிலைமையின் $QQ_1$ என்றளவு வெளியீடு கூடுதலாக உற்பத்தி செய்யப்படுகின்றது. இம்மேலதிக உற்பத்தியினல் சமூகத்திற்குக் கிடைக்கும் மேலதிக நன்மை $QCAQ_1$ ஆகும். எனவே அதனை உற்பத்தி செய்ய சமூகத்திற்கு ஏற்படும் செலவு $QBAQ_1$ ஆகும். எனவே தேறிய வகையில் கிடைக்கும் நன்மை (நுகர்வோன் மிகை) ABC ஆக உள்ளது. இன்னொரு வகையில் கூறின் தனியுரிமையின் கீழ் குறைந்த உற்பத்தியினை மேற்கொள்வதால் சமூகத்திற்கு கிடைக்காத தேறிய நன்மையின் அளவு ABC என்ற முக்கோணத்திற்கு சமமாக உள்ளது.

உத்தம உற்பத்தி நிலையில் தனியுரிமை நிறுவனம் உற்பத்தியை மேற்கொள்வதில்லை என்பதும் ஒரு குறைபாடாகக் கூறப்படுகின்றது உத்தம உற்பத்தி நிலை என்பது சராசரிச் செலவுக் கோட்டின் அதிகுறைந்த புள்ளியில் உற்பத்தி நடைபெறுவதைக் குறிக்கும். நீண்ட காலத்தில் நிறைபோட்டியில் இயங்கும் நிறுவனம் ஒன்று சாதாரண இலாபத்தினைப் பெறும் போது உத்தம உற்பத்தி நிலையில் அது இயங்கும். படம் 3இல் இதனைக் காணலாம்

படம் 3

விலை / செலவு / வருமானம்



வரைபடத்தில் நீண்டகால எல்லைச் செலவுக்கோடும் எல்லை வருமானக் கோடும் E என்ற புள்ளியில் சந்திக்கின்ற போது, நிறுவனம் சமநிலை அடைகின்றது. அந்நிலையில் அது சராசரிச் செலவுக்கோட்டின் அதிகுறைந்த புள்ளியில் உற்பத்தியினை மேற்கொள் ளுகின்றது. ஆனால் தனியுரிமையில் போட்டிக்கு வேறு நிறுவனங்கள் இல்லாதபடியால் திறமையான வழிமுறைகளை அது பின்பற்றுவதில்லை என்றும், இதனால் சராசரிச் செலவு வளைகோட்டின் அதிகுறைந்த புள்ளியில் உற்பத்தியினை மேற்கொள்ள முயல்வதில்லை என்றும் கூறப்படுகின்றது. காரணம் அவர் விலையினை உயர்வாக வைத்திருப்பதற்காக உற்பத்தியினைக் கட்டுப்படுத்துவதாலாகும். இதனால் தனியுரிமையாளன் கிடைக்கத்தக்க உள்வாரி சிக்கனங்களை முழுமையாகப் பயன்படுத்த விரும்புவதில்லை என்று கூறப்படு கின்றது இதன் காரணமாக உற்பத்திச் செலவிலும் பார்க்க கூடுதலான விலையை நுகர்வோர் செலுத்தவேண்டி உள்ளது. அதாவது தொழிலில் காரணிகளை ஈடுபடுத்து வதற்கு அத்தியாவசியமான அளவினை நுகர்வோர் செலுத்தவேண்டி உள்ளமை சமூ கத்திற்கு தீங்கு விளைவிக்கும் விடயமாகும்.

வருமானப்பரம்பல் பற்றிய கருத்துக்கள் அண்மைக்காலத்தில் பெரிதும் ஆய்வுக் குட்படுத்தப்பட்டுள்ளன. ஒரு நாட்டின் பொருளாதார அபிவிருத்தி பற்றிய குறிகாட்டி களில் சமமானவருமானப்பரம்பல் சமமாக உள்ளபோதே நாட்டின் நலன் அதிகரிக் கும் தனியுரிமையானது வருமானப் பங்கீட்டில் பாரிய சமமின்மையை ஏற்படுத்துகின்ற படியாலும் அது சமூக நலனுக்குத் தீமையாக அமைகின்றது எனக் கூறப்படுகின்றது நீண்ட காலத்தில் நிறைபோட்டியின் கீழ் உள்ள நிறுவனங்கள் சாதாரண இலாபத்தினை மட்டுமே உழைக்கின்றன. ஆனால் தனியுரிமை நிறுவனம் நீண்ட காலத்தில் கூட தொடர்ச்சியாக அசாதாரண இலாபத்தினை உழைக்க முடிகின்றது. தனியுரிமை சக்தி யின் காரணமாக தனியுரிமையாளர்கள் தேசிய வருமானத்தில் பெரும்பங்கினைப் பெற முடிகின்றது. இதனால் தனியுரிமை வருமானப் பரம்பலில் சமமின்மையை ஏற்படுத்து கின்றது.

தொழில் நுட்ப முன்னேற்றமும் தனியுரிமையின் கீழ் குறைவாக உள்ளமை ஒரு குறைபாடாகும். புதிய தொழில் நுட்பங்களைக் கண்டு பிடிப்பதற்கும், புதிய பொருட் களைக் கண்டு பிடிப்பதற்குமான தூண்டுதல்கள், எதிராளி நிறுவனங்கள் இன்மையால் தனியுரிமையில் மிகக் குறைவாக உள்ளது என்று கூறப்படுகின்றது. தொழில்நுட்ப முன் னேற்றம் ஏற்படின் பொருட்களை உற்பத்தி செய்வதற்கான சராசரிச் செலவு குறையும். காரணம் தொழில்நுட்ப முன்னேற்றத்தின் காரணமாக முன்பு குறிப்பிட்டளவு உற்பத் திக் காரணிகளைக் கொண்டு உற்பத்தி செய்த அளவிலும் பார்க்க தற்போது கூடியஅள வினை உற்பத்தி செய்ய முடிவதனாலாகும். செலவு குறைந்தால் மக்கள் குறைந்த விலை யில் அதிக பொருட்களை கொள்வனவு செய்து நுகர முடியும். இது சமூக நலனை அதி கரிக்கும். இந்த நிலை தனியுரிமையில் குறைவாக உள்ளதெனக் கூறப்படுகின்றது. நிறை போட்டியில் போட்டி காரணமாக புதிய தொழில் நுட்பக் கண்டுபிடிப்புக்கான தூண் டுதல் அதிகம் என்றும் இதனால் அங்கு உற்பத்தித் திறனை அதிகரிக்க முடிகின்றது என் றும் கூறுவர். மேலும் தற்போது இயங்கும் இயந்திரத்தினை நிறைவாகப் பயன்படுத் துவதற்காக புதிய முன்னேற்றங்களை தனியுரிமையாளர் அதிகம் விரும்புவதில்லை என் றும் கூறப்படுகின்றது. ஏனெனில் புதிய இயந்திரம் கண்டு பிடிக்கப்படின் தற்போதைய இயந்திரத்தைக் கைவிட வேண்டி இருக்கும் என்றும் அது நட்டத்தை ஏற்படுத்தும் என்பதனாலுமாகும்.

மேலும் தனியுரிமையாளன் விளம்பரத்தையும், விற்பனைப் பெருக்க நடவடிக்கை களையும் கையாண்டு தனது பொருளுக்கான கேள்வியினை அதிகரிக்கலாம். அத்துடன்

தனது உற்பத்திப் பொருளை இன்றியமையாத பொருள் என மக்களை உணரச் செய்து கேள்வி நெகிழ்ச்சியைக் குறைக்கலாம். இதன் மூலம் மேலும் தனது பொருளின் விலையை உயர்த்தி நுகர்வோரைச் சுரண்டி அதிக இலாபம் பெற முனையலாம்.

தனியுரிமையின் கீழ் வேலையின்மையின் அளவு அதிகரிக்கும் என்று கூறப்படுகின்றது தனியுரிமை முன்னர் கூறியவாறு உற்பத்தியைக் கட்டுப்படுத்தி விலையை உயர்த்துகின்றது. உற்பத்தியைக் கட்டுப்படுத்துவதால் குறைந்த எண்ணிக்கை உடையவர்களுக்கே வேலை வழங்கப்படுகின்றது, இதனால் பலர் வேலையின்றி இருப்பர். அதே வேளையில் தனியுரிமை நிறுவனம் நட்டம், சாதாரண இலாபம், அசாதாரண இலாபம் ஆகிய வற்றைப் பெறும் நிலைகளில் மிகை இயலளவு நிலையிலேயே இயங்கும் இதன் கருத்து யாதெனில் வளங்கள் முழுமையாக, திறமையாகப் பயன்படுத்தப் படுவதில்லை என்பதாகும். வேலையின்மை ஏற்படுகின்றபோது வருமானமும் குறைவடைகின்றது அத்துடன் வேலையின்மை என்பது சமூகத்தில் விரும்பப்படாததொன்றாகும். தனியுரிமைகள் வருமானத்தில் ஒருபகுதியை அசாதாரண இலாபமாகப் பெறுகின்றன. இப்பகுதியில் பெருமளவு நுகர்வில் செலவழிக்கப்பட மாட்டாது. இதனால் காலப் போக்கில் முதலீடு அதிகரிக்க மாட்டாது ஆரம்பத்தில் முதலீட்டிற்கு அதிக வாய்ப்பு இருக்கலாம். ஆனால் முடிவில் முதலீடு குறைய பொருளாதாரம் மந்தமாகி வேலையின்மை அதிகரிக்கலாம்.

தனியுரிமை நிறுவனங்கள் ஒருங்கு சேர்ந்து சூழ்ச்சி செய்யின் பொது மக்களின் நிலை மேலும் சீர் கெடும். நாட்டில் புரட்சி தோன்றும் நிலை உருவாகும். தனியுரிமையும் பொருளாதாரத்தில் குடியாட்சி நிலைபெறாது. செல்வமும் அதிகாரமும் சிலர் கையில் இருப்பதனால் அவர்கள் அரசாங்கத்தினைக் கைப்பற்ற முனைவர். அவர்கள் முயற்சி சித்தியடைந்தால் முதலாளிகளின் சர்வாதிகாரம் ஏற்படும் இந்நிலையில் தொழிலாளர்களும் புரட்சி செய்து தொழிலாளர் சர்வாதிகாரத்தை நிறுவ எத்தனிப்பர். நாட்டில் பகையும் சச்சரவுகளும் பரவும். குடியாட்சி திறமையுடன் நடைபெறுவதற்குச் செல்வமும், பொருளாதார அதிகாரமும் சமூகத்தில் பரவி இருத்தல் வேண்டும்.

வெளிநாடுகளுடன் வர்த்தகத் தொடர்புடைய பொருளாதாரத்தில் தனியுரிமைகள் தோன்றின் அவை உற்பத்தியைக் குறைத்து விலையை உயர்த்தும். இதனால் நாட்டின் ஏற்றுமதி குறையும். இது சென்மதி நிலுவைப் பிரச்சினைக்கு வழி வகுக்கலாம்.


மேலே கூறியவற்றை நாம் நோக்கின் நிறைபோட்டியுடன் ஒப்பிடின் தனியுரிமை சமூகத்திற்கு தீங்கு விளைவிப்பதாக இருப்பதால் அது விரும்பப்படுவதில்லை. எனினும் தனியுரிமை சமூகத்திற்கு தீங்குகளை மட்டும்தான் விளைவிக்கின்றது எனக் கூறுவதற்கில்லை. அது சமூகத்திற்கு சில நன்மைகளையும் விளைவிக்கின்றன. அவை யாவை என அடுத்த பகுதியில் நோக்குவோம்.

## பகுதி II

நாம் ஆரம்பத்தில் தனியுரிமை, நிறைபோட்டி என்ற இரண்டும் ஒரேவகையான கேள்விக் கோட்டையும், செலவு வளைகோடுகளையும் எதிர்நோக்குகின்றன என எடுகோள் கொண்டோம், அவ்வெடுகோளின் அடிப்படையில் நிறைபோட்டியிலும் பார்க்க தனியுரிமை நிறுவனம் விலையை உயர்த்தி வெளியீட்டைக் குறைக்கின்றது என்ற முடி

வினை பெற்றோம். ஆனால் நிறைபோட்டித் தொழிலில் காணப்பட்ட பல நிறுவனங்கள் ஒருங்கிணைந்து தனியுரிமை நிறுவனமாக மாற்றமடைகின்ற போது செலவுக் குறைப்பு ஏற்படின் நிறைபோட்டியில் இருந்த நிலைமையிலும் பார்க்க தனியுரிமையில் வெளியீடு அதிகரித்து விலை குறையலாம் இதனால் சமூகம் நன்மையடையலாம். இதனை படம் 4 இன் உதவியுடன் விளக்கலாம்.

படம் 4




வரைபடம் 4இன்படி நிறைபோட்டித் தொழிலின் சமநிலை விலை $OP_1$ ஆகும். வெளியீடு $OQ_1$ ஆகும். அத்தொழில் தனியுரிமையாக்கப்பட்ட பின்னரும் செலவுகள் மாற்றமடையாவிட்டால் உற்பத்தி OQ ஆக குறைவடைவதுடன் விலையும் OP ஆக அதிகரிக்கும். ஆனால் செலவு குறைவடையுமாயின் எல்லைச் செலவுக்கோடு வலப்பக்கம் நகரும். அதனை $MC_1$ என்ற வளைகோடு காட்டுகின்றது. இந்நிலையில் தனியுரிமையின் விலை $OP_2$ ஆகக் குறைவடைவதுடன் வெளியீடும் $OQ_2$ ஆக அதிகரிக்கும் எனவே ஒரு தொழிலை தனியுரிமை மயப்படுத்தல் என்பது திறமையை அதிகரிக்க வழிவகுக்குமாயின் நிறைபோட்டியுடன் ஒப்பிடுகின்றபோது தனியுரிமை விலையைக் குறைத்து வெளியீட்டை அதிகரிக்கும் என்பதாகும் இங்கு நாம் அவதானத்தில் கொள்ள வேண்டிய விடயம் யாதெனில் தனியுரிமையில் செலவைக் குறைப்பதற்கான தூண்டுதல்கள் அல்லது முயற்சிகள் உள்ளனவா? என்பதாகும்.


நிறை போட்டியில் உள்ளதிலும் பார்க்க தனியுரிமையில் பிரதியீடுகளை (duplication)க் குறைக்க முடியுமாதலால் செலவு குறைக்கப்படலாம் எனக் கூறப்படுகின்றது நிறைபோட்டியில் ஒவ்வொரு நிறுவனமும் வைத்துள்ள சிறிய கருவிகளுக்குப் பதிலாக அவற்றைத் தனியுரிமையில் பெரிய யந்திரங்கள் பிரதியீடு செய்ய முடியும். மேலும் உள்ளீடுகளைக் கொள்வனவு செய்கின்ற போதும் தனியுரிமையில் சிக்கனத்தைப் பேணலாம். நிறைபோட்டியில் ஒவ்வொரு சிறிய நிறுவனங்களும் உள்ளீடுகளைக் கொள்வனவு செய்யும் போது பெறமுடியாத கழிவுச் சலுகையினை தனியுரிமை நிறுவனம் பெருமளவு கொள்வனவு செய்யும்போது பெறமுடியும் இதனால் செலவு குறையும்.

மேலும் சும்பிற்றர் என்ற பொருளியலறிஞரின் கருத்துப்படி தனியுரிமை நிறுவனம் செலவைக் குறைப்பதற்கான வழிவகைகளை மேற்கொள்ள முயலும் என்று கூறப்படுகின்றது எதிராளி நிறுவனங்களின்மையால் அது செலவுக் குறைப்பினை மேற்கொள்ள முனையாது என முன்னர் கூறப்பட்டது. எனினும் சும்பிற்றர் தனியுரிமை நிறுவனங்களிடம் புதிய தொழில் நுட்பத்தினைக் கண்டு பிடிப்பதற்காக முதலிடும் நோக்கம் கூடுதலாக இருக்கும் எனக் கூறுகின்றார். ஏனெனில் செலவுக் குறைப்பினை மேற்கொள்ளும் போது அதிக இலாபம் பெறக்கூடிய வாய்ப்பு இருப்பதனாலாகும். ஆராய்ச்சியில் ஈடுபட்டு நல்ல பலனைப் பெறுகின்ற போது நீண்டகாலத்தில் செலவு குறைவாக அமையும். ஏனெனில் நிறைபோட்டியில் ஒரு நிறுவனம் கண்டு தொழில்நுட்ப முன்னேற்றத்தினால் ஏற்படக்கூடிய பலனை அந்நிறுவனம் குறுங்காலத்திற்கு மட்டுமே அனுபவிக்க முடியும். ஏனெனில் நீண்ட காலத்தில் நிறைபோட்டித் தொழிலில் உள்ள ஏனைய நிறுவனங்களும் அதனால் நன்மை பெறும் என்பதனாலாகும். ஆனால் தனியுரிமையில் பிரவேசத்தடை இருப்பதால் நீண்ட காலத்திலும் கூட தனிப்பட்ட நிறுவனமே புதிய கண்டுபிடிப்பால் நன்மையைத் தொடர்ந்து அனுபவிக்க முடியும். இதன் காரணமாக நிறைபோட்டியில் உள்ள நிறுவனம் ஒன்று ஆராய்ச்சியில் ஈடுபடுவதற்கு இருக்கும் முனைப்பை விட தனியுரிமை நிறுவனத்திற்கு இருக்கும் முனைப்பே கூடுதலாக இருக்கும். எனவே தனியுரிமையில் தொழில்நுட்ப முன்னேற்றம் ஏற்படுகின்றபோது தொழில் புதிதமைக்கப்படுகின்றது.

தனியுரிமை அதிக முதலீட்டுத் திறனான யந்திரங்களையும் கருவிகளையும் அமைக்கும். தனியுரிமைப் பொருளாதாரத்தில் முதலாளிகள் தாம் பெறும் இலாபத்தில் பெரும் பகுதியை முதலீடு செய்வதால் மூலதனம் அதிகரிக்கும். இதனால் உற்பத்தித் திறனில் அபிவிருத்தி ஏற்பட்டு உற்பத்தி பெருக நாட்டின் செல்வம் பெருகும். இப்பெருக்கத்தில் தொழிலாளிகளும் ஒரு பங்கு பெறுவர். தனியுரிமைப் பொருளாதாரத்தில் மொத்த வருமானத்தில் முதலாளிகள் பெறும் விகிதம் அதிகரிப்பினும் தொழிலாளிகளின் கூலியும் வாழ்க்கை நிலையும் காலப்போக்கில் உயர்ந்து செல்லும்

தனியுரிமை சமூகத்திற்கு நன்மை பயக்கின்றது எனக் கூறப்படும் வாதங்களில் ஒன்று இயற்கைத் தனியுரிமையுடன் தொடர்புபட்டதாகும். இயற்கைத் தனியுரிமை என்பதற்குப் பின்வருமாறு வரைவிலக்கணம் கூறலாம். சந்தைக்கேற்ற முழு நிரம்பலையும் பல சிறிய நிறுவனங்களால் உற்பத்தி செய்கின்ற போது ஏற்படும் சராசரிச் செலவை விட, தனியொரு நிறுவனம் அம்முழு நிரம்பலையும் குறைந்த சராசரிச் செலவில் செய்யுமாயின் அங்கு இயற்கைத் தனியுரிமை நிலை காணப்படும். இயற்கையாக ஏற்படும் தனியுரிமை நிலையானது குறிப்பிட்ட தொழிலில் ஏற்படக்கூடிய போட்டியை துரத்தும். இயற்கைத் தனியுரிமை என்பது சந்தை சிறியதாக இருக்க நிறுவனம் பெரிதாக இருக்க வேண்டும் என்ற அவசியமும் இல்லை. சந்தைக் கேள்வியைப் பூர்த்தி செய்யக்கூடிய நிலையில் இருப்பின் அது போதுமானதாகும் இயற்கைத் தனியுரிமை நிலை உள்ளபோது உற்பத்தி அதிகரிக்க சராசரிச் செலவு குறைந்து கொண்டு போகும். இதனால் சராசரிச் செலவுக்கோடு தொடர்ந்து கீழ் நோக்கி இறங்கிக் கொண்டிருக்கும். வரைபடம் 5 இதனைக் காட்டுகின்றது.

படம் 5




OA — தனியொரு நிறுவனம் $OQ_1$ அலகுகளை உற்பத்தி செய்யும் போதுள்ள சராசரிச் செலவு.

OB — $OQ_1$ என்றளவு உற்பத்தியை இரு நிறுவனங்கள் செய்யும் போதுள்ள சராசரிச் செலவு.

பல பொதுப் பயன்பாட்டுத் தொழில்கள் [உதாரணமாக மின்சாரம் வழங்கல், நீர் விநியோகம், தொலைபேசி வசதிகள், வாயு விநியோகம்] தனியுரிமை நிறுவனங்களாக தொழிற்பட விடுவதற்கு இதுவே காரணமாகும். இவற்றைப் பெருமளவில் உற்பத்தி செய்ய முனையும்போது உற்பத்தி செய்யும் தொழில்நுட்பம், உற்பத்தியைப் பங்கீடு செய்தல் போன்றன செலவில் அதிக குறைவினை ஏற்படுத்துகின்றன. எனவே இத்தகைய பொருட்களை உற்பத்தி செய்யும் முழுப்பொறுப்பையும் ஒரு நிறுவனத்திடமே விட்டு விடுதல் நல்லது என்று கூறப்படுகின்றது,

மேலும் தனியுரிமைகள் இருப்பினும் அவை பொருளியல் கொள்கையின் படிதான் நடைமுறையில் இயங்குகின்றன என்பதற்கு எவ்வித சான்றுகளும் இல்லை பெரும்பாலான தனியுரிமைத் தொழில்கள் பொதுப் பயன்பாட்டுத் தொழில்களாக உள்ளன. அவை மக்களின் நலத்திற்காகவே தொழில் செய்கின்றன. அவை உற்பத்தியைக் குறைத்து விலையை உயர்த்தி நுகர்வோரைச் சுரண்டுகின்றன என கூறமுடியாது. மேலும் தனியாருக்குச் சொந்தமான தனியுரிமைகளின் உற்பத்தியையும் விலையையும் எல்லா நாடுகளிலும் அரசாங்கங்கள் கட்டுப்படுத்துகின்றன என்பது வெளிப்படையான விடயமாகும் தனியுரிமை நிறுவனங்கள் தமது நீண்டகால நன்மையைக் கருதி மக்களைச் சுரண்ட மாட்டா. தனியுரிமைகளை மக்கள் எதிர்ப்பின் அவை நீண்டகாலம் தொழில் செய்ய முடியாது. மக்களின் நன்மதிப்பை தனியுரிமை நிறுவனங்கள் பெறுதல் அவசியமானதாகும் தற்காலத்தில் தனியுரிமை நிறுவனங்கள் அரசாங்கங்களுடன் ஒத்துழைக்கின்றன. தொழிலாளர்களுக்கு நியாயமான கூலியைக் கொடுக்கின்றன. பொருட்களை நியாயமான விலைக்கு விற்கின்றன உச்ச இலாபத்திலும் பார்க்க உறுதியான இலாபத்தினையே அவை நாடுகின்றன. இதனால் தனியுரிமைகள் எல்லைச் செலவையும் எல்லை வருமானத்தினையும் சமப்படுத்தும் போது உருவாகும் விலையிலேயே பொருட்களை விற்கின்றன என்னும் எடுகோள் நடைமுறை உலகிற்கு சற்று பொருந்தாதது போல் தோன்றுகின்றது.

முடிவாகக் கூறுவோமாயின் நிறைபோட்டியிலும் பார்க்க தனியுரிமை நிச்சயமாக சமூகத்திற்கு தீமை பயக்கும் எனக் கூறமுடியாது. நாம் கைக்கொள்ளும் எடுகோள்கள் நிறுவனம் இயங்கும் சூழ்நிலை, முயற்சியாளரின் நோக்கம், தொழிலாளரின் பங்கு போன்றவை பொறுத்து தனியுரிமை நிறுவனமும் சமூகத்திற்கு அதிக நலனை வழங்குவதாகவும் இருக்க முடியும்.

# பத்திர(ம்) பண்பு

ச. தேவதாஸ்
பொருளியல் சிறப்பு
2ம் வருடம்
யாழ் பல்கலைக்கழகம்

பட்டங்களுக்காய்ப் படிக்கும்
பண்பாளர்களே......!
பண்புகள் பத்திரத்தால்
பட்டுவிடக் கூடாது
பத்திரமாய் இருங்கள்.

வாழ்க்கையின் குறிக்கோளை
வளமுடன் அமைத்துக் கொள்ள
வண்ண நினைவுகள்
எண்ணத்தில் அலைபாய
‘வளாகம்’ புகுந்திருக்கிறீர்
கற்கையின் வெற்றி என்பது
வாழ்க்கைக்காய்க்
கற்பதாய் அமையட்டும்.

பெறுகின்ற ‘பட்டங்கள்’
தனிப்பட்ட
மனங்களை மட்டும்
குளிர வைக்க வல்ல - அது
இந்த மண்ணையே
குளிரவைக்கும் தளிராகட்டும்.
பண்புகளை உதிர்த்து விடும்
‘பட்ட’ பத்திரமாய் இருக்கக்கூடாது

எதிர்காலம் என்பது
எட்டியே நிற்கிறது
எட்டிப் பிடிக்கும், என்னவோ
மிகுதியாய் இருப்போரைத் தான்
அதற்கிடையில்
எட்டிப் பிடிப்பது என்பது
‘நிகழ்காலக்’ கைகளில் தான்.

நிகழ்கால நிதர்சனங்களில்
எதிர்கால நிகழ்வுகளை
ஏறெடுத்துப் பாருங்கள்
வரைந்து கொண்ட - உங்கள்
வாழ்க்கையின் இலட்சியங்களை
முடிக்க முயற்சியுங்கள்.

எதிர்காலத்தின் உதயத்திற்காய்
ஏங்கித் தவிக்கும் உள்ளங்களே...!
ஏடுபடித்தது எள்ளிநகையாடியது
சந்நிதி சென்றது 'சன்' அடித்தது.
'கள்' அடித்தது கரகமாடியது
'தண்ணி' அடித்தது தடுக்கி விழுந்தது
'பியர்' குடித்தது 'பிரேக்' ஆடியது
இவைகள் எல்லாம்
மறக்க முடியா
இறந்தகால இன்ப நினைவுகள்
இதைவிட நீங்கள்
வரைந்து கொண்ட
வாழ்க்கையின் இலட்சியத்திற்கு...
செய்கின்ற தியாகங்கள்
சீரழியாமல் பார்த்துக் கொள்ளுங்கள்.

மனங்களின் மலர்வுகள்
மாறுபட்டு இருக்கையில்
மதங்களும் மந்திரங்களும்
எவ்வாறு ஏற்றுக் கொண்டபோதும்
பரஸ்பரம் புரிந்துணர்வுடன்
பழகிக் கொள்ளுங்கள்
பழகும் போது பண்பாடு அவசியம்.

நாளைய விடியலுக்கான
நம்பிக்கை 'வெளிச்சம்'
உள்ளங்களில் உதிக்கட்டும்
'உணர்ச்சி'களின் முடிவில்
அறிவுக் கதிர்கள்
அலைக்கழியக் கூடாது
'அழகில்' அழியவுங் கூடாது

அறிவுக்கதிர்கள் வலிமையாய்
மேன்மை படைத்தனவாய் இருக்கட்டும்
ஏனெனில்
எதிர் காலத்தினைத்
திசை மாற்றும்
'கடுகதி' வேகங் கொண்டவை

அந்த இதமான
எதிர்கால உதயத்திற்காய்
உள்ளங்களைத்
தயார் படுத்துங்கள்
உங்கள் உதயத்தில்
இந்த மண்ணின் பொழுதே
விடியட்டும்
'சமூக ஒளி' எங்கும்
பரவட்டும்.

# 'ருகிங்' பற்றிய பிரச்சினைகள் ஓர் அறிமுகம்

இ. இராஜமோகன். விரிவுரையாளர் மெய்யியற்றுறை.
( யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம் )

பல்கலைக்கழகச் சமூகச் சூழலில் ஏற்படும் பல்வேறு நடமுறைச் சிக்கல்களில் "ருகிங்" மிக முக்கிய இடத்தினைப் பெறுகின்றது. இலங்கைப் பல்கலைக்கழக வரலாற்றில் ஆரம்ப காலங்களில் இது இடம்பெற்றாலும், கடந்த மூன்று தசாப்தங்களில் இப்பிரச்சனை முனைப்படைந்து வரும் போக்கு சமூகவியலாளரிடையேயும் உளவியலாளரிடையேயும் கூர்மையான அவதானங்களை ஏற்படுத்தி வருகின்றது.

சென்னைப் பல்கலைக்கழகத்தில் வெளியிடப்பட்ட ஆங்கில-தமிழ் அகராதியில் "rag" என்னும் பதத்திற்கு. "பகிடிவதை, பேரிரைச்சலுடன் கூடிய முறைகேடான காட்சி, திட்டு, குற்றம் கூறு, தொந்தரவு செய், வேதனைப்படுத்து, முரட்டுத்தனமாக வேதனைப்படுத்து, பகிடி செய்யும வகையில் தங்கும் அறை முதலியவற்றை அலங்கோலப்படுத்து, வதைச் சொற்களால் தொல்லைப்படுத்து, கூச்சலிட்டுக் கலகம்பண்ணு, வதை" போன்ற அர்த்தங்கள் தரப்படுகின்றன.* இதனடிப்படையில் "ருகிங்" என்ற ஒன்றை நாம் நோக்கின் அது ஒரு மனிதனின் ஆக்கபூர்வமான பண்புகளை அன்றி, அழிவுபூர்வமான பண்புகளையே சுட்டி நிற்கின்றது என்பதைக் காணலாம்.

"ருகிங்" என்பதைக் கொள்கையளவில் ஏற்கும் சிரேஷ்ட மாணவர்கள் இதனால் வரும் அல்லது தாம் எதிர்நோக்கும பண்புகளைப் பின்வருமாறு நிரைப்படுத்துகின்றனர். "ருகிங்" முறையினால் 1) மாணவர்களுக்கிடையே அறிமுகம் ஏற்படுகின்றது; 2) தாழ்வுச்சிக்கல் நீக்கப்படுகிறது. 3) திறமைகள் வெளிக்கொணரப்படுகின்றன.

அண்மையில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் புதிய மாணவரிடையே கொடுக்கப்பட்ட வினாக்கொத்தின் விபரங்களின் அடிப்படையில் புதிய மாணவர்களின் அனுபவங்களை, அவர்களது வருணனைகளின் அடிப்படையில் நோக்கும் போது எதிர்மறையாக இருப்பதைக் காணலாம். மிகப் பெரும்பாலான மாணவர்களின் அனுபவங்கள் பின்வரும் சொற்களின் அடிப்படையில் விபரிக்கப்பட்டுள்ளன. பயம், கோபம் விரக்தி, ஏமாற்றம், அருவருப்பு.........என்பன பல்வேறு மனக்கோலங்களின் மறைபண்புகளை வெளிக்காட்டுவதாக அமைகின்றன. இவை மனிதனின் பாதிப் புற்ற மனப்பதிவுகளை வெளிப்படுத்தி நிற்கின்றன.

சிரேஷ்ட - புதிய மாணவர்களின் "ருகிங்" குறித்த மேற்படி பண்புகள் மனித ஆளுமையின் இரு எதிர் முனைகளைச் சுட்டி நிற்கின்றன என்பதை இவ்விரு அநுபவங்களும் எடுத்துக் காட்டுகிறன என்பதை மறுப்பதற்கில்லை. பிளவுபட்ட மனம் எவ்வாறு முரண்பாட்டை வெளிக்காட்டி நிற்குமோ அவ்வாறே இம்முரண்பட்ட மனச் சூழ்நிலை "ருகிங்" என்பது; ஓர் "குற்றச் செயல்" ஆக பல்கலைக்கழக அறிவுஜீவிகளிடையே கருத்தைத் தோற்றுவித்தது எனலாம். இதனடிப்படையி

---

* Dr. A. Chidambaranatha Chettiar ( Chief Editor ) English - Tamil Dictionary. University of madras, 1965.

லேயே பல்கலைக்கழக மானியக் குழு "ருகிங்" என்பதை ஓர் தடை செய்யப்பட்ட செயலாக, குற்றச் செயலாகக் கருதியதால் அதற்கெதிரான தடுப்பு விதிகளையும் தண்டனை விதிகளையும் உருவாக்குவதற்கு உரிய சூழ்நிலை உருவாகியது எனலாம். 1980 ம் ஆண்டில் விடுதி வசதிகளை உடைய பல்கலைக்கழகங்களில் "ருகிங்" முறைகள் பற்றிய ஆய்வு. ஜே.ஹெட்டியாராச்சி, எஸ்.ஸ்ரீஸ்கந்தா, எஸ்.ஹெட்டியாராச்சி ஆகியோரால் முன்வைக்கப்பட்ட கட்டுரையில் 14 வகையான "ருகிங்" நடத்தைகள் பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளன.* இத்தொகுதியினை இரு வகையாகப் பிரித்துச் சுட்டிக் காட்டப்படுகின்றன. முதலாவது வாய்மொழியின் அடிப்படையில் அமைந்த "ருக்கிங்" முறைகள். இரண்டாவது உடலியல் அடிப்படையில் அமைந்த "ருக்கிங்" முறைகள் இவ்வாறாக அமைந்த "ருகிங்" முறைகள் மூன்று படிமுறைகளின் அமைவாக விபரிக்கப்படுகின்றன.

1. குறைவான நிலையில் செய்யப்படுபவை
2. மத்திம நிலையில் செய்யப்படுபவை
3. கடுமையான முறையில் செய்யப்படுபவை

ருகிங் முறைகள் -(வாய்மொழி ருகிங்)

1. பயமுறுத்தலின் அடிப்படையில் அமைந்த விசாரணைமுறை
2. தூஷண வார்த்தை பிரயோகம்
3. தகாத கருத்துக்கள், வார்த்தைகளின் அடிப்படையில் அமைந்த கவிதைத் தொகுப்புக்கள்; வாக்கியங்கள்
4. இழிவான விடயங்கள் குறித்து வாதப் பிரதிவாதங்களில் ஈடுபடுமாறு வற்புறுத்தல்
5. நெருங்கிய உறவினருக்கு ஆபாசமான கடிதம் வரையும்படி வற்புறுத்தல்.

குறைந்தளவிலான ருகிங்

6. சலூட் அடித்தல்
7. வெள்ளை உடை, சேலை அணிந்து வருமாறு வற்புறுத்தல்

மத்திம ருகிங்

8. பிறர் அருந்திய மீதியான உணவை உட்கொள்ள வற்புறுத்தல்
9. சக புதிய மாணவர்களின் உணவை உண்ணுமாறு கூறல்
10. உணவுப் பொட்டலத்தைத் தலையில் வைத்தபடியே உண்ணுமாறு பணித்தல்

கடுமையான ருகிங்

11. "டிப்ஸ்" அடிக்கும்படி பணித்தல்
12. கம்பஸ் கள்ளு
13. உடையைப் பகுதியாகவோ முழுமையாகவோ களைதல்
14. வெளிப்படையான, பிரத்தியேகமான முடியை அகற்றுமாறு கோரல்
15. ஸ்கொலர்ஸ்சிப்
16. சிலுவையில் அறைதல்
17. தகாத நிலைகளை அபிநயம் செய்யும்படி கூறல்
18. விருப்பத்திற்கு மாறாக மது, சிகரட் அருந்தும்படி கூறல்
19. பிறழ்வு நடத்தையில் ஈடுபடத் தூண்டல்

---

*. J. Hehiarachchy, S. Sri Kantha, N. S. Hehiarachchy, A case study of Ragging in a residential university. Presented in ceylon studies seminar on July 1980.

மேற்கூறப்பட்ட ஆதாரங்களின் அடிப்படையில் நாம் "ரூகிங்" என்பதை நோக்கின் இதனைப் பரந்த அளவில் பாராட்ட முடியாது என்பதையும், எக்காரணத்துக்காகப் பல்கலைக்கழக மானியக்குழு இதனை ஓர் தடைசெய்யப்பட்ட செயலாகச் கருதிப் பிரகடனப்படுத்தியது என்பதையும் நாம் அறியலாம். இவ்வாறான நடத்தைகளில் 100% மாணவர்கள் ஒத்த "பால்" இனரிலும், 81% மாணவிகள் எதிர்பாலாரிலும் "ரூகிங்" செய்யப்பட்டுள்ளனர். இதனடிப்படையில் ஆண்கள் இந்த நடத்தையில் முக்கிய ஈடுபாட்டினைக் கொண்டுள்ளனர். என்பதை ஆய்வு காட்டுகின்றது.

"ரூகிங்" என்பதை ஓர் "ஆக்கபூர்வமான மனித நடத்தை" எனக் கூறமுற்படும் சாராருக்கு மேற்கூறியஆய்வுத் தகவல்கள் விசனத்தைத் தரலாம். ஆனால் மேற்கூறப்பட்ட நடத்தைகளை ஓர் பகுத்தறிவான நடத்தையாக, சாதாரணமாக ஓர் உளவியலாளனோ அன்றி சமூகவியலாளனோ ஒப்புக் கொள்ளான். ஏனெனில் இவை மனித ஆளுமையை வளர்த்துச் செல்லும் என்பதற்கு போதிய ஆதாரங்களைத் திரட்டுவது சிரமமானதே.

புதிய மாணவர்களின் அபிப்பிராயப்படி தமது ரூகிங்கால அனுபவங்களாகப் பயம், கோபம், விபத்து, ஏமாற்றம் எனப் பல மன உணர்வுகளை வெளிப்படுத்தியுள்ளனர். இம்மனோபாவங்களை மனித ஆளுமையின் சிதைந்த பகுதிகளாக உளவியலாளர்கள் பலர் ஆண்டாண்டு காலமாகச் சுட்டிக்காட்டி வருகின்றனர். இவ்வாறான நிலைகளில் மனிதன் தனது உடல், மனரீதியான சமநிலையை இழக்கின்றான். உடலில் இரத்த அழுத்தம் ஏற்படுகின்றது; மனம் பரபரப்படைகின்றது. இந்நிலை மனிதர்களிடையே மனமுறிவு, அல்லது ஆக்கிரமிப்பு மனப்பான்மையை வளர்க்கின்றது. பேராதனைப் பல்கலைக்கழகத்தில் ஓர் புதிய மாணவியின் தற்கொலை முயற்சி இந்த மனமுறிவின் அடிப்படையிலேயே இடம் பெற்றது. பல புதிய மாணவர்கள் பல்கலைக்கழகத்தை விட்டு நீங்கிய பல உதாரணங்களும் இதற்கு உண்டு. இதே போல் ஆக்கிரமிப்பு மனப்பான்மையின் அடிப்படையில் பல வன்முறைச் சம்பவங்கள் "ரூகிங்" கால கட்டங்களில் இடம் பெற்றுள்ளன. உதாரணமாக 1982ம் ஆண்டு தும்பறை வளாகத்தில் புதிய மாணவனை ஓர் நீதிபதியின் மகன் "ரூகிங்" கொடூரத்தால் தனது சிரேஷ்ட மாணவரைக் கத்தியினால் குத்த முற்பட்டார். இவ்வாறான ஓர் சம்பவம் அதே வளாகத்தில் 1983ஆம் ஆண்டும் இடம் பெற்றது. மேலும் இவ்வாக்கிரமிப்பு மன உணர்வு புதிய மாணவர்களிடையே இக்கால கட்டத்தில் அடிமனதினுள் அமுக்கப்பட்டு பின் தாம் சிரேஷ்ட மாணவர்கள் ஆகுங்கால் பழிவாங்கும் உணர்வாக. பிறரைக் கலக்கத்திற்கு உள்ளாக்கும் மனப்பாங்காக வளர்வதை நாம் காணலாம். "ரூகிங்" என்பது பாரம்பரியமாகத் தொடர்ந்து நிலவுவதற்கான பல்வேறு காரணங்களில் இவ் அர்த்தமற்ற பழிவாங்கும் உணர்வும் ஒன்றாகும்.

இனி "ரூகிங்" நடத்தைகளினால் பெறக்கூடிய "ஆக்கபூர்வமான வழிநடத்தல்" பற்றிய விடயத்தை நோக்குவோம். "ரூகிங்" முறையினால் புதிதாக வரும் மாணவர்களுடன் நட்புறவை வளர்க்கவும், தாழ்வுச்சிக்கலை நீக்கவும் அவர்களது திறன்களை வெளிக்கொணரவும் முடியும் என்கின்ற ஒருவகைக் கருத்துக்கள் பொதுவாக

சிரேஷ்ட மாணவர்களால் முன் வைக்கப்படுகின்றன. இது எந்தளவுக்கு ஓர் விஞ்ஞான பூர்வமான ஏற்பாக அமையக்கூடும் என்கிற கேள்வி எழுகின்றது. மேலோட்டமாகப் பார்க்கும்போது மேற்கூறிய கருத்துக்கள் செழிப்பாகவும். புனிதமாகவும் இருப்பதாகத் தேன்றுவது இயல்பே. எனினும் இதுவரை காலமும் சகல பல்கலைக்கழகங்களிலும் இடம்பெற்ற பதிவு செய்யப்பட்ட குற்றச் செயல்களின் தன்மைகள் சமூகவியலாளருக்கு அதிருப்தி தரக்கூடியனவே.

முதலாவதாக சிரேஷ்ட - புதிய மாணவர்களிடையே நட்புறவை வளர்ப்பது என்பது பற்றிய விடயத்தை அணுகுவோம். நட்பு என்பது இரு தனி மனிதர்களிடையே அல்லது இரு சாராருக்கு இடையே ஏற்படக் கூடியது. இங்கு சிரேஷ்ட - புதிய மாணவர்களுக்கு இடையே இடம்பெறும் சம்பாஷணைகளை நோக்கின் ஒரு வழித் தொடர்பாக (one way communication) இருப்பதை நாம் சாதாரணமாக அவதானிக்கலாம். இவ்வாறான சம்பாஷணைகளில் சிரேஷ்ட மாணவரே கேள்விகளைக் கேட்பதற்கு உரித்துடையவராகின்றனர். இங்கு புதிய மாணவர்கள் பதில்களை மட்டும் பகர்வதற்கு முடியும். இது "றுகிங்" நடத்தையில் ஓர் பாரம்பரியமாகப் பேணப்பட்டு வருகிறது. பின்வரும் "மாதிரி" ஓர் றுகிங் சம்பாஷணையை வெளிப்படுத்தி நிற்கும்.

சி. மா: டேய் உண்ட பேர் என்ன? (சி. மா:-சிரேஷ்ட மாணவர்)

பு. மா: கணேஷ் (பு. மா:-புதிய மாணவர்)

சி. மா;- ஏன் உனக்கு அப்பன் இல்லையாட (தூஷண வார்த்தை)

பு. மா: மௌனம்

சி. மா: டேய் ஏண்டா வெள்ளை சேட் போடவில்லை?

இவ்வாறான ஓர் பாஷைப் பிரயோகம் புதிய மாணவர் மத்தியில் நட்புறவை வளர்க்கும் ஒன்றாகவும், வரவேற்கப்படும் ஒன்றாகவும் இருக்கும் என்பது ஏற்புடையது அல்ல. அது நட்புறவை வளர்த்தற்கு மாறாக கசப்புணர்வை வளர்த்தது. தன்நம்பிக்கை உள்ள மனிதர்களுக்கு நட்பு என்பது ஓர் 'முறையில், (method) அடிப்படையில் அமைய வேண்டும் என்பதில்லை என உளவியலாளர் கூறுகின்றனர். இங்கு றுகிங் என்பதை ஓர் அறிமுகத்திற்கு அல்லது நட்புறவுக்கு ஓர் 'முறையியலாக' அல்லது 'சூத்திரமாக' (formula) விபரித்தல் என்பது ஓர் காத்திரமாக அமையாது. பேராதனைப் பல்கலைக்கழகத்தில் அண்மையில் செய்யப்பட்ட ஆய்வுகளின் அடிப்படையில் 30% மாணவர்கள் றுகிங் இன்றியே தமது நட்புறவையும் நண்பர்களையும் இனங்கண்டு கொண்டார்கள்.

இனி றுகிங் தாழ்வுச்சிக்கலை நீக்கும் என்ற கூற்றை நோக்குவோம். இக்கூற்று உளவியல் ரீதியாக ஆய்வுக்கெடுத்துக்கொண்டால் பல்வேறு வகை வாதப் பிரதிவாதங்களை ஏற்படுத்தக்கூடிய ஒன்றே. சிரேஷ்ட மாணவர்கள் புதிய மாணவர்களை 'றுகிங்' இற்கு உட்படுத்தும்போது, இது மறுதலையாக இடம் பெறுவதால் புதிய மாணவர்கள் மட்டுமே தாழ்வுச் சிக்கலுக்கு உட்பட்டிருப்பர் என்ற ஒரு எடுகூற்றுக்கு நாம் வரலாம். எனவே சிரேஷ்ட மாணவர் தாழ்வுச் சிக்கலுக்கு அப்பாற்பட்டவர்கள் என்பதாகின்றது. இது விஞ்ஞான பூர்வமாக அமையும் என்று கூறவதற்

கில்லை. இரண்டாவது பெருந்தொகையான புதிய மாணவர்களின் மத்தியில் தாழ்வுச் சிக்கல் உள்ளோரை இனங்காண்பது எப்படி? என்ற கேள்வி எழுகின்றது. இதற்கு செம்மையான பரிசோதனை முறைகள் ஏதேனும் நடைமுறைப்படுத்தப்படுகின்றதா? எனின் அது இல்லை எனலாம். மூன்றாவது தாழ்வுச் சிக்கலுக்கு சில புதிய மாணவர்கள் உட்பட்டு இருந்தால் (அதை ஓர் எடுகோளாக எடுத்துக் கொண்டால்) அவ்வாறானவர்களை அதிலிருந்து விடுவிப்பதற்குப் பயிற்சியையும், தகைமையையும், (ஓர் உளவியலாளன் என்ற அடிப்படையிலே) இலங்கையின் சகல பல்கலைக்கழகத்திலும் இருக்கும் சிரேஷ்ட மாணவர்கள் கொண்டுள்ளார்களா? என்ற வினாவும் பின்தொடர்ந்து எழும். இவ்வாறான வினாக்களுக்கு விடை சிக்கலைத்தரும். மேலும் புள்ளி விபரங்களின் அடிப்படையில் நோக்கின் றாகிங் அனுபவத்தின் பின்னே தாம் "தாழ்ந்தவர்கள்" என்ற அனுபவத்தை பெற்றதாக 70% மான புதிய மாணவர்கள் தெரிவித்தனர். கூடவே இக்கால கட்டத்தில் சிரேஷ்ட மாணவர்கள் பற்றிய அச்சம், பயம், அதிர்ச்சி, வெட்கம் போன்ற உணர்வுகள் ஏற்படுவதாகவும் தமது ஆளுமை சிதைக்கப்படுவதாகவும் கூறுகின்றனர்.

றாகிங் ஆக்க பூர்வமான விபரிப்பில் 'திறமைகளை வெளிக்கொண்டு வரல்' என்ற கருத்தும் ஒன்று. மாணவர் பலரின் அனுபவங்களின்படி எமது கலாச்சார பண்பாட்டுக் கோலங்களின் நீட்சிக்கேற்ப பல புதிய மாணவ மாணவிகளுக்குப் 'பாடத்தெரியும்' 'ஆடத்தெரியும்' 'நடிக்கத்தெரியும்' 'விளையாடத்தெரியும்' போன்ற விடயங்கள் வெளிக்கொணரப்படுகின்றன. இதில் ஓரளவு உண்மை உண்டு எனலாம். எனினும் இவ்வாறான திறமைகளை ஆக்கிரமிப்புத் தன்மையுள்ள, வற்புறுத்தலின் அடிப்படையில் அமைந்த முறையினூலே தான் வெளிப்படுத்த வேண்டுமா என ஒழுக்கவியலாளர் கேள்விகளை எழுப்ப இடமுண்டு. களிப்பான, குதூகல மிக்க ஓர் ஆரோக்கிய சூழ்நிலையில் இவ்வாறான மனிதத் திறமைகள் கட்டின்றி வெளிப்படுவது இயல்பே.

புதிதாக வரும் மாணவிகளின் மீதான றாக்கிங் நடைமுறைகளை நோக்கின் அண்மையில் மேற்கொண்ட வினாக்கொத்தின் விடைகளாகப் பின்வரும் விபரங்கள் மாணவிகளால் கூறப்பட்டன. அதிகமான மாணவர்களாலே தாம் றாக்கிங் செய்யப்பட்டதாகவும், இதற்கு அடிப்படைக் காரணம் 'இனக் கவர்ச்சியாக' அமைகின்றது என பெரும்பாலானோர் கூறுகின்றனர். எனினும் தூஷண வார்த்தைகள், உடலமைப்பைப் பற்றிய வருணனைகள், இருபொருள்பட்ட பேச்சுக்கள், உடைகளின் அளவுகள் போன்ற கேள்விகள் தம்மை அதிர வைத்ததாகவும், பல்கலைக்கழக விழுமியங்கள் குறித்து தாம் பாரிய கேள்விகளை எழுப்ப விரும்பியதாகவும் தெரிவித்தனர். மேலும் மாணவர்கள் தமது தகப்பனாரின் தொழில், வீட்டில் உள்ள பெண்களின் எண்ணிக்கை போன்ற கேள்விகள் மூலம் சீதனம் பற்றிய கருத்தாக்கங்களை நேரில் முறையாக அறிய றாக்கிங்கை ஓர் வழிமுறையாக உபயோகிக்கின்றார்கள், என்ற கருத்தையும் சிலர் முன் வைத்தனர். அதேவேளை புதிய மாணவர்கள், தம்மை றாக்கிங் செய்த சிரேஷ்ட மாணவர் தரமற்ற கேள்விகளைத் தம்மிடம் கேட்கவில்லை என்று கூறியுள்ளனர். சிலர் "சிரேஷ்ட மாணவியர் தம்மைறாக்கிங் செய்திருந்தால் தாம் அவர்களை மீண்டும் றாக்கிங் செய்திருப்பார்கள்" என்றும், அவர்களுக்கு அந்தளவுக்குத் "தைரியம்" இல்லை என்றும் கூறுகின்றனர். இது எமது சமுதாயத்தில் பாரம்பரியமாக இடம்பெறும் பெண்கள் மீதான ஆண் மேலாதிக்கத்தை வெளிப்ப

டுத்தி நிற்கின்றது. அத்தோடு சில விடைகளிலே ஆண்களின் இந்நடத்தையை சில மாணவியர் நியாயப்படுத்தியிருப்பது எமது சமூகத்தில் ஆண் மேலாதிக்கத்தின் இறுக்கத்தை வெளிப்படுத்தியிருக்கின்றது. 'ஆண்கள் அப்படித்தான் இருப்பார்கள். பெண்கள் தான் பொறுமையுடனும் அடக்கத்துடனும் அவற்றைச் சகித்து தமது பண்பாட்டினைப் பேண வேண்டும்' என்று கூறியுள்ளனர். இந்த நகைக்கத் தக்க காரணத்தை அடிப்படையாகக் கொண்டே ஆண்கள், பெண்கள் மீதான தமது றுக்கிங்கை ஓர் வாய்ப்பாகப் பயன்படுத்துகின்றனர்கள். இதனைக் கண்டித்த சில புதிய மாணவியர் ஆண்கள் தமது "வக்கிரங்களை"த் தீர்க்கும் ஓர் வடிகாலாக றுக்கிங்கைக் கொள்கின்றார்கள் எனக் கூறியுள்ளனர்.

மேற்கூறிய காரணங்கள் அனைத்துமே 'றுக்கிங்' என்பதை; சமயப்பாஷையிலே கூறுவதானால் ஓர் 'சாத்தான் செயலாகவோ', இதில் ஈடுபடும் சிரேஷ்ட மாணவ மாணவிகள் 'கெட்ட குமாரர்களாகவோ' 'குமாரிகளாகவோ' காட்ட முனைவது போல் உள்ளது. பல கோணங்களில் நின்று பார்த்தாலும் 'றுகிங்' என்பது தவறு என்று எவருக்கும் தெரிந்தாலும், பல்கலைக்கழக சமூகம் இதனை மீண்டும் மீண்டும் சந்திக்கின்றது. வினாக்கொத்தின் அடிப்படையில் நோக்கினால், 'றுக்கிங்' பற்றிய கருத்துக்களை கொண்டிருக்கும் புதிய மாணவர்கள் மூன்று வகையினராகக் குறிக்கலாம். முதலாவது வகையினர் றுக்கிங் நடத்தையைப் பகுத்தறிவு ரீதியாக முற்றாக நிராகரிப்போர். இவர்கள் மிகச் சிறுபான்மையினர். இரண்டாவது வகையினர் றுக்கிங் என்பதை நிலைநிறுத்தி, நியாயப்படுத்துவோர். இவர்களும் மிகச் சிறுபான்மையினரே. மூன்றாவது வகையினர், இது நன்மை என்றும் தீமை என்றும் கூறுவோர். இவர்கள் மிகப் பெரும் பான்மையினர். இவர்களே இது 'பாரம்பரியம்' என்றும், "அறிமுகத்திற்குத் தேவை" யானது என்றும் இதனைச் செய்வது 'பரவாயில்லை' என்றும் கூறுகின்றனர். இங்கு 'பரவாயில்லை' என்பது பின்வரும் அர்த்தத்தைக் குறித்து நிற்கின்றது. அதாவது றுகிங் செய்வதில் தவறொன்றும் இல்லை. ஆனால் அது ஓர் அளவோடு (limit) இருக்க வேண்டும்." என்கிறார்கள். ஆனால் இங்கு அத்துமீறும் றுக்கிங் இன் அளவு எது? என்பது எவராலும் திட்ட வட்டமாக சுட்ட முடியவில்லை. ஏனெனில் இது மாணவருக்கு மாணவர் வேறுபடுகின்றது. றுக்கிங்கில் பல அனர்த்தங்கள் இடம்பெறுவதற்கு இக் 'குழம்பியநிலை' காரணமாக அமைகின்றது. பல்வேறு கடுமையான றுக்கிங் அனுபவங்களினூடு சென்ற பல மாணவர்களும் தமது அனுபவங்களைக் கடந்த பின்பும் அதனை நியாயப்படுத்துவதை இங்கே காணக் கூடியதாக இருக்கின்றது. வேதாளம் மீண்டும் மீண்டும் முருங்கை மரத்தில் ஏறுவது போன்று இதுவும் பல்கலைக்கழகச் சூழலை ஆண்டாண்டு தோறும் மீண்டும் கவ்விக் கொள்கிறது.

இந்நிலையிலேயே சமூக ஆய்வாளர்கள் இதனை மிகக் கூர்ந்து அவதானிக்க வேண்டி இருக்கிறது. இந் நடத்தையில் பாரிய தவறுகளைக் கண்ட பின்பும் இது பற்றிய கடுமையான சட்ட திட்டங்களை நோக்கியபின்பும், இதன் அடிப்படையில் பல குற்றச் செயல்களையும், தற்கொலைகளையும், மனமுறிவுகளையும் சந்தித்த பின்பும் மாணவர்கள் ஏன் இக்காரியத்தை மீண்டும் மீண்டும் செய்கின்றார்கள்? இக்கேள்வி சமூகவியலாளர்களைச் சிந்திக்கத் தூண்டும் சவால் மிக்க கேள்விகள் ஆகும். பேராதனையில் தமது ஆய்வினை மேற்கொண்ட 'ஹெறட்டியாராய்ச்சி' குழுவினர் இதனைச் 'சட்ட திட்டங்கள்' மூலம் நீக்கிவிட முடியாது, என்று தமது ஆய்வின் முடிவுரையில் கூறியுள்ளதை நாம் இங்கு கவனத்தில் கொள்ள வேண்டும்.

எமது பாரம்பரிய பண்பாட்டு நியமங்களும். ஒழுக்கவியல் தத்துவங்களும், சட்டாம் பிள்ளைத் தனமும், பொலீஸ்காரன் பாணியும், வன்முறை மிரட்டல்களும் இச்சமூக வெளிப்பாட்டினைத் தீர்ப்பதில் தோல்வியடைவதை, ஆண்டாண்டு காலம் தொடர்ந்து இடம்பெறும் இப்பாரம்பரியம் எடுத்துக் காட்டுகிறது.

இதனை நாம் ஆராய வேண்டுமானால் எமது பாரம்பரிய சமூகக் கோட்பாடுகளின் நியமங்கள், விழுமியங்கள் குறித்து மீண்டும் வினாக்களை எழுப்ப வேண்டி வரும் என்பதில் ஐயமில்லை. புதிய மாணவ மாணவியர் ஏனையோருடன் அறிமுகமாகவும் நட்புறவாகவும் றாக்கிங் தான் நல்ல வழி எனின், எமது சமூக அமைப்பில் இவ்வாறான 'மனித உறவுகள் கலக்கும் நிலை (Sociali zation) பாராட்டப்படவில்லை போலத் தோன்றுகிறது. புதியவர்களுடன் எவ்வாறு எம்மை இணைத்துக் கொள்வது என்பது ஓர் 'கலை' ஆக நாம் கற்றுக் கொள்ளவில்லை போல் உள்ளது. 'இது தவறு' எனின் தனிமனித உணர்வுகளை நாம் மதிப்பதும் ஏனையோரும் எம்மைப் போன்றே உணர்வுகளை உடையவர்கள் என்பதையும் நாம் காணத் தவறுகின்றோம் போல் உள்ளது. இது வியப்பிற்குரியதே.

இச்சமூகச் சிக்கலை ஓர் "ஒழுக்கவானின்" பார்வையில் ஆத்திரப்பட நோக்குவது என்பது பயன்தரக்கூடிய ஒன்றல்ல. பெரும்பான்மையான மாணவர்கள் இதனை 'மீண்டும் செய்வோம்' எனக் கூறும்போது இவர்களை ஓர் கெட்ட குமாரர்களாக அல்லது குமாரிகளாக நாம் பார்க்க முடியாது. மாறாக இவர்களது மன உணர்வுகளை நாம் ஆழ்ந்து நோக்க வேண்டியதன் அவசியத்தை இது சுட்டி நிற்கின்றது. இச்செயலை 'தீமையான காரியம்' என்று தாமே கூறியபின்பும இவர்கள் இந்த நடத்தையில் மீண்டும் ஈடுபடும் 'மனோநிலையை' நாம் கூர்ந்து அவதானிக்க முற்பட வேண்டும். பரஸ்பர அறிமுகத்தையும் நற்புறவையும் வளர்க்க இத்தவறான முறையை ஏன் இவர்கள் கையாள வேண்டும்? அறிமுகத்தையும் நட்புறவையும் வளர்க்க. 'சிரேஷ்ட தன்மை' என்பதை ஓர் 'கவசமாக' இவர்கள் பாவிக்கின்றனர். தனிமனித ஆளுமையில் மாணவர்கள் தன்நம்பிக்கையற்று றாக்கிங்' கை ஓர் வழியாக உபயோகிக்கும் துரதிர்ஷ்டம் ஏன் ஏற்பட்டது! களிப்பும் குதூகலமும் தரும் வகையில் ஆரோக்கியமாக பல்கலைக்கழகச் சூழ்நிலையை அமைத்துக் கொள்ள மாணவர் சமூகத்திற்கு உள்ள தடை என்ன? இச்சிக்கல்கள் இவ்விளம் சந்ததியினரிடம் உள்ளதா? அல்லது எமது சமூகக் கலாச்சாரச் சூழ்நிலைகளின் பல்வேறு வெளிப்பாடுகளில் இதுவும் ஒன்றா? இவற்றை பயனளிக்கக் கூடிய ஆய்வுகளாக நாம் எதிர்காலத்தில் மேற்கொள்ள முடியுமாயின் இவை ஆர்வம் மிக்க மாணவ மாணவியருக்கு உயிரோட்டத்தைக் கொடுப்பதாக அமையும்.

மெய்யியலாளரான பிளேட்டோவும், அரசியல் அறிஞரான ரூசோவும் உளவியலாளரான சிக்மண்ட் பிராடும் 'மனிதன்' என்பது குறித்து கூறிய கருத்தின் சாரத்தை இங்கே இறுதியாகத் தருவோம்.

> "விலங்கினத்தைச் சார்ந்தவன் மனிதன். அவன் பலவீனமானபோது இவ்வினத்தின் குணம் அவனையும் மீறி வெளிப்படுகின்றது. பகுத்தறிவுள்ளவன், நாகரீகமானவன் மீண்டும் 'மனிதனை' உருவாக்குகின்றான்'

# இலங்கையிலே திறைசேரி உண்டியல்களின் வளர்ச்சியும், போக்கும்.

செல்வி. பாமதி இராஜதுரை (இறுதி ஆண்டு) யாழ்.பல்கலைக்கழகம்

இலங்கையில் திறைசேரி உண்டியலின் வரலாறுனது குடியேற்ற காலப்பகுதியில் இருந்து ஆரம்பிக்கின்றது. குடியேற்ற காலப்பகுதியில் 1923ம் ஆண்டின் 7ம் இலக்க திறைசேரி உண்டியல் சட்டம், பின்பு 1954ம் ஆண்டில் 51 வது இலக்கத்தின்படி மாற்றப்பட்டு திறைசேரி உண்டியல்களுக்கான நிதி அரச முகவர்களினுல் ஐக்கிய இராச்சியத்தில் சேகரிக்கப்பட்டது. பின்னர் உள்நாட்டு திறைசேரி உண்டியல்கள் மூலம் இலங்கையில் நிதி சேகரிக்கப்பட்டது. சட்டசபையில் 29.07.1941 இல் உருவாக்கப்பட்ட பிரேரணைப்படி இலங்கையில் முதன் முதலாக 10 மில்லியன் ரூபாவிற்கான உள்நாட்டு திறைசேரி உண்டியல்களை வெளியிடுவதற்கு அதிகாரம் பெறப்பட்டது. இவ் எல்லையானது காலணித்துவ அரசாங்க காலத்தில் 15 மில்லியன் ரூபாவாக அதிகரிக்கப்பட்டு சுதந்திரம் பெற்ற பின்னர் 1948ம் ஆண்டு ஜுன் மாதம் பாராளு மன்றத்தினுல் இந்த எல்லை 25 மில்லியன் ரூபாவாக அதிகரிக்கப்பட்டது. அக்காலப்பகுதியில் இருந்து திறைசேரி உண்டியல்களுக்கான எல்லை காலத்திற்கு காலம் அதிகரிக்கப்பட்டுள்ளது. 1950ல் இது 100 மில்லியன் ரூபாவினையும் 1960 இல் 650 மில்லியன் ரூபாவாகவும் அதிகரித்து 1970 ல் மிகவும் விரைந்த அதிகரிப்பான 2050 மில்லியன் ரூபா எல்லையை அடைந்தது, 1980 இல் இது 4000 மில்லியன் ரூபாவாக அதிகரித்து. 1985 இல் 25000 மில்லியன் ரூபாவாக அதிகரித்தது. இதற்கு காரணம் பாதீட்டு குறையினை (Budget deficits) நிரப்புவதற்கு திறைசேரி உண்டியல்களை அரசாங்கள் பயன் படுத்தியமையாகும். நவம்பர் 1986ல் திறைசேரி உண்டியலின் எல்லை மேலும் 10,000 மில்லியன் ரூபாவினுல் அதிகரிக்கப்பட்டு 35,000 மில்லியன் ரூபாவை அடைந்துள்ளது. தற்போது வழங்கப்பட்டுள்ள திறைசேரி உண்டியல்களின் பெறுமதி 26,750 மில்லியன் ரூபாவாகும்.

சட்டசபையில் ஜுலை மாதம் 1941ம் ஆண்டு கொண்டுவரப்பட்ட பிரேரணை சட்டமாக்கப்பட்டு குடியேற்ற அரசாங்கத்தின் திறைசேரி உண்டியல்கள் வெளியிடப்பட்டன. இவற்றை வழங்குவதும் மீட்பதும் தொடர்பான எல்லா நிர்வாக தொழிற்பாடுகளும் திறை சேரியின் பொதுப்படு கடன் பிரிவினுல் கையாளப்பட்டது.

சுதந்திரம் பெற்ற பின்னர் இலங்கையில் மத்திய வங்கி அமைக்கப்பட்டு நாணய சட்டத்தின் 133 பிரிவின் படி 1949ம் ஆண்டில் 58ம் இல சட்டத்தின்படி பொதுப்படுகடனை முகாமை செய்யும் பொறுப்பு மத்திய வங்கியிடம் கையளிக்கப்பட்டது. மத்திய வங்கி தொழிற்படத் தொடங்கியதும் அங்கு பொதுப்படுகடன் திணைக்களம் ஆரம்பிக்கப்பட்டு திறை சேரி உண்டியல்களை வழங்குதலும் அவை முதிர்ச்சியடையும்போது மீட்பு பெறுவதும் தொடர்பான நடவடிக்கைகள் இத்திணைக்களத்தினுல் அரசாங்கத்தின் முகவர் என்ற நிலையில் மேற்கொள்ளப்படுகின்றன. திறைசேரி உண்டியல்கள் ஆரம்பத்தில் திறைசேரியின் பருவகால ரீதியிலான வருமான வீழ்ச்சியை ஈடு செய்வதற்கும் எதிர்பாராத செலவினங்களையும் ஈடு செய்வதற்காக நிதியைப் பெற்றுக் கொள்வதற்குரிய தற்காலிக மூலமாக பயன் படுத்தப்பட்டது இவை வர்த்தக வங்கிகள் சட்ட ஆளுமை அமைப்புக்கள், தனிப்பட்ட நபர்கள் குறுக்கால முதலீட்டை மேற்கொள்ளக்கூடிய ஒரு வழியாக தொழிற்பட்டது. எதிர்பார்க்கப்பட்ட வருமானம் கிடைத்ததும் திறைசேரி, வெளியில் நின்ற உண்டியல்களை

மீட்டுக் கொண்டது. ஆனால் தற்பொழுது திறைசேரி உண்டியல்கள் பாதீட்டில் நிதியீட்டம் செய்வதற்கான ஒரு கூறாக அமைந்தமையினால் இக்கடன் படுகை நிரந்தரமான தன்மையுடையதாக மாறியுள்ளது.

திறைசேரி உண்டியல்கள் தொடர்பான கொடுக்கல் வாங்கல்களும் திறைசேரியின் பிரதி செயலாளருக்காக செய்யப்படுவதுடன் அவரின் கையொப்பத்தினை உண்டியல்கள் கொண்டதாக இருக்கும். திறைசேரி உண்டியலில் வழங்கப்பட்டுள்ள பணத்திற்கான கொடுப்பனவு திரட்டு நிலையில் இருந்து மேற்கொள்ளப்படும்.

திறைசேரி உண்டியல்களின் பெறுமதியும் ரூபா 1000/= ஆக அல்லது அவற்றின் பெருக்கங்களாக இருப்பதோடு முதிர்ச்சியடையும் போது சமவிலையில் மீட்கப்படும். உள்நாட்டு திறைசேரி உண்டியல் கட்டளைச் சட்டத்தின் 5வது பிரிவின்படி அவை ஒரு வருடத்திற்கு மேற்படாத காலப்பகுதியே முதிர்ச்சியடையக் கூடியதாக இருக்கும் என கூறப்பட்டது. பின்னர் முதிர்ச்சிக் காலப்பகுதி 3 மாதமாக்கப்பட்டது. ஜுலை 1981 இல் இருந்து 6 மாத முதிர்ச்சிக் காலமான உண்டியல்கள் அறிமுகம் செய்யப்பட்டன.

திறைசேரி உண்டியல்கள் கோரப்பட்ட வட்டி வீதத்தின் அடிப்படையில் கழிவீடு செய்யப்பட்டு வழங்கப்படுகிறது. [ உதாரணமாக 9 சத வீத வட்டி எனில் ரூபா 100/= ற்கு உரிய பெறுமதி ரூ 97 . 75 சதத்திற்கு வழங்கப்படும் ] . திறைசேரி உண்டியலின் வீதமானது காலத்திற்குக்காலம் மாற்றமடையலாம். 1951 – 1955 வரை ஒரு வருடத்திற்கு 0 . 4 – 0 . 8 சத வீதம் எனவும், 51 - 55 இலும், 60 - 65 காலப்பகுதியிலும் ஒரு வருடத்தில் 2% - 3% வரைக்கும். 70 – 75 காலப்பகுதியில் இது வருடத்திற்கு 5 சதவீதமாகவும், 1979 ல் இது 9 . 0 – 13 . 0 சதவீதமாகவும் 84 ல் 14 சத வீதமாகவும் அதிகரித்தது, ஒக்டோபர் 1985 ல் இது 13 சத வீதமாக குறைந்து டிசெம்பர் 1985 ல் 11 . 5 சதவீதமாக மேலும் வீழ்ச்சியடைந்தது. 1986 ல் முதல் பகுதியில் இது 13 சதவீதமாக அதிகரித்து, இறுதிப்பகுதியில் 12 சதவீதமாக வீழ்ச்சியடைந்தது. தற்போது இது 16 - 19 சதவீதத்திற்கு இடையில் இருக்கின்றது.

காசு தேவையின் அவசியத்தை அடிப்படையாகக் கொண்டு திறைசேரி உண்டியல்களுக்கான கேள்விப் பத்திரம் கோரப்படும். அண்மைக் காலம் வரைக்கும் இரு வகையான திறைசேரி உண்டியல்கள் வழங்கப்பட்டுள்ளன. அவை சாதாரண மாதந்த திறைசேரி உண்டியல்கள் எனப்படும். இவற்றின் வழங்கீடுகள் மாதத்தின் முதலாம் திகதியும், பதினைந்தாம் திகதியும் நடைபெறும். அந்நாட்கள் வீடு முறையாயின் அடுத்த வேலை நாட்களில் நடைபெறும். இதனைத்தவிர திறைசேரியின் உடனடி நிதித்தேவையினை அடிப்படையாகக்கொண்டு வேறு நாட்களில் வழங்கப்படும் திறைசேரி உண்டியல்கள் உடனடி திறைசேரி உண்டியல்கள் வெளியீடு [ Interme Diate Issues of Treasury Bills ] எனப்படும்.

1986 ம் ஆண்டில் நவம்பர் மாத இரண்டாம் கிழமையில் ரூபா 250 மில்லியன் பெறுமதியான திறைசேரி உண்டியல்கள் வாரம் தோறும் வழங்குவதற்காக அறிமுகம் செய்யப்பட்டன. இத்திட்டமானது பொதுமக்களை திறைசேரி உண்டியல்களை முதலீடு செய்வதற்கான சந்தர்ப்பத்தை வழங்குவதற்கும் வங்கித்துறை, வங்கித்துறை அல்லாத நிறுவனங்களின் குறுங்கால முதலீட்டு நிதியினைப் பெறுவதற்கும் மேற்கொள்ளப்பட்டது.

கேள்விப் பத்திரத்தை ஒரு குழு ஆராய்ந்து எவ்விதத்தில் கேள்விப் பத்திரங்களை ஏற்பது எனவும். அதற்குக் குறைவாகக் கேட்கப்பட்ட கேள்விகள் ஏற்றுக் கொள்ளப் பட்டு அதை கோரியவர்களுக்கு வழங்கப்படும் குறுங்காலக் கடன்களுக்கான வழிகாட்டல் வீதமாக 16–19சத வீதம் வரை தற்போது நிலவுகிறது.

இலங்கை மத்திய வங்கி ஆரம்பிக்கப்பட்டதில் இருந்து கூடுதலான திறைசேரி உண்டியல்கள் இவ் வங்கியினுலே வாங்கப்படுகின்றன. எனினும் வணிக வங்கிகள் அரச திணைக்களங்கள், ஆழ் நிதியங்கள் (Sinking funds) காப்புறுதிக்கம்பனிகள், சட்ட ஆபரண நிறுவனங்கள் (Corporate Bodies) மற்றும் தனிப்பட்ட நபர்கள் இவற்றில் பங்கெடுக்கின்றன.

திறைசேரி உண்டியல்கள் கைமாற்று சாதனமாக இது புறக்குறிப்பிட்டு உரிமை மாற்றம் செய்யப்படலாம். முன்பு திறைசேரி உண்டியல்களை முதலில் வாங்குவோர் அதனை முதிர்வு அடையும் வரை வைத்திருக்க வேண்டியிருந்தது. திறைசேரி உண்டியல்களுக்கான துணைநிலைச் சந்தை இலங்கை மத்திய வங்கியினுல் அபிவிருத்தி செய்யப்பட்டிருப்பதால் இக் குறுங்காலச் சந்தை அமைப்பு பருவகாலத்தில் மேலும் வளர்ச்சியடையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## திறைசேரி உண்டியல் என்றுல் என்ன?

திறைசேரி உண்டியல்கள் என்பது வருடாந்தம் தயாரிக்கப்படும் வரவு செலவுத் திட்டத்தில், திட்டமிடப்பட்ட சில நடைமுறை செலவினங்களை ஈடு செய்வதற்காகவும் குறுங்காலக் காசுத் தேவையைப் பூர்த்தி செய்வதற்காகவும். அரசாங்கத்திற்கு உதவுகின்றது. நடைமுறைச் செலவினங்கள் தொடர்ந் தேர்ச்சியாக அல்லது குறிப்பிடப் பட்ட கால இடைவெளியில் நடைபெறலாம். உதாரணமாக கூலி, சம்பளம் ஆகியவற்றிற்கான கொடுப்பனவு வரவு செலவுத் திட்டத்தில் எதிர்பார்க்கப்பட்ட வருமானங்கள் ஒரு குறிப்பிடப்பட்ட கால இடைவெளிக்கு பின்பே கிடைக்கின்றது. எனவே அதி அவசியமான குறுங்கால நிதித் தேவையைப் பூர்த்தி செய்வதற்கு திறைசேரி உண்டியல்களை வழங்குதல் ஒரு அரசாங்கக்கடன் பெறும் உபாயம் ஆகும். திறைசேரி உண்டியல்கள் பொதுப்படுகடன் திணைக்களத்தினுல் திறைசேரி உண்டியல் கட்டளைச் சட்டத்தின் (அத்தியாயம் 417) பாராளுமன்றத்தில் மேற்கொள்ளப்பட்ட தீர்மானத்தின் அடிப்படையில் ஒரு குறிப்பிடப்பட்ட பண எல்லை அல்லது பெறுமதி எல்லை வரைக்கும் வழங்கப்படுகிறது.

## குறைநிலை வரவு செலவுத்திட்டத்தில் திறைசேரி உண்டியலின் பங்கு

கடந்த சில தசாப் தங்களாக இலங்கையில் குறைநிலை வரவு செலவுத் திட்டம் சமர்ப்பிப்பது வழமையான தொன்றுக உள்ளது. இதற்கான காரணம் நடைமுறைச் செலவினங்களும் மூலதன செலவினங்களும் அதிக அளவில் அதிகரித்துள்ளமையே யாகும். தொடர்ந்து வந்த அரசாங்கங்கள் பல அபிவிருத்தித் திட்டங்களை மேற்கொண்டமையால் மூலதன செலவினம் குறிப்பிடத் தக்களவு அதிகரித்து தேசிய பணக்குறை நிலை அதிகரித்துள்ளது.

ஒரு நாட்டின் குறைநிலை வரவு செலவுத்திட்டத்தினை நிரப்புவதற்கு பல வழிகள் உள்ளன. மொத்தச் செலவினங்களுக்கும் மொத்த வருமானத்திற்கும் இடையிலான இடைவெளி அதிகரித்து செல்லும் போது அரசாங்கத்தால் நேர்வரி விதிப்பானது

இவ்வரவு செலவுத் திட்ட இடை வெளியை நிரப்புவதற்கு போதியதாக இல்லை. எனவே இக்குறை நிலைமையை நிரப்புவதற்கு அரசாங்கம் உள்நாட்டு அல்லது வெளி நாட்டு மூலங்களிடமிருந்து கடன்களை அல்லது கொடைகளைப் பெறவேண்டியதாக இருக்கின்றது. இலங்கையில் இப்பாதீட்டு குறைபாடானது உள்நாட்டு, வெளி நாட்டு கடன்படுகை மூலம் நிதியீட்டம் செய்யப்படுகிறது. உள்நாட்டுக் கடன் படுதலில் நடுத்தர, நீண்டகால தவணைக் கடன்கள் [அரசாங்க ரூபா பிணைகள், நிர்வாக பெறுகைகள் ] குறுங்காலக் கடன்கள் [ திறைசேரி உண்டியல்கள், வரி ஒதுக்க சான்றிதழ்கள், மத்திய வங்கியினல் வழங்கப்படும் விசேடகடன் முற்பணங்கள்] ஆகியன இடம்பெறும்.

## வெளி நின்ற உள்நாட்டு கடன்களின் கட்டமைப்பு

அட்டவணை 1 — மில்லியன் ரூபாய்கள்

| | 1980 | 1982 | 1984 | 1986 | 1987 | 1988 |
|---|---|---|---|---|---|---|
| A. மத்திய நீண்ட காலக்கடன் | 17'938·7 | 26,104.4 | 33,328.8 | 39,277.2 | 45, 13.8 | 49,959 |
| (i) ரூபாய்க் கடன் | 17,611.0 | 25,800.4 | 33,227.5 | 39,129.8 | 44,957 | 49,797 |
| (ii) நிர்வாகக் பெறுகைகள் | 327.7 | 304.4 | 96.3 | 147.4 | 181 | 162 |
| B. குறுங் காலக்கடன் | 11,440.1 | 19,471.0 | 18,913.1 | 30,807.1 | 33,859 | 48,635 |
| (i) திறைசேரி உண்டியல்கள் | 9,800.0 | 17,320.0 | 14,860.0 | 26,172.6 | 29,850 | 43,700 |
| (ii) வரி ஒதுக்க சான்றிதழ்கள் | 12.5 | 10.7 | 9.6 | 9.0 | 9 | 9 |
| (iii) விசேட கடன் முற்பணம் | 1627.6 | 2,140.3 | 4,043.5 | 4,625.5 | 4000 | 49 256 |
| மொத்தம் (A+B) | 29378.8 | 45,757.4 | 52,236.9 | 70,084.3 | 78,997 | 98,594 |

மூலம் மத்திய வங்கி அறிக்கை

அரசாங்கத்தின் குறுங்கால நிதி மூலமாக திறைசேரி உண்டியல் பிரதான பங்கு வகிக்கின்றது. 1980 ல் வெளிநின்ற திறைசேரி உண்டியலின் பெறுமதி அட்டவணை1ன்படி 9800 .0 மில்லியன் ரூபாவாகவும், இது உள்நாட்டுக் குறுங்காலக் கடனில் 86 சதவீதமாகவும் காணப்பட்டுள்ளது. 1982 ல் உள்நாட்டு குறுங்கால கடனில் 89

சதவீதமாகஅதிகரித்துக் காணப்படுகிறது. காரணமென்ன வெனில் இக்காலப்பகுதியில் திறைசேரி உண்டியல்களுக்கான துணை நிலை சந்தை அமைக்கப்பட்டமையாகும். அடுத்து வரும் காலப்பகுதியில் நாட்டில் ஏற்பட்ட கலவரங்கள் காரணமாக குறைவடைந்து செல்லும் பொதுவான போக்கைக் கொண்டிருந்தது 1988 ல் இத்திறைசேரி உண்டியலின் பெறுமதி 43,700 மில்லியன் ரூபாவாகக் காணப்படுவதுடன் உள்நாட்டுக் குறுங்காலக் கடனில் 90 சதவீதமாக அதிகரித்து காணப்படுவதற்கு, திறைசேரி உண்டியல்களின் வட்டி வீதம் அதிகளவிற்கு அதிகரிக்கப்பட்டமையாகும். அண்மைக் காலங்களில் நடுத்தர, நீண்டகால கடன்களோடு ஒப்பிடும் போது குறுங்காலக் கடனின் அதிகரிப்பு போக்கு அதிகரிக்க கூடியதாக இருக்கின்றது. உள்நாட்டு படுகடனில் திறைசேரி உண்டியலின் சார்பளவான பங்களிப்பு 1988 ம் ஆண்டு இறுதியில் 44.3 சதவீதமாக அடைந்துள்ளது.

திறைசேரி உண்டியலின் உடமையை பொறுத்தவரை 85% மானவை வங்கித் துறையினுல் வைக்கப்பட்டிருந்தது. வங்கி அல்லாத துறைகள், பொதுமக்கள் ஆகியோரிடமிருந்து திறைசேரி உண்டியலில் முதலீடு செய்யும் போக்கு பெருமளவில் ஊக்கமளிக்கும் நிலையில் காணப்படவில்லை. ஏனெனில் திறைசேரி உண்டியலில் இருந்து பெறப்படும் வருமானமானது வேறு மாற்றீடு முதலீடுகளுடன் ஒப்பிடும் போது அதிகளவு கவர்ச்சி கரமாக இல்லை. எனவே வங்கித்துறை அல்லாதவை. பொதுமக்கள் வர்த்தக வங்கிகள் நிதி கம்பனிகள் ஆகியவற்றில் நிலையான வைப்புகளை மேற்கொள்ளுவதில் விருப்பம் காட்டி வருகின்றன. அட்டவணை- 2 கடந்த காலங்களின் திறைசேரி உண்டியலின் உடமையின் பாகுபாட்டை எடுத்து காட்டுகின்றது.

## திறைசேரி உண்டியலின் உடமை.

அட்டவணை -- 2 மில்லியன் ரூபாய்கள்.

| | 1980 | 1982 | 1984 | 1986 | 1987 தற்காலிகம் |
|---|---|---|---|---|---|
| வங்கித் துறை | 9,612.5 | 17,12.7 | 13,323.6 | 22,264.0 | 25,622.7 |
| வங்கித்துறையல்லாத் துறை | 187.5 | 147.3 | 1,536.4 | 3,908.6 | 4,227.3 |
| மொத்தம் | 9,800.0 | 17,320.0 | 14,860.0 | 26,172.6 | 29,850.0 |

மூலம்; மத்திய வங்கி ஆண்டறிக்கை

திறைசேரி உண்டியலை மத்திய வங்கி பெற்றுக்கொள்ளும் அளவிற்கு வங்கித் துறையல்லாதவை பெற்றுக்கொள்வதில்லை. இதன் வழிகாட்டற் கொள்கையானது அரசாங்கத்திற்கு, மத்திய வங்கியானது திறைசேரி உண்டியலினுல் முதலீடு செய்வதன் மூலம் நிதிச் சேவையைப் பூர்த்தி செய்யும் நிலைமையைக் காட்டுகின்றது. மத்திய வங்கியினுல் கொள்வனவு செய்யப்படும் திறைசேரி உண்டியலின் அளவானது பாராளுமன்றத்தினுல் தீர்மானிக்கப்படும், திறைசேரி உண்டியலின் எல்லையை அடிப்படையாகக் கொண்டு அமையும் இவ்வெல்லையானது காலத்திற்குக் காலம் அதிகரிக்கப்படுகிறது. ஏனெனில் வரவு செலவுத் திட்டப் பற்ருக்குறையை நிரப்புவதற்கு அரசாங்கம் தொடர்ந்தும் திறைசேரி உண்டியலை ஒரு மார்க்கமாகப் பயன்படுத்துவதாகும். அதிகரித்து வரும் பாதீட்டுப் பற்ருக்குறையானது இவ்வெல்லையை மீள அமைப்பதற்கு உரிய தேவையை உருவாக்கியதுடன் தற்போதைய வரையறை அளவு 45,000 மில்லியன் ரூபாவாக இருக்கிறது.

## திறைசேரி உண்டியல்கள் வழங்கப்படும் முறை

திறைசேரி உண்டியல் என்பது நட்ட அபாயத்தில் இருந்து நீக்கப்பட்ட ஒரு முதலீடாகும். (Agilt - edged security) இதன் முகப்புப் பெறுமதியானது முதிர்ச்சியடையும் போது செலுத்தப்படும் என்பதற்கு அரசாங்க உத்தரவாதம் உண்டு. இக் கேள்விப் பத்திர விற்பனை முறையில் (Tender) பொதுமக்களுக்கு வழங்கப்படும். இவ் ஏலம் தொடர்பான தகவல்கள் ஒவ்வொரு கிழமையும் புதினப் பத்திரிகைகள் மூலம் வெளியிடப்படும்.

கேள்விப் பத்திரத்திற்கான கட்டளை இடுவதற்குரிய விண்ணப்பப் பத்திரங்களை மத்திய வங்கி பொதுப் படுகடன் திணைக்களத்தில் இருந்து பெற்று பொது மக்கள் கேள்விப் பத்திரத்தை சமர்ப்பிக்கலாம். கேள்வித் தொகை 1000 களின் பெருக்கங்களாக இருக்க வேண்டும். ஆகக்குறைந்த முதலீடு 1000/= ஆகும். ஒழுங்காகப் பூர்த்தி செய்யப்பட்ட கேள்விப் பத்திரப் விண்ணப்பங்கள் பொதுப் படுகடன் திட்டத் திணைக்களத்தில் வைக்கப்பட்டிருக்கும். கேள்விப் பத்திரப்பட்டியலினை அவை மூடப்படும் இறுதித் திகதியில் அன்றே அல்லது அதற்கு முன்னரோ இடப்படுதல் வேண்டும்.

திறைசேரி உண்டியல்கள் கழிவில் வழங்கப்படுகின்றன. ஒருவரது கேள்விப் பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படுமாயின் அவர் உண்டியலின் முகப்புப் பெறுமதியிலும் குறைவான தொகையினை செலுத்த வேண்டும். முகப்பு பெறுமதிக்கும் செலுத்திய பெறுமதிக்கும் இடையிலான வித்தியாசம் திறைசேரி உண்டியலில் பெற்ற வருமானமாகும்.

திறைசேரி உண்டியல்களைக் கேட்பதற்கு ஒருவர் ஒவ்வொரு 100/= விற்கும் தான் கேட்கும் விலையினைக் குறிப்பிட வேண்டும். உதாரணத்திற்கு ஒருவர் ஒவ்வொரு 100/= பெறுமதிக்கும் 85/= விலை கோருகிருர் என வைத்துக் கொள்வோம் இவரது கேட்பு ஏற்றுக் கொள்ளப்படின் 1000/= முகப்புப் பெறுமதியுடைய திறைசேரி உண்டியலுக்கு இவர் 850/= செலுத்தவேண்டும். அவருடைய செலுத்தல் பெறப்பட்டதும் 1000/= முகப்புப் பெறுமதியுடைய திறைசேரி உண்டியல் சான்றிதழ் வழங்கப்படும். அவ்வுண்டியல் முதிரும் போது அந்நபர் 850/= முதலீட்

டிற்கு 1000 /= பெறுகின்ருர். ஆகவே அவரது தேறிய விளைவுக் கழிவு வீதமானது 15 % மாக இராது 17 . 64 % மாக அதாவது $\left(\frac{150}{850} \times 100 = 17.6471\%\right)$ இருக்கும். அதே போல கேள்விப் பத்திர தாரர் 6 மாதத் திறைசேரி உண்டியல் மீது 15 சதவீதமாகக் கழிவு வைக்க விரும்புகிருர் எனின் அவர் ஒவ்வொரு 100 /= விற்கும் 62 . 50 சதத்தை கேட்க வேண்டும் $\left(100 - \frac{15}{2}\right)$ 3 மாத முதிர்வுக் கால உண்டியலாக இருப்பின் அவரின் கேட்பு 96 . 25 $\left(100 - \frac{15}{4}\right)$ ஆகும். எனவே 15 சதவீதக் கழிவிற்கு வருடாந்தத் தேறிய விளைவு 6 மாத காலத்திற்கு 16 . 2162 சதவீதம் ஆகவும், 3 மாத காலத்திற்கு 15 . 5844 % மாகவும் இருக்கும். உண்டியலிற்கான கேட்பு விலையானது கழிவு வீதத்திஞலும். முதிர்ச்சிக் காலத்தை அடிப்படையாகவும் கொண்டும் நிர்ணயிக்கப்படுகிறது.

முதலீடு செய்ய விரும்புகின்றவர் கேள்விப் பத்திர விலையினைத் தீர்மானிப்பதால் அக்கேட்பினை மத்திய வங்கி. ஒன்றில் ஏற்க அல்லது நிராகரிக்க உரிமையுடையது. கேட்புப் பெறுமதி சார்பளவில் உயர்ந்த தொகையாக இருப்பின் அவரது கேட்பு ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும் என்பது நிச்சயமானதாகும். எனினும் அவர் தனக்கு கிடைக்கக் கூடிய மேலதிக வருமானத்தை இழந்து விடுகின்ருர். எனவே ஒரு புத்தி சாதுரிய முள்ள முதலீட்டாளர் இந்த இரு நிலைக்கும் இடையில் உள்ள நிலையினைத் தெரிவு செய்வார். இதற்கு நிதிச்சந்தையில் காணப்படும் முதலீட்டின் இயல்புகளை எடுத்து ஒப்பிட்டு, பாதுகாப்புத் தன்மை வருடாந்தமாக்கப்பட்ட விளைவு வீதம் சிறிதளவு நியம விலகலில் கடந்த கிழமைக்கான கேட்புகளில் நிறைவிடப்பட்ட சராசரி விளைவு வீதங்கள் அடிப்படைக் குறிகாட்டியாக எடுத்துக் கொள்ளப்படலாம். எனினும் கடந்த கிழமைக்கான நிறையிடப்பட்ட சராசரி விளைவு வீதம் திறைசேரி உண்டியலின் விளைவு வீதத்தை அதிகரிக்குமென நிச்சயமாக கூறமுடியாது. ஏனெனில் அது அதிகரிக்கலாம். அல்லது குறையலாம், அல்லது மாருமல் இருக்கலாம். அந்நிலைமையானது உள்நாட்டுப் பொருளாதாரத்தில் உள்ள பல காரணிகளில் தங்கியுள்ளது. எனினும் தற்பொழுது திறைசேரி உண்டியல் ஆனது அரசாங்கத்தின் பூரண உத்தரவாதமுடைய பிரபல்யம் வாய்ந்த வருமானம் உழைக்கும் முதலீட்டு முறையாக உருவாகி உள்ளது. ஆகவே ஒருவரது முதலீட்டு முறைகள் வெவ்வேறு முதிர்ச்சிப் பாங்கினைக் கொண்ட திறைசேரி உண்டியல்களில் இடப்படுவது நன்ருகும்.

திறைசேரி உண்டியல் மூலம் நிதிப்படுத்தலானது சந்தை மூலங்களிலிருந்து அதாவது வங்கி துறையில் இருந்து ஏற்கப்படுமாயின் அது வீக்கத் தாக்கத்தினைக் கொண்டிருக்கும். மத்திய வங்கி திறைசேரி உண்டியலை வாங்கும் போது அது அத்தொகைக்கு தாள் நாணயங்களை வழங்குகின்றது. இந்நிலையும் பணவழங்கலிற்கு ஏற்ப பண்டங்களினதும் தேவைகளினதும் உற்பத்தி அதிகரிக்காவிடில் பொருளாதாரத்தில் வீக்கத் தாக்கத்தினை ஏற்படுத்தும். மத்திய வங்கி திறைசேரி உண்டியல்களை வாங்கி, நாணயத்தினை வழங்கும் போது அது வைப்புப் பணத்தினை அதிகரிப்பதஞல் வணிக வங்கிகளின் பண ஆக்க சக்தியினையும் அதிகரிக்கச் செய்கின்றது.

மத்திய வங்கியினால் திறைசேரி உண்டியல்களுக்கான பங்களிப்பு வரையறுக்கப்படுவதற்கான நோக்கத்திற்காகவும் வங்கித் துறை அல்லாத அமைப்புகளையும், பொது மக்களையும் திறைசேரி உண்டியலில் முதலீடு செய்ய ஊக்குவிப்பதற்காகவும் 1981 ஏப்பிரல் மாதம் " திறைசேரி உண்டியல்களுக்கான துணைநிலைச் சந்தை " [ secondary market for Treasury Bills ] அமைக்கப்பட்டது. இத்துணை நிலைச் சந்தையின் செயல்பாடானது ஓரளவு கூடுதலான பங்கு மத்திய வங்கியிடமே இருக்கின்றது.

திறைசேரி உண்டியல்கள் முதலில் விற்கப்படும் போது அது " முதன் நிலைச் சந்தை [ Primary market ] எனப்படும். அவ்வாறான கொள்வனவுகள் திறந்த சந்தை அமைப்பின் மூலம் பொது மக்களுக்கு மீள விற்கப்படும் போது அவ்வமைப்பு திறைசேரி உண்டியல்களுக்கான துணை நிலைச் சந்தை எனப்படும். இலங்கை மத்திய வங்கியினால் துணை நிலைச் சந்தை அமைக்கப்படுவதற்கு முன் திறைசேரி உண்டியல்களுக்கான முதலீட்டுச் சாத்தியம் மிகவும் வரையறுக்கப்பட்ட தொன்றாக இருந்தது. அத்துடன் இதற்கு வழங்கப்படும் வட்டி வீதமானது சந்தையில் நிலவும் வட்டிவீதத்திலும் மிகவும் குறைவாக இருக்கின்றது. மேலும் முதன் நிலைச் சந்தையில் கொள்வனவு செய்பவர் உண்டியல்கள் முதிரும் வரை அவற்றை வைத்திருக்க வேண்டிய நிலையும் இருந்தது. முதன் நிலைச் சந்தை வீதங்கள் நெகிழ்ச்சித் தன்மை அற்றதாகவும் அதாவது நடைமுறைச் சந்தை வீதத்துடன் மாற்ற மடையாத நிலையில் முதலீட்டாளர்கள் அவ்வுண்டியல்களை விரைவாகவும், நட்டமில்லாமலும் விற்க முடியாத நிலை இருந்தது. இதன் விளைவாகத் திறைசேரி உண்டியல்களுக்கான முதன் நிலைச் சந்தையானது மிகவும் குறைந்த செயல் பாட்டுத் தன்மை உடையதாகவும் அதிகளவான பங்கு மத்திய வங்கியினால் வைத்திருக்க வேண்டிய நிலையும் காணப்பட்டது.

துணை நிலைச் சந்தைக்கான கொடுக்கல் வாங்கல்கள் ஆரம்பிக்கப்பட்டபின் மத்திய வங்கியானது தன்னிடத்தில் வைத்திருந்த திறைசேரி உண்டியல்களை வணிக வங்கிகளின் மூலமாகப் பொது மக்களுக்கு வழங்க முன் வந்ததன் மூலம் குறுங்காலப் பணச்சந்தையில் அரசாங்கத்திற்குரிய ஒரு முக்கியபடியாகவும், நாணயக் கட்டுப்பாட்டிற்கு திறைசேரி உண்டியல்களை ஒரு கருவியாகப் பாவிக்கும் நிலையும் உருவாகியது.

---

## உசாத் துணை நூல்கள்


1. Information series.
   Departmant of Public Debt.
   ( central Bank of Srilanka )

2. News Survey - May 1987.
   (central Bank of Srilanka)

3. Central Bank Reports.

# இந்தியத் தோட்டத் தொழிலாளரும் சர்வசன வாக்குரிமையும்

சதாசிவம் சத்தியசீலன் - அரசியல் சிறப்புக்கலை இறுதி வருடம் (1988)
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

1989 ம் ஆண்டு மார்ச் மாதத்தில் இலங்கை நாடாளு மன்றத்தில் இந்திய தோட்டத் தொழிலாளருக்கு இலங்கைப் பிரஜை அந்தஸ்து வழங்கும் பிரஜா உரிமை விசேட சட்டமூலம் இயற்றப்பட்டுள்ளது. அத்தகையதான சட்டமூலம் ஒன்றின் அவசியக் காரணியைப் பற்றியும் இந்தியத் தோட்டத் தொழிலாளரின் நிலைபற்றியும் இச் சிறுகட்டுரை ஆராய்கிறது.

ஆங்கில ஆட்சியாளர்களால் விருத்தி செய்யப்பட்ட பெருந்தோட்டப் பயிர்ச் செய்கையின் கூலித் தேவையைப் பூர்த்தி செய்யும் பொருட்டு தென்னிந்தியாவில் இருந்து இங்கு கொண்டு வரப்பட்ட தமிழ்க் கூலிகளே இந்தியத் தோட்டத் தொழிலாளர் ஆவர். 20ம் நூற்றாண்டின் நவீன அடிமைத்தனம் என்ற நூலின் ஆசிரியர் மோகன்ராஜ் கூறுவது போன்று இவர்கள் இங்கு கொண்டு வரப்பட்ட வரலாறே ஓர் சோகமயமானது. கட்டு மரங்களிலும் படகுகளிலும் உரிமைகள் அனைத்தையும் இழந்த நிலையில் திக்குத் தெரியாத திசை ஒன்றுக்கு தண்டனையை அனுபவிக்கச் செல்லும் கைதிகள் போல் கொண்டு வரப்பட்ட இவர்கள் தலைமன்னார் இறங்கு துறையிலிருந்து கால் நடையாகவும் வண்டில்களிலும் மலைநாட்டுக்கு கூட்டி வரப்பட்டார்கள். காடுகளை அழித்து களனியாக்கி பெருந்தோட்டப் பயிர்ச் செய்கையை மேப்படுத்தி இலங்கையின் வருவாய் தரும் மூலகங்களில் முக்கிய பயிராக மாற்றியமைத்த அத்தொழிலாளருக்கு சுதந்திரத்தின் பின்னர் சிங்களப் பௌத்த தேசியவாத அரசு வழங்கிய பரிசு அவர்களை நாடற்ற அடிமைகளாக்கியமையே.

இலங்கைக்கு சர்வசன வாக்குரிமையை டொனமூர் வழங்கிய போது இங்குள்ள யாவருக்கும் கிடைக்கும் வகையில் ஏற்பாடு செய்யப்பட்டது என்பது வரலாற்று உண்மை. இந்த அடிப்படையில் 1931 ல் 1.00.000 பிரஜைகளும் 1936 ல் 1,45,000 பிரஜைகளும் 1939ல் 2,25.000 பிரஜைகளும் வாகாளர்களாகப் பதிவு செய்யப்பட்டிருந்தனர். தோட்டத் தொழிலாளர்களின் உரிமைகளுக்காகப் போராடிய கே.நடேச ஐயர் எஸ்.பி.வைத்திலிங்கம் என்போர் 1936 ம் ஆண்டு தேர்தலில் வெற்றி பெற்று சட்ட சபைக்குச் சென்றவர்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது. இவ்வாறு அரசியல் பலம் இவர்களுக்கு அதிகரித்து வருவதைக் கண்ட சிங்கள பூர்சுவாக்கள் இந்திய தொழிலாளர் மீது வெறுப்புறலாயினர். இத்தகையதான அதிகரிப்பு சிங்களவர் பாராளுமன்றத்தில் பலம் பெறுவதை குறைத்து விடும் என்றும் நிலவுகின்ற ஏனைய வர்க்கத்தவரோடு இவர்கள் தொடர்பு கொள்ள முற்பட்டால் அது சிங்கள சமூகத்திற்கு ஆபத்தாக அமையும் என்றும் கருத்து கொண்டிருந்தனர். இது பற்றி காலாநிதி குமாரி ஜயவர்த்தனா கூறும் போது–

''இந்தியர்கள் குடியுரிமை பெறின் வாக்களிக்கும் உரிமையுடன் தோட்டப் பகுதியின் தேர்தல் தொகுதிகள் சிலவற்றில் அவர்கள் பெரும் பான்மையினராகி 1947 ல் 7 அங்கத்தவர்களை அனுப்பியது போல இந்தியப் பிரதிநிதிகளை பாராளு

மன்றத்திற்கு அனுப்புவர் என அஞ்சினர். மேலும் 14 தேர்தல் தொகுதிகளின் வெற்றியை இந்தியரின் வாக்குகள் தீர்மானிக்கும் எனவும் பயந்தனர் இதனல் பெதுவாகச் சிங்களவரும் சிறப்பாக கண்டிச் சிங்களவரும் பலமிழப்பர்''

என்ற கருத்தை அவர்கள் வகுப்பு பேதமற்ற முறையில் சகலரும் கொண்டிருந்தனர். இதனல் தான் 1949 நவம்பர் 19ம் திகதி பிரதமர் D .S சேனநாயக்கா குடியுரிமைச் சட்டம் ஒன்றைக் கொண்டு வந்ததன் வழி சுமார் 1,74,932 பிரஜைகளின் வாக்குரிமையைப் பறிப்பதற்குக் காலாக இருந்தார். இவர்கள் வகித்த 8 பாராளுமன்றப் பிரதிநிதித்துவமும் பறிபோனது. (அட்டவணையைப் பார்க்க. )

## அட்டவணை.

| தேர்தல் தொகுதிகள் | 1947 ல் வாக்குரிமை பெற்றிருந்தவர்கள் | 1949 சட்டத்தால் வாக்குரிமை இழந்தவர்கள் | புதிய சட்டத்தின் கீழ் வாக்குரிமை பெற்றவர்கள் |
|---|---|---|---|
| நுவரெலியா. | 15 , 014 | 14 , 695 | 319 |
| தலவாகொல்லே. | 16 , 385 | 16 , 141 | 244 |
| கொட்டக்கல. | 9 , 354 | 9 , 217 | 134 |
| நாவலப்பிட்டி. | 12 , 645 | 11 , 976 | 675 |
| மஸ்கெலியா. | 15 , 736 | 15 , 533 | 203 |
| அப்புத்தளே. | 3 , 374 | 3 , 052 | 322 |
| பதுளே. | 15 , 262 | 13 , 971 | 1291 |
| பண்டாரவளே. | 10 , 160 | 9 , 400 | 760 |

இந்த அட்டவணையில் பார்த்தால் இவர்கள் பிரதிநிதித்துவம் பெற வேண்டிய கம்பளே, கண்டி, மாத்தளே, கலகா, களுத்துறை, இரத்தினபுரி போன்ற இடங்கள் சிங்களவர் வசமாயின. இந்தச்சட்ட மூலத்தின் 18 வது விதி இத்தொழிலாளர்கள் இலங்கைப் பிரஜையாகப் பதிவு செய்யப்படுவதைத் தடுப்பதற்காகப் பல இறுக்கமான கட்டுப்பாடுகளே விதித்தது. அவற்றுள் '' ஒருவர் பிரஜையாவதற்கு அவருடைய தந்தையாரும் பாட்டனும் இலங்கைப் பிரஜை என்று பதிவு செய்யப்பட்டவராக இருக்க வேண்டும். அல்லது அவ்வாறு பிறந்தவர்கள் என்பதற்கு ஆதாரங்கள் காட்டப்படுதல் அவசியம் '' என்ற நிபந்தனே மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகும் என்று ஆராய்ச்சியாளரால் கொள்ளப்படுகிறது. இந்த விவாதத்தில் உரையாற்றிய கொல்வின் R . D சில்வா ஒரு சிங்களவராக இருந்த போதும் '' இங்கு குறிப்பிடப்பட்டுள்ள விதிகளேக் கொண்டு பார்த்தால் பிரதமர் திரு . D . S . சேனநாயக்கா

கூட இலங்கையில் பிறந்தவர் தான் என்பதை நிரூபிப்பது கடினமானது'' என்று கூறியுள்ள தன்மையானது உண்மையில் இச் சட்ட மூலத்தின் கொடுமைத் தன்மையை வெளிப்படுத்தியிருக்கின்றது என்லாம். இருந்தும் இச் சட்ட மூலத்தை தமிழர் அமைப்பான அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கட்சி ஆதரித்தது. ஆயினும் இக் கட்சயின் முக்கியஸ்தரில் ஒருவரான S.J.V. செல்வநாயகம் மட்டுமே இதனை எதிர்த்தார். இச் சந்தர்ப்பத்தில் இந்திய அரசாங்கம் 1948 டிசம்பர் 4ம் திகதி ஓர் கண்டன அறிக்கையை வெளியிட்டது.

"இந்தியா செய்த நன்றியை மறந்து இந்தியரை விரட்டிவிடுவதில் தனக்கு நஷ்டம் ஏதும் இல்லை என்று இலங்கை நினைக்கலாம். ஆனல் இந்தியாவின் விரோதத்தால் இலங்கையருக்கு நேரும் நஷ்டமும் நாசமும் சாமானியமல்ல''

இக் கண்டனத்தின் பின்னர் தமது நடவடிக்கையால் இந்தியா ஆத்திரமடைந்திருப்பதை உணர்ந்த இலங்கையரசாங்கம் 1953ல் இந்திய வெளியுறவு அமைச்சரின் கலந்துரையாடலின் பின் சில தீர்வுகளை முன் வைத்தது. அவற்றுள் பின்வரும் நான்கு அம்சங்கள் முக்கியமானவை.

(1) 1949ன் குடியுரிமைச் சட்டத்தின் கீழ் 4,00,000 பேருக்கு பிரஜா உரிமை கிட்டுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

(2) மேலும் இருக்கக் கூடிய 2,50,000 பேருக்கு தற்காலிகமாக தங்குமிட விசா வழங்கப்படும். இவர்கள் குறித்து 10 வருடங்களின் பின் முடிவு செய்யப்படலாம்.

(3) மிகுதியாய் இருக்கக் கூடிய 3,00,000 பேருக்கு அளவான இந்திய வம்சாவழியினர் நாடு கடத்தப்பட வேண்டியவர்கள்.

(4) குடியுரிமை வழங்கப்படுவோருக்குமான மொத்த எண்ணிக்கை 6,50,000 பேரைத் தாண்டக் கூடாது. இந்தத்திட்டங்களை இந்தியா ஆரம்பத்தில் ஏற்றுக் கொள்ளவில்லை. இந்த மண்ணின் நலனுக்காக உழைத்தவர்கள் இந்த நாட்டுக்கே சொந்தமாக்கப்பட வேண்டியவர்கள் என்ற கருத்தை அடிக்கடி இந்தியா வலியுறுத்தி வந்தது.

இந்த அரசியல் பின்னணியின் மத்தியிலேதான் 1954ல் நேரு – கொத்தலாவலை ஒப்பந்தம் இந்திய மக்களின் நலன் கருதிச் செய்யப்பட்டது. இதை அடிப்படையாகக் கொண்டு அரசியலமைப்புத் திருத்தம் ஒன்றை அரசு அறிமுகப்படுத்தியது. இதன்படி பாகிஸ்தானியப் பிரதிநிதித்துவச் சட்டம் எண் 35(4) பிரிவு இந்திய வம்சாவழியின் பிரதிநிதிகள் தேர்வுக்கு வழிவகுத்தது. இச் சட்ட மூலமோ ஒப்பந்தங்களோ நடைமுறைப்படுத்தப்படவில்லை இவற்றைக் கிழித்தெறிய வேண்டும் என்ற குரல் பலமாக எதிரொலித்துக் கொண்டு வந்தது.

1964ல் திருமதி பண்டாரநாயக்கா ஆட்சிக்கு வந்தபோது புதிய பரிணமம் தோற்றுவிக்கப்பட்டது. "இந்தியா இம்மக்களில் முடிந்தளவு கூட்டத்தினரைப் பொறுப்பேற்க வேண்டும். பர்மாவில் இருந்து 3,00,000 பேரைத் திருப்பி ஏற்க ஒப்புக் கொண்ட இந்தியா இலங்கை விடயத்திலும் அது போன்று நடந்து

கொள்ள வேண்டும் என்று கூறினர். இதற்காக சற்று இறுக்கமான நிலையைத் தளர்த்த இந்தியப் பிரதமர் சாஸ்திரி இறங்கிவந்தார். இதன் விளைவாக 1964 ஒக்டோபர் மாதம் சிறிமா-சாஸ்திரி ஒப்பந்தம் கைசாத்திடப்பட்டது. இந்த ஒப்பந்தத்தின் பிரகாரம் 9,75,000 பேரில் 5,25,000 பேருக்கு இந்தியா பிரஜா உரிமை வழங்குமென்றும் 3,00,000 பேருக்கு இலங்கை பிரஜா உரிமை வழங்கு மென்றும் மிகுதியாய் இருக்கக் கூடிய 1,50,000 பேர் நாடற்றவர்கள் என்றும் இவர்களது நிலை பின்னர் தீர்மானிக்கப்படலாம் என்றும் விடப்பட்டது. பின்னர் இந்த நாடற்றவர் பிரச்சனை என்ற விடயம் பூதாகரமாக உருவெடுத்தபோது 1974-பெப்ரவரி 12ல் மீண்டும் பதவிக்கு வந்த திருமதி பண்டாரநாயக்கா தலைமையிலான கூட்டு முன்னணி அரசாங்கம் இந்த நாடற்றவர்களில் 75,000 பேர் என்ற அடிப்படையில் இலங்கை, இந்தியா இரு நாடுகளும் ஏற்றுக்கொள்வதுடன் நீண்டகாலப் பிரச்சனைக்குத் தீர்வு ஏற்படுகின்றது என்று தெரிவித்தார். இந்தியப் பிரஜா உரிமைக்கான விண்ணப்பம் இந்தியத் தூதரகத்தால் கோரப்பட்ட போது விண்ணப்பித்தவர்கள் தொகை, இலங்கைப் பிராஜா உரிமைகோரி விண்ணப்பித்தவர்கள் தொகையைவிட குறைவாகவே இருந்தது. இதில் இருந்து பெரும்பாலான தோட்டத் தொழிலாளர்கள் இலங்கையில் வாழ விரும்புகின்றனர் என்பது முடிவாகியது.

இந்த நிலமையை இலங்கையின் இனவாத தலைமைத்துவம் முற்றும் விரும்பவில்லை. காலை 6 மணிக்கு தோட்டத்திற்கு சென்று மாலை 6 மணிக்கு வீட்டுக்கு வரும் தொழிலாளருக்கு என்ன வாக்குரிமை? அந்நியரை விட எமக்கு அதிகளவில் கெடுதிகளை செய்தவர்கள் இந்தியர்களே, போன்ற இனவாதக் கருத்துக்கள் இவர்களால் பரப்பப்பட்டதுடன் இவர்களை விரட்டியடிப்பதே சரியான வழி என்றும் கருதியிருந்தனர். இவ்வாறான ஒரு அரசியல் பின்னணியில் தான் இலங்கையில் இனக் கலவரங்கள் இடம் பெற்றபோதெல்லாம் மலையக மக்கள் பாதிக்கப்பட்ட நிலையை நோக்குதல் வேண்டும். இலங்கையில் 1958, 1977, 1983, ஆகிய ஆண்டுகளில் இடம் பெற்ற கொடூரமான இனக்கலவரங்கள் பல தமிழ் மக்களின் உயிர்களையும் உடமைகளையும் பறித்தது இந்த நிலையில் பல தோட்டத் தொழிலாளிகளின் குடியிருப்பு லயன்கள் சேதமாக்கப்பட்டன. உடமைகள் கொள்ளையிடல் தீயிடல் என்பவற்றுக்கு இலக்காகியது. பலபெண்கள் மானபங்கப்படுத்தப்பட்டனர். லிண்டுல்ல நட்சாத்தோட்டம், சங்குவாரித் தோட்டம், டெல்டாலவன் தோட்டம் பூண்டுலோயா, தலவாகொல்ல ஆகிய இடங்களில் இவர்களுக்கு ஏற்பட்ட சேதம் அதிகமானதாகும். இத்தகைய கொடுமைகளுக்கு எதிராகக்குரல் கொடுத்து ஆரம்பத்தில் தொழிலாளர் சாத்வீகப் போராட்டத்தை நடாத்திய போது 1958ல் கோவிந்தன் என்ற தொழிலாளியும் 1977ல் சிவனு லட்சுமணன் என்ற இளம் தொழிலாளியும் இலங்கைக் காவல் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

இந்தக் கொடுமைகளின் விளைவாக இங்கு பாதுகாப்பு இல்லை என்றுணர்ந்த தோட்டத் தொழிலாழிகள் இந்தியாவுக்கு குடிபெயர்ந்தனர். இவர்களில் இலங்கையில் வாக்குரிமை பெற்ற அனேகர் உள்ளதை இந்தியா சுட்டிக் காட்டியது. இதே வேளை ஒரு சில தொகுதித் துடிப்புள்ள மலைநாட்டு இளைஞர்கள் வடக்கு கிழக்குப் பகுதியில் தனிநாட்டுப் பிரிவினைக்காகக் கொரில்லாப் போராட்டத்தில்

ஈடுபட்டிருந்த தீவிரவாதிகளுடன் இணைந்து கொண்டனர். இத்தகையதான ஒரு நிலையில் சில சிங்கள உயர்மட்ட அரசியல் தலைவர்கள், இந்தியா இதனை ஓர் சாட்டாகக் கொண்டு உள்ளூர் அரசியலில் தலையிட்டுவிடலாம் என்றும் அச்சம் கொண்டு இருந்தனர். இதனால் தான் ஐ.தே.கட்சி அரசாங்கம் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் கட்சியின் தலைமைத்துவத்தையும் தனது ஆட்சியில் பங்குதாரர்களாகச் சேர்த்து ஆட்சி நடாத்த முற்பட்டது. மலையக மக்களின் ஏக தலைவர் என்ற வகையில் தொண்டமானை தன் பக்கம் வைத்துக் கொண்ட J.R. ஜெயவர்த்தன தனக்கு மலைநாட்டு தமிழரின் ஆதரவு இருப்பதாக கூறிவந்தார்.

1983 யூலை 24 ல் இடம் பெற்ற இனக் கொலையைத் தொடர்ந்து சிறப்புத் தூதுவரான ஜி.பார்த்தசாரதியின் இலங்கை வருகை இலங்கையின் இயக்க அரசியலில் ஓர் மாற்றத்தை ஏற்படுத்தியது. அரசுத் தலைவர் ஜெயவர்த்தன சர்வகட்சி மாநாட்டில் இந்திய குடியுரிமை பற்றிய பிரச்சனையை தீர்த்து வைத்தல் அவசியம் என்று குறிப்பிட்ட போது அதனை பலரும் ஏற்றுக் கொண்டனர். உண்மையில் இந்தியாவை இப்பிரச்சனையின் தலையீட்டிலிருந்து தடுப்பதே இவர்களின் நோக்கம். இதனைத் தொடர்ந்து 1986 பெப்ரவரி பாராளுமன்றத்தில் இதற்கு என விசேட சட்ட மூலம் இயற்றப்பட்டது. இச்சட்ட மூலத்தின்படி இலங்கை குடியுரிமை வழங்கப்படவிருக்கும் 4 , 69 , 000 பேருக்கும் இலங்கை குடியுரிமையும் பத்திரங்களும் 18 மாதங்களுக்குள் வழங்கப்பட வழி செய்யப்படும் என்றும் கூறப்பட்டது. எனினும் இந்தச் சட்ட மூலம் கூட கூறப்பட்டவாறு அந்தக் காலப்பகுதிக்குள் எந்தவொரு உரிமையையும் பெற்றுக்கொடுக்கவில்லை. இதனால் மீண்டும் மலையகத்தில் ஆங்காங்கே சில எதிர்ப்பு அலைகள் தோன்றத் தொடங்கியது. இதனைக் கண்ட தொண்டமான் தலைமைத்துவம் இவை வளர்ச்சியடையுமானால் தனது அரசியல் தலைமைக்கு ஆபத்து ஏற்பட்டு விடுமோ என்று அஞ்சியது. எனவே பல தொழிலாளர்களைத் திரட்டிக் கொண்டு மக்கள் உரிமைக்காகப் போராட்டம் நடத்துபவர்கள் நாங்கள் என்று கூறிக்கொண்டு பிரார்த்தனைஇயக்கம், வேலைநிறுத்தம் போன்ற நடவடிக்கைகளில் இறங்குவதும் பின்னர் ஆட்சியாளருடன் பேச்சுவார்த்தை நடாத்தி சமரசத்துக்கு வருதல் போன்ற நடவடிக்கைகளில் ஈடுபட்டு வந்தனர். இத்தகையதான போராட்டத்தின் அடுத்த கட்டமாக தோன்றக் கூடிய ஆயுதப் போராட்டத்தில் மலையக மக்கள் ஈடுபடுவதைத் தவிர்க்கும் நோக்கம் கொண்ட ஜே . ஆர் . ஜெயவர்த்தன சில விட்டுக் கொடுப்புக்களை மேற்கொண்டு மலையக மக்கள் தமது போராட்டத்தின் மூலமே உரிமைகளை பெற்றுக் கொண்டார்கள் என்று அடிக்கடி கூறி வந்தார். இந்த மக்கள் பலாத்கார வழியிலான போராட்டத்தில் இறங்கினால் அதன் விளைவாக இவர்கள் வடக்கு கிழக்குப்பகுதித் தீவிரவாதிகளுடன் சேர்ந்து விடக்கூடும் என்ற ஐயப்பாடு ஜெயவர்த்தனவுக்கு இருந்து வந்ததும் இன்னுமொரு காரணியாகக் கூறலாம்.

1987 ம் ஆண்டு யூலை மாதம் 29ம் திகதி இலங்கை இந்தியாவுடன் செய்து கொண்ட ஒப்பந்தத்தின் கீழ் மலையக மக்களதும் அவர்களது உரிமைகள் பற்றியும் எதுவும் குறிப்பிடப்பட்டிருக்கவில்லையாயினும் இந்த ஒப்பந்தத்தைத் தொடர்ந்து ஐ . தே : க எதிராக தென்னிலங்கை J . V . P புரட்சி தொடங்கியதும் இக்கட்

சியினது செல்வாக்கு 1977 ம் ஆண்டுடன் ஒப்பிடும் இடத்து பெருமளவு குறைந்து விட்டதாலும். ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற அரசியல் செல்வாக்கை நிர்ணயிக்கும் ஒரு பிரதான சக்தியாக மலையக மக்களின் வாக்குரிமை இருப்பது குறிப்பிடத் தக்கது. அண்மையில் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் பிரேமதாசாவின் வெற்றியையும் பாராளுமன்றத் தேர்தலில் U . N , P யின் வெற்றியையும் நிர்ணயித்த சக்தியாக இவர்களது வாக்குரிமையே இருந்தது. இந்த நிலையில் தமது செல்வாக்கை நிலை நிறுத்துவதற்காகவும் மறுபுறம் இந்திய மத்திய அரசுடன் தான் செய்து கொள்ள இருக்கும் புதிய ஒப்பந்தம் ஒன்றுக்கு மலையக மக்கள் பற்றிய பிரச்சனை ஒரு தடையாக இருக்கக் கூடாது என்ற காரணத்தாலும் இத்தகையதான சட்ட மூலம் உடனடியாக அமுல்படுத்தப்படுகின்றது. இச்சட்ட மூலமானது குறிப்பிட்ட கால வரையறைக்குள் இவர்களது உரிமைகளை அரசு வழங்கத் தவறினால் உயர் நீதிமன்றத்தில் வழக்குத்தொடர வழி வகுக்கின்றது.

ஆகவே இதுவரை குறித்தவற்றை சுருக்கமாக விமர்சனம் செய்தால் மலையக மக்களின் வாக்குரிமை வழங்கல் என்பது முற்றிலும் இல்லாதது ஒன்றைப் புதிதாக வழங்குவது என்பதல்லபொருள். பறிக்கப்பட்டவற்றையே மீண்டும் வழங்கும் ஒரு செய்முறை எனினும் இவர்களது சர்வசன வாக்குரிமையே இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் என்ற சந்தர்ப்பவாதத் தொழிற்சங்கப் பூர்சுவாக்களின் பலமாக இருப்பதால் வாக்குகளுக்காக வெறுமனே உரிமைகளை அளிக்கும் ஒரு செய்முறையாக மலையக மக்களது சர்வசன வாக்குரிமையைக் கருதலாம். தாமே சுயமாக முன் வந்து பிரதிநிதிகளைத் தெரிவு செய்யும் திராணியற்றவர்களாக இவர்கள்இருப்பதால் இவர்களுக்கு இருக்கும் வாக்குரிமையும் வழங்கப்படும் வாக்குரிமையும் கால் இல்லாதவனுக்கு வழங்கப்பட்ட சப்பாத்தைப் போன்றது என்று கூறலாம்.

## உசாவியவை -


1. இலங்கையில் இனவர்க்க முரண்பாடு.
   – கலாநிதி குமாரி ஜெயவர்த்தனா – .
2. தோட்டத் தொழிலாளர் எதிர்நோக்கும் பிரச்சனைகள்,
   – ஆய்வுக்கழக வெளியீடு – .
3. 1989 May 10th வீரகேசரி.
4. சத்தியசீலனின் ஆய்வுக் கட்டுரை.
   – இலங்கை அரசியலில் பலாத்காரம் – .


---

★ இலட்சியங்கள் எப்போதும் மக்களின் தினசரி வாழ்க்கையை ஆதாரமாகக் கொண்டிருக்க வேண்டும். ஒரு வர்க்கத்தின் சாதாரண பிரச்சனையோடு இணைந்திராத எந்த ஒரு மிக உயர்ந்த குறிக்கோளும் செப்புக்காசின் மதிப்பைக் கூடப் பெறுவதில்லை. -லெனின்-

# வெளிநாட்டு உதவி;
# உதவியல்ல! வர்த்தகம் / பொறி

தி. யசோதை. பொருளியல் சிறப்புக்கலை இறுதி வருடம் - 1989
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

மூன்றும் உலக நாடுகளது அபிவிருத்தியில் வெளிநாட்டு உதவி எவ்வாறான பங்களிப்பைச் செய்கிறது? வெளிநாட்டு உதவியினால் ஏற்படும் பிரச்சினைகள் யாவை? போன்ற மதிப்பீடுகள் – சர்ச்சைகள் 1950 களிற்குப்பின் பிரபலம் பெற்று வருகிறது. வெளிநாட்டு உதவியானது செல்வந்த நாடுகளில் இருந்து வறிய நாடுகளின் பொருளாதார அபிவிருத்திக்காக மூலவளங்களை இடம் மாற்றுகின்ற ஒரு கருவி என வரையறை செய்யப்படுகிறது. 1973ம் ஆண்டுக்கு முன் வளர்ச்சியடைந்த நாடுகளில் இருந்து குறை விருத்தி நாடுகளின் பொருளாதார அபிவிருத்திக்காக மூலவளங்களை இடம் மாற்றுகின்ற கருவிதான் வெளிநாட்டு உதவி என வரையறை செய்து வந்தனர். ஆனால் எண்ணெய் விலை உயர்வினைத் தொடர்ந்து ஒபெக் நாடுகளும் உதவி வழங்குவதில் முக்கிய இடத்தை வகிப்பதாலும், அவை குறைவிருத்தி நாடுகளாக இருப்பதாலும், வளர்ச்சியடைந்த நாடுகள் – குறைவிருத்தி நாடுகள் என்ற வகைப்படுத்தலை விடுத்து, செல்வந்த நாடுகள் - வறிய நாடுகள் என வகைப்படுத்தப்பட்டது. பொருளாதார அபிவிருத்திக்கு வேண்டிய வளங்களின் தேவையில் மூலதன ஆக்கம் ஒரு முக்கிய இடம் வகிக்கின்றது. ஒரு குறைவிருத்தி நாட்டின் அபிவிருத்திக்கு அவசியமான மூலதனம் முழுவதையும் குறிப்பிட்ட நாட்டின் உள்நாட்டு முதலீடுகளின் மூலம் பெறமுடியாது. எனவே மூலதன இடைவெளி ஒன்று தோன்றுவது பல குறை விருத்தி நாடுகளில் வழக்கமாகும். இந்த இடைவெளியை நிரப்ப தகுந்த தாராளக் கொள்கையின் மத்தியிலும், எதிர்பார்த்தளவு வெளிநாட்டு முதலீடுகள் கிடைப்பதில்லை. இந்நிலையில் வெளிநாட்டு அரசுகளிடமிருந்து பெறும் வெளிநாட்டு உதவியானது ஒரு குறை விருத்தி நாட்டின் மூலதனத் தேவையில் முக்கிய பங்கு வகிக்கிறது.

உதவி என்பது திருப்பிச் செலுத்தும் தன்மையற்ற நன்கொடைகளையும், திருப்பிச் செலுத்தும் தன்மை கொண்ட கடன்களையும் உள்ளடக்கிய அம்சம், உதவி வழங்கும் நாடு தான் வழங்கும் உதவியை உதவி பெறும் நாடு எவ்வாறு பயன்படுத்த வேண்டும் என்று நிபந்தனை விதிக்கும் பிணைக்கப்பட்ட உதவிகளே. வெளிநாட்டு உதவியானது உதவியல்ல வர்த்தகம் என்ற கோஷங்கள், விமர்சனங்கள் எழுவதற்கு முக்கிய காரணம் உதவி பெறும் நாடுகள் பிணைக்கப்படாத உதவியையே பெற விரும்புகின்றன. ஏனெனில் உதவியைப் பயன்படுத்துவதில் உதவி பெறும் நாட்டுக்கு பூரண சுதந்திரம் இருத்தலாகும். ஆனால் உதவி வழங்கும் நாடுகள் தாம் பிணைக்கப்படாத உதவிகளை வழங்கினால் உதவி பெறும் நாடுகள் அவ் உதவியை மூலதன ஆக்கத்திற்குப் பயன்படுத்தாமல் தவறான வழியில் நுகர்விற்காகப் பயன்படுத்தி விடும் என குற்றம் சாட்டுகின்றன. வெளிநாட்டு உதவி பற்றிய கொள்கைகள் தேர்ந்தெடுக்

கப்பட்ட மரபுக் கோட்பாடுகளின் வழி உருவாகின எனக் குறிப்பிட முடியாது. இது ஒரு வகை விசேட தேவை கருதியே உருவாகின. இன்று இது குழப்பம் நிறைந்த தொன்றாகவும் பொருளியலாளர் மத்தியில் உதவியல்ல வர்த்தகம் என்ற சர்ச்சையை பல்வேறு ஆதாரங்களின் ஊடாக பொருளியல் அறிஞர்கள் பலரும் குறிப்பிட்டுள்ளனர்.

வெளிநாட்டு உதவியை வறிய நாடுகள் தாராளமாகவும் சிறப்பாகவும் உபயோகிப்பதைப் பாதிக்கும் நானுவித காரணிகளில் முக்கியமானது உதவியின் பெறுமதியானது அதன் முகப் பெறுமதியை விட உண்மையில் குறைவாக உள்ளது என்பதாகும். உதவி எந்தளவு கிடைக்கிறது அல்லது எவ்வளவு தொகை கிடைக்கிறது என்ற அம்சங்களை விட உதவி பெறும் நாட்டின் தரரீதியான நலனே முக்கியமாகக் கவனிக்கப்பட வேண்டும். உதவியில் பெருமளவு கடனடைப்புக்களாகவோ அல்லது இறக்குமதிக் கொடுப்பனவுகளாகவோ அல்லது சேவைக் கொடுப்பனவுகளாகவோ நன்கொடை வழங்கிய நாடுகளுக்கே திரும்பி விடுகின்றன. 1978ம் ஆண்டில் ''சண்டேடைம்ஸ்'' (லண்டன்) பத்திரிகையில் வெளியிடப்பட்ட ஒரு சுவாரஸ்சியமான கட்டுரையில் பொருளாதார ஒத்துழைப்புக்கும் அபிவிருத்திக்குமான ஸ்தாபனத்தைச் சேர்ந்த அங்கத்துவ நாடுகள் வழங்கிய உதவியில் 88% ற்கு மேற்பட்ட தொகை கடன் அடைப்புக்களாக உதவி வழங்கிய நாடுகளுக்கே திரும்பி வந்தாகச் சுட்டிக் காட்டப்படுகிறது. உதவியின் பெறுமதி 1,358 கோடி 50 லட்சம் டொலர்கள் கடன் அடைப்புக்கான கொடுப்பனவுகளின் தொகை 1200 கோடி டொலர்கள் ஆகும். 35 வளர்முக நாடுகள் கடனடைப்புக்காகத் திருப்பிச் செலுத்திய தொகைகள் மொத்த வருடாந்த உதவிப் பெறுவனவுகளில் அரைவாசிக்கு மேல் இருந்தன என்றும் அக்கட்டுரையில் குறிப்பிடப்பட்டது. இதிலிருந்து வெளிநாட்டு உதவி என்ற போர்வையில் வறிய நாடுகளைச் செல்வந்த நாடுகள் சுரண்டுகின்ற ஒரு வர்த்தகத்தையே காணமுடிகின்றது.

பிணைக்கப்பட்ட உதவியானது மூலகப் பிணைப்பு. திட்டப்பிணைப்பு, செலாவணிப் பிணைப்பு என மூவகைப்படுத்திக் கொள்ளலாம். மூலகப் பிணைப்பு என்றால் உதவி வழங்கும் நாடுகள் தமது நாட்டின் உற்பத்திப் பொருள் வடிவில் உதவியை வழங்குவதைக் குறிக்கும். பெரும்பாலும் உதவி வழங்கும் நாடுகள் தமது நாட்டின் மிகையான உற்பத்திகளையே உதவியாக வழங்குகின்றன. முதன் முதலில் உதவியை வழங்கிய நாடுகள் அமெரிக்காவும், பிரித்தானியாவும் ஆகும். 1950 களின் முடிவில் அமெரிக்கா தனது உதவியில் பெரும் பகுதியை நிபந்தனையுடன் இணைத்து விட்டது. 1970 களில் இருந்து கிட்டத்தட்ட சகல அமெரிக்க உதவிகளும் நிபந்தனையின் கீழ் வழங்கப்பட்டன. 1960 களின் ஆரம்பத்தில் இருந்து பிரித்தானியா வெளிநாட்டு உதவியில் நிபந்தனைகளை விதிக்கத் தொடங்கிவிட்டது. இவை பொருள் வடிவில் உதவியை வழங்கியமையால் சர்வதேச வர்த்தகத்தில் யப்பானுக்கும் ஜேர்மனிக்கும் பாதிப்பு ஏற்பட்டது. எனவே சென்மதி நிலுவையில் மிகை நிலையை அனுபவித்த இந்த நாடுகளும் மூலகப் பிணைப்பு உதவியை வழங்கின. இதில் இருந்து வெளிநாட்டு உதவி சர்வதேச வர்த்தகத்தில் சந்தைகளைக் கவருவதற்கான ஒரு கருவியாகவே பயன்படுவதை அவதானிக்கலாம். பொருள் வடிவில் உதவி வழங்கும் நாடுகள் பொருட்களுக்குரிய விலையை நிர்ணயிக்கும் போது உலகசந்தை விலையை விட உயர்வாக நிர்ணயிக்கின்றன. உலக சந்தையின் சராசரி விலைகளை விட 20% — 50% இடைப்பட்ட ஏதோ ஒரு உயர் விலையைக் கொடுக்க வேண்டியுள்ளதென மதிப்பிடப்பட்

டுள்ளது. அத்துடன் வாங்கப்படும் பொருட்களை எடுத்துச் செல்ல வேண்டிய கப்பல் கம்பனியையும் காப்புறுதி நிறுவனத்தையும் உதவி வழங்கும் நாடுகளே நிர்ணயித்து விடுகின்றன. இதனுல் நேரடிச் செலவுகள் அதிகரிப்பதுடன் நீண்டகால விளைவுகளும் ஏற்படுகின்றன. குறைவிருத்தி நாடுகள் தமக்குள் வர்த்தக ஒப்பந்தங்களைப் பலப்படுத்திக் கொள்வதையும் இவ்வாறுன கடன் நிபந்தனைகள் தடுத்து விடுகின்றன. அத்துடன் உள்நாட்டு ஆற்றல்கள் பயன்படுத்தப்பட முடியாது போவதுடன் உள்நாட்டு நிபுணர்கள் அனுபவம் மூலம் கற்றுக் கொள்வதற்கான வாய்ப்பும் தடுக்கப்படுகிறது. மேற் கூறியவற்றின் அடிப்படையில் வெளிநாட்டு உதவியானது உதவியல்ல வர்த்தகம் என வர்ணிக்கப்படுகிறது.

திட்டப் பிணைப்பு என்றுல் உள்நாட்டில் உருவாக்கப்பட்ட குறிப்பிட்ட அபிவிருத்தித் திட்டத்திற்கு என உதவி வழங்குவதைக் குறிக்கும் நன்கொடை நாடுகளால் வழங்கப்படும் குறிப்பிட்ட திட்டத்திற்கென உதவிகள் வழங்கும் போது திட்டத்தின் செலவை விடப் பராமரிப்புச் செலவு மிகக் கூடுதலாக இருக்கலாம். இவ்வாறு உயர் செலவிற் பராமரிக்கப்பட வேண்டிய திட்டங்கள் "வெள்ளை யானைகள்" என்று குறிப்பிடப்படுகின்றன என்றுர் பிரபல பிரிட்டிஸ் அபிவிருத்திப் பொருளியலாளரான போல் ஸ்டி நீட்டன். "உதவி பெறுவது ஒரு யானையைப் பெற்றது போன்றதல்ல. ஒரு யானையைக் காதலிப்பது போன்றதாகும். அதில் எத்தகைய சந்தோஷமும் அடைய முடியாது. மேலும் யானையால் நசுங்கி நொருக்கப்படும் அபாயமும் உண்டு" எனக் குறிப்பிடப்படுகிறது. திட்ட உதவியை வழங்கும் போது குறிப்பிட்ட அபிவிருத்தித் திட்டமானது உதவி வழங்கும் நாட்டினைத் திருப்திப்படுத்துவதாக இருக்க வேண்டும். அத்துடன் குறிப்பிட்ட திட்டத்திற்கு வழங்கிய உதவியை வேறு தேவைகளுக்குப் பயன்படுத்த முடியாது. பல குறைவிருத்தி நாடுகளில அபிவிருத்தித் திட்டங்களை உருவாக்கக் கூடிய அல்லது குறிப்பிட்ட நாடு வழங்கும் சில நவீன இயந்திர சாதனங்களை இயக்கக் கூடிய தொழில் நுட்ப அறிவு கொண்ட வல்லுனர் இன்மையால் உதவி வழங்கிய நாட்டில் இருந்தே சிறப்பறிஞர் சேவையையும் பெற வேண்டியுள்ளது. அவர்களுக்கு வேண்டிய சம்பளம் இதரவசதிகள் செய்து கொடுப்பதற்குப் பெரும் செலவு ஏற்படும். அத்துடன் தேவைக்கு அதிகமான சிறப்பு அறிஞர்களை அனுப்புவதும் அவர்களின் சம்பள அளவு உயர்வாக நிர்ணயிக்கப்படுவதும் உதவி பெறுகின்ற நாட்டிற்கு தீமை பயக்கின்றது. எனவே திட்ட உதவிகளும் மறைமுகமாக உதவிக்கு மேலாக உறிஞ்சிக் கொள்கின்றன.

செலாவணிப்பிணைப்பு என்பது உதவி வழங்கப்படும் போது என்ன செலாவணி வடிவில் உதவி வழங்கப்படும் எனவும் அதனை மீள செலுத்தும் போது எந்த நாணய வடிவில் செலுத்துதல் வேண்டும் எனவும் நிபந்தனை விதிப்பதைக் குறிக்கும் உதவி வழங்கிய நாடு அதனை மீளப் பெறும் போது எந்தச் செலாவணிப் பெறுமதி உயர்வாக உள்ளதோ அந்தச் செலாவணி வடிவில் செலுத்துமாறு நிபந்தனை விதிப்பதால் வறிய நாடுகள் சுரண்டப்படுகின்றன. 1950-65 இடையில் நிகர மூலதனமாக 1660 கோடி டொலர்கள் வறிய நாடுகளில் இருந்து பணக்கார நாடுகளுக்குப் பாய்ந்துள்ளது என சண்டேடைம்ஸ் பத்திரிகையில் வெளியான கட்டுரையில் குறிப்பிடப்பட்டது. உதவியைப் பல நிபந்தனைகளுடன் பிணைக்கும் முயற்சி நன்கொடை

நாடுகளில் வர்த்தக நலன்களைப் பாதுகாப்பதே. வெளிநாட்டு உதவி குறை விருத்தி நாடுகளைத் தொடர்ந்தும் குறை விருத்தி நாடுகளாகவே வைத்துக்கொண்டு அவற்றை சுரண்டுவதற்கான நவகாலனித்துவ முறையெனச் சில பொருளியலாளர்கள் கருதுகின்றனர். கடனுக்கான வட்டி, பொருட்களுக்கான உயர்விலை சந்தை வாய்ப்பு போன்ற பல்வேறுவகையில் உதவி வழங்கும் நாடுகள் நன்மைகளை அடைவதால் உதவியல்ல இலாப நோக்கமுடையவர்த்தகமே (not aid, but trade) என விமர்சிக்கப்படுகிறது.

உள்நாட்டு அபிவிருத்தித் திட்டத்திற்கு வழங்கப்படும் திருப்பிச் செலுத்தும் தன்மையற்ற நன்கொடைகளும் ஒரு பொறியே. நன்கொடைகள் பொறி என அழைப்பதற்கான உதாரணங்களை இலங்கையில் அவதானிக்கலாம். மகாவலி அபிவிருத்தித் திட்டம், ஒருங்கிணைக்கப்பட்ட கிராமிய அபிவிருத்தித் திட்டம் என்பவற்றிற்கு வழங்கப்படும் நன்கொடைகளுக்கு மேலாக உதவி வழங்கிய நாடுகள் இலங்கையில் இருந்து நன்மைகளை உறிஞ்சிக் கொள்கின்றன. நன்கொடை நாடுகள் அபிவிருத்திச் செய்முறைகளை உயர் செலவில் வழி நடாத்திப் பாதையைக் கடினப்படுத்துகின்றன. சர்வதேச தொழில் நுட்ப முறைகளைப் பரப்புவதற்கு வெளிநாட்டு உதவி உகந்ததொரு சாதனம் எனினும் குறைவிருத்தி நாடுகளுக்குப் பொருத்தமான தொழில் நுட்ப வடிவில் உதவி அமைத்தல் அவசியம். தொழில்நுட்ப உதவிகளை மலிந்த செலவில் அல்லது இலவசமாகப் பெற முடிவதில்லை. உதாரணமாக மகாவலி அபிவிருத்தித்திட்டத்திற்கு நன்கொடை உதிரிப்பாகங்களை வழங்கிய போதும் அவற்றை இயக்க சிறப்பு அறிஞர் சேவைகளை இலவசமாகவா அந்நாடுகள் வழங்குகின்றன? இங்கு உதவியின் உதவித்தன்மை என்பதற்கே இடமில்லை. இயந்திர சாதனங்களில் பழுதுபட்ட உதிரிப்பாகங்களையும் அந்நாடுகளிடமே கொள்வனவு செய்ய வேண்டி இருப்பதால் இது உண்மையில் நன்கொடை அல்ல வர்த்தகமே.

இலங்கையில் தொலைக்காட்சி சேவை யப்பானிய அரசு அளித்த 27 கோடி ரூபா பெறுமதியான நன்கொடை மூலமே ஆரம்பிக்கப்பட்டது. யப்பானிய அரசு இதன் மூலம் யப்பானிய தொலைக்காட்சிப் பெட்டிகளுக்கான சந்தை வாய்ப்பை இலங்கையில் அமைத்துக் கொண்டது. யப்பான சொனி தொலைக்காட்சிப் பெட்டிகளுக்கே இன்று பெருமளவு கிராக்கி காணப்படுவதிலிருந்து யப்பானிய அரசு உதவியை வழங்கிச் சிறப்பாக வர்த்தகம் செய்வது தெளிவாகிறது. நன்கொடையின் பின்னல் ஒரு தந்திரம் அல்லது பொறி மறைக்கப்பட்டுள்ளது வெளிப்படையான உண்மை.

குறை விருத்தி நாடுகளின் பொருளாதார அபிவிருத்திக்கு இவை எந்தளவு தூரம் உதவுகின்றன என்பது பற்றிய பலத்த சந்தேகங்கள், கண்டனங்கள் கிளப்பப்பட்டுள்ளன. இத்தகைய கண்டனங்கள் வலதுசாரி இடதுசாரி என்ற இருவகை அரசியல் சித்தாந்தங்களிலும் எழுந்துள்ளன. இரு சாராரும் வேறுபட்ட காரணங்களுக்காக வெளிநாட்டு உதவியைக் கண்டித்து குறைவிருத்தி நாடுகளின் அபிவிருத்திக்கு அவசியமில்லாத தடைகள் என வாதிட்டனர். வலதுசாரிகளின் சார்பாக லண்டன் பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த பேராசிரியர் பீற்றர் பேயர் (Peter Bauer) வெளிநாட்டு உதவியை வன்மையாகக் கண்டித்துள்ளார். இவருடைய கருத்துப்படி வெளிநாட்டு உதவி அபிவிருத்திக்கு அவசியமானதொரு நிபந்தனையாக இருக்க

முடியாது ஏனெனில் இன்றைய அபிவிருத்தியடைந்த நாடுகள் அத்தகைய உதவி இன்றியே வளர்ச்சியடைந்துள்ளன: மேலும் வெளிநாட்டு உதவி மிகையான எதிர் பார்க்கைகளைக் கொண்ட திட்டமிடலுக்கு வழிவகுக்கும் என்றும் அரசுகள் பண வீக்கத்தன்மையுடைய நாணய இறைக்கொள்கைகளைக் கையாண்டு அந்நியச் செலா வணி ஒதுக்குகளை விரயம் செய்யும் படி தூண்டுகிறது என்றும் இவர் குறிப்பிட்டார்.

இடது சாரிகளின் கொள்கையை தெரேசா ஹேரர் (Teresa Hayter) கருத் துப்படி வெளிநாட்டு உதவி ஏகாதிபத்தியத்துக்கு ஏதுவாகிறது எனக் குறிப் பிட்டார். இவருடைய முடிவுகள் இலத்தீன் அமெரிக்காவில் உலக வங்கியின் செயற் பாடுகளை ஆதாரமாகக் கொண்டு அமைந்தது. மூன்றும் உலக நாடுகளில் முதலா ளித்துவ முறையை உறுதியடையச் செய்வதற்கன்றி வேறொன்றுக்கும் வெளிநாட்டு உதவி பயன்படுவதில்லை என்றும் நன்மை ஏற்படுவதாயின் அது எதிர்க்கணிய மானதேயாகும். எவ்வாறாயினும் முதலாளித்துவத்தைப் பரப்புவதற்கு வெளிநாட்டு உதவி தகுந்ததொரு கருவியல்ல என்பதால் சமீபகாலத்தில் இதன் அளவு குறைந்து கொண்டு செல்கிறது என இவர் கருதுகிறார். அது மாத்திரமன்றி கிடைக்கின்ற உதவி கூட குறைவிருத்தி நாட்டின் வளங்கள் இலாபங்களின் வடிவில் மேன் மேலும் நாட்டை விட்டு வெளியேற வழிவகுக்கும். கூடிய மூலதன வெளியீட்டு விகிதத்தால் குறைவிருத்தி நாட்டுக்குத் தான் தீமையென இலத்தீன் அமெரிக்காவைப் பற்றி எழுதும் கீத் கிரிபின் (Keith Griffin) என்ற ஆசிரியர் குறிப்பிடுகின்றார்.

சர்வதேச நிதி நிறுவனங்களான சர்வதேச நாணயநிதி, உலக வங்கி போன்றவை கூட நிபந்தனைகளின் அடிப்படையிலேயே உதவி வழங்குகின்றன. உதவி வழங்குவதற் காக இந்நிறுவனங்கள் கூறிய ரூபா பெறுமதிக் குறைப்பு, கடன்கட்டுப்பாடு' செலவுக் குறைப்பு என்பவற்றைச் செய்யுமாறு நிர்ப்பந்திக்கின்றன. அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகள் தமது அபிவிருத்திக் கொள்கைகளை உதவி பெறுதல் என்ற கார ணத்திற்காகச் சுயமாகத் தீர்மானிக்க முடியாதவையாக இந்நிதி நிறுவனங்களால் கட்டுப்படுத்தப்படுகின்றன. குறைவிருத்தி நாடுகளில் முதலாளித்துவக் கொள்கைகளைத் திணிக்கின்றன. இலங்கை அரசு இந்நிறுவனங்களால் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது என்ப தைக் கேலிச்சித்திரங்கள். ஆசிரியத் தலையங்கள், பத்திரிகை அறிக்கைகள் எடுத்துக் காட் டுகின்றன. Financial Times போன்ற பிரபலபொருளியல் ஏடு மிக அழகாகச் சுட்டிக் காட்டுகிறது. சர்வதேசநாணய நிதியம் ரூபாப் பெறுமதி இறக்கம் செய்யுமாறு தொடர்ச் சியாக கோரிக்கை விடுத்த போது முன்னாள் ஜனாதிபதி J·R ஜெயவர்த்தன அது பற்றிய அதிருப்தியை சில சந்தர்ப்பங்களில் வெளியிட்டதோடு விரும்பத்தகாத விளை வுகளையும் சுட்டிக்காட்டினார். 1981ம் ஆண்டு தான்சானிய ஜனாதிபதியான ஜீலியஸ் நைரோறீ தாரூஸ் ஸலாமுக்கு வந்து சேர்ந்த மூவரடங்கிய ஒரு ஆலோசனைக் குழு விடம் "நாங்கள் ஆலோசனை கேட்கவில்லை; பணம் கேட்கிறோம். ஆனாலும் உங்கள் வரவு நல்வரவாகுக என்றும் குறிப்பிட்டதிலிருந்து நன்கொடை நாடுகளின் நிபந்தனைகளுக்கு எதிர்ப்புக் காட்டியமை புலனாகும்.

உலகவங்கி இலங்கைக்கான தனது நிதி உதவி பற்றி மறுபரிசீலனை செய்யவேண்டி ஏற்படும் என அபாய எச்சரிக்கை விடுத்துள்ளது. சர்வதேச நாணயநிதியம் தான் இலங்கைக்கு இந்த ஆண்டு வழங்க

ஒப்புக்கொண்ட நிதி உதவியைத்தர மறுத்துவிட்டது. இது பற்றிய இணக்கப் பேச்சு வார்த்தைகளில் இலங்கை அதிகாரிகள் தற்போது ஈடுபட்டுள்ளனர். தற் போதைய ஜனாதிபதி திரு. பிரேமதாசா தனது தேர்தற்கால வாக்கு உறுதிகளை நிறைவேற்ற முடியாது திணறுகின்றார். மாண்புமிகு ஜனாதிபதி பிரேமதாசாவின் மிக முக்கியமான ஜனசக்தித் திட்டமும் ஒரு வருடம் பிற்போட்டமை, பொருட் களின் விலை உயர்வு என்பவற்றில் இருந்து சர்வதேச நாணயநிதியம், உலகவங்கி என்ற இரட்டைப் பொம்மைகளின் ஆதிக்கம் தெளிவாக தெரிகிறது. கடந்த சில வருடங்களுக்கு முன் சாம்பியாவில் கொப்பர் செல்ட் பிரதேசத்தில் மக்கள் கலகம் செய்த காரணத்தால் இந்நிறுவனங்களின் நிபந்தனைகள் நிராகரிக்கப்பட்டன. இதனால் சாம்பியாவுக்கு சர்வதேச நாணயநிதியம் கடன் கொடுக்க மறுத்ததுடன் உலகவங்கியும் முதலீடு செய்ய மறுத்தது. மொட்டையாகக் கூறினால் இந்நிறுவ னங்கள் பணம் சம்பாதிக்கவே கடன் உதவி செய்கின்றன. குறைவிருத்தி நாடுகளின் அபிவிருத்திக்காக உதவியளிக்கவில்லை. தனிப்பட்ட நாடுகளின் உதவியும் சரி, சர்வ தேச நிதி நிறுவனங்களின் உதவியும் சரி, வறிய நாடுகளுக்கு "உதவியல்ல வர்த் தகம்" "உதவியல்ல பொறி" என்ற நிலைப்பாட்டையே ஏற்படுத்துகின்றன.

## உசாத்துணை நூல்கள்


1. பொருளியல் நோக்கு 1983 செப்டெம்பர்.
2. வித்தியோதயம் 1976 "வெளிநாட்டு உதவியின் தத்துவம்"
   By – Dr. V. நித்தியானந்தன்
3. Economic Development in The Third By - Michael P. Todaro
4. முரசொலி, உதயன் ஆசிரியதலையங்கங்கள்.


---

★ பண்பாடு என்பது ஆபரணமல்ல அது ஒரு
நாட்டின் குணத்தை வெளிப்படுத்துவது
அதே சமயத்தில் நாட்டின் குணத்
தை உருவாக்கும் சக்தி வாய்ந்த
கருவி. செம்மையான
வாழ்வே பண்பாட்
டின் முடிவு.

– ஸாமர் சேட்மாம் –

# இலங்கையின் வடக்குக் கிழக்குத் தமிழர்கள் மத்தியில் அடையாளம் காணக்கூடிய சாதியமைப்பின் பரிமாணம் பற்றிய ஒரு நோக்கு.

[ சிறப்பாக யாழ்ப்பாணம் ]

அ. விஜயகிருஷ்ணன். வரலாறு - சிறப்புக்கலை. இறுதி வருடம். யாழ் பல்கலைக்கழகம்.

மனிதன் இந்தப் புவியல் தோன்றிய காலம்முதல் பல்வேறுபட்ட மாறுதல்களுக்குள் தன்னை இணைத்துக்கொள்ள வேண்டியதாயிற்று சிந்தனை, செயற்பாடு, உறவுகள் போன்ற அம்சங்களிலும் காலம்காலமாக பல மாறுதல்களை அவன் உள்வாங்கிக் கொண்டதுடன். அடுத்து வந்த பரம்பரையினருககும் தான் பெற்ற அறிவுத் திரட்சியைப் பகிர்ந்து கொள்வதிலும் வெற்றி கண்டான். அவ்வாறான சமுதாய அமைப்பின் வளர்ச்சிப்போககில தோற்றம் பெற்ற ஒரு வடிவமாகவே சாதிமுறையும் கருக்கொண்டது. இந்த முறை பொறுத்து தோற்றத்திலும், விரிவுபடுத்தலிலும் மேலைத்தேய நாடுகளுக்கும், கீழைததேய நாடுகளுக்குமிடையே வேறுபட்ட நன்மையினைத் தெளிவாகக காணமுடிகிறது. அந்த வகையில் கீழைத்தேய மரபில் வந்ததாக (குறிப்பாக இந்திய மரபில்) இலங்கைத்தீவின் வடக்குக,கிழக்குப் பாகங்களின் சமூகக்கட்டுமாணங்களும் சாதியமைப்பும காணப்படுகிறது. வடக்குக், கிழக்குப் பகுதிகளில் இவ்விடயம் சம்பந்தமாக காலத்துக்குக்காலம் பல மாறுதல்களை அடையாளம் கண்டபோதும்; அதன் இறுதி மூச்சானது இன்றுவரை தனது வலுவான தன்மையினை பேணியவண்ணமே இருந்து வருகிறது. அந்த வகையில வடக்கு, கிழக்கு தமிழர்கள் மத்தியில் சாதியமைபபின் பரிமாணங்களை மதிப்பீடு செய்வது முக்கிய மானதாகவும இன்றைய காலப்போக்கின் தேவையை வேண்டி நிற்கும ஓர் அம்சமாகவும கொள்ள வேண்டியுள்ளது.

ஐரோப்பிய நாடுகளில் நிலவிய சாதியமைப்புப்பற்றி நோக்கின்; அங்கு வர்க்க அடிப்படையில் 'அடிமை' என்றஓர் ஊதியமற்ற சேவகம் செய்யும் வர்க்கம் அடையாளம் காணப்பட்டது. அந்த அடிமையானவன் தனது எஜமானுக்கு வேண்டிய சகல சேவைகளையும் நிறைவேற்றுபவனாகக் காணப்பட்டான். இதனால் அந்த ஒருவனே பல்வேறு தரப்பட்ட வேலைகளையும் செய்யவேண்டியிருந்ததன் காரணமாக எந்த ஒரு துறையிலும் சிறப்புத் தேர்ச்சியை பெறமுடியவில்லை. அதைவிட வசிப்பதற்கு சொந்த நிலமற்றவனாக இருந்தாலும்; எஜமானின் விருப்பு வெறுப்புகளுக்கு உட்பட்டமையாலும்; மிக மோசமான அடக்கு முறைகளுக்கு முகங் கொடுக்க வேண்டியவனாகவும் இருந்தான். நீண்டகாலமாகாவே (கைத்தொழில் புரட்சி ஏற்படும் வரை) 'அடிமை' என்ற ரீதியில் வாழ்ந்தவர்கள் அதிக ஊழியத்தைச் செய்து குறைந்த வேதனத்தையும் பெற்று மிக இறுக்கமான சூழலில் வாழவேண்டியிருநதது. இவ்வாறான அடக்கு முறையானது. மிக விரைவாகவே அடிமைகளை எஜமானர்களுக்கு எதிராக கிளர்ந்தெழ வைத்தது. இம்முனைப்பானது. அவர்களது சமுதாயக் கட்டமைப்பில் நீண்ட காலம் இருந்துவந்த முறைமைகளுக்கு மாறாக ஒரு புதிய திருப்பு

முனைக்கு இட்டுச்சென்றதெனலாம் கைத்தொழிற் புரட்சியின் பின்பாக ஏற்பட்ட இயந்திரமயமாக்கலும், தொழிற் பிரிப்புகளும் சமூக அமைப்பில் மாற்றத்தை ஏற்படுத்தியத்துடன் அடிமட்டத்தில் இருந்த 'அடிமை' முறையினையும் அணையச் செய்தது.

கீழைத்தேய சமூக அமைப்பு முறையை நோக்குமிடத்து 'குடிமை' என்ற சேவக முறையானது சிறப்பிடம் பெற்றது. குறிப்பாக இந்தியா பொறுத்து நோக்கின். ஒரு குடிமையானவன் தனது சமூக இயக்கப்போக்கில் ஒரு குறிப்பிட்ட துறை சார்ந்த தொழிலையே மேற்கொண்டதை அடையாளம் காணலாம். (உ+ம்) வண்ணான் என்ற சாதியினர் உடுப்பைக் கழுவும் தொழிலை மட்டும் செய்வது) இவ்வாறான குடியானவன் தனது சேவைகளை சமூகத்திற்கு வழங்கி தனக்குத் தேவையான பொருட்களை தனது எஜமானர்களிடமிருந்து பெற்றுக்கொண்டான். ஆனால் இக்குடிமைக்கு சொந்தநிலம் ஒதுக்கப்பட்டிருந்தது. அவன் தனது தொழிலை முடித்துவிட்டு தனது உணவையும், தனது குடும்ப வாழ்க்கையையும் புறம்பான வகையில் மேற்கொள்ள முடிந்தது. இவ்வாறான 'குடிமை' ஐரோப்பிய அடிமையை விட வித்தியாசமான முறையில் ஒரு குறிப்பிட்ட தொழிலில் சிறப்புத் தேர்ச்சியை அடைந்ததுடன், ஐரோப்பிய அடிமையைப் போல அடக்கு முறைகளையும் அனுபவிக்கவில்லை. சமூகத்தில் குறிப்பிடத்தக்களவு சுதந்திரத்தை அவன் பெற்றிருந்தான் இதன் விளைவாக தனது சமூகத் தளத்திலிருந்து தனது தொழிலையும், சமூகத்தன்மைகளையும் பலப்படுத்துவதில் அக்கறை செலுத்தினான். இவ்வாறாக ஓரளவு சுதந்திரத்தை அனுபவித்த கீழைத்தேய குடிமை வர்க்கத்தினர் எஜமானர்களுக்கு எதிராக கிளர்தெழ வாய்ப்புக்கள் இருக்கவில்லை. இதன் காரணமாக சமூக அடித்தளத்தில் தொழிலானது சாதியை தீர்மானித்த அம்சமாகவும் அதுவே தொடர்ந்தும் மாற்ற மின்றி சாதியமைப்பு பேணப்படுவதற்கு தூபமிடுவதாகவும் அமைந்தது.

இன்னொரு வகையிற் பார்த்தால்; யாழ்ப்பாண சமூக அமைப்பில் உயர்சாதியினர் தமது அந்தஸ்தினை வெளிக்காட்டும் ஒரு கருவியாக தாழ்த்தப்பட்ட மக்கள் பயன்படுத்தப் படுவதைக்காணலாம். குறிப்பாக சலவைத் தொழிலாளியோ அல்லது நாவிதனோ, உயர் சாதியினரின் குடும்பங்களில் நிகழும் மங்களமான; அமங்களமான நிகழ்வுகளில் ஒரு குறிப்பிட்ட சேவையை ஆற்றவேண்டியிருப்பதும், அதன் பின் அவர்களது சேவைக்காக பணமாக அல்லாமல் பொருட்கள் சிலவற்றை (உணவு, வேறு சாதாரண பொருட்கள்) கொடுப்பதும், அதன் மூலம் குடிமை என்ற அந்தஸ்த்தில், தாழ்த்தப்பட்ட மக்களும்; எஜமான் என்ற வகையில் 'உயர் சாதி மக்களும் பாத்திரமேற்பதை தெளிவாக அடையாளம் காணலாம். தற்காலநிலையில் உத்தியோகம், வெளிநாட்டு வேலைவாய்ப்பு போன்றவற்றால் தாழ்த்தப்பட்ட மக்களின் இளைய தலைமுறையினர் இவ்வாறான சடங்குகளில் தம்மை உட்படுத்தாமல் விலகி வருகின்ற போதும், உயர்சாதியினர் அதை பிடியாகப்பிடித்து வருவதையும் காணலாம். இவ்விரு தரத்தினரும் எதிர் காலத்தில் எவ்வாறு, எத்தகைய சமரசத்தை காண்கின்றனரோ, அத்தகைய ஒரு புதிய மாறுதலையும் சமுதாயத்தில் அடையாளம் காணமுடியும். இதற்கான கால எல்லை வரையறுக்கப் படமுடியாதது.

இந்தியா ஆரம்ப காலமுதல் நவீன காலம் வரை படிப்படியான பல மாற்றங்களைக் கண்டிருந்த போதிலும், சாதியமைப்பைப் பொறுத்து அடிப்படை மாற்றம் எதனையும் ஏற்படுத்தவில்லை. வெளிப் பிரதேசங்களிலிருந்து இந்தியாவிற்குள் புகுந்த பல்வேறு அம்சங்களையும் இந்திய சமூகம் உள்வாங்கிக் கொண்டதே தவிர, அடிப்படையில் தனது அமைப்பில் எந்த மாற்றத்தையும் ஏற்படுத்தவில்லை என்பதே

உண்மை. குறிப்பாக கி.மு 1500 காலப்பகுதியளவில் இந்தியாவிற்குள் ஆரியர் புகுந்தவுடன், முன்பு நிலவி வந்த இந்தியப் பண்பாட்டு வடிவங்களில் ஏற்பட்ட மாற்றங்களில் ஒன்றாகவே சாதியமைப்பைக் கொள்ளலாம். குறிப்பாக இருக்வேதகாலப் பிற்பகுதியில் 'நான்கு வருணங்கள்' என்ற குறிப்பு வருவதற்கு முன்பு 'மூவர்ணம்' (இது மூன்று இனங்களையே குறிக்கும்) என்ற நிலையினை தெளிவாகக் காணலாம். அதாவது இந்தியாவிற்குள் புகுந்த ஆரிய வம்சத்தினர் இந்தியாவிற்குள் பூர்வீக மக்களாக இருந்து வந்த தாசர்கள் அல்லது தாயுக்கள் எனப்பட்ட கறுப்பு நிற மக்கள், இவ்விரு கூட்டத்தினரும் கலந்த புதிய ஒரு இன மக்கள் என வரையறை செய்யலாம். (இவர்களை ஆரியர் ஒழுக்கநெறி பிறழ்ந்தவர்க ""க விலக்கி வைத்தனர்.) (வி.இ. P45) இவ்வாறு இந்தியாவிற்குள் புகுந்த ஆரியர் தம்மை உயர் சாதியினராகவும் இந்தியாவின் பூர்வீக மக்களைத் தாழ்த்தப்பட்டவர்கள் எனவும் இம்மக்கள் இருக்குவேத பிற்பட்ட பாடல்களுக்கு முன்பே 'தாச' என்று அடிமையையும் 'தாசி' என அடிமைப் பெண்ணையும் குறித்து) (ப.ஈ.P 25) நடத்தியதாக அறிய முடிகிறது. இந்த முதற் கட்டுமானம் தொடர்ந்தும் சாதிப்பயிரை வளர்க்க ஏதுவாயிற்று. இவ்வாறான அம்சங்கள் பிற்பட்ட காலங்களில் இலங்கைக்கும் கைமாற்றப்பட்டது.

சாதியமைப்பின் தோற்றம் பற்றி சில அறிஞர்களின் நோக்கில் பார்க்கும் போது, சாதியமைப்பின் அடிப்படையானது பூர்ஷ்வா வர்க்கத்தின் எச்ச சொச்சங்களிலிருந்தே வந்தது என்கின்றனர் அவ்வாறு கொள்வதாயின் பூர்ஷ்வா வர்க்கமானது காலகதியில் அழிவுற்று சமுதாய கட்டமைப்பில் மாறுதலை பெற்றிருக்க வேண்டும். அல்லது உடனடியாக அழியாவிடினும் காலகதியில் அழிந்திருக்க வேண்டும். மாறாக சாதியமைப்பு தொடர்ந்தும் பேணப்பட்டு வருவதே அவர்களது நோக்கு நிலையானது ஓர் ஆரோக்கியமற்ற தன்மையில் இருப்பதை வெளிக்காட்டுவதாயுள்ளது எனலாம்.

வர்க்க அடிப்படையில் நோக்குமிடத்து கீழ்த் தட்டுக்களில் இருப்பவர்கள் பொருளாதார ரீதியில் தம்மை ஸ்திரப்படுத்தும் போது; தமக்கு மேலுள்ள வர்க்கத்தினரின் நிலைக்கு மாறுமுற வாய்ப்புண்டு. மாறாக, சாதி முறையில் அவற்றிற்கெல்லாம் ஈடுகொடுக்க முடியாத ஒரு நிலையினை உள்ளடக்கியுள்ளது. குறிப்பாக பொருளாதார ரீதியாக அவர்கள் வளர்ந்தாலும் கூட 'பிறப்புரிமை' வாயிலாக சாதியமைப்பு என்ற கட்டுக் கோப்பிலிருந்து விடுபட்டு வெளியேற முடியாத ஒரு சூழலை தெளிவாக அடையாளம் காண முடிகின்றது. இவ்வாறான நிலைமை கூட சாதியமைப்பில் தொடர்ந்தும் மாற்றமின்றி இருப்பதற்கு உரமூட்டுவதாகவுள்ளது.

சாதியமைப்பு தொடர்பாக யாழ்ப்பாணத்து நிலையினை நோக்குமிடத்து பொதுவாக பிராமணர்அல்லாத உயர் சாதியினரான வெள்ளாளர், கள்ளர், அகமடியார், கோனர் போன்றோர் தொழில் சார்ந்த குழுக்களிடையே உயர் இடத்தைப் பெற்றுக் கொண்டனர் (இ.இ.ச.மா / 1 P. 201) குறிப்பாக யாழ்ப்பாணம், மட்டக்களப்பு பகுதிகளில் மேலோட்டமாக சாதியமைப்புப்பற்றி நோக்கின் மட்டக்களப்பில் முக்குவர் (யாழ்ப்பாண வழக்கிலுள்ளது போலல்லாது அங்குஉயர் சாதியினரையே குறிப்பதாயுள்ளது) வேளாளர், பறையர், நாவிதர், பள்ளர், நளவர், கரையார் போன்ற சாதியினரும்; யாழ்ப்பாணம் பொறுத்து வேளாளர், செட்டி மரபினர், பள்ளர், பறையர், முக்குவர் அல்லது கரையார், வண்ணார், நாவிதர்,

கைக்குளர், தச்சர், கொல்லர், தட்டார் போன்ற சாதியினராக வரையறை செய்யப்பட்ட மக்கள் கூட்டத்தினரைக் கூடுதலாகவும், வடமராச்சிப் பகுதிகளில் கோவியர், வடுகர் போன்ற பல்வேறு சிறு, சிறு சாதிப்பிரிவுகளும் காணப்படுகின்றன. அதிலும் யாழ்ப்பாணத்தைவிட, மட்டக்களப்பைப் பொறுத்து குறைந்த சாதியினரை உயர்சாதியினர் வழிநடத்தும் முறையில் அதன் தாக்கம் ஒப்பீட்டளவில் குறைவானதாகவே காணமுடிகிறது.

யாழ்ப்பாணத்தில் வெள்ளாளரும், மட்டக்களப்புப்பகுதியில் முக்குவரும் தம்மை உயர் சாதியினராகக் கருதிக் கொள்வதுடன் ஏனைய படிமுறையிலுள்ளவர்களைத் தமக்குச் சேவகம் செய்யவும் அவர்களைத் தொடர்ந்து தமக்குக் கீழ்ப்பட்டவர்களாகவும் நடத்துவதைத் தெளிவாகக் காணமுடிகிறது. "சமுதாயத்தில் ஆட்சியுள்ள குழுவினரின் நலன்களைப் பேணுவதற்காக சமூக உறவுகளையும், பொது ஒழுங்குகளையும் பாதுகாக்கும், நிலைநிறுத்தும் வளர்க்கும் நோக்குடையதும், அக்குழுவினரின் விருப்பைப் பிரதிபலிப்பதுமான சமூகத்தில் மக்களின் நடத்தைக்குரிய விதிகளின் முழுமை" என விளக்கிக் கொண்டால் யாழ்ப்பாணத் தேசவழமைச் சட்டங்களையும் சம்பிரதாயங்களையும் மட்டக்களப்பின் முக்குவச் சட்டங்களையும் சம்பிரதாயங்களையும் முறையே வெள்ளாளரையும், முக்குவரையும் பாதுகாக்கவே எழுந்தன எனலாம். (மேற்கூறப்பட்ட கட்டுரை / P. 206) இச்சட்டமானது மாறிவரும் சமூக நிலைகளுக்கு நவீன மயமாக்கத்திற்கும் தடையாக மரபுரீதியான சமூக ஒழுங்கமைப்பைப் பேண முற்படுவதும் குறிப்பிடத்தக்கது.

யாழ்ப்பாணப் பிரதேசத்தைப் பொறுத்து சில ஆண்டுகள் முன்னோக்கிப் பார்த்தால் (50 களிற்கு முன்புள்ள காலப்பகுதி) 'குறைந்த சாதியினர்' என வரையறை செய்யப்பட்டோர் பஸ்ஸில் பிரயாணம் செய்யும் போது கூட சமதையாக 'உயர் சாதி'யினருடன் ஆசனங்களில் இருக்க முடியாது. வாகனத்தின் கீழ்த்தளத்தில் இருந்தவாறே பிரயாணம் செய்ய வேண்டியிருந்தது. பாடசாலைகளை எடுத்துப்பார்த்தாலும் 'தாழ்த்தப்பட்ட சாதி' மாணவர்கள் ஏனைய 'உயர்சாதி' மாணவர்களைப் போல் கதிரைகளில் இருக்க அனுமதிக்கப் படாமையால் நிலததில் அமர்ந்தவாறே கல்வியைப் பெறவேண்டியிருந்தது. குறிப்பாக சைவப்பாடசாலைகளில் சாதியிற் குறைந்த மாணவர்களுக்கு எந்த அந்தஸ்த்தும் இருக்கவில்லை என்பது உண்மையே

ஈழத்திரு நாட்டில் சைவத்தையும், தமிழையும் வளர்க்க அரும்பாடுபட்டவர் நாவலர். சுதேசக்கல்வி இயக்கத்தை முதன் முதலாக அந்நியராட்சிக் கெதிராகவும், கிறிஸ்தவ மிஷனரிகளுக் கெதிராகவும் துணிவுடன் ஆரம்பித்தார். கல்வி பற்றிக் கூறுமிடத்து இவர் "கல்வி இளமை தொட்டு மரண பரியந்தம் வரை விடாமற் கற்க வேண்டும்" என்றார் "வித்தியாதானத்திற்கு சமமான தானம் ஒன்றுமில்லை" வித்தியாதானம் எல்லாத்தானத்திலும் சிறந்ததென்றார். இவரால் 1848 இல் வண்ணார்பண்ணையில் சைவப்பிரகாச வித்தியாசாலை நிறுவப்பட்டது. சுதேச கல்விக்கு வித்திட்டு, கல்விக்கு வரைவிலக்கணம் கூறிய இவரே தேசவழமைச் சட்டத்திற்கு உட்பட்டு சாதிவெறிகாட்டி தமிழ் மக்களின் ஒரு சாராரின் கல்வியுரிமையினை மறுத்தார். அவர் எழுதிய சைவ வினாவிடைகளில் சாதி வேறுபாடுகள் அப்பட்டமாக காண்பிக்கப்பட்டன; கற்பிக்கப்பட்டது. அவரால் ஆரம்பிக்கப்பட்ட பாடசாலைகளிலும் கல்வியுரிமை தமிழ் மக்களில் ஒரு சாரருக்கு மறுக்கப்பட்டது. "வித்தியாதானத்திற்கு சமமானது ஒன்றுமில்லை"யென்று கூறிய அவரே சமூகத்தின் ஒரு பகுதியினருக்கு வித்தியாதானம் செய்து வைக்க மறுத்துமிருக்கிறார்

இளமைதொட்டு மரண பரியந்தம் வரை விடாமற் கத்கவேண்டுமென்று கூறிய அவரே ஒரு சாராரின் கல்விக்கு வாய்ப்பூட்டுப் போட்டிருக்கிறார். இவை நாவலரின் புகழுக்கு மாசு கற்பிப்பதற்காக எழுதப்பட்ட புனைகதைகளல்ல. இவைகள் உண்மைகள் ஜீரணிப்பது கஸ்டமாகவும் இருக்கலாம். (தா . த . க / P. 15) இவ்வாறு குறிப்பிட்ட கட்டுரை ஆசிரியர் சுட்டிக்காட்டுவது கருத்திற் கொள்ளப்பட வேண்டிய ஒன்றாகும்.

தாழ்த்தப்பட்ட சாதியைச் சார்ந்த பெண்கள் யாழ்ப்பாணத்தைப் பொறுத்து மேற்சட்டை அணிவது கூட தவிர்க்கப்பட்டிருந்தது. (தற்காலத்தில் கூட சில பகுதிகளில் காணமுடிகிறது) அத்துடன் சைவப் பாடசாலைகளில் கல்வி கற்க அனுமதிக்கப்படாத பட்சத்தில் கத்தோலிக்க மத நிறுவனங்கள் மிகவும் ஒத்துழைப்பு வழங்கின. ஏனைய மதகுருமார்களைப் போல் மக்கள் குருமார்களைத் தேடிப்போக வேண்டிய நிலைக்கு மாறாக கத்தோலிக்க குருமார்கள் தாழ்த்தப்பட்ட மக்களைத் தேடிச்சென்று சேவை புரிந்தமை அம்மக்களைப் பொறுத்து ஒரு வரப்பிரசாதமாகவே அமைந்ததெனலாம்.

புவியியல் அடிப்படையில் நோக்கும் போது கூட; யாழ்ப்பாணப்பகுதியில் தாழ்த்தப்பட்ட மக்களது வதிவிடங்கள் ஏனைய மக்களது வதிவிடங்களிலிருந்து புறம் போக்காகவே அமைந்திருக்கின்றன. குறிப்பாக வளமற்ற சுண்ணக்கல் நிறைந்த பகுதிகள் (கலட்டி) தாழ்நிலங்கள் (இவை மாரிகாலத்தில் நீர் தேங்கிநிற்கும் பகுதிகள்) செழிப்பற்ற உவர் நிலங்கள் என்பன முக்கியமாக காணக்கிடக்கின்றன. அத்துடன் 'தாழ்த்தப்பட்ட, மக்களது உழைப்பு முறை கூட ஒரு பருவகால வருமானமாகவே காணப்படுகிறது. இவ்வாறான வருமானத் தளம்பலானது அம்மக்களை அவ்வூர்களில் 'உயர்சாதியினரிடம்' தங்கிநிற்க வேண்டிய சூழலுக்கு இட்டுச் செல்வதாயுள்ளது. இதன் மூலம் பல்வேறு வகைகளில் கடனாளியாகவும் இம்மக்கள் வாழவேண்டியுள்ளதால் தொடர்ச்சியாக இன்னொர் வர்க்கத்திடம் தங்கிவாழ்வோராக காணப்படுகின்றனர்.

யாழ்ப்பாணத்து 'உயர்சாதியினர்' தமது புலங்களில் வசிக்கும் 'தாழ்த்தப்பட்ட' மக்களை பொருளாதார ரீதியில் மட்டுப்படுத்துவதற்காக மிக இலகுவான ஒரு வழிமுறையாக 'கூத்துப் போடுதல்' என்ற மரபுரீதியான கூத்துக்களை ஆடுவதற்காக அவர்களைத் தூண்டினர். இதன் விளைவாக 'தாழ்த்தப்பட்ட' மக்களது சிந்தனை திசைமாறி அந்தக் கூத்தில் மட்டும் கவனம் செலுத்தப்பட்டதுடன்; பொருளாதார ரீதியிலும் பாதிப்பிற்குள்ளாயினர். கூத்து முடிவுறும் காலகட்டத்தில் அதற்கு பொறுப்பாயிருந்து நடத்துகின்ற பலரும் கடனாளியாகி; குறிப்பிட்ட உயர்சாதியினரிடம் அதிக வட்டிக்கு கடன்வாங்கவும் நேரிடுகிறது. அந்தக் குறிப்பிட்ட கடனை அடைப்பதற்கு நீண்டகால உண்மையான உழைப்பு அந்த அப்பாவி மக்களுக்கு தேவையாகிறது. இந்நடவடிக்கைகள் இன்றைய காலகட்டத்திற்கூட சில பகுதிகளில் அழிவுறாமல் இருப்பதும் மறுப்பதற்கில்லை.

இந்தியாவில் 'தாழ்த்தப்பட்ட' மக்களை தமது அரசியல் இலாபம் கருதி தொடர்ந்தும் 'ஹரிஜனர்கள் என்ற வரையறைக்குள் வைத்திருப்பதைக் காணமுடிகிறது (அந்நியமாதல் / p.7) அவ்வாறே யாழ்ப்பாணம், மட்டக்களப்பு பகுதிகளில் அரசியல் இலாபம் கருதி ஒரு கருவியாகவே அம்மக்கள் பேணப்பட்டு வருவதும் தெளிவாகிறது. அந்நிலையில் கூட அவர்கள் அடிப்படையான எந்த மாற்றத்திற்கும் உட்படாமல் தொடர்ந்தும் ஒரே வகையில் இருப்பதையே காட்டுகிறது.

குறிப்பாக அம்மக்களைப் பிரதிநிதித்துவப் படுத்தக் கூடிய சிறந்த தலைவர்கள் அவர்கள் மத்தியிலிருந்து வெளிவராமை பிரதான குறைபாடாகவே கொள்ள வேண்டியுள்ளது.

1926 காலப்பகுதியில் மகாத்மாகாந்தி இலங்கைக்கு வந்ததுடன் சமபந்தி போசனம், சம ஆசனம் போன்ற இயக்கங்கள் வலுப்பெறத் தொடங்கின. 1928 காலப்பகுதியில் இந்நடவடிக்கைக்கு வலுவூட்டும் வகையில் அரசியற் தலைவர்கள் சிலரையும் உள்ளடக்கி அமெரிக்க மிஷனரிமாரின் உதவியுடன் திரு. யோவேல் போல் உடுவில் பெண்கள் கல்லூரியில் ஆரம்பித்து வைத்தார். அதற்கு உறுதுணையாக இருந்த தலைவர்களாக திருவாளர்கள் நெவில்ஸ் செல்லத்துரை, கனகரத்தினம் ஹென்டி பேரின்பநாயகம், ரெவரன் பிக்னல் பாதிரியார், ரெவரன் பாதர் போல் மெத்யூஸ், Dr. ஜேம்ஸ், சி.பொன்னம்பலம், S. W மகாதேவா, காண்டோஸ் (அக்கால யாழ் அரசாங்க அதிபர்) ஆகியோர் காணப்பட்டனர். ஆயினும் 1933 காலகட்டத்தில் யாழ்ப்பாண வாலிபர் காங்கிரஸ் முறிவடைந்ததுடன் இம் முனைப்பான சீர்திருத்த தன்மையும் பின்தள்ளப்படுவதாயிற்று. (தா த.க/P. 35) இவ்வாறான நடவடிக்கையானது தாழ்த்தப்பட்ட மக்களுக்கு ஏற்பட்ட ஒரு துரதிஷ்ட நிகழ்வாகவே கொள்ளவேண்டியுள்ளது.

இன்றும் கூட யாழ்ப்பாணத்தின் பல பகுதிகளிலும் வித்தியாசமான முறைகளில் சாதியமைப்புகள் பேணப்பட்டு வருகின்றன. குறிப்பாக புங்குடுதீவுப் பகுதிகளில் திருவாளர்கள் மு. தளையசிங்கம் சு. வில்வரத்தினம் போன்றவர்களின் சமூக சீர்திருத்த நடவடிக்கைகளினால் இன்றைய காலகட்டத்தில் அப்பகுதிகளில் சாதிப் பாகுபாட்டின் தாக்கமானது குறைவாகவே காணப்படுகின்றது மறுவளமாக அயலிலுள்ள இன்னோர் தீவான காரைநகர் பகுதியில் தாழ்த்தப்பட்ட சாதியினர் குடிதண்ணீரைக் கூட உயர் சாதியினர் புழங்கும் கிணறுகளில் அள்ளமுடியாத ஓர் இறுக்கமான சூழலை தெளிவாக காணமுடிகிறது. அவ்வாறு ஒதுக்கப்பட்ட மக்கள் வீட்டுத் திண்ணைகளில் வைத்து வரவேற்கப்படுவதும் சிரட்டை அல்லது கண்ணாடிக் குவளையில் (விசேடமாக அவர்களுக்கென ஒதுக்கப்பட்டவை) தண்ணீர் கொடுப்பதும் அல்லது தண்ணீரை அவர்களது கையில் வார்த்து விடுவதும் இன்றைய நாகரீக மனிதனால் ஏற்றுக் கொள்ளப்படுவதென்பது கசப்பான உண்மையாகவேயுள்ளது.

யாழ்ப்பாணப் பிரதேசத்தின் இவ்வாறான சாதியமைப்பின் நீண்ட அடக்குமுறைகளானவை எழுபதுகளில் தமிழ்பிராந்தியங்களில் இடம்பெற்ற தேசிய விடுதலைப் போராட்டங்களில் இளைஞர்கள் நேரடியாக பங்கு கொண்டதன் மூலம் ஒரு புரிந்துணர்வும், சமூக சமதையான பண்பாட்டம்சங்களும் துளிர்விட்டன. அந்நடவடிக்கைகள் கூட அடிப்படையில் போராட்டம் என்ற கருத்தமைவில் இளைஞர்களது பங்களிப்பின் பெறுமானத்தைக் கருத்திற் கொண்டு ஏற்படுத்தப்பட்ட ஒரு மாற்றமாகவே கருதமுடியும். அந்நடவடிக்கை கூட அடிப்படையான கட்டுமானத்தில் எந்த மாற்றத்திற்கும் இட்டுச்செல்லவில்லை என்பதைப் பிற்பட்ட கால நடவடிக்கைகள் தெளிவுபடுத்துவதாகவே உள்ளன. அந்த வகையில் சாதியமைப்பில் மாற்றத்தை ஏற்படுத்த முனைவது ஒரு துயரப் பிரசவமாகவே காணப்படுகிறது.

யாழ்ப்பாண கட்டமைப்பில் ஓர் 'உயர்சாதி' இளைஞன் 'தாழ்த்தப்பட்ட சாதி பெண்ணொருத்தியை திருமணம் செய்வது சாத்தியமென வைத்துக்கொண்டால்; அவன் தனது சமூகக்கட்டுமாணங்களைக் கடக்கக்கூடிய அளவிற்கு தன்னைத் தயார்ப்படுத்தினாலும்; அந்த குறிப்பிட்ட மணமகனுக்கு மணமாகாத சகோதரிகள் இருந்தால் அவர்களுக்கு வாழ்வளிக்க தாழ்த்தப்பட்ட வர்க்கத்திலிருந்து ஓர் இளைஞன் முன்வந்தாலொழிய 'உயர்சாதியினர்' எனக் காட்டிக்கொள்ளும் எவனும் அதற்கு முன்வரமாட்டான் என்பது தெளிவு. அதற்கான பிரதான காரணமாக அமைவது தமிழ்மக்களது சமூக கட்டுமாணமே. இந்நிலையில் அந்த மணமகன் தனது வாழ்வா? அல்லது சகோதரிகளின் வாழ்வா? என்ற கேள்விக்கு விடையளிக்க வேண்டிய சூழலில் அவன் தனது பதிலை சமூகக்கட்டமைப்புக்குள் நின்றபடியே தேடவேண்டியுள்ளது. இவ்வாறு நோக்குமிடத்து சாதியடிப்படையில் பாதிக்கப்பட்டுத் திருமணம் செய்வோர் தமது பெற்றோரையும், உற்றாரையும் பிரிந்து வாழ்வதுடன், பல்வேறு வகைப்பட்ட கலப்பு திருமணங்களால் வேறுபல புதிய சமூகப் பிரிப்புகளும் தோன்றுவதற்குக்காலாக அமையுமென்றே கொள்ளவேண்டியுள்ளது.

இன்றைய காலகட்டத்தில் உலகமே இயந்திரமயமாக்கப்பட்டதன் விளைவாக மனித தேவைகள் பலவற்றையும் இலகுவாக நிறைவேற்ற முடிகிறது. இதன் மூலமாக தொழில் சாதியை நிர்ணயிக்கும் தன்மையானது மாற்ற முற்று செல்வதையும் காணமுடிகிறது. அதாவது முன்னைய காலகட்டங்களில் செருப்பை தயாரிப்பவன் 'சக்கிலியன்' என்ற சாதிக்குள் அடக்கப்பட்டான். ஆனால் இன்றைய இயந்திரமாக்கலின் விளைவாக ஒரு செருப்பை, உருவாக்குவதற்கான பல்வேறு அலகுகளிலும் பல்வேறு தொழிலாளர் செயற்படுகின்றனர். இதனால் செருப்பு உற்பத்தியானது ஒரு பொதுப்பட்ட தொழிற்சாலையில் தனிநபர் என்ற பிரிவு இல்லாது ஒரு புதிய பரிமாணத்தை அடைந்து; தொழில் சாதியை நிர்ணயித்த நிலையை மாற்றியமைத்துள்ளதை காணமுடிகிறது. இவ்வாறான இயந்திரமயமாக்கலே மேற்கு நாடுகளில் சமூக மாற்றத்தை ஏற்படுத்தியது.

வன்னிப்பிராந்தியங்கள் பொறுத்து பூர்வீகமக்களைவிட குடியேறிய மக்கள் பிற்பட்ட காலத்தில் (50 களின் பின்) அதிகமாக இருப்பதும் குடியேறிய மக்களும் நிலப்பங்கீட்டினடிப் படையில் சமமாகப் பேணப்பட்டமையாலும் யாழ்ப்பாணத்தின் பல்வேறு பகுதிகளிலிருந்தும், பல்வேறு சாதியமைப்புக்களிலிருந்தும் வந்த மக்கள் குடியேறியதாலும் ஒரு குறிப்பிட்ட வர்க்கத்தினர் மட்டும் மேலோங்க முடியாத ஒரு வித்தியாசமான சூழலுக்கு அம்மக்கள் தள்ளப்பட்டனர். பரம்பரை பரம்பரையாக எல்லாவற்றையும் பெறும் தன்மை கூட இப்பகுதியில் குறைவாகவே காணப்படுகிறது. சிறுபிள்ளைகள் கூட பல்வேறு பிரதேசத்தவர்களாகவும், பல்வேறுபட்ட கட்டமைப்புக்குள் வாழ்ந்திருந்தபோதும்; அங்கு ஒரு புதிய சூழலுக்கு மாற்றப்பட்டு 'சொந்தக்காரர்' என்ற நிலையைவிட 'பிறத்தியார்' என்ற நிலையிலான உறவு வலுப்பெற்றமையும், அம்மக்களை வித்தியாசமான கட்டமைப்புக்குள் தள்ளிவிட்டது எனலாம் இந்நிலையில் எதிர்காலம் பொறுத்து மேலும் புதிய மாற்றங்கள் ஏற்பட வாய்ப்புண்டு. அப்பிரதேசங்களில் சாதியமைப்பின் அடக்குமுறைகள் கொடூரமாக இல்லாதபோதும் மணவுறவுகள் என்ற அளவில் கலக்குமளவிற்கு இன்னமும் காலம் கனிந்து விடவில்லை என்பதே உண்மையாகிறது.

இவ்வாறுன 'தாழ்த்தப்பட்ட' மக்களின் வாழ்வில் அடிப்படையான மாறுதல்கள் ஏற்பட வேண்டுமாயின் குறிப்பாக கல்வி சார்ந்த துறையில் அவர்களை வழிப்படுத்த வேண்டும். அதுமட்டுமல்லாது முதியோர்க்கும் (குறிப்பாக பெண்களுக்கு) சமூகப்பிரமாணம் பற்றிய அறிவை ஊட்டவேண்டும். அவ்வாறுன மக்கள் கூட்டம் கூடியளவு வருவாயைப் பெற்றுக் கொண்ட போதிலும்; திட்டமுறையில் தமது நடவடிக்கைகளை மேற்கொள்ளாததாலேயே தொடர்ந்தும் அடிமட்ட வாழ்க்கை வாழவேண்டியுள்ளது. அதாவது சேமிப்பு முறைகளையும்; திட்டமிட்ட அளவான செலவீனங்களையும் அவர்களுக்குக் கற்றுக் கொடுப்பதுடன் இளம் வயதிலேயே அச்சமூகத்தில் வாழ்வோர் திருமணம் செய்து கொள்வதையும் கூடுதலான குழந்தைகளை (குறுகிய இடைவெளியில் பெறுமல் இருக்க ஆலோசனை வழங்கல்) பெற்றெடுப்பதையும் மட்டுப்படுத்த வேண்டியதன் உண்மையான பரிமாணத்தை அவர்களுக்கு தெளிவுபடுத்தல் மிக அவசியமாகவும் நாகரிகம் படைத்தோர்களது தலையாய கடமையாகவும் இக்காலச்சூழல் வேண்டி நிற்கிறது.

'தாழ்த்தப்பட்டோர்' என்ற குறிப்பிட்ட மக்களை தங்களது வட்டத்திலிருந்து வெளியே வந்து சிந்திக்குமளவிற்கு அம்மக்களுக்கு உலக நடவடிக்கைகளையும் ஒவ்வொரு மனிதனதும் பெறுமானங்களையும் ஒருவன் தனது நாட்டிற்கு அல்லது வீட்டிற்கு எந்தளவிற்கு முக்கியத்துவமானவன் என்பதையெல்லாம் விஞ்ஞானபூர்வமான விளக்கத்தின் மூலம் அவர்களை தாமாக தம்மையே வழிநடத்தும் சூழலுக்கு கொண்டு போகமுடியும் அந்நடவடிக்கையானது குறிப்பிட்ட மக்கள் கூட்டத்தினர் மத்தியில் ஒரு நம்பிக்கை ஒளியை கொடுப்பதாக அமையும்.

உலகின் அதியுன்னத ஸ்தானத்தில் விளங்கும் முதலாம் உலக நாடுகளுடன் போட்டி போடக்கூடிய அளவுக்கு கல்வி பண்பாட்டம்சங்களை உள்ளடக்கிய "வாழ்க்கைச் செலவுப் பண்புச் சுட்டெண்" ஆனது இலங்கையில் காணப்படுகிறது. குறிப்பாக தென்னுசியாவிலேயே கல்வி ரீதியாக வளர்ச்சியடைந்த பகுதிகளில் யாழ்ப்பாணம் மிக முக்கியமான ஒரு மையமாக கொள்ளப்படுகிறது. நீண்டகால கல்விப் பாரம்பரியத்தைக் கொண்ட இப்பிரதேசத்திலேயே மனித நேயத்தை மதிக்காத மனிதனை மனிதனுக நோக்காத தன்மையும் ஓர் அம்சமாக வளர்ந்துள்ளது என்பதை வெட்கப்படாமல் ஏற்றுக்கொள்ளவேண்டும் இவ்வாறுன கீழ்தரமான ஒடுக்கு முறைகளினூடாக தமிழர் சமூகம் இன்றும் இருந்து வருவதையிட்டு வடக்கு கிழக்கு வாழ்தமிழ் மக்கள் தமது ஆரோக்கியமற்ற பண்பாட்டு தன்மையை அடையாளம் காண்பதுடன் அதனை நிவர்த்திசெய்ய முனைவது இந்த நவீன யுகத்தின் அடிப்படை மனித தர்மமுமாகும்.

"..............................

கவனியுங்கள் ....................

நேற்றுமாலை என்ன நடந்தது?

கைதடிக் கிராமத் தெருக்கள் முழுவதும்

மனித விழுமியம் நாகரீகங்கள்

காற்றில் பறந்தன ....................

வரம்பு நிறைய இலைகள் பரப்பிய

மிளகாய்ச் செடிகள் கொலையுண்டழிந்தன!

தமிழர்களது மான நரம்புகள்
மீண்டும் ஒரு தரம் மின்னல் அதிர்ந்ததும்
பாதிப்புற்று வெறுமனே இருந்தன

கவனியுங்கள் ..........
பனைமர உச்சியும் கோபுர கலசமும்
உயரவே உள்ளன.
அரசியல் பிழைப்பில் ஆழ்ந்து போயிருக்கும்
அனைவரும் உணர்க..........
உங்கள் முதுகு நாண் கலங்கள் மீதும்
சாதிப் பிரிவினைப் பூஞ்சண வலைகள்
கங்கை கொண்டு
கடாரம் வென்று
இமய உச்சியில் விற்கொடி பொறித்துத்
தலைநிமிர்வுற்ற தமிழர் ஆளுமை
குனிந்த தலையுடன் அம்மணமாகத்
தெருக்களில் திரிக.

ஆலயக் கதவுகள்
எவருக்காவது மூடுமேயானால்,
கோபுரக் கலசங்கள்
சிதறி நொறுங்குக......!

மானுட ஆண்மையின்
நெற்றிக் கண்ணே
இமைதிற! இமைதிற!

கவனியுங்கள்;
அனைவரும் நன்றாய்...
பனைமர உச்சியும்
கோபுரக் கலசமும் உயரே உள்ளன
உயரவே உள்ளன!

யாழ்ப்பாணத்து சராசரி இதயமே
உனது உலகம் மிகவும் சிறியது
கிடுகு வேலி
வேலியில் கிளுவை
எப்போதாவது வேலியின் மீது
அழகாய்ப் பூக்கும்
சிவப்பு முள் முருக்கு.

யாழ்ப்பாணத்து சராசரி இதயமே
ஆயிரம் ஆயிரம் கோவில் கதவுகள்
உன்னை உள்ளே இழுத்து மூடின

மன்மதன் உடல்களாய்
அவைகள் எரியும்...
அதுவரை;
நிர்வாணமாக
உயர்த்திய கையுடன்
தெருவில் திரிக
தமிழர்கள்!
ஓ! இந்தத்
தமிழர்கள்!

[ சேரன் எழுதிய இரண்டாவது சூரிய உதயம் கவிதை தொகுதியிலிருந்து ]

---


உசாத்துணை நூல்கள்:-

1. அந்நியமாதல் — எஸ். வி. ராஜதுரை
2. (இ. இ. ச. மா) — இலங்கையில் இனத்துவமும் சமூக மாற்றமும்
'இலங்கை தமிழரது சமூகக் கட்டமைப்பின் சில அம்சங்கள் கா. சிவத்தம்பி
3. ஆரியர் ஆதிவரலாறும் பண்பாடும் (ஆ. ஆ. ப) — வி. சிவசாமி எம். ஏ
4. (தா. த. க. வ) — தாழ்த்தப்பட்ட தமிழர்களின் கல்வி வளர்ச்சி எஸ். சந்திரபோஸ்.
5. (வி. இ) — வியத்தகு இந்தியா A. L. பசாம்
6. (ப. ஈ) — பண்டைய ஈழம் வே. க. நடராசா


---

## எது சமயக்கல்வி

★ உலக நேயம் யாண்டும் பேசப்படுகிறது. அந்நேயம் பரவாமைக்குக் காரணம் நாடு - மொழி - நிறம் - பகுப்பு முதலிய புறவேற்றுமைகளில் மக்கள் கருத்தைப் பதித்திருப்பதேயாகும். மக்கள் அக்கருத்தைச் சிறிது அகமுகமாகத் திருப்பி ஆன்ம ஆராய்ச்சியிற் செலுத்தின் அங்கே எவ் வேற்றுமையும் காணப்படா. அவ்வான்ம ஆராய்ச்சியே சமயக்கல்வி என்பது. மற்றக் கல்வித் துறைகள் யாவும் சமயக்கல்விக்கு உடல் போறன்றன.

# அரசு பற்றிய மாக்சிச கோட்பாடு

கு. ரஞ்ஜகுமார் விரிவுரையாளர் பொருளியல்துறை யாழ் / பல்கலைக்கழகம்

ஒரு குறிக்கப்பட்ட நிலப்பகுதிக்குள் வாழுகின்ற மக்கள், அங்கு வாழுகின்ற மக்களுக்கான சட்டவாக்கலை மேற்கொள்கின்ற அமைப்பாக ஒரு அரசாங்கம் விளங்குகின்ற போது அந்த மக்களின் மனதில் தோன்றுகின்ற ஒரு எண்ணம் அரசு (State) எனப்படும். பிரதானமாக, காள்மாக்ஸினதும். ஏங்கல்சினதும் கருத்துக்களின் வெளிப்பாடாக அமையும் இக்கோட்பாடு, அரசு பற்றிய பல்வேறு கோட்பாடுகளுள் ஒன்றாக அமைகின்றது. இயக்கவியல் பொருள் முதல் வாதத்தின் அடிப்படையில் வரலாற்று மாற்றங்களை விளக்குகின்ற காள்மாக்ஸ், வரலாற்று மாற்றங்கள் தனித்து பொருளாதாரக் காரணிகளினாலேயே நிர்ணயிக்கப்படுகின்றன என்றும், வரலாற்று மாற்றங்களுக்குப் பின்னணியாக பொருளாதார காரணிகளே அமைகின்றன எனவும் முன்வைக்கின்ற முடிவின் அடிப்படையிலேயே அரசு என்ற நிறுவனத்தின் தோற்றம் தன்மை என்பவற்றை விளக்க முற்படுகின்றார். வரலாற்றில் பொருளாதாரக் காரணியான சொத்துடைமையின் தோற்றம், அதன் வளர்ச்சி, அதனால் சமூகத்தில் அடையாளம் காணக்கூடியதாக இருந்த "வர்க்க முறைமை" இதனால் விரிவடைந்து வந்த வர்க்க முரண்பாடு, என்பவற்றின் அடிப்படையில் அரசு என்ற நிறுவனத்தின் தோற்றத்தை விளக்குவதாக இக்கோட்பாடு அமைகின்றது.

அரசு என்பது வர்க்க முரண்பாட்டினால் நிர்ணயிக்கப்படுவதனால், ஆதிக்கம் செலுத்தும் வர்க்கத்தால் நிலைநாட்டப்பட்ட முறைகளைப் பாதுகாக்கும் ஒரு கருவியாகவும் ஒடுக்கப்பட்ட வர்க்கங்களை கீழ்ப்படுத்தி அடக்குவதற்காக ஆதிக்கம் செலுத்தும் வர்க்கங்களினால் பயன்படுத்தப்படும் ஒரு கருவியாகவும் விளங்குகின்றது என்றும் இதனால் அரசு என்ற அமைப்பின் வெளிப்படையான பிரதான அம்சங்களாக பலாத்காரமும். அடக்குமுறையும் விளங்குகின்றன என்பதே இக் கோட்பாட்டின் சாராம்சமாகும். இவ் அரசின் தோற்றமானது சமுதாய வர்க்க அமைப்பின் தோற்றத்துடன் இணைந்ததாக விளங்குவதனால். முதலில் இக்கட்டுரையில் வர்க்க சமுதாயத்தின் தோற்றம் விளங்கிக் கொள்ளப்படுவதன் மூலம் அரசு பற்றி நோக்கப்படும்.

## I

### வர்க்க முறைமை:-

உற்பத்தி உறவுகளே வர்க்க வேறுபாடுகளை நிர்ணயிக்கின்றன எனக் கூறுகின்ற மாக்ஸ், சொத்துடமை அதன் கட்டுப்பாடு என்பவற்றுடன் இணைந்ததே வர்க்க முறைமை எனக் கூறுகின்றார். வரலாற்று வழியில் தீர்மானிக்கப்பட்ட சமூகப் பொருள்

உற்பத்தி அமைப்பில் அவை வகிக்கும் இடத்தாலும் உற்பத்தி சாதனங்களுடன் அவற்றுக்குள்ள உறவினாலும் உழைப்பின் சமூக ஒழுங்கமைப்பில் அவற்றுக்குள்ள பொறுப்பினாலும் சமூகச் செல்வத்தில் அவற்றின் ஆளுமைக்கு உட்படும் பங்கின் பரிமாணங்களினாலும், இப் பங்கினை அவை அடைந்து கொள்ளும் முறையினாலும் ஒருவர் மற்றவரிடமிருந்து மாறுபடக்கூடிய பெருமக்கள் குழுவினரே வர்க்கங்கள்'' என்ற லெனினுடைய விளக்கப்படி வர்க்கம் என்பது சொத்துடைமையின் அளவால் தீர்மானிக்கப்படுகின்ற சமுதாய ஒழுங்கமைப்பு எனலாம். இவ்வாறு சமுதாய வர்க்க அமைப்பானது சொத்துடைமையினால், சமத்துவமின்மையை அடிப்படையாகக் கொண்டு தோற்றம் பெற்றது என்பது தெளிவாகின்ற போதிலும், ஆரம்பத்தில் வர்க்கங்கள் உயர் மக்களாகக் கருதப்பட்ட சுரண்டுவோர் தோன்றியதன் மூலமும், யுத்தக் கைதிகள் அடிமைகளாக்கப்பட்ட போதும், வறிய மக்கள் தாம் வாங்கிய கடனைத் திருப்பிச் செலுத்தமுடியாத போது அடிமைகளாக்கப்பட்ட போதுமே தோற்றம் பெற்றன என்பது குறிப்பிடத்தக்கது. மிக ஆரம்பகாலங்களில் மக்கள் சமமான வாழ்க்கை நிலைமைகளையே அனுபவித்தனர். இந்த சமூகத்தில் மரபுகள், வழக்காறுகள் முதியோருக்கு மதிப்பளித்தல் ஆகிய பண்புகள் முக்கியத்துவம் பெற்றதன் அடிப்படையில் சமுதாயத்தின் சில கடமைகளை முதியவர்கள் நிர்வகித்தனர். அதாவது சில தனி உறுப்பினர்கள் சமுதாயத்தின் பொது நலன்களை நிர்வகித்தனர். இதன் போது, அரசாங்கத்தின் முக்கியமான சில அதிகாரங்கள் இவர்களுக்கு கொடுக்கப்பட்டிருந்தமை உணர்ந்து கொள்ளக் கூடியதாக இருந்த போதும் இந்தச் சேவைக்காக ஊதியம் எதுவும் இவர்களுக்கு வழங்கப்படாததும் குறிப்பிடத்தக்கது. ஆனால் பிற்பட்ட காலத்தில் உற்பத்தி சக்திகள் பெருக்கமடைய, உழைப்புப் பிரிவினை முக்கியத்துவம் பெற சமுதாயத்தின் பொது நலன்களை நிர்வகிக்கும் நோக்குடன் தனி அமைப்புக்கள் நிறுவப்பட்ட போது இத்தனி அமைப்புக்கள் சமுதாயத்தின் ஒரு சாராரிடமிருந்து தனிமைப்பட்ட வேளையில் அவற்றிடையே முரண்பாடு ஏற்பட்டது. ஆரம்பத்தில் முரண்பாட்டினை உருவாக்கிக் கொண்ட இந்த அமைப்புக்கள் காலவோட்டத்தில் சமுதாயத்தில் இருந்தும் வேறுபட்டு இறுதியில், அந்த சமுதாயத்தின் மீது ஆதிக்கம் செலுத்துகின்ற குறிப்பாக சமுதாயச் சுரண்டலை மேற்கொள்கின்ற சுதந்திர அமைப்புகளாக மாற்றம் அடைந்த போது வர்க்கங்கள் தோற்றம் பெற்றன இவ்வாறே உற்பத்தி வளர்ச்சி அடைந்து வந்த போது உழைப்பாளர்களின் தேவை அதிகமாக உணரப்பட்ட போது யுத்தங்களின் மூலம் பிடிக்கப்பட்ட கைதிகள் உழைப்பாளர்களின் தேவையைப் பூர்த்தி செய்த வேளையில், முன்னர், யுத்தங்களின் போது கைதிகள் கொலை செய்யப்பட்டு வந்த நிலை மாறி அக்கைதிகளை உயிருடன் வைத்து உற்பத்தியில் ஈடுபடுத்துவது இலாபமானது என்பது உணரப்பட்டது. இதே போன்றே பிற்பட்ட காலங்களில் சமுதாயத்தின் தலைவர்கள் தமது சக மக்களை திட்டமிட்டமுறையில் சட்டபூர்வமாகவே, அடிமைப்படுத்திய போது வர்க்கங்கள் நிலைபெற்றன. இங்கு, வறுமையின் தாக்கத்தால் சமுதாயத்தின் தலைவர்களிடம் இருந்து வாங்கிய கடனை திருப்பி அடைக்க முடியாதவர்களும் திட்டமிட்ட முறையில் அடிமைகளாக்கப்பட்டிருந்தனர். இவ்வாறான நிலைமைகளின் கீழேயே சமுதாயத்தின் வர்க்க அமைப்புக்கள் தோற்றம் பெற்றன.

# II

மாக்சிசக் கோட்பாடானது வரலாற்றுப் பொருள் முதல் வாதத்தின்படி, சமுதாயமானது பிரதானமாக, புராதன கம்யூனிச சமுதாயம், அடிமைமுறை சமுதாயம், நிலமானிய சமுதாயம், முதலாளித்துவ சமுதாயம், சோசலிச சமுதாயம்

என வகைப்படுத்தப்படக் கூடியது என்பதைத் தெளிவாக்குகின்றது. இத சமுதாய நிலைமைகளின் கீழ் எவ்வாறு அரசு தனது உருவமைப்பைப் பெற்றுக்கொண்டது என்பதையே மாக்சிசக் கோட்பாடு விளக்க முற்படுகிறது.

## புராதன கம்யூனிச சமுதாயம் (Primitive communist society) :-

மிகவும் ஆரம்ப காலத்தினைக் குறிக்கும் இச் சமுதாயத்தின் மக்கள் உற்பத்தியில் சமநிலைகளையே வகித்து வந்தமையினால் சுரண்டலை அடிப்படையாகக் கொண்ட வர்க்க வேறுபாடுகள் நிலவவில்லை. உயிர் வாழ்வதற்கான சாதனங்களைப் பெறுவதற்கு மக்கள் ஒருவர்க்கொருவர் உதவி செய்து கூட்டாக உற்பத்தியில் ஈடுபட்டமையினாலும், உற்பத்தியின் விளைவுகளைக் கூட்டாகப்பயன்படுத்தியமையினாலும், உற்பத்தி சாதனங்கள் சமுதாயத்தின் சகலருக்கும் சொந்தமானதாக இருந்தமையினாலும உற்பத்தி உறவுகளின் அடிப்படையிலான வேறுபாடுகள் ஏற்படுவதற்கு சந்தர்ப்பம் இருக்கவில்லை. முக்கியமாக உற்பத்தித்திறன் இக்காலத்தில் மிகவும் தாழ்வான நிலையையிலேயே காணப்பட்டமையால், மக்கள் தமது குறைந்தபட்சத் தேவையைப் பூர்த்தி செய்து கொள்வது கூடக் கடினமான ஒன்றாக இருந்ததுடன் உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களை உடனடியாகவே பயன்படுத்த வேண்டிய ஒரு அவசியத்தினையும் ஏற்படுத்தியிருந்தது. இதனால் சேமிப்போ, சொத்துடைமையோ தோன்றிய சமுதாய சமத்துவமின்மைக்கு அடிப்படையாக அமையவில்லை தொழில் ரீதியான வளர்ச்சிகளோ, தொழில் நுட்பமேம்பாடுகளோ, சொத்துடைமையோ இல்லாத இச்சமுதாயத்தில் நிரந்தரமான முறையில் அமைந்த சமுதாய வர்க்க முறைகள் தோற்றம் பெறவில்லை. வர்க்க வேறுபாடுகள் இல்லாமையினால் முரண்பாட்டின் அடிப்படையில் அமையும் அரசு என்ற அமைப்பும் தோற்றம் பெறவில்லை என்பதையே மாக்சிசக் கோட்பாடு சுட்டி நிற்கின்றது. சமுதாயத்தின் ஒரு பிரிவினர் ஏனையவர்களைக் காட்டிலும் உயர்ந்தவர்களாகவோ, பலம் மிக்கவர்களாகவோ தம்மைப் பிரகடனப்படுத்திக் கொள்ளாத இச் சமுதாயத்தில் பலமான அப்பிரிவினரின் நலன்களைப் பேணும் நோக்கில் அமைந்த அரசு என்ற அமைப்பும் அவசியமானதாக இருக்கவில்லை என்பதே இக்கோட்பாடு வலியுறுத்த முற்படுகின்றது. இவ்வாறு " அரசின் இல்லாமை " என்பது அராஜகத்தினை ஏற்படுத்தியிருக்கவுமில்லை. மக்களிடையே இருந்த புரிந்துணர்வுகளும், முதியவர்களுக்கு வழங்கப்பட்ட முக்கியத்துவமும் அக்கால சமுதாயத்தின் சிறப்பான நிர்வாகத்துக்கான இயக்குசக்திகளாக விளங்கியிருந்தன. ஆனால் இத்தகைய சமத்துவமான புராதன கம்யூனிச சமுதாயம் நீண்டகாலம் தொடர்ச்சியாக நிலைக்க முடியவில்லை. உற்பத்திக் கருவிகளிலான தொடர்ச்சியான முன்னேற்றம் உலோகக் கருவிகளை தோற்றுவித்த போது இச்சமுதாயம் அடிமையுடமை சமுதாயத்திற்கு வழிவிட்டது. இவ்வாறு ஏற்பட்ட அச்சமுதாய மாற்றமானது பரிணும வளர்ச்சி நிலையைப்பெற்றிருந்தது

## அடிமை முறைச்சமுதாயம்:- [ Slave owning Society ]

உற்பத்திக் கருவிகளில் ஏற்பட்ட முன்னேற்றம் உலோகக் கருவிகளைத் தோற்றுவித்த போது உற்பத்திக் கருவிகளின் அதிகரித்த பாவனை உற்பத்தி அதிகரிப்புக்கு காரணமாகிய போது, தனிப்பட்ட குடும்பங்கள் தனியாகவே உற்பத்தி செய்யமுடிந்ததுடன் உற்பத்தி சாதனங்களின் உடமையும் தனிப்பட்ட குடும்பங்களிடம்

சென்றடைந்தது. இதனுல் உயிர் வாழ்வதற்கு தேவையானதற்கு மேலதிகமாக உற்பத்திப் பொருட்களை பெறமுடிந்த போது மனிதன் தனது வாழ்க்கைக்கு மட்டும் தேவையானதை விட அதிகமாக உற்பத்தி செய்த வேளையில், மிகுதியான உற்பத்திப் பொருட்களின் தேக்கம் சொத்துடமைக்கும் அதன் வழி சமுதாய சமத்துவமின்மைக்கும் காரணமாகியது. இங்கு மேலதிகமான பொருள் உற்பத்தியானது மேலதிகமான உழைப்பாளர்களை நாடி நின்றதுடன் அவர்களைப் பேணுவதற்கான பொருளாதார வளங்களையும் கொண்டிருந்தபோது யுத்தக்கைதிகள் முன்னர் போலவே கொலை செய்யப்படாமல் உற்பத்தியில் ஈடுபடுத்தப்பட்டனர்.

இந்த நிலமை, இச் சமுதாயத்தில் அடிமை - அடிமை உடமையாளர் என்ற வர்க்க வேறுபாட்டிற்கு வழிகோலியது. இங்கு, சமூக உழைப்பின் உற்பத்திப்பொருள் சமமற்ற முறையில் விநியோகிக்கப்பட்டபோது மிகச் சிறிய எண்ணிக்கையிலான அடிமையுடமையாளர் பெருமளவு எண்ணிக்கையிலான அடிமைகளினுடைய உழைப்பினுல் செய்யப்பட்ட உற்பத்தியின் பெரும் பகுதியை அபகரித்துக் கொண்ட போது சமூகத்தின் மிகப் பெரும்பான்மையினர் ஒடுக்கப் பட்டனர். இவ்வாறு சமுதாய வர்க்கங்களாகப் பிளவடைந்ததும் ஆட்சி மக்களிடம் இருந்து பிரிக்கப்படுகிறது என்ற கருத்தினை முன்வைக்கும் மாக்சிசக் கோட்பாடு, அந்த சமுதாயத்து மக்கள் ஒரு சாராரின் பிரதிநிதியாக அரசு தோன்றியது எனக் கூறுகிறது.

அதாவது சமுதாயத்தின் சிறுபான்மையினரான பொருளாதார பலம்மிக்க அடிமை உடமையாளர்களின் நலன்களை நிலை நிறுத்தும் நோக்கில் இங்கு அரசு நிலை பெறுகின்றது. வரலாற்றில் அடிமை உடமை அரசு என அழைக்கப்படும் இக் கால அரசு அடிமையுடமையாளர்களின் அரசாக இருந்து அடிமைகளை அடக்கிவைக்கப் பயன்பட்டது. அடிமைகளைச் சுரண்டும் அதிகாரத்தை அடிமையுடமையாளர்களுக்கு வழங்கிய இக் கால அரசு பல்வேறு வடிவங்களில் நிலைபெற்றிருந்தது. குறிப்பாக குடியரசாகவும், முடியரசாகவும் விளங்கியிருந்தது. அரசினது வடிவம் எவ்வாறு இருந்த போதிலும் ஆளுவோர் அடிமையுடமையாளர்களாகவும் ஆளப்படுவோர் அடிமைகளாகவும் இருந்தனர். அரசு முடியரசாக இருப்பின் அடிமையுடமையாளர் ஒருவரும் அரசு குடியரசாக இருப்பின் அடிமையுடமையாளர் வர்க்கமும் அதிகாரத்தின் உறைவிடமாக விளங்கினர். இங்கு, ராஜாங்கம் என்பது அடிமையுடமையாளர்களுக்கு மட்டும் உரித்தான ஒன்ருக விளங்கியது. சாராம்சத்தில் அடிமைகள் எவ்வித உரிமைகளும் அற்றவர்களாக அடக்கப்பட்டனர். உ+மாக ஆரம்பகால அதென்ஸ், ரோம் அடிமை உடமை அரசுகளில் இந் நிலைமை அவதானிக்கப்பட்டது. இச் சமூகத்தில்பலம் வாய்ந்த அரசு ஒன்றின் தேவை உணரப்பட்டபோது நிரந்தர இராணுவம் ஒன்றையும் அரசு ஏற்படுத்திக்கொண்டது. மிகப்பெரும்பான்மையான மக்களை மிகச் சிறுபான்மையினர் ஆட்சி புரியவேண்டிய அவசியம் இருந்தமையினுல் அது பலாத்கார ஆட்சியாக இருக்கவேண்டிய தேவையும் கூடவே இருந்தது. இதனுல் தனது தோற்றத்தில் இருந்தே அரசு ஆதிக்கம் செலுத்தும் வர்க்கத்தின் அரசியல் ஸ்தாபனமாக சுரண்டப்படும் மக்களின் மீது பலவந்தமாக ஆட்சி செலுத்தும் கருவியாக விளங்கி வருகின்றது. இந்த அரசு என்ற அமைப்பின் வெளிப்படையான அம்சங்களாக பலாத்காரமும் அடக்கு முறையுமே காணப்படுவதனுல் பலாத்காரத்தினை படைபலத்தின் மூலமும் அடக்கு முறையை சட்டத்தின் வாயிலாகவும் பிரயோகிக்கின்றது. மாக்சினுடைய நோக்கில்; இங்கு சட்டம் என்பது ஆளும் வர்க்கத்தின் நலன்களை வெளிப்படுத்தும் ஒரு கருவி மட்டுமே. இவ்வாறு அடிமை - அடிமையுடமையாளர் என்ற இரண்டு பிரதான வர்க்கங்களுக்கிடையிலான முரண்பாட்டினுல் அரசு என்பது நிலை

பெறுவதும், அந்த அரசு மிகப் பெரும்பான்மை மக்களான அடிமைகளைச் சுரண்டு வதன் மூலமே அக்கால சமுதாயத்தின் அரசியல், பொருளாதார, கலாச்சார விருத்தி அடையப்பட்டதும் மாக்சிசக் கோட்பாட்டின் மூலம் அறியப்படுகின்றது.

## நிலமானிய சமுதாயம் *(Feudal Society)*

விவசாய முறைகள் சீரமைக்கப்பட்டும் தொழில் திறமைகள் முன்னேற்ற மடைந் தும் உலோகங்களைப் பெற்றுக்கொள்ளும் முறைகளும் பயன்படுத்தும் முறைகளும் கூடியளவு சாத்தியமாக்கப்பட்டு வந்தபோது ஏற்பட்ட விவசாய வளர்ச்சியினால் அடிமை முறை சமூகம் நிலமானிய சமூகமாக மாறியது. விவசாயம் முக்கியத்துவம் பெற்ற இச் சமுதாயத்தில் பிரதான உற்பத்திக் காரணியான நிலத்துக்கு சொந்த மானவர்கள் நிலப்பிரபுக்கள் எனவும் அவர்களது நிலங்களில் வேலை செய்தவர்கள் குடியானவர்கள் என்றும் வேறுபடுத்தப்பட்ட இரண்டு பிரதான சமூகவர்க்கங்கள் காணப்பட்டன. நிலம் உள்ளிட்ட முதன்மையான உற்பத்தி சாதனங்கள் நிலப்பிர புவுக்கு சொந்தமானதாகக் காணப்பட அந்த நிலத்தை உழுவதற்கும் கால் நடை களைப் பராமரிப்பதற்கும் தேவையான சில கருவிகளே குடியானவர்களுக்கு கிடைத் தமையால், நிலப்பிரபுவின் நிலத்தில் உணவுக்காக உழைக்க வேண்டிய அவசியம குடியானவனுக்கு இருந்தது. சுரண்டல் முறைமை குடியானவர்கள் நிலத்துடன் சேர்ந்துப் பிணைத்தமையினால் நிலப்பிரபு - குடியானவர் என்ற சமூகவர்க்க வேறுபாடு உறுதி பெற்றது.

வரலாற்றில் நிலப்பிரபுத்துவ அரசு என அழைக்கப்படும் இக்கால அரசு நிலப்பிரபுக்களின் அரசாக இருந்து குடியானவர்களை சுரண்டுகின்ற ஒரு அமைப்பு என்பதே மாக்சிசக் கோட்பாட்டாளர்களின் விளக்கமாகும். சமுதாயத் தின் மிகவும் சிறுபான்மையினரான பிரபுக்களின் நலனை உறுதிப்படுத்துவதும், மேம் படுத்துவதுமே அரசின் நோக்கமும் செயற்பாடுமாகக் காணப்பட்டது. வடிவத்தில் முடியரசாகவும் விளங்கிய இக்கால அரசின் ஆட்சியாளர்களாக நிலப்பிரபுக்களே விளங்கினர். இங்கும், பெரும்பான்மையினரை சிறுபான்மையினர் அடக்கி ஆளவேண் டிய தேவை இருந்தமையால் பலம், பலாத்காரம் இன்றி அரசு ஆட்சி செய்ய முடிய வில்லை. மிகவும் பெரும்பான்மையானவர்களாகவும் பொருளாதாரரீதியாக பலவீன மானவர்களாகவும் காணப்பட்ட குடியானவர்கள், மிகவும் சிறுபான்மையினராகக் காணப்பட்ட நிலப்பிரபுக்கள் மேலும் சுரண்டுவதற்கும் அதன் மூலம் தொடர்ந்தும் தமது வர்க்க நலன்களை வளர்த்துக் கொள்வதற்குமான ஒரு அமைப்பே அரசு என் பதே மாக்சிசக் கோட்பாட்டின் விளக்கமாகும்.

## முதலாளித்துவ சமுதாயம் *( Capitalist S0ciety: )*

தொடர்ந்தும் உற்பத்தி சக்திகள் வளர்ச்சியடைந்து வந்தபோது தொழில் பிரச் சினையும் தீவிரமடைந்ததுடன் கைத்தொழில் உற்பத்தியும் தோன்றியது. படி முறை ரீதியாக வளர்ச்சியடைந்து வந்த கைத்தொழில் சமூகத்தை நோக்கிய முன்னேற் றம், நாளடைவில் கைத்தொழில் புரட்சி ஒன்றை ஏற்படுத்தியதுடன் நிலமானிய சமூகமும் கைத்தொழில் சமூகமாக மாறியது. பரிணாம வளர்ச்சி முறையிலேயே இச் சமுதாய மாற்றம் இடம் பெற்றது. உ + மாக; நெதர்லாந்தில் 16ம் நூற்றுண்டி

லும், இங்கிலாந்தில் 17ம் நூற்றூண்டிலும், பிரான்சில் 18ம் நூற்றூண்டிலும் இம் மாற்றம் அடையப்பட்டது. இம் முதலாளித்துவ சமுதாயத்தின் பிரதான வர்க்கங்களாக உற்பத்தி சாதனங்களின் உடமையாளர்களான முதலாளிகளும் தமது உழைக்கும் சக்தியைத் தவிர உடமைகள் எதனையும் கொண்டிராத பாட்டாளிகளும் காணப்படுகின்றனர். உற்பத்திச் சாதனங்களின் உடமையாளர்களாக முதலாளிகள் காணப்படுவதனல் உற்பத்திச் சாதனங்களைக் கொண்டிராத தொழிலாளர்கள் தம்மிடமுள்ள உழைப்புச் சக்தியை விற்பனை செய்வதன் மூலமே உயிர்வாழ முடிந்தது. முதலாளித்துவ சமுதாயத்தில் உழைப்பாளர்களை வேலைக்கு அமர்த்தி அவர்களது உழைப்பைக் கொள்வனவு செய்யக்கூடியவர்களாக முதலாளிகள் மட்டுமே காணப்பட்டதனல் முதலாளிகளிடம் தன்னைத்தானே விற்பனை செய்து கொள்வதைத் தவிர வேறு தெரிவு தொழிலாளிக்கு இருக்காமையினல், இச் சூழ்நிலையை மையமாகக் கொண்டு முதலாளி – தொழிலாளி வர்க்க வேறுபாடு நிலைத்தது. இச் சமுதாயத்தில் முதலாளிகளும் தொழிலாளிகளும் வாழ்க்கை நிலைமைகளினலும், கலாச்சாரத்தினலும், கருத்துக்களினலும் மாறுபடுகின்றனர்.

ஆலைகளுக்கு சொந்தமான மிகச்சிறிய எண்ணிக்கையிலான முதலாளிகள் சொத்துடையவர்களாகவும் அதன் வழி அரசியல் அதிகாரமிக்கவர்களாகவும் காணப்பட அந்த ஆலைகளில் வேலை செய்யும் பெரும்பாலான தொழிலாளர்கள் சொத்தற்றவர்களாகவும், சுரண்டப்படுபவர்களாகவும் காணப்பட்டபோது அங்கு, அரசு முதலாளிகளின் நலன்பேணும் நோக்கில் முதலாளிகளுக்காக நிலைபெற்றது என்பதே மாக்சிசக் கோட்பாட்டின் விளக்கமாகும். வரலாற்றில் முதலாளித்துவ அரசு என அழைக்கப்படும் இவ் அரசு முதலாளிகளின் அரசாக இருந்து ஏனைய கீழ்ப்பட்டவர்க்கங்களை அடக்கப் பயன்படும் ஒரு கருவி மட்டுமே. இச் சமூகத்தில் தான் வர்க்க முரண்பாடு, சுரண்டல் என்பவற்றின் உச்சக்கட்ட வளர்ச்சி காணப்படுவதனல் ' அரசு ' என்ற அமைப்பும் மிகக் கூடியளவுக்கு பலமடைந்து காணப்படுகின்றது என மாக்ஸ் கூறுகின்றூர். இவ் அரசு பற்றி பூர்ஷ்வாக்களின் ஒன்றிணைக்கப்பட்ட அலுவல்களை நிர்வகிப்பதற்கான ஒரு குழு மட்டுமே' எனவும், 'பூர்ஷ்வாக்கள் தமது சொத்துக்களையும், நலன்களையும் அகநிலை ரீதியாகவும் வெளிநிலை ரீதியாகவும் பாதுகாத்துக்கொள்வதற்கான ஒரு அமைப்பு மட்டுமே' எனவும் மாக்ஸ் குறிப்பிடுகின்றூர். இம் முதலாளித்துவ அரசு வடிவத்தில் பெரும் பாலும் தன்னை ஒரு மக்களாட்சி அரசாகக் காட்டிக்கொள்ள முற்பட்டாலும் அது ஒரு வர்க்க நலன் பேணும் கருவி மட்டுமே என்பதை வலியுறுத்துகின்ற இக் கோட்பாடு, முதலாளித்துவ அரசின் கீழ் வழங்கப்படுகின்ற உரிமைகள் சுதந்திரங்கள் யாவும் முதலாளித்துவ வர்க்க ஆட்சியை மறைக்கும் முகமூடி எனவும் அங்கு காணப்படும் ஜனநாயகம் என்பது வெறும் பாசாங்கு (Democracy is a Sham) எனவும் குறிப்பிடுகின்றது.

## கம்யூனிச சமுதாயம் (Communist Society)

முதலாளித்துவ வர்க்கத்தினுடைய சுரண்டல்களையும் பலாத்காரத்தின் அடிப்படையிலான அடக்கு முறை ஆட்சியினையும் சகிக்க முடியாமல் பாட்டாளி மக்கள் முதலாளித்துவ அரசுக்கு எதிராகக் குரல் கொடுப்பார்கள் என்றும் அந்தக் குரல் நாளடைவில் பெரும் புரட்சியாக வெடிக்கும் எனவும் அப்புரட்சி முதலாளித்துவ அரசை ஒளித்து விடும் என்றும் முதாலாளித்துவ வர்க்கத்துக்கு எதிராக பாட்டாளிகள் தமது சொந்த அரசினை உருவாக்குவார்கள் என்றும் பாட்டாளிகளினல் அரசு

உருவாக்கப்படும் காலத்தில் கம்யூனிச சமுதாயத்தின் முதல் கட்டமான சோசலிச சமுதாயம் (Socialist Society) உருவாகும் எனவும் மாக்ஸ் கூறுகிறார். இச் சமுதாயத்தில் வர்க்க வேறுபாடுகள் தளர்வடைந்து விடுவதனுல் சுரண்டல் முறை நிலவ மாட்டாது எனவும் அதனுல் வர்க்க முரண்பாட்டின் அடிப்படையிலும், சுரண்டலின் அடிப்படையிலும் அமைந்த அரசு என்ற அமைப்பு படிப்படியாக மறைந்து நாளடைவில் அரசில்லாத (Stateless) கம்யூனிச சமுதாயம் தோன்றும் எனவும் மாக்ஸ் எதிர்வு கூறினுர்.

இவ்வாறு மாக்சிசக் கண்ணேட்டத்தில் பொருளாதாரக் காரணியான சொத்துடைமையின் தோற்றம் வர்க்கவேறுபாடுகளை உருவாக்க சுரண்டல் முறை அதனை விரிவாக்க அதன்வழி அரசு என்ற அமைப்பு பலமடைந்துள்ளது என்பதாகும். இதனுல் சமுதாய வரலாற்றின் எந்தக் கட்டத்தை நோக்கினுலும் சொத்தற்றவர்களை அடக்கி ஆளும் அமைப்பாகவே அரசு என்பது இருந்து வந்துள்ளது என்பது வரலாறு பற்றியதோர் புதிய விளக்கம் "எல்லாச் சமூகங்களின் வரலாறும் வர்க்கப் போராட்டத்தின் வரலாறுதான்" என்னும் முறையில் முன்வைக்கப் படுகின்றது. அதாவது உடையவர்களுக்கும் இல்லாதவர்களுக்கும் சுரண்டுபவர்களுக்கும் சுரண்டப்படுபவர்களுக்கும், அடக்குவோருக்கும், அடக்கப்படுவோருக்கும் இடையிலான போராட்டமாகவே வரலாற்றின் முக்கிய கட்டங்கள் காணப்படுகின்றன என மாக்ஸ் குறிப்பிடுகின்றுர். மாக்ஸ் தனது இயக்கவியல் விதியின்படி முரண்பட்ட சத்திகளுக்கிடையே மோதல்கள் ஏற்படும் போது அந்த மோதல்களின் விளைவாக புதிய சத்தி உருவாகும் என்றும் உலக வரலாறு என்பது இத்தகைய முரண்பட்ட சத்திகளுக்கிடையிலான மோதலாகவே இருந்து வந்துள்ளது என்றும் இவ்வாறே வரலாற்றில் தோன்றிய சகல, சமூகங்களும் முரண்பட்ட சத்திகளுக்கிடையே தோன்றிய மோதல்களினுல் ஏற்பட்டது என்றும் கூறுகின்றுர். அடிமை முறைச்சமூகத்தில் அடிமை உடமையாளர்களுக்கும் அடிமைகளுக்கும் இடையே நிகழ்ந்த மோதலினுல் நிலமானிய சமுதாயம் தோன்றியது உ+மாக:- கிரேக்க, ரோமானிய அடிமையுடமைச் சமுதாயத்தில் நிகழ்ந்த அடிமைகளின் போராட்டம், புராதன எகிப்தில் அடிமையுடமையாளர்களுக்கு எதிரான அடிமைகளின் எழுச்சி என்பன. நிலமானிய சமுதாயத்தில் நிலப்பிரபுக்களுக்கும் குடியானவர்களுக்கும் இடையே ஏற்பட்ட மோதலின் காரணமாக முதலாளித்துவசமூகம் தோற்றம் பெற்றது உ+மாக:- ஜேர்மனியில் மத்திய காலத்தில் நிகழ்ந்த விவசாயிகளின் போராட்டம் பிரான்ஸ் ஜாக்கேரியின் போராட்டம், முதலானவை முதலாளித்துவ சமுதாயத்தில் முதலாளி வர்க்கத்துக்கும் பாட்டாளி வர்க்கத்துக்கும் இடையே ஏற்படும் மோதலின் காரணமாக சோசலிச சமுதாயம் பிறக்கும் எனவும் எதிர்வு கூறினுர் உ+மாக ரஷ்யாவின் ஒக்டோபர் புரட்சி.

# III

மாக்ஸ் தனது இயக்க வியலில் Thesis, Antithesis, Synthesis என்னும் மூன்று நிலைகளைக் குறிப்பிட்டு இயக்கவியல் செய்முறையின் படி இடம் பெறும் முரண்பட்ட சத்திகளுக்கிடையிலான மோதலானது தொடர்ச்சியாக இடம் பெற்று கம்யூனிச சமூகம் ஒன்றுடன் முற்றுப்பெறும் என்று கூறுகின்றுர். இங்கு நடைமுறையில் உள்ள முதலாளித்துவ சமூகம் (Thesis) மாக்ஸினுல் மிகவும் ஆழமான முறையில் ஆய்வு செய்யப்படுகின்றது. சமூகத்தின் மிகச் சிறுபான்மையினராக இருந்த போதும் உற்பத்தி சாதனங்களின் உடமையாளராக இருக்கும் ஒரே காரணத்திற்காக முதலாளித்துவ வர்க்கம் பாட்டாளி வர்க்கம் மீது நடாத்தும் திட்டமிட்ட பொருளாதாரச்

சுரண்டலை, அதாவது தொழிலாளர்களின் உண்மையான உழைப்பின் பெறுமதிக்கும் அவர்கள் கூலியாகப் பெறும் தொகைக்கும் இடையே உள்ள வேறுபாட்டினை அவர் "மிகைப் பெறுமானம்" (Surplus Value) என்ற பொருளியல் கோட்பாட்டின் மூலம் விளக்குகின்றபோது அச் சமூகத்தின் அரசு உட்பட்ட சகலவற்றினதும் சாயல்களை வெளிக்கொணர்கின்றார். இச் சமுதாயத்தின் தொழிலாளர்களின் மிகவும் துன்பகர மான நிலையினை விளக்குகின்ற மாக்ஸ், "கண்ணுக்குத் தெரியாத இழைகளினால் தனது உடமையாளருடன் இழுத்துக்கட்டப்பட்டுள்ளான் என குறிப்பிடுகின்றார்.

சமூகத்தில் முதலாளிகளே பொருளாதாரபலம் உள்ளவர்களாக இருப்பதனால் இயல்பாகவே அரசியல் அதிகாரமும் அவர்களிடமே சென்றுவிடுகின்றது. இதனால் அச் சமூகத்தில் அரசு என்பது முற்றாக முதலாளித்துவ நலன் பேணும் ஒரு அமைப் பாகவே விளங்கும் என்றும் அது தனது நிலைப்பேற்றுக்கு ஆயுதபலத்திலேயே தங்கி உள்ளது என்றும் மாக்ஸ் கூறுகின்றார். சிறுபான்மையினரான முதலாளிகள் பெரும் பான்மையினரான பாட்டாளிகளின் பலத்தை ஆயுதபலத்தின் மூலமே அடக்கவேண் டிய அவசியம் இருப்பதனால் முதலாளித்துவ சமூகத்தில் காணப்படும் சட்டம், பொலீஸ், இராணுவம், நீதிமன்றம், சிறைக்கூடங்கள் அனைத்துமே பாட்டாளிகளின் மீது முதலாளிகளின் அடக்குமுறைச் சாதனங்களாகவே பயன் படுகின்றன என மாக்ஸ் கூறுகின்றார். முதலாளித்துவ சமூகத்தில் முதலாளி - பாட்டாளி வர்க்க முரண்பாடுகள் நாளடைவில் பெருகும் போது அந்த முரண்பாடு வர்க்க மோதல்களுக்கு வழிவிடும் எனவும், முதலாளித்துவம் என்பது ஆயுதபலத்தை நம்பி யிருக்கும் ஒரு ஆட்சி முறை என்பதனால் அந்த மோதல்களை ஆயுதபலத்தின் மூலம் அடக்கவே முன்வருவார்கள் என்றும் இதனால் அந்த ஆயுத பலத்தை பாட்டாளி களும் ஆயுத பலம் மூலம் தான் முறியடிக்க வேண்டும் எனவும கூறுகின்ற கார்ள் மாக்ஸ் இதன் மூலம் பாட்டாளி மககளின் விடுதலைக்கு பலாத்காரப் புரட்சி அல்லது ஆயுதப் புரட்சி அவசரமும் அவசியமுமானது என்பதை பிரகடனம் செய்கின்றார்.

"எந்த ஓர் பழைய சமூகத்தில் இருந்தும் புதியதோர் சமூகம் பிறக்க பலாத் காரம் என்பது ஒரு மருத்துவமாதாக தொழிற்படுகின்றது" என இந் நிலைமையினை விளக்குகின்ற மாக்ஸ், இப் பலாத்காரப்புரட்சிக்காக பாட்டாளிகள் தம்மை திட்ட மிட்டு ஒழுங்கமைக்க வேண்டும் எனவும் கூறுகின்றார். இவ்வாறு இடம் பெறும் பலாத்காரப்புரட்சி வரலாற்றில் இடம் பெறும் சகல புரட்சிகளிலும் சிறப்பு மிக்கது எனக் கூறுகின்ற மாக்ஸ், வரலாற்றில் இடம் பெறும் வேறு எந்தப் புரட்சியினாலும் வர்க்கமுரண்பாடுகளோ, சுரண்டலோ, அரசு என்ற அமைப்போ ஒழிக்கப்படவில்லை என்றும் மாறாக அவை வேறோர் வழியில் மாற்றீடு செய்யப்பட்டன என்றும் ஆனால் பாட்டாளிகளின் புரட்சி என்பது வர்க்க முரண்பாடு, சுரண்டல், அரசு என்ற மூன் றையும் ஒழித்து விடும் தன்மை வாய்ந்தது என்றும் கூறுகின்றார். இவ்வாறு பாட் டாளிகளின் புரட்சியால் முதலாளித்துவ அரசு ஒழிக்கப்பட்டு உருவாகும் புதிய அர சினை பாட்டாளிகளின் சர்வாதிகாரம் (Dictatorship of the Proletariat) என்றும் இப் பாட்டாளிவர்க்க அரசே வரலாற்றில் முதலாவது பெரும்பான்மை பெற்ற மக்க ளின் அரசாகும் எனவும அதுவே உண்மையான ஜனநாயக அரசு எனவும் மாக்ஸ் குறிப்பிடுகின்றார். "Criticism of the gotha Programme" என்ற தனது நூலில் "முத லாளித்துவத்துக்கும் கம்யூனிசத்துக்கும் இடைப்பட்ட காலமானது ஒன்றில் இருந்து மற்றயதற்கு புரட்சிகரமான உருமாற்றம் பெறும் காலப்பகுதி ஆகும். இவ் அரசியல் நிலைமாற்ற காலத்தில் அரசு என்பது பாட்டாளிகளின் புரட்சிகர சர்வாதிகார அர சாக விளங்குமே அன்றி வேறொன்றுமாக இருக்கமாட்டாது." என மாக்ஸ் குறிப்

பிடுவது இங்கு நோக்கத்தக்கது. பாட்டாளிவர்க்க ஆட்சி நடைபெறும் காலமே கம்யூனிச சமூகத்தின் முதற்கட்டமாகிய சோசலிச சமூகம் ஆகும். இச் சமூகத்தினுடைய செயற்பாட்டுத்தத்துவமாக "ஒவ்வொருவரிடம் இருந்தும் திறமைக்கு ஏற்றது பெறப்பட்டு வேலைக்கு ஏற்றது வழங்கப்படும்" (From each according to his abilities to each according to his works) என்பது அமைந்திருக்கும். இச் சமுதாயத்தில் பாட்டாளிகளின் அரசு முதலாளித்துவத்தினுடைய சகல சாயல்களையும் இல்லாமல் செய்வதுடன் அது மீண்டும் தலையிடாதவாறு தனி நபர்களிடம் இருந்து உற்பத்திச் சாதனங்களைப் பறிமுதல் செய்து சகல உற்பத்திகளையும் விநியோகத்தையும் சமுதாயச் சொத்தாக மாற்றுகின்றது.

இவ்வாறு சோசலிச முறையின் கீழ் உற்பத்தி சாதனங்கள் அனைத்தும் பொதுவுடமையாக்கப்படுவதனால் சுரண்டலும் வர்க்க வேறுபாடுகளும் ஒழிக்கப்படுகின்றன. மக்கள் அனைவரினதும் நலன் பேணும் நோக்கில் திட்டமிட்ட முகாமை ஒன்று அமைக்கப்படுவதனால் தேசிய வர்க்கப் பகைமைகள் இல்லாது ஒழிக்கப்படுகின்றது; இப்பாட்டாளி வர்க்க அரசின் ஆட்சி அதிகாரம் உழைக்கும் மக்களிடம் செறிந்திருக்கும் என்றும், இவ் அரசினை பாட்டாளிகளைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அவர்களுடைய கட்சி நிர்வகிக்கும் எனவும் கூறுகின்ற மாக்ஸ், பாட்டாளிகளின் முன்னணிப் படையாகிய இக் கட்சியினுடைய கடமை அந்த அரசினை நிர்வகிப்பதுடன் மட்டும் நிறுத்தப்படாமல் சர்வதேச ரீதியாக முதலாளித்துவத்தை ஒழித்துக் கட்டும் நோக்கில், அது திட்டமிட்டு செயற்பட வேண்டும் என்றும், அந்த நோக்கில் சர்வதேச ரீதியாக தொழிலாளர்களை ஒழுங்கமைக்கும் பணியை கட்சி மேற்கொள்ள வேண்டும் எனவும் குறிப்பிடுகின்றார்.

ஏனெனில் முதலாளித்துவ அரசுக்கு எதிரான பாட்டாளிகளின் புரட்சி ஒரு சர்வதேசப் புரட்சி என மாக்ஸ் கருதியதனால் சர்வதேச ரீதியில் முதலாளித்துவம் தோற்கடிக்கப்படும் போது மட்டுமே அரசு இல்லாத கம்யூனிச சமுதாயம் தோற்றம் பெற முடியும் என மாக்ஸ் நம்பினார். இதனால் தான் தமது கம்யூனிசப் பிரகடனத்தில் (1848) "உலகத் தொழிலாளர்களே ஒன்று படுங்கள் நீங்கள் இழப்பதற்கு உங்களது கைவிலங்குகளைத் தவிர எதுவுமில்லை – ஆனால் நீங்கள் வெல்வதற்கு ஓர் உலகமே இருக்கின்றது." என தொழிலாளர்களை ஓர் புரட்சிக்காக அறை கூவல் விடுகின்றார்.

இவ்வாறு சர்வதேச ரீதியாக முதலாளித்துவம் தோற்கடிக்கப்படும் போது கம்யூனிச சமுதாயம் உருவாகும் என மாக்ஸ் எதிர்வு கூறினர் அதாவது முழுமையாக முதலாளித்துவம் ஒழிக்கப்பட்டதும் பாட்டாளிகளின் அரசு, தான் அரசாய் இருப்பதையும் ஒழித்துக் கொள்கின்றது. இது வரை காலமும் சமுதாய வர்க்கப் பகைமைகளின் அடிப்படையில் அமைந்திருந்தமையினால் பொருளாதார ரீதியாக பலம் வாய்ந்த வர்க்கம் ஒன்று பலமற்ற வர்க்கத்தை அடக்க அரசு என்ற கருவி அவசியமானதாக இருந்தது. ஆனால் கம்யூனிச சமுதாயத்தில் வர்க்க முரண்பாடுகளும் சுரண்டல்களும் இல்லாமையினால் அரசு என்ற அடக்கு முறைக் கருவிக்கு அவசியமும் இருக்கவில்லை. அதாவது பொருள் உற்பத்திச் சாதனங்கள் பொதுவுடமையாகி விடுவதனால் சமுதாய உறவுகளில் அரசின் தலையீடு தேவையற்றதாகி தணிந்து விடுகின்றது. இந்த நிலைமையினை 'அரசு ஒழிக்கப்படுவதில்லை அது உலர்ந்து உதிர்ந்து விடுகின்றது' என ஏங்கல்ஸ் வர்ணிக்கின்றார்.

இச் சமூகத்தில் சொத்துக்கள் யாவும் பொதுவுடமையாக இருப்பதனுல் கூட்டுச் சொத்துடமையும் கூட்டு வாழ்க்கையுமே நிலவும் இந்த சமூகத்தின் செயற்பாட்டுத் தத்துவமாக 'ஒவ்வொருவரிடம் இருந்தும் திறமைக் கேற்றது பெறப்பட்டு தேவைக் கேற்றது வழங்கப்படும்' (From each according to his abilities to each according to his needs) என்பது அமைந்திருக்கும். இச் சமுதாயத்தில் தமது திறமைக்கு ஏற்ப ஒவ்வொருவரும் உழைக்க முன்வருவதனுல் அதிகளவான பொருள் உற்பத்தி, தர முயர்ந்த உழைப்பு, விஞ்ஞான தொழில் நுட்ப வளர்ச்சி, நவீன உற்பத்தி சாதனங்களின் பயன்பாடு, உயர்ந்த கலாச்சாரம் முதலான அம்சங்கள் அனைத்தும் ஒருங்கே காணப்படும் என மாக்ஸ் எதிர்பார்ப்பதனுல் உலக வரலாற்றில் மிக உன்னதமான காலகட்டம் இதுவே என்றும் குறிப்பிடுகின்ருர்.

இக் கம்யூனிச சமுதாயத்தின் தோற்றத்துடன் மாக்ஸ் கூறிய இயக்கவியலின் அடிப்படையிலான முரண்பட்ட சக்திகளுக்கிடையிலான மோதலும் முற்றுப்பெறுகின்றது. ஏனெனில் கம்யூனிச சமுதாயம் முரண்பட்ட சக்திகள் எதுவுமில்லாத ஒரு சமநிலையான சமூகம் ஆகும்.

# IV

மாக்ஸ் தான் வாழ்ந்த 19ம் நூற்ருண்டு முதலாளித்துவ சமுதாயம் ஒன்றின் நிலைமைகளை மையமாகக் கொண்டே அரசு பற்றிய தனது கருத்துக்களைத் தெரிவித்தார். ஆனுல் இன்று அந்த முதலாளித்துவம் நடைமுறையில் இல்லை. இருபதாம் நூற்ருண்டின் முதலாளித்துவம் நலன்பேணும் முதலாளித்துவமாக (Welfare Capitalism) மாறி விட்டது. உற்பத்தியில் தொழிலாளர்களை பங்காளர்களாகச் சேர்த்தும், இலாபத்தின் ஒரு பகுதியை தொழிலாளருக்கு பகிர்ந்தளித்தும், தொழிலாளர் நலன்பேணும் சட்டங்களை இயற்றியும், தொழிற்சங்க உரிமைகளை விரிவுபடுத்தியும் வருகின்றன. இதனுல் மாக்ஸ் எதிர்பார்த்த வர்க்கப்பகமை நிலைக்கு பதிலாக வர்க்க நட்புறவே வளர்ந்து வருவதாகக் கூறப்படுகின்றது.

இந்த நிலையில் மாக்ஸ் எதிர்பார்த்தபடி முதலாளி - பாட்டாளி வர்க்க முரண்பாடு கடுமையாகி முதலாளிகளுக்கு எதிராக பாட்டாளிகளின் பலாத்காரப் புரட்சி இடம் பெறுவதற்கான உளவியல் ரீதியான உத்வேகம் குறைவாகவே தென்படுகின்றது. மேலும் முதலாளித்துவத்தில் தொடர்ந்தும் தனியார் சொத்துடமை பெருக்கமடையும் என்று எதிர்பார்த்த மாக்ஸ் முதலாளித்துவ பொருளாதாரத்துறையில் அரசின் தலையீடு இடம் பெற்று சில உச்ச நிலை வரையறுப்புக்களை அரசு ஏற்படுத்தும் என்பதை எதிர்பார்க்கவில்லை. உ+மாக வருமான உச்சவரம்பு சட்டம், காணி உச்சவரம்புச் சட்டம் முதலானவை. இதனுல் மாக்ஸ் தர்க்க ரீதியாக வரையறுத்த படியே முதலாளித்துவ அரசின் நடவடிக்கைகள் அமைந்திருக்கவில்லை.

மாக்ஸ் எதிர்பார்த்தபடி சகல அரசுகளிலும் வர்க்கப் பகமை ஒன்று முக்கியத்துவம் பெறுவதற்கு பதிலாக இனப்பகமையும், இனப்போட்டிகளுமே மிகவும் முக்கியத்துவம் பெறுவதனுல், வர்க்க ரீதியாக நிலைபெறும் ஒரு அரசுக்குப் பதிலாக பெரும்பான்மை பெற்ற இனம் ஒன்றின் அரசாங்கமே இன்று நிலைபெறுகின்றது. இதனுல் வர்க்க முரண்பாடுகளைக் காட்டிலும் இன முரண்பாடுகளே கூர்மையடைவதனை நடைமுறை அரசின் அனுபவங்களின் மூலம் அனுமானிக்கக் கூடியதாக உள்ளது.

இந்த நிலையில் வர்க்க முரண்பாட்டின் அடிப்படையில் மாக்ஸ் எதிர்பார்த்த பலாத்காரப்புரட்சி சாத்தியமாவதற்குப் பதிலாக இன எதிர்ப்பு புரட்சிகளும் கலவரங்களுமே முக்கியத்துவம் பெறுகின்றன.

மேலும் மாக்ஸ், சோசலிசத்தை பலாத்காரப்புரட்சி ஒன்றின் மூலமாகவே அடைந்து கொள்ள முடியும் என கூறிய போதிலும் ரஷ்யப் புரட்சி, சீனப் புரட்சி முதலான சில எடுத்துக் காட்டுகளைத் தவிர ஏனைய முதலாளித்துவ சமுதாயங்கள் பலாத்காரமற்ற முறையிலேயே சோசலிசத்தை அடைந்து கொள்ள முயற்சிக்க தொடங்கின. உ+மாக மூன்றாம் உலக நாடுகள் பெரும்பாலானவை பாராளுமன்றத்துக்கு உட்பட்ட சில நிலமைகளின் கீழேயே சோசலிசத்தை அடைய முற்படுகின்றமை அவதானிக்கத்தக்கது.

வர்க்க முரண்பாட்டின் அடிப்படையில் சமுதாயத்தின் வளர்ச்சியினையும் அரசின் நிலைப்பேற்றினையும் விளக்கிய மாக்ஸ் அரசற்ற கம்யூனிச சமுதாயம் உருவாக்கப் படுவதைத் தனது கோட்பாட்டில் வலியுறுத்தியுள்ளார். இவரது கருத்துக்களை சில ஜனநாயக சோசலிச வாதிகள் கண்டிக்கின்றனர். கம்யூனிச சமுதாயம் என்பது அடையப்பட முடியாத ஒரு கற்பனை வடிவம் என்பது ஜனநாயக சோசலிச வாதிகளின் கருத்தாகும். நடைமுறை அனுபவங்களினால் இது வரை அச் சமூகம் அடையப் படாமை அவர்களின் கண்டனங்கள் சாதகமானவை என்பதையே உணர்த்துகின்றது. மேலும் மாக்ஸ் எதிர்பார்த்தது போல அரசற்ற கம்யூனிச சமுதாயம் தோற்றம் பெற்றாலும் அது மாற்றமடையாத ஒரு சமூக அமைப்பாக இருக்கும் என்று எதிர்பார்ப்பதற்கு எதுவித ஆதாரமும் இல்லை.

ஏனெனில் சமுதாய சமத்துவம் நிலவிய பூர்வீக கம்யூனிச சமுதாயத்தில் இருந்தே ஏனைய வர்க்க முரண்பாடுகள் கொண்ட சமுதாயங்கள் தோற்றம் பெற்றன. அதே போல கம்யூனிச சமூகத்திலும் மீண்டும் சொத்துக்கள் தொடர்பான தேடல்கள் ஆரம்பித்து சேமிப்புக்கள் தோன்றி வர்க்க முரண்பாடுகள் ஏற்படுவதற்கான வாய்ப்புக்கள் இருக்கலாம்.

மாக்சினுடைய கோட்பாடு அரசு என்பது வர்க்க முரண்பாட்டின் உற்பத்தி மட்டுமே என்றும் வர்க்க முரண்பாட்டின் தன்மையினாலேயே அரசின் தன்மையும் நிர்ணயிக்கப்படுகின்றது என்றும் கூறுகின்ற போது ஏனைய காரணிகளினாலும் அரசு, அதன் நிலைபேறு நிர்ணயிக்கப்பட முடியும் என்பதனை நிராகரிக்கின்றார். மதம், யுத்தம, தேசியவாதம் போன்ற காரணிகளினாலும் அது நிர்ணயிக்கப்படக் கூடிய ஒன்று என்பதனை மாக்ஸ் ஏற்றுக்கொள்ளவில்லை. '' கால் மாக்ஸ் 1832ம் ஆண்டு இங்கிலாந்தில் செய்யப்பட்ட தேர்தல் சீர்திருத்த சட்டம் ஒன்றின் மூலம் அங்கு கொண்டு வரப்பட்ட புரட்சிகரமான மாற்றங்களுக்கும், ஜனாதிபதி ஜக்ஸனினால் அமெரிக்காவில் ஏற்படுத்தப்பட்ட புரட்சிகரமான மாறுதல்களுக்கும் சரியான முக்கியத்துவத்தினை கொடுக்கவில்லை'' என பேராசிரியர் வில்லியம் எபன்ஸ்டைன் (Prof William Ebenstein) தனது Today's Isms என்ற தொகுப்பில் குறிப்பிடுவது இங்கு நோக்கத்தக்கது.

மாக்ஸ் சமுதாயத்தினை இரு பெரும் தெளிவான வர்க்கங்களாக வேறுபடுத்தி தனது கோட்பாட்டினை விளக்கிய போதிலும் வேறும் பல வர்க்கபிரிவுகள் ஒவ்வோர் சமுதாய அமைப்பிலும் இருந்தமை அவதானிக்கப்படலாம். உ+மாக அடிமைமுறை

சமுதாயத்தில் உழைப்புப்பிரிப்பின் அடிப்படையில் கால் நடை வளர்ப்போர், சுதந்திரமாக விவசாயம் செய்தோர், கைவினைஞர்கள் ஆகியோர்களை உள்ளடக்கிய வர்க்கப் பிரிவு காணப்பட்டது. நிலமானிய சமுதாயத்தில் போர்வீரர்கள். ஏனைய வர்களுக்கான தொழில் செய்த கைவினைஞர்கள், சிறிய வர்த்தகர்கள், வழக்கறிஞர் கள், டாக்டர்கள், முதலானோரை உள்ளடக்கிய வேறோர் வர்க்கப்பிரிவும் காணப் பட்டது. இவ்வாறே முதலாளித்துவ சமுதாயத்திலும் முதலாளி பாட்டாளி என்ற இரண்டு வர்க்கங்களுக்கு மேலாக சக்திமிக்க ஒரு வர்க்கப்பிரிவாக மத்திய வகுப்பி னரின் எழுச்சி அமைந்தது. இந்த நிலையில் தனது கோட்பாட்டினை மாக்ஸ் விளக் கிய போது சமுதாயத்தின் ஒரு சாராரைக் கவனத்தில் கொள்ளவில்லை. முதலா ளித்துவம் சமுதாயத்தில் எழுச்சியடைந்த மத்தியவகுப்புடன் ஒப்பிடும் இடத்து முன்னைய சமுதாயத்தின் வர்க்கப்பிரிவினர் எண்ணிக்கையில் சிறிதாக இருந்தமை அவ்வாறு அவர்கள் கவனத்தில் கொள்ளப்படாமைக்கு ஒரு காரணமாக அமை யலாம். ஆனால் முதலாளித்துவ சமுதாயத்தில மத்திய வர்க்கம் ஒன்றின் செல்வாக் கினைப் புறக்கணித்துவிட்டு அச் சமூகம் பற்றி ஆய்வு செய்வது பூரணமாக அமைய மாட்டாது என்றே தோன்றுகின்றது.

மாக்சினுடைய கோட்பாடு முதலில் லெனினுடைய வழிகாட்டலின் கீழ் சோச லிசப்புரட்சியின் மூலம் ரஷ்யாவிலேயே நடைமுறைக்கு வந்தது. சுமார் 70 ஆண்டு கால சோசலிச அனுபவத்தின் பின்னர் சோவியத்யூனியனில் மேற் கொள்ளப்பட்டி ருக்கும் "பெரஸ் ரொய்க்கா" "கிளாஸ் நொஸ்ட்" வடிவிலான புனர் நிர்மாண நடவடிக்கைகள், சோசலிசம் தொடர்ந்தும் கம்யூனிசமாக வளர்வதில் இருந்தும் தடைசெய்யப்படுவதற்கான சந்தர்ப்பங்களை வழங்கும் என்றே தோன்றுகின்றது. எவை எவையெல்லாம் சோவியத் யூனியனில் சாத்தியமாக மாட்டாது. எனக்கருதப் பட்டு வந்தனவோ அவை அனைத்தும் இன்று சாத்தியமாகி வருகின்றன. உ+மாக இனமுரண்பாட்டு கலவரங்கள், வேலை நிறுத்தங்கள், ஊழல் குற்றச்சாட்டுக்கள், தேவா லய ஆராதனைகள், மத நிகழ்ச்சிகள் முதலானவை. இவையாவற்றுக்கும் அப்பால் மாக்சினுடைய கோட்பாடுகளையும் சிந்தனைகளையும் மாற்றி அமைத்து விடக் கூடிய வகையில் சோவியத்யூனியனுடைய அரசியல் சிந்தனைகள் மாற்றமடைந்து வருகின் றன என்பது வெளிப்படையான உண்மையாகும். சோவியத் கம்யூனிசக்கட்சியின் 19வது தேசியமகாநாட்டில் கட்சியின் பொதுச்செயலாளர் மிகையில் கொபர்ச்சேவ் அவர்கள், "அரசாங்கமும் கம்யூனிஸ்ட்கட்சியும் இணைந்து செயற்பட்ட நிர்வாக முறை சோவியத்யூனியனில் தோல்வியடைந்து விட்டது. கட்சி தனியாகவும், அரசு தனியாகவும் செயற்பட வேண்டும். கம்யூனிசக் கட்சியின் உயர்சபை (Supreme Council) நாட்டை ஆளும் முறை அகற்றப்பட வேண்டும். ஒரு பாராளுமன்றம் நிறுவப்பட வேண் டும். பாராளுமன்ற உறுப்பினரைத் தெரிவு செய்யப் பலவேட்பாளர்கள் போட்டியிடும் தேர்தல் நடத்தப்பட வேண்டும். அந்தப் பாராளுமன்றம் தெரிவு செய்யும் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியே நாட்டை நிர்வகிக்க வேண்டும். வெளிஉறவுக் கொள் கைகளையும் அந்த ஜனாதிபதியே வகுக்கவேண்டும். இதன் மூலம் பூரணமான ஜனநா யக முறை நாட்டில் அமுலாக்கப்பட வேண்டும்." என கூறிய கருத்துக்களும், அதன் செயல் முறையின ஆரம்பமும் சோவியத்யூனியனின் அரசியலை எதிர்காலத் தில் முற்றாகவே மாற்றி அமைக்கக் கூடிய சாத்தியக் கூறுகள் நிறையவே கொண் டுள்ளன. இந்த நிலையில் பாட்டாளி வர்க்க சர்வாதிகார அரசை அவர்களின் முன் னணிப்படையாகிய கட்சியே நிர்வகிக்க வேண்டும் என்றும் அதன் மூலம் அடையப் படும். சமுதாய முன்னேற்றம் காரணமாக, அந்த சமுதாயம் வரலாற்றிலேயே மிக உன்னதமானது எனவும் மாக்ஸ் நினைத்ததும், எதிர்பார்த்ததும் போல கம்யூனிச

சமுதாயம் ஒன்று அடையப்படுவதற்கு மாறுன சிலவழிகாட்டல்களே சோவியத்யூனி யனில் தற்போது நடைபெறுவது உணரமுடிகின்றது. சோவியத்யூனியனில் மட்டு மன்றி சோசலிச முறைகளைப் பின்பற்றும் நாடுகளில் கூடுதலான ஜனநாயக நடவடிக் கைகளுக்கான சீர்திருத்தங்களும், அவற்றுக்கான சேர்க்கைகளும் முன் வைக்கப்பட் டுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது. கிழக்குஜேர்மனி, பல்கேரியா, ரூமேனியா ஆகிய நாடுகளின் அனுபவங்கள் சான்றுகளாக அமையமுடியும்.

மாக்ஸ் தனது வாழ்க்கை அனுபவத்தினுலும் வரலாற்று உண்மைகளினுலும் ஆரம்பத்தில் இருந்து முதலாளித்துவ சமுதாயம் வரை அரசு பற்றிக் கூறிய கருத் துக்கள் விஞ்ஞான பூர்வமானவையாகவும், நிரூபிக்கப்படக் கூடியவையாகவும் தென்பட்ட போது அவரது வாழ்க்கை அனுபவத்திற்கு அப்பாற்பட்ட ஒரு எதிர் பார்க்கையில் அவரது கோட்பாடு சமூக ஐதார்த்தம் [ Social Reality ] ஒன்றுடன் முரண்படுகின்றமை உணரப்படலாம். இந்த நிலையில் சமுதாயத்தின் சூழ்நிலைகள் எப்போதும் ஒரே மாதிரியானவையாக இல்லாமை காரணமாக, எல்லாக்கருத்துக் களும் எல்லா சூழ்நிலைகளுக்கும் பொருந்தி விடுவதில்லை என்ற ஒரு நிலைப்பாட்டில் மாக்சினுடைய அரசு பற்றிய கோட்பாடும் அடக்கப்படலாம். என்றே கூறத் தோன்றுகின்றது.

கொள்கை இல்லாத அரசியல்

அறிவுத் தெளிவில்லாத போகம்

உழைப்பில்லாத செல்வம்

நேர்மை இல்லாத அலுவல்

மனித தத்துவம் இல்லாத விஞ்ஞானம்

தியாகம் இல்லாத கடவுள் வழிபாடு

இவையனைத்தும் எங்களை அழிவுப் பாதைக்கு இட்டுச் செல்லும்.

# இலங்கையில்

# திட்டமிடலும் பொருளாதார அபிவிருத்தியும்.

கலாநிதி . வி . நித்தியானந்தன் பொருளியல் துறைத்தலைவர் யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம்.

1947 ல் இலங்கையின் முதலாவது பாராளுமன்றம் ஆரம்பிக்கப்பட்டு வைக்கப் பட்டபோது மகாதேசாதிபதி தமது சிம்மாசனப்பிரசங்கத்தில் பின்வருமாறு குறிப் பிட்டார். " நாட்டின் வளங்களைத் தகுந்த முறையில் அபிவிருத்தி செய்வதிலேயே இலங்கையின் எதிர்கால முன்னேற்றம் தங்கியுள்ள தென்பதை எனது அரசாங்கம் உணர்ந்துள்ளது. இந்நோக்கத்தை நிறைவேற்றுவதற்குரிய முதல் முயற்சி திட்டமி டலேயாகும்."

சந்தைச் சக்திகளைத் தாமாக இயங்க விடுவதற்குப் பதிலாக திட்டமிட்ட வகையில் நாடுகளின் வளங்களை ஒதுக்கீடு செய்வதே திட்டமிடல் எனப் பொதுவா கக் குறிப்பிடலாம். குறைவிருத்தி நாடுகளைப் பொறுத்துத் திட்டமிடல் வலியுறுத்தப் படுவதற்குப் பல காரணங்கள் உள்ளன எனலாம்.

முதலாவதாக மக்கள் எப்போதும் தமது எதிர்கால திருப்திக்கன்றி நிகழ்கால நன்மை கருதியே பெரும்பாலும் இயங்குகின்ற காரணத்தால் கட்டற்ற சந்தை யொன்றில் உடனடி நுகர்வுக்குரிய பொருட்களை உற்பத்தியாக்குவதற்கன்றி, உற் பத்தி சாதனங்களை உருவாக்குவதற்கு அதாவது மூலதனப்பொருட்களை ஆக்குவதற்குச் சாதனங்கள் உருவாக்கப்படமாட்டா. திட்டமிட்டவகையில் அபிவிருத்தியின் மூலம் மாத்திரமே மூலதனப்பொருட்களை ஆக்குவதற்கெனச் சாதனங்களை ஒதுக்கக் கூடிய தாயிருக்கும்.

இரண்டாவதாக சந்தைவிலைகள் சாதனங்களின் சமுதாய மிகை, ஒதுக்குநிலை பற்றிய பூரணமானதொரு வழிகாட்டியாகமாட்டா. ஏனெனில் அவை சில உற்பத் திக்காரணிகளின் பயன்பாடு பற்றியோ அவற்றின் சந்தர்ப்பச் செலவு அல்லது சமு கத்துக்கு அவற்றின் பெறுமதி என்பவற்றை பிரதிபலிக்கமாட்டா. மூலதனம், அந்நி யசெலாவணி என்பவற்றுக்குத் தொடர்ந்து நிலவிவரும் பற்றுக்குறை, நிலவும் சந்தை விலைகளில் காணப்படும் ஊழியமிகை என்பன அமைப்புச்சம நிலையின்மையும் சமுதா யத்திற்குதவும் வகையில் சந்தைமுறை இயங்காத பூரணத்துவமற்ற நிலையினையும். எடுத்துக்காட்டுகின்றன.

மூன்றாவதாக பல வெளிப்புறக்காரணிகளின் விளைவாகக் குறைவிருத்தி நாடு களுக்குதவக் கூடிய அவசியமான பல திட்டங்கள், தனியார் தீர்மானங்களின் அடிப்படையில் அமைந்திருக்கும். நிறைவுச் சந்தையில் லாபந்தருவனவாகத் தென் படமாட்டா. தனியார் தமது லாபங்களை கணிக்கும் போது திட்டங்களின் வெளிப் புறச் சிக்கனங்களையும் இரண்டாந்தர நன்மைகளையும் கருத்திலெடுக்காததால் முத லீட்டு மட்டம், சமுதாயமிகைக்கு கீழாக வீழ்ச்சியடையக் கூடும். தவிரவும் பல தனிப்பட்ட தீர்மானங்களின் அடிப்படையில் இணைக்கப்படாமல் உருவாகும் திட்டங்

களிலிருந்தெழக்கூடிய ஆபத்து, மத்தியப்படுத்தப்பட்ட ஒரு நிறுவனத்தினால் நன்கு இணைக்கப்பட்ட வகையில் உருவாகும். திட்டங்களிலிருந்து எழக்கூடிய ஆபத்தை விடக் கூடிய தொன்றாகும். முன்னைய முறையின் கீழ் ஒரு திட்டத்தைப் பலர் மேற்கொள்வதன் மூலம் சாதனங்கள் வீணாக்கப்படவும் செய்யலாம். அபிவிருத்தி வேண்டி நிற்கும் அமைப்புரீதியான மாறுபாடுகளைக் கட்டற்ற சந்தை முறையின் கீழ்க் கொண்டு வருவது கடினமானதாகும். அபிவிருத்திப் பொருட்களும் உற்பத்திக்காரணிகளும் வேண்டிய அளவுகளில் கிடைக்குமென்பதற்கு எதுவித உத்தரவாதமும் இல்லை, நிரம்பல் விலை நெகிழ்ச்சியற்றதாயிருக்குமாயின் சமுதாயத்துக்கு வேண்டிய பொருட்களைப் பெற்றுக்கொள்வதற்கு எதுவித மார்க்கமும் இருக்கமாட்டாது. அபிவிருத்தியடையும் பொருளாதாரங்களில் இத்தகைய நிரம்பல் நெகிழ்ச்சியின்மையாலேயே அபிவிருத்தியானது பல வகைகளில தடைப்பட வேண்டியதாயிருந்தது.

ஆகவே இத்தகைய காரணங்களினால், விரைந்த பொருளாதார அபிவிருத்திக்குச் சந்தைப் பொறிமுறையில் தலையீடு, மிக அவசியமானதொரு எடுகோள் எனப் பலரும் வாதிட முன் வந்தனர். குறைவிருத்தி நாடுகள் அடைய முயற்சிக்கும் இலக்குகளைத் திட்டமிடல் மூலம் அல்லது மத்திமப்படுத்தப்பட்ட முறையின் மூலம் விரைவாகவும் அதே நேரத்தில் சிறந்த முறையிலும் அடையலாமென இவர்கள் எடுத்துக் காட்டினர். அபிவிருத்தித் திட்டமிடலின் மிக முக்கிய நோக்கமென்னவெனில், சமுதாயம் அடைய விரும்பும் தேர்ந்தெடுக்கப்படும். இலக்குகளைத் திட்டத்தில் உள்ளடக்கி அதற்கேற்றவகையில் சாதனங்களை ஒதுக்கீடு செய்வதாகும்.

ஆனால் திட்டமிடலின் மிக முக்கிய பிரச்சனை யாதெனில் பொருளாதாரத் திட்டமொன்று எந்த முறையில் உருப்பெற வேண்டுமென்பதாகும். சந்தை முறை முற்றாக நீக்கப்பட்டு அரசாங்கம் சாதன ஒதுக்கீட்டுக்கான முழுபொறுப்பையும் ஏற்றுக்கொள்ள வேண்டுமா? அல்லது சந்தைப்பொறிமுறை அமைப்பொன்றினுள், சமுதாயத் தேவைகளைப் பிரதிபலிக்கும் வகையில சநதைவிலைகள் திருத்தியமைக்கப்படவேண்டுமா? இவ்வாறு திருத்தியமைக்கப்பட்டால வரிகள், உதவிப்பணங்கள் என்பவற்றின் மூலம தனிப்பட்ட, சமுதாயச் செலவுகளுக்கும், நன்மைகளுக்குமிடையிலான வேறுபாடுகள் நீக்கப்படலாம். சுருக்கமாகக் கூறின் அதிகாரரீதியான பொருளாதாரம் ஒன்று நிறுவப்படவேண்டுமா? அல்லது சில குறிப்பிட்டவகையான பொருட்கள் சேவைகளைத் தான் வழங்கும் பொருட்டு அரசாங்கம வரி வசூலித்து ஏனையவற்றைத் தனியார் வழங்குவதற்குரிய தூண்டுதல்களை மாத்திரம் அளிகக வேண்டுமா? என்பதே பிரச்சனையாகும். மேலும் நடைமுறை நுகர்வு, எதிர்கால நுகர்வு என்பவற்றுக்கிடையிலான தெரிவல் இவற்றின முக்கியத்துவத்தின் அளவினை யார் நிர்ணயிப்பது? ஊழியச் செறிவுடைய தொழில் நுட்பங்களில் எதற்குக் கூடிய முக்கியத்துவம் அளிப்பது? இதனை யார் தீர்மானிப்பது? பொருட்கள், சேவைகள், ஓய்வு எனபவற்றுக்கிடையே அவற்றுக்கு அளிக்கப்பட வேண்டிய முககியத்துவத்தின் அளவினை யாா தீர்மானிப்பது? என்பனவும் விடை காணப்படவேண்டிய பிரச்சினைகளாகும். பொருளாதாரரீதியில் இவையெல்லாவற்றுக்கும் தகுந்ததொரு விடை கொடுப்பதாகக் கூறமுடியாது. இப்பிரச்சினைகள் யாவும் அரசியல் அடிப்படையிலேயே தீர்மானிக்கப்படுகின்றன எனலாம். ஒவ்வொரு நாட்டினது அரசியல் ஒழுங்குமுறையும், பதவியிலிருப்பவர்களின் அரசியல் சித்தாந்தமுமே இறுதியில் பொருளாதார ஒழுங்குமுறையின் வகையைத் தீர்மானஞ் செய்கின்றன.

சந்தைப் பொறிமுறையில் எத்தகைய தொரு தலையீடு ஏற்பட்டாலும் அது ஒரு குறிப்பிட்டளவான அரசாங்கத் தலையீட்டுக்கு எப்போதும் வழிவகுக்கும் உற்

பத்திச் சாதனங்களைக் கட்டுப்படுத்தல், பங்கீடு, பரிமாற்றம் என்பவற்றைக் கட்டுப்படுத்தல், சந்தைப் பொறிமுறையை அரைகுறையாக நீக்கி, அவ்விடத்தில் வேறு முறையைப் புகுத்துதல் என்பன இதிலடங்கும் சந்தைப் பொறிமுறையை இல்லாமல் செய்தல் என்பது சாதன ஒதுக்கீட்டுக்கு விலையைப் பயன்படுத்தாது விடுதல் என்பதல்ல. ஆனல் தீர்மானங்களை எடுக்கும் ஒரு சாராற்குப்பதில் இன்னெரு சாராரை நியமித்தலாகும். ஆகவே திட்டமிடுவோர் நிலைகளையும் விலைகளினல் ஏற்படும் லாபங்களையும் தீர்மானங்களை எடுப்பதற்குதவியாகப் பயன்படுத்தலாம். தனியார் உடமை, தனியார் முதலீடு என்பவை அங்கீகரிக்கப்படாத முற்றுகததிட்டமிட்ட பொருளாதாரத்திற்குக் கூட விலைமாறுபாடுகள் சாதன ஒதுக்கீட்டுக்கான குறிகாட்டியாகப் பயன்படுத்தலாம். திட்டமிடலின் வெற்றி அபிவிருத்தியுடன் நன்கு ஈடுபட்ட, தகுந்த தொழிற்நுட்பத்தகமை வாய்ந்த நிர்வாகிகளிலேயே தங்கியுள்ளது.

திட்டநிர்வாகிகள் தமது அரசியல் சித்தாந்தத்தை ஸ்திரப்படுத்துவதிலோ அல்லது எல்லாவகையிலும் தமது நலனைப் பேணுவதிலும் அக்கறையுடையவர்களாக இருப்பராயின் திட்டத்தின் மூலம் பொருளாதாரம் அபிவிருத்தியடைதல் சாத்தியமாகாது தகுந்த தகமை பெருத, ஊழல் மிகுந்த நிர்வாகிகள் திட்ட அமுலாக்குத்திற்கும் சாதன ஒதுக்கீட்டுக்கும் பொறுப்புடையவராக நியமிக்கப்படின் சந்தைப் பொறிமுறை இயங்குவதைவிடப் பாதகமான முறையிலும் சாதனங்கள் ஒதுக்கப்படக்கூடும். நாட்டின் சக்திக்கு அப்பாற்பட்டவகையில் திட்ட இலக்குக்கள் அமைந்திருந்தால் திட்டச்செய்முறையில் பரந்த விரக்தி ஏற்படுவதற்கே அது வழிவகுக்கும். இலங்கையின் ஐந்தாண்டுத்திட்டம் ஓரளவு இக்குறைபாட்டுக்குட்பட்டதாகக் கூற முடியும். உதாரணமாக ஐந்தாண்டுததிட்டத்தின் இரண்டாவது 1973 ல் தனியார் நுகர்வுச் செலவீட்டின் அதிகரிப்பு வீதம குறைவடைந்து கூடிய சேமிப்பு, முதலீட்டுக்குத் திருப்பப்பட்டிருக்க வேண்டும். ஆனல் உண்மையில் 1973ல் பண அடிப்படையில்தனியார் நுகர்வுச் செலவீடு உயர்நததொரு மட்டத்திலிருந்ததைக் காணமுடிகின்றது. 1972 ல் நுகர்வுச்செலவீடு 10.4% த்தால் அதிகரிக்க 1973 ல் நுகர்புச் செலவீடு 24.97% த்தால் அதிகரித்தது.

ஆகவே சந்தைப்பொறிமுறையை ஆதரிப்பவரின் வாதப்படி விரிவான நிர்வாக அமைப்பொன்றின் அவசியமில்லாமலே விலைமுறையானது தீர்மானங்கள் எடுப்பதைப் பல விதப்படுத்த உதவுகின்றது. அடம்ஸ்மித் அவர்களுடைய கருத்துப்படி அரசாங்கங்கள் எதிர்க்கணியமாயியங்கும், சந்தர்ப்பங்களைவிட ஏனைய சந்தர்ப்பங்களிலும் கூடிய திறமையுடையவையாயிருக்குமென எதிர்பார்க்க முடியாது. ஏனெனில் அநுபவமற்ற, திறமையில்லாத நிர்வாகிகள் எடுக்கும் தீர்மானங்கள் கூடியளவு ஆபத்தினைக் கொண்டு வரலாம். இவர்களுடைய வாதப்படி சந்தைமுறை சரிவர இயங்காவிடின் அதனைப் பூரணப் படுத்திச் சரிவர இயங்கச் செய்வதற்கே நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.

திட்டமிடலுக்கும் சந்தைப் பொறிமுறைக்கும் இடையிலான இத்தகைய வாதங்களின் மத்தியிலும் பல குறைவிருத்தி நாடுகள் எதிர்நோக்கும் பிரச்சினை பூரண தலையிடாக் கொள்கையோ அல்லது பூரண திட்டமிட்ட பொருளாதாரத்தை ஏற்படுத்துவதோ அல்ல. ஆனல் தனியார் பொதுத் தொழில்களின் சேர்க்கையை எவ்வகையில் ஏற்படுத்துவது, பொதுத்துறையை எந்தளவுக்கு விரிவுபடுத்துவது, தனியார் தீர்மானங்களில் எந்தளவான தலையீடு இருக்க வேண்டும். தேசிய அபிவிருத்தி திட்டமொன்றில் தனியார்துறை எந்தளவுக்குச் சேர்த்துக் கொள்ளப்பட வேண்டும்.

என்பவை போன்ற பிரச்சனைகளேயாகும். இப்பிரச்சினைகளிலேயே பல குறைவிருத்தி நாடுகள் தகுதி வாய்ந்த தீர்மானங்களை எடுக்க வேண்டியனவாக உள்ளன.

ஒருநாடு எத்தகையதொரு அரசியல் சித்தாந்தத்தைப் பின்பற்றினாலும் அரசாங்கத்தின் அபிவிருத்தி நோக்கங்களைப் புலப்படுத்தி நாட்டின் அபிவிருத்திப் பிரச்சனைகளுக்குத் தீர்வு காணும் விடயத்தில் ஒரு ஆரம்பத்தினை ஏற்படுத்தி வைப்பதில் அபிவிருத்தித்திட்டம் சிறந்ததொரு கருவியாக விளங்குகின்றது. அத்துடன் நாடு பூராவும் அபிவிருத்தி முயற்சியில் ஒருவகை ஊக்கம் ஏற்பட இது உதவுகின்றது தகுந்த திட்டமொன்றிருக்கும் நிலையில் அந்நிய முதலீடுகளும், சர்வதேச நிறுவனங்களிடமிருந்து கிடைக்கும தகுதியும் தகுந்தோர் அடிப்படையில் கிடைப்பதற்கு ஏதுவாகின்றது.

ஒரு நாட்டின் அபிவிருத்தித்திட்டம், அந்நாட்டின் அரசியல் கொள்கை, அதற்குக் கிடைக்கும் நிபுணத்துவம் என்பவவை பொறுத்து அதன் அமைப்பு, இலக்குகள் என்பவற்றில் வேறுபடலாம். நாட்டின் நோக்கங்கள், நம்பிக்கைகள், என்பவற்றை அறிக்கைவடிவில் வெளிப்படுத்துவதிலிருந்து விரிவான கணிப்புக்களின் அடிப்படையில் ஒரு குறிப்பிட்ட வளர்ச்சி விகிதத்தை அல்லது தலாவருமானத்தை அடைவதற்கு எந்தளவு வெளியீட்டை ஒவ்வொருதுறையும் உற்பத்தி செய்யவேண்டும். அதற்கு எந்தளவான வளங்கள் அவசியம் என்பவற்றை வெளிப்படுத்துவதற்கு மேலான நிலையில் உள்ள எந்தவொரு அபிவிருத்தித்திட்டமும் மாதிரியுரு அமைப்பை அடிப்படையாகக் கொண்டிருப்பது தவிர்க்க முடியாததாகின்றது. வெவ்வேறு துறைகளிடையேயான தொடர்பையும், மாதிரியுரு எடுத்துக்காட்டுவதாயிருக்கும்.

அபிவிருத்தித்திட்டமிடலில் மூன்று வகையான மாதிரியுருக்கள் பயன் படுத்துவதாகக் கூறலாம்.

*(1)* பெரும்பாக அல்லது கூட்டுமாதிரியுருக்கள்

இவை இலகுவான ஹரட்டோமர் வகையாக இருக்கலாம்; அல்லது அதனை விடச் சிக்கல் நிறைந்ததாகத் தொடர்ச்சியான n தொகைச் சமன் பாடுகளையும், n தொகைமாறிகளையும் கொண்டதாக இருக்கலாம். இவை காரணி உள்ளீடு - உற்பத்தி வெளியீடு, சேமிப்பு - வருமானம், இறக்குமதி – செலவீடு, போன்ற பொருளாதாரத்தின் அமைப்புரீதியான அடிப்படைத் தொடர்புகளைப் பிரதிநிதித்துவம் செய்வதாக இருக்கலாம்.

*(2)* துறை மாதிரியுருக்கள்

இவை பொருளாதாரத்தின் பிரதான துறைகளை வேறுபடுத்தி, ஒவ்வொரு துறைக்கு மிடையிலான அமைப்பு ரீதியான தொடர்புகளை வெளிப்படுத்தும். அத்துடன் துறைகளுக்கிடையிலான தொடர்புகளும் எடுத்துக் காட்டப்படும். உதாரணமாக விவசாயத்துறைக்கும் கைத்தொழிற்துறைக்குமிடையிலான தொடர்பு மூலதனப் பொருளுற்பத்தி, நுகர்பொருளுற்பத்தி என்பவற்றுக் கிடையிலான தொடர்பு அரசாங்கத்திற்கும் பொருளாதார அமைப்புக்குமிடையிலான தொடர்பு போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

*(3)* தெறித்தொடர்பு மாதிரியுருக்கள்

இவை பொருளாதாரத்தின் உற்பத்தித்துறைகளுக்கிடையிலான தொடர்புகள் கொடுக்கல் வாங்கல் என்பவற்றை உள்ளீட்டு - வெளியீட்டு அளவீட்டின் அடிப்படையில் வெளிப்படுகின்றன.

மேற்கூறிய வகையிலான மாதிரிகள் இரு வேறுபட்ட நோக்கங்களைப் பூர்த்தி செய்ய உதவுகின்றன எனலாம்.

முதலாவதாக திட்டமிடுவோர் குறிப்பிட்ட இலக்குகளை என்ன வகையில் அடைய வேண்டுமென்பது பற்றிய தீர்மானங்களை எடுக்க உதவுகின்றன. எல்லா இலக்குகளையும் ஒரே நேரத்தில் அடைய முடியாதென்று திட்டமிடுவோனுக்குத் தெரிந்திருக்கும் ஒரு நிலையில், அவன் எதிர்நோக்கும் தெரிவுகளை இவை காட்டி நிற்கின்றன. பொருளாதாரத்தின் வெவ்வேறு பகுதிகளுக்கிடையிலான தொடர்புகளைத் தகுந்த வகையில் அறிவதன் மூலம் மாத்திரமே தகுதிவாய்ந்த கொள்கைத் தீர்மானங்களை எடுப்பது சாத்தியமாகும்.

இரண்டாவதாக மேற்கூறிய மாதிரிகள் எதிர்காலத்தைப் பெருமளவுக்கு நம்பத்தக்க வகையில் எறியப்படுத்த உதவுகின்றன. இதனால் ஒரு குறிப்பிட்ட திட்டமிடும் காலப் பகுதியில் தேவைகளைப் பொறுத்து, என்ன வளங்கள் கிடைக்கக் கூடியதாயிருக்குமென்பதை எடுத்துக்காட்ட உதவியாயிருக்கும். அபிவிருத்தித் திட்டமிடலின் மாதிரி உருக்கள் மேற்கூறிய இரு நோக்கங்களில் ஒன்றினைப் பூர்த்தி செய்வனவாகவோ அல்லது இரண்டினையுமே பூர்த்தி செய்வனவாகவோ இருக்கலாம். இந்த இருநோக்கங்களையுமே ஒரு மாதிரியுரு பூர்த்தி செய்கிறதாயின் அது பின்வரும் அம்சங்களை உள்ளடக்கியதாயிருக்க வேண்டும். பொருளாதார இலக்குகள் பற்றிய அறிக்கை, இவற்றை அடையக் கருவியாகப் பயன்படுத்தப்படும் கொள்கைகள், அமைப்புரீதியான தொடர்புகள் பற்றிய மதிப்பீடு, வரலாற்று அடிப்படையிலான தரவுகளில் கிடைக்கும் தன்மை, வெளிப்புறமாறிகளைக் கருத்திலெடுத்தல், கிடைக்கக்கூடிய வளங்களின் கேள்வி, நிரம்பலில் நிரந்தரத் தன்மையை ஏற்படுத்தும் வகையில் தேசிய வருமானம். செலவீடு, வெளிநாட்டுவர்த்தகம், ஊழியப்பலம் என்பவவை பற்றிய ஒரு தொகை தேசியக் கணக்குகள்.

குறைவிருத்தி நாடு ஒன்று திட்டமிடலில் பலவகையான சிக்கல்களையும் எதிர்நோக்கலாம். பெரும்பாலான அபிவிருத்தித்திட்டங்களின் பிரதான நோக்கம் குறிப்பிட்ட திட்டக் காலப்பகுதியில், குறிப்பிட்டனவான வெளியீட்டு அல்லது தலாவருமான வளர்ச்சி விகிதத்தை அல்லது குறிப்பிட்ட நுகர்வுமட்டத்தை அடைவதேயாகும் இவ்வாறு கூறுமிடத்து ஒவ்வொரு அபிவிருத்தித்திட்டமும் வெளியீட்டின் சேர்க்கை, வருமானப்பரம்பல், காரணிகளின் நிரம்பல் என்பவற்றின் மீதான கட்டுப்பாடுகளைக் கருத்திலெடுக்க வேண்டியது அவசியமாகும். திட்டக்காலம், திட்டத்தின் நோக்கம் என்பவவை தரப்பட்டிருக்கும் நிலையில் ஆரம்ப நிலைகளின் அடிப்படையில் அல்லது ஆரம்ப வளங்களுக்கேற்ப ஆகக்கூடிய நன்மை தரும் வகையில் கையாளக்கூடிய முறையைத் தீர்மானித்துக் கொள்ளமுடியும். குறைவிருத்தி நாடுகளின் திட்டமிடுவோரும், கொள்கை வகுப்போரும் இழைக்கும் ஒரு முக்கிய தவறு யாதெனில் திட்ட இலக்குகள் பெரும்பாலும் நாட்டின் தேவைகள் அபிலாசைகள் என்பவற்றுக்கேற்ப வகுக்கப்படுகின்றனவேயன்றி, நாட்டிலிருக்கும் வளங்களுக்குத் தகுந்தமுறையில் கணிப்பிடலெடுத்து வகுக்கப்படுவதில்லை. இதனால் பல சந்தர்ப்பங்களில் திட்ட இலக்குகள் அடையப்படுவதில்லை. இலங்கையின் ஐந்தாண்டுத்திட்டம் செயல்முறைப்படுத்த முற்பட்டவிடத்து, மிக ஆரம்பத்திலேயே இக்குறைபாட்டை எதிர்நோக்கியது. திட்டம் வெளியிட்டு 6 மாத காலத்தினுள் திட்ட இலக்குகளுக்கும் அதன் நடைமுறைகளுக்குமிடையிலெழுந்த இடையீடு எத்திட்டத்தையுமே பெரிதும் பாதிப்பதாயிருந்தது. திட்டத்தின் வெற்றிக்குரிய சில நிபந்தனைகள் பூர்த்தி செய்

யப்படவில்லை. 1971 / 72 வரவு செலவுத்திட்டத்தில் நிதியீட்டத்தில் காணப்பட்ட இடையீட்டை நிவர்த்தி செய்வதற்கான சில அடிப்படை வரவு செலவுத்திட்ட முறைகளோ, பரிமாற்ற விகிதம் பற்றி எடுக்கப்பட்டிருக்க வேண்டிய சில நடவடிக்கைகளோ எடுக்கப்படவில்லை. திட்டம் கலப்புப் பொருளாதாரமொன்றினையும், சக்தி வாய்ந்த தனியார்துறையொன்று தொடர்ந்து இருக்க வேண்டுமென்பதையும் கருத்தில் எடுத்தது. ஆனல் தனியார்துறையின் பங்கு பற்றிய கொள்கை சரியான முறையில் தீர்மானிக்கப்பட்டிருக்கவில்லை. ஆகவே வளங்களின் கிடைக்கும் தன்மை, திட்ட இலக்குகளைப் பூர்த்தி செய்வதற்கான தகுந்த கொள்கையமைப்பு என்பன சரியான முறையில் கணிப்பில் எடுக்கப்படவில்லை என்றே கூறலாம். இவ்வகையில் திட்டச் செய்முறையில் விரக்தி ஏற்படுவதைத் தடுக்கும் வகையில், ஒரு திட்டமிடுவோன் திட்ட அமுலாக்கத்திலுள்ள கட்டுப்பாடுகளை முடிந்தளவு சரியான முறையில் எடுத்துக் கூறுவது அவசியமானதெனலாம்.

ஆகவே திட்டமிடலில் கொள்கைரீதியான மாதிரியொன்றை வகுப்பதற்கு முதல் திட்டத்திற் காட்டப்பட்ட வளர்ச்சி விகிதத்தை அடைய முற்படுமிடத்து ஏற்படக் கூடிய விளைவுகளைக் காட்டும் வகையில் பொருளாதாரத்தின் கூட்டு மாதிரியொன்றை அமைப்பது அவசியமாயிருக்கலாம். இதுஅடிப்படைத் தன்மை வாய்ந்த அமைப்புரீதியான தொடர்புகளைப் புலப்படுத்துவதாயிருக்க வேண்டும். திட்டச்செய்முறை பொறுத்து குறுகியகாலம், நீண்டகாலம் என்ற இரண்டிற்கும் இது அவசியமானதாகும். வேண்டிய அளவில் மூலதனம் கிடைக்குமா தலாவருமான அதிகரிப்பின் மூலம் எதிர்காலத்தில் நுகர்பொருள்களுக்கு ஏற்படும் கேள்வி, நிரம்பலை மீறிப் பணவீக்கத்தை ஏற்படுத்துமா. தடைகள் ஏற்படா வண்ணம் வேறுபட்ட தொழில்களிடையிலான தொடர்புகளை இடைநிறுத்த முடியுமா. என்ற பிரச்சனைகளை இது அணுகுவதாயிருக்க வேண்டும்.

பொருளாதார அபிவிருத்தித் திட்டத்தின் இன்னெரு முக்கியமான பிரச்சனை குறிப்பிட்ட காலப்பகுதிக்குரிய திட்ட இலக்குகள் வகுக்கப்படுமிடத்து திட்டக் காலப் பகுதியினுள் ஏற்படும் பலவித மாற்றங்களும் இந்த இலக்குக்களை அடையா வண்ணம் செய்துவிடக்கூடிய நிலையாகும். ஆகவே மிகக் குறுகியதொரு காலப்பகுதிக்கன்றி நீண்டகாலத்திற்குரிய பொருளாதாரக் கொள்கைகளைத் திட்டமிடுவோர் வகுப்பதில் எச்சரிக்கையாயிருத்தல் வேண்டும். நியாயமானதொரு காலப்பகுதியை அடிப்படையாகக் கொண்டு வகுக்கப்பட்ட ஐந்தாண்டுத்திட்டம் கூட மிகவிரைவில் முற்றிலும் மாறுபட்ட சூழ்நிலைகளை எதிர் நோக்கியதைக் காண முடிகிறது. உதாரணமாக 1973 அளவில் இலங்கையைப் பாதித்த உலக. உணவு மூலப்பொருட்தட்டுப்பாடு, சர்வதேச நாணயக்குழப்பங்கள், சடுதியாக ஏற்பட்ட எண்ணெய் விலை உயர்வு போன்றவற்றை ஐந்தாண்டுத்திட்டம் கருத்திலெடுக்கவில்லை. இவ்வாருக ஏற்பட்ட பணவீக்க நிலைமைகள் ரூபாவின் கொள்வனவுசக்தியைப் பாதித்துத் தனியாரினதும் பொதுத்துறையினதும் மெய்ச்சேமிப்பையும் பலவீனப்படுத்தியுள்ளது. திட்டக்காலப்குதியில் சேமிப்புத் திட்டத்திற்கு முந்திய காலப்பகுதியில் இருந்த வருடத்திற்கு 12.5% த்திலிருந்து 17% மாக உயர்வடைய வேண்டுமென எதிர்பார்க்கப் பட்டபோதும் 1972 லும் 1973 லும் சேமிப்புமட்டம் சராசரி 12.8% மாகவே காணப்பட்டது. மேற்கூறிய பாதிப்புக்கள் மூதலீட்டு அமைப்பைப் பாதித்திருப்பது மட்டுமன்றி திட்டம் எதிர்நோக்கிய மெய்வளங்களின் அளவையும் குறைத்து விட்டது. ஆகவே இம்மாறுபாடுகளைக் கருத்திலெடுத்துத் தற்போது கைவசமிருக்கும் வளங்களின் அளவுக்கேற்பத் திட்டதைக் கையாளப்பட வேண்டிய முறைகளும், அதன் நோக்கங்களும் மறு பரிசீலனை செய்யப்படவேண்டு

மென 1973 மத்திய வங்கி அறிக்கை குறிப்பிடுகின்றது. இவ்வகையில் புதிதாக ஏற்பட்டுள்ள உணவு, மூலப்பொருட்களின் தட்டுப்பாடுகளைக் கருத்திற்கொண்டு இப்பொருட்களின் உற்பத்திக்கு முன்னுரிமை வழங்கப்பட வேண்டுமென அது குறிப்பிடுகின்றது. எவ்வாறாயினும் திட்டக்காலப்பகுதியினுள் ஏற்படும் சூழ்நிலைமாறுபாடுகள் எந்தளவுக்கு ஒரு குறைவிருத்தி நாட்டின் பொருளாதாரத் திட்டமிடலைப் பாதிக்கலாமென்பதற்கு இது சிறந்த உதாரணமாகும்.

இது தவிர பொருளாதாரத் திட்டத்தை அமுல் நடத்துவதன் பயனாகவே எதிர்பாராதவகையில் எதிர்காலத்தில் சூழ்நிலைகள் மாற்றமடையலாம் இதனால் திட்ட இலக்குகளை அடைவதற்கான மார்க்கங்கள் ஓரளவு நெகிழ்வுடையவை. இலங்கையைப் பொறுத்தும் குறைபாடுடையவையாகக் காணப்படுகின்றன எனப்படுகிறது மதிப்பீட்டுப் புள்ளிவிபரத் திணைக்களமே புள்ளியியல் விபரங்களைச் சேகரிப்பதற்குரிய இலங்கையின் முக்கிய சாதனமாக விளங்குகின்றது. எனினும் இவை சேகரிக்கும் தரவுகள் அடிப்படைத் தன்மை வாய்ந்தனவாக விளங்குகின்றனவேயன்றித் திட்டமிடல், கொள்கை வகுத்தல் என்பவற்றுக்குதவக் கூடிய முறையிலான விபரங்களாக இல்லை. துறைகளைப் பொறுத்தும் புள்ளிவிபரங்களின் தரமும் வேறுபட்டுச் செய்வதாகவே உள்ளது. பிறப்பு, இறப்பு என்பவை பற்றிய சனத்தொகை அம்சங்களுடன் தொடர்புடைய புள்ளிகளும் தேயிலை, இறப்பர், நெல் என்பனவை சம்பந்தப்பட்ட உற்பத்தித் தரவுகளும் பெரிதும் சரியானவையாக அமைந்திருப்பதாகக் கூறலாம். ஏனைய தென்னை போன்ற பயிர்களினதும், கைத்தொழிலினதும் உற்பத்தி மாதிரி அளவைகளின் அடிப்படையிலேயே நிர்ணயிக்கப்பட வேண்டியதாயுள்ளது.

இதனால் தேசிய வருமானத்தின் இறுதிக்கணக்குகள் கணிசமான தொரு எல்லை வழுவைக் கொண்டதாகவே அமைய வேண்டியனவாயுள்ளன. தரவுகளின் தரம் ஒரு புறம் இருக்க, கிடைக்கின்ற தரவுகளும் விபரங்களும் கொள்கைத் தீர்மானங்கள் எடுக்கப்படும் மத்திய நிலையங்களை அடைவதும் குறைபாடுடையதாக விளங்குகிறது. 1965 - 70 க்கும் இடையில மந்திரிசபையின திட்டமிடல் குழுவுக்கு மாதாந்த அடிப்படையில் புள்ளிவிபரங்கள் வழங்கப்பட வேணடிய முறையொன்று ஆரம்பிக்கப்பட்டது. ஏற்றுமதித்தொகை, ஏற்றுமதி விலைகள், வெளிநாட்டு உதவி போன்ற விபரங்கள் இதிலடங்கின. மத்திய வங்கி மாதாநத அடிப்படையில் பல புள்ளி விபரங்களும் அடங்கிய செய்தித்திரட்டொன்றைப் பிரசுரிக்கின்றது. எனினும இது பிரசுரமாகச் சிலவேளை கூடிய காலதாமதம் ஏற்படுகின்ற தென்பதுடன் பொருளாதாரத்தை இணைத்து முகாமை செய்யப் பொறுப்பாயிருக்கும். அரசியல் நிர்வாகமோ, மத்திய நிறுவனமோ இதனைத் தகுந்த வகையில் பயன்படுத்துவதில்லை யென்ற குற்றச் சாட்டும் கூறப்படுகின்றது. எனினும் தற்போது திட்டச் செயற்பாட்டு அமைச்சு காலத்துக்கு காலம் முன்னேற்றம் பற்றிய அறிக்கையை வெளியிடுகின்றது. பொருளாதாரத்தின் முக்கிய துறைகளின் நடத்தை பற்றிய பொது நோக்கினை வழங்கும் முறையொன்று இலங்கையில் இன்னமும் வளர்ச்சியடையவில்லை யென்றே கூறவேண்டும். உருவாகும் பொருளாதார அபிவிருத்தித் திட்டங்களின் குறைபாட்டுக்கு இது ஒரு முக்கிய காரணமெனலாம்.

இத்தகைய சில பொதுவான குறைபாடுகளைத் தவிர இலங்கையின் திட்டமிடலில் காணப்படும் வேறு பல சிக்கல்களையும் குறைபாடுகளையும் இலங்கையின் திட்டமிடல் வரலாற்றை நோக்கும் போது நன்கு காணமுடிகிறது. இலங்கையின் மத்திமப் படுத்தப்பட்ட முறையின் மூலம் அபிவிருத்தியை ஏற்படுத்தும் முயற்சி 1946–52

காலப்பகுதியில் சமர்ப்பிக்கப்பட்ட பல்வேறு முதலீட்டுச் சிபாரிசுகளுடன் ஆரம்ப மாவதாகக் கூறலாம். இதில் முதலாவது 1946 ல் சமர்ப்பிக்கப்பட்ட யுத்தத்துக்குப் பிந்திய கால அபிவிருத்திச் சிபாரிசுகள் ஆகும். இது போக்கு வரத்து, விவசாயம், கல்வி, சுகாதாரம் என்பவற்றுக்கான முதலீட்டுத் திட்டங்களை ஒன்று சேர்ப்பதாக இருந்தது. சுதந்திரத்துக்குப் பின் வரையப்பட்ட இரு வரவு செலவுத் திட்டங்களும் "ஆறு வருடத் திட்டம்" என்ற பெயரில் வெளியிடப்பட்டன. இவையும் முந்தியதைப் போன்றே வேறுபட்ட மந்திரிகளின் கீழிருந்த துறைகளுக்குரிய அரசாங்கத்தின் முதலீட்டுத் திட்டத்தைக் கொண்டிருந்தனவேயன்றி, பொதுத்துறை, தனியார் துறை என்ற இரண்டையும் உள்ளடக்கி நாட்டின் பொருளாதாரம் முற்றுக வளர்ச்சியடைவதற்குரிய ஓர் அமைப்பு முறையை வழங்கவில்லை. இக்கால அரசாங்கக் கொள்கை தேசிய திட்டமிடலுக்கு ஆதரவளித்தபோதும் திட்டமிடுவதற்குரிய நிறுவனமொன்றிருக்கவில்லை. 1946 சிபார்சுகள், ஆறுவருடத்திட்டம் ஆகிய இரண்டும் ஒருவகை இரண்டாந்தர நடவடிக்கைகளேயாகும். முக்கியமாக ஆறுவருடத்திட்டம் வரவு செலவுத்திட்ட நடைமுறையின் மூலம் ஏற்பட்ட ஒன்றேயாகும்.

1952ன் IBRD தூதுக்குழு தருந்த வகையில் இணைக்கப்பட்ட சிறந்த திட்டமிடுதலை மேற்கொள்வதற்கும், அரசாங்கத்தின் மூலதன முதலீட்டுத் திட்டங்களை மேற்பார்வை செய்வதற்கும்" அவசியமான நிறுவனமொன்றினை ஏற்படுத்தும்படி சிபார்சு செய்தது. மந்திரிசபையின் பொருளாதாரக்குழு ஒன்று ஏற்படுத்தப்பட்டு இதற்கு சேவை செய்யும் வகையில் பொருளாதாரத்திட்டமிடற் செயலகம் ஒன்று ஏற்படுத்தப்பட வேண்டுமெனக் கூறப்பட்டது. 1953ல் அரசாங்கம் ஏற்படுத்திய திட்டமிடல் ஒழுங்குமுறை பரந்த வகையில் இச்சிபார்சுகளுக்கேற்ப அமைவதாக இருந்தது. இந்த ஒழுங்கு முறைக்கேற்ப 1954ல் வெளியிடப்பட்ட ஆறுவருட முதலீட்டுத்திட்டம், ஏற்கனவே குறிப்பிட்ட இரண்டினையும் விடப் பெருமளவிற்கு தேசிய திட்டமொன்றினை ஒத்ததாக இருந்தது எனினும் இது கூடத் தொடர்ந்து அரசாங்கத்தின் மூலதன முதலீட்டு வரவுசெலவுத்திட்டத்தையொற்றி அமைக்கப்பட்ட ஒன்றுக இருந்தது. ஆறுவருட முதலீட்டுத்திட்டம் என்ற அதன் தலைப்பே அதன் தன்மையை எடுத்துக்காட்டி உண்மையான பொருளாதாரத் திட்டமொன்றிலிருந்து அதனை வேறுபடுத்துவததாயிருந்தது. இத்திட்டத்திலிருந்த தனியான அதிகாரங்கள் தேசிய திட்டமிடலில் கையாளக்கூடிய சில முறைகளை எடுத்துக் கூறியதுடன் திட்டத்தில் எவற்றுக்கு முதன்மை வழங்கப்பட வேண்டும், அதற்குரிய வழிவகைகள் என்ன என்பதையும் விளக்கியிருந்தன.

திட்டமிடலின் ஆரம்பப்படி என்று கூறக்கூடியவகையிலமைந்த மேற்கூறிய பத்திரங்களிலெல்லாம் நன்கு இணைக்கப்பட்ட வகையிலான, தர்க்க பூர்வமான முதலீட்டுச் சிபாரிசுகளே எடுத்து விளக்கப்பட்டிருந்தன. பல சந்தர்ப்பங்களில் இக்குறிப்பிட்ட துறைகளில் என்னென்ன வகையில் முதலீடு அமைந்திருக்க வேண்டுமென்பதை ஏற்கனவே சம்பந்தப்பட்ட மந்திரிகள் ஏற்றுக் கொண்டிருந்தனர். ஆகவே இத்திட்டங்கள் தீர்மானங்களை எடுப்பதில் எத்தகைய செல்வாக்குச் செலுத்தின. என்பதை ஆராய்வது ஓரளவுக்குத் தேவையற்றதென்றே கூறலாம். இக்காலப்பகுதியில் திட்டமிடுதல் என்பது சுயமான ஒரு நடத்தையாக இடம்பெற்றதெனக் கூறமுடியாது. பெரும்பாகப் பொருளியல் முறையில் தேசிய அடிப்படையில் அபிவிருத்திக்குரிய வளங்கள் மதிப்பிடப்பட்டதாகவோ, வெவ்வேறு துறைகள் சம்பந்தப்பட்ட கொள்கைகளும் முதலீட்டுத் திட்டங்களும் மேற்கொள்ளப்படக்

கூடிய வகையில் தகுந்ததோர் அமைப்புமுறை வழங்கப்பட்டதாகவோ கூறமுடியாது. 1952 ல் வெளியிடப்பட்ட IBRD தூதுக்குழுவின் சிபாரிசுகள் கூட ஏற்கனவே மேற்கொள்ளப்பட்ட அல்லது மேற்கொள்ளத் தீர்மானிக்கப்பட்ட திட்டங்கள் பற்றிப் பரந்தவகையில் முதலீட்டை மேற்கொள்ளும்முறை, தீர்மானங்கள் எடுப்பது என்பன சம்பந்தமான சில மேல்வாரியான வழிவகைகளைக் கொண்டனவாகவே இருந்தன. தூதுக்குழு முக்கிய மாற்றங்களை ஏற்படுத்தும்படி சிபாரிசு செய்த பொதுத்துறைத் தொழில்கள் போன்றவற்றில் அரசாங்கம் தான் ஏற்கனவே நிர்ணயித்த மார்க்கத்தைப் பின்பற்றுவதையே விரும்பியது. ஆகவே இந்த ஆரம்பகால முயற்சிகள், அரசாங்கம் திட்டமிட்ட பொருளாதார அபிவிருத்தியை ஏற்றுக்கொண்ட நிலையிலும் நாட்டில் பலமான பாதிப்புகளெதையும் ஏற்படுத்தவில்லை எனலாம்.

இலங்கையின் திட்டமிடல் முயற்சிகளின் ஒரு முக்கிய திருப்பம் என்று கூறக் கூடிய வகையில் அமைந்திருந்தது. 1956ல் புதிய அரசாங்கம் பதவிக்கு வந்த பின் 1959ல் வெளியிடப்பட்ட பத்தாண்டுத்திட்டமாகும். இதற்கு முன் புதிய அரசாங்கம் ஆறு ஆண்டுத்திட்டத்தை ஒத்தி வைத்து தேசிய திட்டமிடல் சபையையும் 1956ல் ஐப்பசியில் புதிதாக் கூட்டப்பட்டது. பிரதமமந்திரியே இதன் தலைவராவர். இச் சபையே நீண்டகாலத்திட்டமொன்றை வெளியிடத் தீர்மானித்தது. வெளிநாட்டு நிபுணரின் உதவியும் இதற்கெனப் பெறப்பட்டது. பத்தாண்டுத்திட்டத் தயாரிப்புடனேயே திட்டமிடல் நடவடிக்கை தனித்துவம் வாய்ந்ததாக்கப்பட்டுத் திட்டம் ஒன்றிடம் எதிர்பார்க்கப்படும் இணைக்கும் தன்மை, பொருளாதாரத்தை மேற்பார்வை செய்யும் தன்மை என்பன திட்டத்தில் காணப்பட ஆரம்பத்தன. முதன் முதலாக முழுப்பொருளாதாரத்துக்கு முரிய தேசிய திட்டமொன்று வகுக்கப்பட்டிருந்தது. இது மொத்தத் தேசிய உற்பத்தியில் ஏற்படவேண்டிய அதிகரிப்பு இலக்குகளைத் தெரியப்படுத்தியதுடன் என்னென்ன துறைகளில் இவ்வளர்ச்சி ஏற்படவேண்டுமென்ற துறைரீதியான பகுப்பு இதற்குரிய முதலீட்டு உள்ளீடுகள் எவ்வளவு? இதற்கான மொத்த முயற்சியில் அரசாங்கம், தனியார்துறை என்ற இரண்டினதும் பங்கு என்ன என்பன போன்ற அம்சங்களும் எடுத்துக் காட்டப்பட்டிருந்தன. திட்டத்தின் ஒரு முக்கிய முயற்சியாகத் தொழில் வாய்ப்புக்களைப் பெருக்குதல் அமைந்திருந்தது 1956 வரை நிலவிய தொழில்பகுப்பு முறைத்திட்டம் இல்லாமற் செய்து இதுவரை இல்லாதபடி கைத்தொழில் மயமாக்கத்திற்கு கூடிய முக்கியத்துவம் அளித்தது. பொருளாதாரத்தின் வளங்களை அது மதிப்பிட்டுப் பொருளாதாரத்தை முகாமைப்படுத்துவதற்குரிய கொள்கை அமைப்பையும் வெளிப்படுத்தியது.

இத்தகைய பல சிறப்பம்சங்களின் மத்தியிலும் துர்கிஷ்டவசமாகப் பத்தாண்டுத் திட்டம் ஒரு நிலையிலும் நடைமுறைப்படுத்தப்படும் ஒரு திட்டமாயிருக்கவில்லை. 1959ல் பிரதம மந்திரி கொலை செய்யப்பட்டபின் பதவிக்கு வந்த புதிய அரசாங்கம் பத்தாண்டுத்திட்ட நடைமுறையை ஒத்தி வைத்தது 1960 ஜூலையில் புதிய அரசாங்கம் பதவிக்கு வந்த பின் பத்தாண்டுத்திட்டத்தை விடப் பல வகையிலும் மட்டுப்படுத்தப்பட்ட முயற்சியொன்று 1961ல் ஆரம்பிக்கப்பட்டு மூன்றாண்டு நடைமுறைப்படுத்தல் திட்டம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டது. இது பத்தாண்டுத் திட்டத்திலிருந்தே பரந்த அளவில் தனக்குரிய விபரங்களைப் பெற்றுக்கொண்டது எனினும் வேறுபட்ட துறைகளுக்குரிய திட்டங்களை மூன்று வருடங்களில் நடைமுறைப்படுத்தக் கூடிய சிபார்சுகளாக அது வெளியிட்டது. பத்தாண்டுத் திட்டம் தவிர்ந்த ஏனைய திட்டங்களைப் போன்றே, அரசாங்கத்துறைக்குரிய திட்டங்கள்

எடுத்துக் கூறப்பட்டிருந்த போதும் தனியார்துறையிடமிருந்து எதிர்பார்க்கப்படும் முதலீட்டின் அளவு பற்றித் தகுந்த விபரங்களெதுவும் இருக்கவில்லை.

பத்தாண்டுத்திட்டம் ஒரு நிலையிலும் நடைமுறைப்படுத்தப்படாத போதும், நாட்டின் பிரதான அபிவிருத்திப் பிரச்சினைகளை நன்கு ஆராய்ந்து வரையறுத்ததுடன் வெவ்வேறு துறைகளுக்குரிய திட்டங்களை நன்கு வகுக்கப்படுவதற்குரிய சிறந்த அடிப்படையும் வகுத்துக் கொடுத்தது. திட்டமிடல் பற்றிய அரசாங்கத்தின் எதிர் காலச் சிந்தனை, துறைகளுக்குரிய திட்டங்கள், முற்றாகத் திட்டமிடல் நடவடிக்கை என்பவற்றில் பத்தாண்டுத்திட்டம் செலுத்திய செல்வாக்கு அளவுரீதியில் எடுத்துக் காட்டப்பட முடியாதெனினும் குறிப்பிடத்தக்க தொன்றாயிருந்தது. இது நடைமுறைப்படுத்தப்பட்டும் பொருளியலை முகாமைப்படுத்தப்படமுடியாமல் போனமைக்குப் பல காரணங்கள் இருந்தன. இதில் முக்கியமானது 1956 - 1960 க்குமிடையில் சமூக சூழ்நிலைகள் பொருளாதாரத்திட்டமிடலுக்குச் சாதகமற்றதாயிருந்தமையாகும். அபிவிருத்திக்குப் புறம்பான பல சமூகப் பிரச்சனைகள் இக்காலத்தில் முன்னணியில் நின்றன. நாட்டின் முக்கிய சாகித்தியத்திடமிருந்த பிரச்சினைகள் இனக் கலவரங்களாக வெளியிடப்பட்டன.

சமயப்பிரச்சினைகளுக்குத் தேவையற்வகையில் முக்கியத்துவம் அளிக்கப்பட்டது. சுருக்கமாகக் குறிப்பிடின் பொருளாதாரப் பிரச்சினைகளைவிட நாட்டின் பெரும்பான்மை மக்களின் மொழி, கலாச்சாரம் என்பவற்றுக்குத் தகுந்த இடமளிக்கப்படும் முயற்சிகளுக்கே மிகப் பிரதானமான இடம் வழங்கப்பட்டது. இதனால் அபிவிருத்திப்பிரச்சினைகள் மக்களுடன் தொடர்புபடுவதற்கு வாய்ப்பெதுவும் இருக்கவில்லை. ஆகவே சமூகப்பிரச்சினைகள் திட்டமிடல் முயற்சிகளுக்கு ஒரு தடையாயிருந்தன. இது தவிரத் திட்டமிடல் நடவடிக்கையும் பொருளாதாரத்தை நடைமுறைப்படுத்தும் முயற்சிகளும் எவ்வகையிலும் தொடர்பு பெறாமலிருந்தன. திட்டமிடலுக்குப் பொறுப்பாயிருந்தோர தம் முழுச்சக்தியையும் செலவிட்டுத் திட்டத்தைத் தயாரித்த அதே நேரத்தில் அரசாங்க வரவு செலவுத்திட்டம், சென்மதிநிலுவை என்பவற்றின் முகாமை நாட்டை ஒரு இக்கட்டான நிலைக்கு எடுத்துச்சென்று கொண்டிருந்தன. ஆகவே 1960 ன் ஆரம்ப வருடங்களிலேயே, வளங்கள் பற்றித் திட்டம் கொண்ட எடுகோள்கள் பலவும் பொருத்தமற்றவையாக மாறியிருந்தன. பத்தாண்டுத்திட்டத்தைப் பாதித்த மூன்றாவது அம்சம்யாதெனில் உயர்பதவிகளிலிருந்த உத்தியோகத்தர் மாற்றமடைந்தமையாகும்.

பத்தாண்டுத்திட்டம் எப்போதும் 1956 - 60 க்குமிடையில் ஆட்சி செய்த கூட்டரசாங்கத்துடனேயே சம்பந்தப்படுத்தப்பட்டது இதனால் புதிய அரசாங்கத்தின் நிதி மந்திரி பத்தாண்டுத் திட்டத்தைவிட வேறுபட்ட வலியுறுத்தலுடன் புதியதொரு திட்டத்தை விரும்பி நின்றார். குறுகியகால செயலாற்றததிட்டத்திற்கும் இதே கதியே ஏற்பட்டது. அப்போதைய நிதிமந்திரி 1962 ல் ராஜினாமாச் செய்ததும் அரசாங்க நடைமுறைப்படுத்தலில் தேசிய திட்டமிடும் திணைக்களம் தனது முக்கிய பங்கினை இழந்தது. 1964 ன் புதிய கூட்டரசாங்கத்தின் லங்கா சமசமாஜக் கட்சியின் நிதிமந்திரி புதிய கொள்கைகள், புதிய திட்டங்கள் என்பவற்றுடன் பல மாற்றங்களை வேண்டி நின்றார். இதனால் குறுகியகால செயலாற்றுத்திட்டமும் ஒத்திவைக்கப்பட்டது. தவிரவும் திட்டமிடல் ஒழுங்குமுறையிலும் இக்காலப்பகுதியில் பல மாற்றங்கள் ஏற்படுத்தப்பட்டன. 1956 க்கு முன்பிருந்த செயலகம் நீக்கப்பட்டு அவ்விடத்தில் தேசிய திட்டமிடும் சபை ஒன்று ஏற்படுத்தப்பட்டது. இதற்குரிய சேவை

யைச் செய்வதற்கென வேறொரு திட்டமிடல் செயலகமும் உருவாக்கப்பட்டது. திட்டமிடற்சபை பிரதமமந்திரியைத் தலைவராகக் கொண்டு 12 அங்கத்தவரை உடையதாக இருந்தது. 1960 ல் தேசிய திட்டமிடல் சபையும் நீக்கப்பட்டு அவ்வி டத்தில் பிரதம மந்திரியின் கீழ் தேசிய திட்டமிடல் திணைக்களம் அமைக்கப் பட்டது. திட்டங்களை வகுப்பதே இதனுடைய முக்கிய கடமையாயிருந்தது. இவ்வ கையில் இது ஆலோசனை கூறுவதொன்ருகவே இருந்தது. இது சமர்ப்பிக்கும் திட் டங்கள் அரசாங்கத்தினுல் ஏற்றுக்கொள்ளப்படாது விட்டால் அது நடைமுறைப் படுத்துவதற்கு எதுவித சந்தர்ப்பமும் இல்லை.

1965 70 க்குமிடைப்பட்ட காலப்பகுதி இலங்கையின் திட்டமிடல் நடவடிக்கையை பொறுத்து ஒருவகை மாறுபட்ட காலப்பகுதி எனலாம். ஆறுவருட முதலீட்டுத் திட்டம், பத்தாண்டுத்திட்டம், குறுகியகால செயலாற்றுத்திட்டம் என்பவற்றிலான அனுபவம், திட்டமிடுவோரைப் பொறுத்துத் திட்டங்களின் நடைமுறைப்படுத்தும் தன்மையில் பலத்த சந்தேகங்களை ஏற்படுத்தியிருந்தது ஆகவே தொடர்ந்தும் திட் டங்களை வகுப்பதில் காலத்தையும், சக்தியையும் செலவிடுவதற்குப் பதிலாக பொரு ளாதாரத்தை முகாமைப்படுத்துவதில் கூடிய கவனம் செலுத்தி, குறிப்பிட்ட சில வழிகளினூடாக பொருளாதாரத்தை நெருக்கடிகளிலிருந்து விடுவித்துச் செல்வதற் குரிய மார்க்கங்கள் வகுக்கப்பட வேண்டுமெனக் கூறப்பட்டது. திட்டமிடல் நிறு வனம் நீண்டகாலத் திட்டத்தைத் தீட்டுவதற்குப் பதிலாக அந்நிய செலாவணி வரவு செலவுத்திட்டம், மூலதன அபிவிருத்தி வரவு செலவுத்திட்டம் என்ற இரண் டையும் தன்னுடைய நேரடிக் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்து வளங்களைச் சிறந்த முறையில் ஒதுக்கீடு செய்வதற்குரிய முறைகளைக் கையாண்டது. கூடியளவு வெளிநாட்டு உதவி, உள்நாட்டு விவசாய விருத்திக்குதவக் கூடிய கைத்தொழில் கொள்கை, சிறந்த விலை நிர்ணயமுறை அரசாங்க முதலீட்டின் தரத்தை உயர்த்தக் கூடிய வகையிலான முயற்சி என்றயாவும் இதிலடங்கின. இதைவிட நேரடித் திட் டமிடல் முயற்சிகளுக்கு இரண்டாந்தர இடமே வழங்கப்பட்டது. முழுப்பொருளா தாரத்துக்கு முரிய உள்ளீட்டு - வெளியீட்டு அட்டவணைகள் வகுக்கப்பட்டு ஒரு பெரும் பாக முறையில் பொருளாதாரம் வழிநடத்தப்பட நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டன. நேரடித் திட்டமிடல் முயற்சிக்கு இத்தகைய நடைமுறைகள் மறைமுக மான நன்மையைத் தருவனவாகவே காணப்பட்டன. தரவுகளைச் சேகரித்து அவற் றைத் தரப்படுத்தும் முயற்சி பெரும்பாகப் பொருளியல் ரீதியான தீர்வுகளைக் கூறு தல் என்பன பொருளியல் அமைப்பின் முரண்பாடுகளை வெளிப்படுத்தி வேறுபட்ட துறைகளின் கொள்கை வகுத்தலில் ஈடுபடும் மந்திரிகளுக்கு உதவியாக அமையக் கூடியதாக இருந்தது. 1972 - 76 க்குரிய ஐந்தாண்டுத் திட்டத்தை வகுக்க முற் பட்ட விடத்து 1965 - 70 க்குமிடைப்பட்டகால இந்நடவடிக்கைகள் பெரிதும் உதவி யாக இருந்தன.

1965 – 1970 காலப்பகுதி திட்டமிடல் பொறுத்து இன்னொரு வகையிலும் முக் கியம் வாய்ந்ததெனலாம். அது தேசியரீதியில் முழுப்பொருளாதார அமைப்புக்கும் திட்டமிடாமல் அபிவிருத்திக்குக் கூடிய வாய்ப்புடைய சில முக்கிய துறைகளைத் தெரிவு செய்து அவற்றில், ஒருமுகப்பட்ட கவனத்தைச் செலுத்தியது உணவு, உற் பத்தி, உல்லாசத்துறை, தனியார் கைத்தொழில் என்பன இவற்றில் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கவை. இதனுல் நாட்டின் நிர்வாக அமைப்பும் எல்லாத்துறைகளிலும் கவனத்தைச் செலுத்தித் தன் சக்தியை விரயம் செய்யாமல். ஒரு சிலவற்றில் கூடி யளவு திறமையுடன் கவனம் செலுத்தமுடிந்தது.

1965 - 1970 காலப்பகுதியிலேயே திட்டமிடல் பொருளாதார அலுவல்கள் அமைச்சும் பிரதமமந்திரியின் கீழ் நிறுவப்பட்டது இதற்கு முன் திட்டச் செய்முறைக்கும் வலுப்பாயிருந்த சபையோ, செயலகமோ மந்திரியின் நேரடி நிர்வாகத்துக்கும் புறம்பானதாக இருந்தது. தற்போது மந்திரியின் கீழ் நேரடியாக அது கொண்டு வரப்பட்டதும் அரசாங்கத்தின் நேரடிக் கட்டுப்பாட்டின்கீழ் திட்டமிடல் வந்ததுடன் மேற்பார்வை, இணைப்பு என்பனவும் திறமையுடன் செயற்படுத்த முடிந்தன. மந்திரிசபையின் திட்டமிடற்குழு, நிதிமந்திரியையும், ஏனைய முக்கிய மந்திரிகளையும் கொண்டு ஆரம்பிக்கப்பட்டது. பிரதமமந்திரி இதன் தலைவராயிருந்தார். ஆகவே 1965 - 1970 காலப்பகுதியில் திட்டங்களை வகுப்பதில் கூடிய கவனம் செலுத்தாமல் பொருளாதார முகாமையிலேயே கூடிய கவனம் செலுத்தப்பட்டது.

1970ன் புதிய அரசாங்கம் இந்நிர்வாக அமைப்பைத் தொடர்ந்தும் வைத்திருந்தது. வேலைவாய்ப்பில் அரசாங்கம் கொண்டிருந்த கூடிய கரிசனையை வெளிப்படுத்தும் முகமாக திட்டமிடல் அலுவல்கள் அமைச்சு என அழைக்கப்படலாயிற்று தேசியத்திட்டமொன்றை வகுப்பது புதிய அரசாங்கத்தின் தேர்தல் வாக்குறுதிகளில் ஒன்றாக இருந்தால் அதன் முதல் முயற்சி இதுவாகவே இருந்தது. இதன் விளைவே ஐந்தாண்டுத் திட்டமாகும். உறுதியான பொருளாதார அபிவிருத்தியே திட்டத்தின் முக்கிய நோக்கமாகும். இதற்கென சமூக பொருளியல் கொள்கைகளுக்கிடையிலிருந்த முரண்பாட்டை நீக்கி, வேலைவாய்ப்பை அதிகரித்தல், சேமிப்பை அதிகரித்தல் வருமான சமமின்மையைக் குறைத்தல், உதவிப்பணத்திற்குப் பதில் உற்பத்தித் திறனை அதிகரித்தல், குறைந்த வருமானமட்டத்திலுள்ளோருக்கு வருமான உயர்வு வழங்குதல் என்பவற்றைச் சாதிக்க முயன்றது. இக்காலப்பகுதியில் பொருளாதார நெருக்கடிகள் முன்னொரு போதும் இல்லாத வகையில் கூடியிருந்ததால். மற்றைய திட்டங்களுக்கில்லாதபடி மக்கள் கவனமும் இதன்பால் திரும்பியிருந்ததுடன் இதனை அமுல்நடத்துவதில் அரசாங்கத்தின் உறுதியும் கூடிய வலுவுடையதாயிருந்தது. ஐந்து ஆண்டுத்திட்டம் எல்லாவகையிலும் ஏனைய தேசிய பொருளாதாரத் திட்டங்களின் தன்மைகளைக் கொண்டதாகவே இருந்தது. இதில் வேலைவாய்ப்புக்குக் கூடிய இடமளிக்கப்பட்டு நவீன கைத்தொழில் முறையைப் புதிய அபிவிருத்தியின் மத்தியில் விருத்தி செய்வதற்கு வாய்ப்புகள குறைவாயிருப்பதால் வேலைவாய்ப்புகளும் இதில் மட்டுப்படுத்தப்பட்டிருக்குமெனக் கருதி உள்நாட்டு விவசாயத் துறையின் வளர்ச்சிக்கு கூடிய முக்கியத்துவம் அளிக்கப்பட்டது. கைத்தொழில் முயற்சி, சிறியளவுக் கைத்தொழிலாளரை ஊக்குவிப்பதுடன் விவசாயரீதியான கைத்தொழிகளை ஊக்குவிப்பதாயுமிருக்க வேண்டுமெனக் கருதப்பட்டது. இதன் மூலம் கிராமியப்பகுதி நவீனமயமாகுமென எதிர்பார்க்கப்பட்டது. இதனுல் ஏற்கனவே எடுத்துக்காட்டியபடி ஐந்து ஆண்டுத்திட்ட நடைமுறை கூட பல சிக்கல்களை எதிர்நோக்க வேண்டியதாகவே இருந்தது.

திட்டமிடல், திட்ட நடைமுறை என்பவற்றில் இதுவரை பொதுவாக விளக்கப்பட்ட அம்சங்களும் குறிப்பாக 1960, 1964, 1970 ஆகிய காலப்பகுதிகளில் ஏற்பட்ட மாற்றங்களும் இலங்கையின் திட்டமிடலின் ஒரு முக்கிய குறைபாட்டைக் காட்டி நிற்கின்றன. அதாவது திட்டங்கள் தொடர்ச்சியாக நடைமுறைப்படுத்தப்படுவதில் அத்துடன் தொடர்புபடாத தனிப்பட்ட அம்சங்கள் கொண்ட பங்கேயாகும். அரசியல் நோக்கங்கள் இதற்கும் பின்னனியாயிருந்தன. அரசியல் காரணங்களின் அடிப்படையில் திட்டமிடலுக்குப் பொறுப்பாயிருந்தோர் மாற்றப்பட்டதுடன் புதிதாக பதவிக்கு வரும் அரசாங்கம் மக்கள் மத்தியில் தன் மதிப்பை

உயர்த்திக் கொள்ளும் நோக்குடன். ஓரளவுக்கு நியாயமற்ற வகையில் நிலவும் திட்டத்தைக் கண்டனம் செய்யும் முறையும் காணப்பட்டது. சிலவேளைகளில் ஒரே கட்சியில் மந்திரிகள் மாறுவதன் மூலமோ அவர்களுடைய தனிப்பட்ட கொள்கைகள் மாறுவதோ திட்டத்தின் தொடர்ச்சியைப் பாதிப்பதைக் காணமுடிகிறது. பத்தாண்டுத்திட்டம் இதற்கு சிறந்த உதாரணமாகும். இது S. W. R. D. பண்டாரநாயக்காவினால் ஏற்படுத்தப்பட்டபோது தொடர்ந்து S. L. F. P. பதவிக்கு வந்தும் அதனை ஆக்கியோர் பொறுப்பிலிருந்து அது விடுவிக்கப்பட்டது. குறுகிய கால நடைமுறைப்படுத்தும் திட்டமும் நிதிமந்திரியின் ராஜீனாமாவும் இதே கதியை எதிர்நோக்கியது திட்டமிடலுக்கு பொறுப்பேற்கும் ஒவ்வொரு புதிய நபரும் தாம் புதிதாக ஏதாவது செய்து காட்ட வேண்டுமென்பதில் ஆவலாய் இருந்திருப்பதாகவே தெரிகிறது. பழையனவற்றைத் தொடர்ந்து செய்து அதன் நன்மைகளை விரிவுபடுத்துவதில் கவனம் செலுத்தப்படவில்லை. இதனால் திட்ட ஆக்கத்தில் காலமும் சக்தியும் வீணே விரயம் செய்யப்பட்டதுடன் நடைமுறைப்படுத்துவதில் எதுவித கவனமும் செலுத்தப்படவில்லை. இவ்வாறாக இலங்கையின் அரசியல் நிலையும் அரசாங்கமும் திட்டத்திற்கு பொறுப்பாயுள்ளோர் மாறுவதும் ஏனைய சிக்கல்களுடன் சேர்ந்து இலங்கையின் திட்டமிடலைப் பெருமளவுக்குப் பாதித்துள்ளன.

1977 ல் பதவிக்கு வந்த அரசாங்கம் வெளிப்படையாகவே கட்டற்ற பொருளாதார மொன்றினூடாகவே பொருளாதார அபிவிருத்தி சாத்தியமானது என எடுத்துக்கூறியிருப்பதால் திட்டமிடல் முயற்சிகள் எதிலும் ஈடுபடவில்லை. எனினும் வேறுபட்ட நிலையில் ஏற்படக்கூடிய திட்டத்தீர்மானங்களின் செயலாக்கத்தை உறுதிப்படுத்தும் பொருட்டு திட்டச்செயலாக்க அமைச்சு ஒன்றினை ஏற்படுத்தியுள்ளது.

சமூகஒளிக்கு எமது நல்லாசிகள்

சிறந்த வீடியோ படப்பிடிப்பிற்கு
சிறந்த வர்ண நிழற் படப்
பிடிப்பிற்கும்.
T. V. வீடியோ டெக், வீடியோ
கமரா பழுது பார்ப்பதற்கும்

**எவர் விஷன்**
**21, மணிக்கூட்டு வீதி,**
**யாழ்ப்பாணம்.**

சமூக ஒளிக்கு எமது நல்லாசிகள்
★
**A/L வகுப்புகளுக்கு**
**விஞ்ஞான கணிதத் துறைகளுக்கான சிறந்த கல்விக்கு**
**NEW SCIENCE ACADEMY**
B. M. C. முன்பாக
யாழ்நகர்.

# உரும்பிராய் மக்களின் வாழ்க்கைத்தரமும்
## -அடிப்படைத் தேவைகளும் ஒரு சமூக பொருளாதார மதிப்பீடு

செல்வி: நந்தினி சிவசுப்பிரமணியம்

உதவிவிரிவுரையாளர் பொருளியல்துறை யாழ் பல்கலைக்கழகம்.

அபிவிருத்தி முயற்சியில் ஈடுபடும் இன்றைய பொருளாதார உலகில் அபிவிருத்தியின் அளவீட்டை நிர்ணயிப்பதில் சமூக பொருளாதார மதிப்பீடுகளே உறுதுணையாக விளங்குகின்றன. அபிவிருத்தியியல் என்பது ஓர் வளர்ந்து வரும் இயலாக இருப்பதனுல் அபிவிருத்தியை அளவிடும் கருவிகளும் காலத்துக்குக் காலம் புதியதும் முன்னேற்றமானதுமான பல மாற்றங்கட்கு உட்படுகின்றன. இவ்வகையில் அண்மிய ஆண்டுகள் வரை அபிவிருத்தியை அளவிடும் முக்கிய அளவீடாக தனித்து தலாவருமான மட்டம் மட்டுமே விளங்கியது. ஆனுல் இதன் பொருத்தமின்மைகள் அபிவிருத்தி அளவீட்டில் எவ்வாறு தவறுன முடிவுகளை வெளிக் காட்டக் கூடும் என்பது பின்னர் சுட்டிக்காட்டப்பட்டு அபிவிருத்தியை அளவிடுவதில் ''அடிப்படைத்தேவை'' அணுகுமுறை புகுத்தப்பட்டது.

இதன் வழி 1979ல் Morris D Morris என்பவரால் வகுக்கப்பட்ட பௌதிக வாழ்க்கைப் பண்பு சுட்டெண் (Physical Quality of Life Index - PQLI) என்பது குறிப்பிடத்தக்கதாகும். இதனைத் தழுவிய முறையில் 1987ம் ஆண்டு உரும்பிராய் கிராமசேவகர் பிரிவில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வை அடிப்படையாகக் கொண்டு இக்கட்டுரை எழுதப்பட்டுள்ளது. இவ் ஆய்வுக் கட்டுரை ஓர் சமூக பொருளாதார மதிப்பீட்டு முறையில் உரும்பிராய் பிரதேச மக்களின் அடிப்படைத் தேவைகள் பூர்த்திசெய்யப்பட்டுள்ளதா என்பது பற்றி ஆராய்ந்துள்ளது.

சமூக பொருளாதார அபிவிருத்தி என்பது பொதுவாக மக்களின் வாழ்க்கைத் தரத்தில் ஏற்படும் முன்னேற்றத்தையே குறித்து நிற்பதாகும். அதாவது பௌதிக வாழ்க்கைப்பண்பு சுட்டெண் குறிகாட்டிகளான நீண்ட ஆயுள் எதிர்பார்க்கை, குறைந்த அளவான சிசு மரண வீதம், உயர்ந்த படிப்பறிவு வீதம், என்பவற்றை அடைவதற்கு உயர்ந்த வாழ்க்கைத்தரம் வேண்டப்படுகிறது. இவ் உயர்ந்த வாழ்க்கைத் தரத்தைப் பேண போசாக்கான உணவு, இருப்பிட வசதிகள், கல்வி, சுகாதாரம் போன்ற அடிப்படைத்தேவைகள் தகுந்த முறையில் நிறைவேற்றப்பட்டிருக்க வேண்டும்.

இவ் வாழ்க்கைத்தர நிலைமைகள் சமுதாயத்தின் வெவ்வேறு வருமான மட்ட குழுக்களுக்கேற்ப வேறுபட்ட நிலைமையில் காணப்படும். அரசாங்கமானது சமூகநல உதவிகளை வழங்கினுலன்றி ஒருவரது வாழ்க்கைத்தரம் அவரது வருமான மட்டத்தில் மட்டுமே தங்கியிருக்கும். எனவே வறுமையை ஒளிப்பதன் மூலமே மக்களின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்த முடியும். இவ்வகையில் சமூக பொருளாதார அபிவிருத்தியின் முக்கிய குறிக்கோளாக அமைவதும் வறுமை ஒளிப்பே ஆகும். இத்தகையநோக்கில் இங்கு வறுமையின் அளவீடுகளாக போசாக்கின்மை, தகுந்த வீட்டு வசதியின்மை, கல்வி வசதியின்மை, ஆரோக்கிய குறைவு என்பவற்றைக் கருதிய வகையில் இவ் ஆய்வுப் பிரதேச மக்களின் வாழ்க்கைத் தரநிலைமைகள் பற்றிய மதிப்பீடு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

முதலிலே இது ஒரு பிரதேச ஆய்வு என்ற அடிப்படையில் இப்பிரதேசம் குறித்த பொதுவான சில விபரங்கள் இங்கு முன்வைக்கப்படுவது அவசியமாகிறது. இப்பிரதேச இடஅமைவானது வட இலங்கையின் யாழ்ப்பாணக் குடாநாட்டில் உள்ளடங்கும் வலிகாமம் பிரதேசத்தின் தெற்காகவும் யாழ்ப்பாண நல்லூர் பிரிவு எல்லையை அடுத்ததாகவும் காணப்படுகிறது. சுமார் 4 சதுரமைல் விஸ்தீரணம் கொண்ட இவ் உரும்பிராய் கிராமசேவகர் பிரிவு, கோப்பாய் உதவி அரசாங்க அதிபர் பிரிவு எல்லைக்குட்பட்டதாகும். இக் கிராமத்தின் எல்லைக் கிராமங்களாக வடக்கே ஊரெழுவும் கிழக்கே நீர்வேலியும், தெற்கே கோப்பாயும் கோண்டாவிலும்,, மேற்கே உடுவிலும் அமைந்து காணப்படுகின்றன. இக்கிராமம் யாழ்ப்பாணம் – பலாலி வீதியும், கோப்பாய் – மருதனுமடம் வீதியும் இணையும் சந்திப்பை மையமாகக் கொண்டு உரும்பிராய் வடக்கு, கிழக்கு, தெற்கு, மேற்கு என்ற 4 உபபிரிவுகளாக உரும்பிராய் பட்டின சபையின் கீழ் இயங்குகிறது. இப்பிரதேசத்தின் முக்கிய பொருளாதார நடவடிக்கைகள் யாவும் இக் கிராமத்தின் மத்தியிலுள்ள உரும்பிராய் சந்தியை மையமாகக் கொண்டே காணப்படுகின்றன. இங்கு தான் இப் பகுதியின் பொதுச் சந்தையும் வர்த்தக நிலையங்களும் அமைந்து காணப்படுகின்றன.

இவ் ஆய்வுக் கிராமமானது அண்மைக் காலத் தரவுகளின் படி மொத்தமாக 2600 குடும்பங்களை உள்ளடக்கிய வகையில் 13,750 மக்கள் தொகையினரைக் கொண்டு காணப்படுகிறது. குடி அடர்த்தியைப் பொறுத்து இப் பிரதேசம் உள்ளடங்கும் வலிகாமம் தெற்கு பிரதேசமானது யாழ்குடா நாட்டிலேயே யாழ்நகர், நல்லூர் என்பவைக்கு அடுத்ததாக அடர்த்தி கூடிக்காணப்படுவதற்கு இப் பிரதேசத்தின் வளமான மண்ணும் சிறப்பான நன்னீர் வசதியுமே காரணமெனலாம்.

குடித்தொகை பண்பின் பாலமைப்பு குறித்து இப் பிரதேசத்தின் ஆண், பெண் விகிதாசாரத்தை நோக்கின் மேற்கொள்ளப்பட்ட ஆய்வின் தரவுகளின் படி:

ஆண்கள் விகிதாசாரம் — 43%

பெண்கள் விகிதாசாரம் — 56% ஆனல் தேசிய ரீதியாக நோக்கும் போது 1986 ம் ஆண்டு கணிப்பின் படி இலங்கையில்;

ஆண்கள் விகிதா சாரம் — 50,9%

பெண்கள் விகிதாசாரம் — 49% ஆகும். 1983ம் ஆண்டின் பின்னர் இப் பிரதேசங்களில் நிலவிய இராணுவ கெடுபிடிகள் காரணமாக இளைஞர்கள் பலர் நாட்டை விட்டு வெளியேறியமையே இத்தகைய நிலமைக்கு காரணமெனத் தெரியவருகிறது.

அடுத்து ஒரு சமூக அமைப்பில் பொருளாதார நுகர்வு நடத்தை குறித்தும் வேலைப் படை நிர்ணயம் குறித்தும் மனிதனின் வயதமைப்பு குறித்த தாக்கமும் முக்கியம் என்ற வகையில் வயதமைப்பு கூறுகளை நோக்குவது அவசியமாகிறது.

| | உரும்பிராய் | இலங்கை |
|---|---|---|
| 15 வயதுக்கு உட்பட்டோர் | 24% | 35% |
| 15 — 60 வயதுக்கு இடைப்பட்டோர் | 67% | 58% |
| 60 வயதுக்கு மேற்பட்டோர் | 9% | 6.6% |

(தரவுகள்; உரும்பிராய் வெளிக்கள ஆய்வு, இலங்கை – 1986 மதிப்பீடு)

தேசிய ரீதிதரவுகளுடன் ஒப்பு நோக்கும் போது இப்பகுதியில் இளையோர் எண்ணிக்கை குறைவாயும் முதியோர் எண்ணிக்கை உயர்வாயும் இருப்பது அவதானிக்கத்தக்கது.

தவிர இன்று சமூக பொருளாதார அபிவிருத்தி குறிகாட்டிகளில் முக்கியமானதாகக் கருதப்படும் எழுத்தறிவு விகிதம் குறித்து நோக்கின்

| | உரும்பிராய் | இலங்கை |
|---|---|---|
| 10 வயதுக்கு மேற்பட்டோரின் எழுத்தறிவு வீதம் | 81.7% | 87.2% |
| 10 வயதிற்கு மேற்பட்ட ஆண்களின் ,, ,, | 82.6% | 91.1% |
| 10 வயதிற்கு மேற்பட்ட பெண்களின் ,, ,, | 81.0% | 83.2% |

(தரவுகள்; உரும்பிராய் – வெளிக்கள ஆய்வு, இலங்கை – 1981 ன் குடிமதிப்பீடு)

இங்கு இச்சமூகத்தில் வாழும் வயது முதிர்ந்தோரின் (அ – து இலவச கல்வி வாய்ப்பை பெற்றிராத) உயர்வான விகிதாசாரம் காரணம் எழுத்தறிவு விகிதம் ஒப்பீட்டளவில் தேசிய விகிதத்தை விடக் குறைவாகக் காணப்பட்டாலும் உயர் கல்வி கற்றோர் என்ற முறையில் நோக்கும் போது இச் சமூகம் உயர்வான கல்வி மட்டத்தைப் பேணுவதை அறிய முடிந்தது.

விவாக அந்தஸ்து குறித்து இப்பிரதேசத்தில் திருமணமானோர், திருமணமாகாதோர் என்ற அடிப்படையில் நோக்கும் போது;

| | உரும்பிராய் | இலங்கை |
|---|---|---|
| ஆண்களில் திருமணமானோர் | 43% | 36% |
| பெண்களில் ,, | 45% | 56% |

தேசிய ரீதியான தரவுகளுடன் ஒப்பிடும் போது உரும்பிராயில் திருமணமான ஆண்களின் விகிதாசாரம் அதிகமாகவும் திருமணமான பெண்களின் விகிதாசாரம் குறைவாயும் இருப்பதைக் காணலாம். இதற்கான காரணம் திருமண வயதிலுள்ள (26–35) ஆண்களின் விகிதாசாரத்தை விட (6 . 8) திருமண வயதிலுள்ள (21 – 30) பெண்களின் விகிதாசாரம் (14%) உயர்வாக இருப்பதே எனலாம்.

குடும்பப் பருமன் என்ற அடிப்படையில் இப்பகுதியில் பெரிதும் 5-அங்கத்தவர்களைக் கொண்ட குடும்பங்களே அதிகம் காணப்படும் தன்மை குறிப்பிடத்தக்கதாகும்.

அடுத்து இது ஒரு சமூக பொருளாதார மதிப்பீடு என்ற வகையில், இம் மக்களின் பொருளாதார நிலமை எவ்வளவு தூரம் இவர்களது வாழ்க்கைத் தரத்தை நிர்ணயிக்கிறது என நோக்குவதற்கு இவர்களது வருமான மட்டம் பற்றிய விபரங்கள் தேவைப்படுகின்றன. இவ்வகையில் ஆய்வுக்குட்படுத்தப்பட்ட குடும்பங்களின் மொத்த வருமானம் அ–து குறிப்பிட்ட ஒரு தொழில் மூலமான வருவாய் மட்டுமன்றி வாடகை வருவாய், வெளிநாட்டிலிருந்தான பண அனுப்பல்கள் யாவும் உள்ளடங்கிய முறையில் குடும்பத்தின் மொத்த வருமானம் இங்கு கணிப்பிடப்பட்டது.

பின்வரும் அட்டவணை மூலம் இக்கிராம வருமான மட்ட அடிப்படையிலான வேறுபாடுகளை பொதுவாக நோக்கலாம்.

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1000 | ரூபாவுக்கு கீழ்ப்பட்ட | வருமானம் | பெறும் | குடும்பங்கள் | | 9.0% |
| 2000 | ,, | ,, | ,, | ,, | ,, | 15.0% |
| 2001 – 3000 ரூபாவுக்கு | இடைப்பட்ட | வருமானம் | பெறும் | குடும்பங்கள் | | 21.0% |
| 3001 – 4000 | ,, | ,, | ,, | ,, | ,, | 25.0 |
| 4001 – 6000 | ,, | ,, | ,, | ,, | ,, | 5.3 |
| 6001 | மேற்பட்ட | | ,, | ,, | ,, | 12.5% |

இதிலிருந்து இவ் ஆய்வுப் பிரதேசத்தில் சுமார் 10% க்கு உட்பட்டவர்களே பொருளாதார ரீதியாக மிகவும் வறிய நிலையில் உள்ளனரெனவும் ஏனையோரில் பெரும் பான்மையானோர் பொருளாதார ரீதியாக தங்களைத் தாங்கள் பேணக்கூடிய வருமான மட்டத்தில் உள்ளனரெனவும் கொள்ள முடியும். இருப்பினும் சுமார் 12% னர் 6000 க்கு மேற்பட்ட வருமானம் பெறும் நிலையானது இச் சமூகத்தில் நிலவும் வருமான ஏற்றத்தாழ்வுகளையும் துல்லியமாகக் காட்டுகிறது. இது நடைமுறை அரசின் தாராளமயப்பட்ட பொருளாதாரக் கொள்கையின் ஒரு விளைவே என்றால் அது தவறாகாது.

இங்கு அவதானிக்க முடிந்த ஒரு முக்கிய விடயம் யாதெனில் ஒரு குடும்பத்தில் ஒன்றுக்கு மேற்பட்ட உழைப்பாளிகள் மூலமோ அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட மூலகங்களூடாகவோ வருமானம் பெறும் குடும்பங்கள் தான் 2000ரூபாவுக்கு மேற்பட்ட மாத வருவாயைப் பெற முடிந்த தன்மையாகும். தவிர இக் குடும்பங்களின் வருமான மட்டங்களில் வெளிநாட்டிலிருந்தான பணப் பெறுகைகள் வகிக்கும் பங்கும் குறிப்பிடத்தக்கதாகும். ஆய்வின் தரவுப்படி சுமார் 25%மான குடும்பங்கள் இவ்வழியாக வருமானம் பெறுவதையும் அவர்களது உயர்வருமான மட்டத்தைப் பேணுவதில் இவ் வெளிநாட்டு வருவாய் முக்கிய பங்கு வகிப்பதையும் அவதானிக்க முடிந்தது. மேலும் இச் சமுதாயத்தில் வருமானம் பெறும் நோக்கில் சுமார் 2 % னர் மட்டுமே பொருளாதார நடவடிக்கைகளில் ஈடுபட்டிருக்க மிகுதி 75% னரும் அவர்களில் தங்கியிருப்போராக காணப்பட்டனர். குறிப்பாக இங்கு வேலைப்படையுள் உட்படக் கூடிய வயதுப் பிரிவினருள் (16 – 60வயது) ஆண்களில் சுமார் 50% னரும் பெண்களில் சுமார் 90% னரும் வேலை செய்யாதிருப்பதும் பொருளாதார ரீதியாக வேலைசெய்வோரின் சுமையை மேலும் கூட்டி விடுகிறதெனலாம்.

எனவே இத்தகைய பொருளாதாரப் பின்னணியின் அடிப்படையில் இவ் ஆய்வுப் பகுதி மக்களின் வாழ்க்கைத் தர நிலைமைகளை அடுத்து நோக்கலாம். இவ்வகையில் வாழ்க்கைத்தர நிலைமையைப் பேணும் அடிப்படைத்தேவைகளான உணவு, நுகர்வு, இருப்பிடவசதிகள், கல்வி, சுகாதார வசதிகள், போக்குவரத்து தொடர்பு ஊடக வசதிகள், மற்றும் குடும்பத்திட்டம் போன்ற அம்சங்களூடாக இப்பகுதி மக்களின் வாழ்க்கைத் தர நிலைமைகள் இங்கு சுருக்கமாக நோக்கப்பட்டுள்ளது.

முதலிலே போசாக்கான உணவு, நுகர்வு கருதி நோக்கும் போது இப் பகுதி மக்களின் நாளாந்த உணவு வகைகள் குடும்பத்தினரின் பொருளாதார வசதி கருதியும் அவர்களது சுவைத் தெரிவு கருதியும் மட்டுமே தீர்மானிக்கப்படுகிறதன்றி அவற்றின் உணவுப் பெறுமானம் கருதி திட்டமிடப்படாமலிருப்பதை காணமுடிந்தது. குறிப்பாக இவர்கள் மாப்பொருள் அடங்கிய உணவு வகைகளையே பெரிதும் உட்கொள்வதையும்

ஏனைய கனிப்பொருட்கள் அடங்கிய உணவு வகைகளைப் போதிய அளவில் சேர்க்காம லிருப்பதையும் அவதானிக்கக்கூடியதாகயிருந்தது. இங்கு பொதுவாக இவர்கள் போசாக் கான உணவை உட்கொள்ளாமைக்குரிய முக்கிய தடையாக அவர்களது பொருளா தார நிலமையைக் குறிப்பிட முடிந்தாலும் அம் மக்களின் உணவு போசாக்கு குறித்த போதிய அறிவின்மையும் ஒரு முக்கிய காரணியாக அடையாளம் காணப் பட்டமை குறிப்பிடத்தக்கது, தவிர பொதுவாக நோக்குமிடத்து இப்பகுதி மக்கள் தமது சரா சரி மாத வருவாயில் சுமார் 54% ஐ உணவு நுகர்வுக்காக செலவிடுவோராகக் காணப் படுகின்றனர். எனினும் இங்கு வருமானம் குறைந்த பிரிவினர் அ-து சுமார் 1/3 பங்கு மக்கள் பொருளாதார ரீதியாக போசாக்கான உணவு நுகர்வது குறித்து சிக்கல்களை எதிர்நோக்குவதையும் அவதானிக்க முடிந்தது.

அடுத்து இப்பகுதி மக்களின் இருப்பிட வசதிகள் குறித்து நோக்குமிடத்து இங்கு சுமார் 10% மான வீடுகள் மட்டுமே ஓலை வீடுகளாக இருக்க ஏனையவை கல்வீடுகளாக இருக் கின்றமையும் உடமை அடிப்படையில் 78% குடும்பங்கள் இங்கு சொந்த வீடுகள் வைத்தி ருப்பதும் குறிப்பிடத்தக்கதாகும். மலசல கூட வசதிகள் ரீதியாக 12.5% மான வீடு களே மலசலகூடவசதியின்றி உள்ளன. ஆனால் இலங்கையை மொத்தமாக நோக்கும் போது 31.1% மான வீடுகள் மலசலகூடவசதியின்றியிருப்பது இப்பகுதி மக்களின் ஓர ளவு மேம்பாடான சுகாதார நிலமையைக் காட்டுப்படுத்துகிறதெனலாம். தவிர இலங்கை யில் 17.6% மான வீடுகளே குழாய் நீர் வசதியுடன் இருக்க, இப்பிரிவில் 42% மான வீடுகள் குழாய் நீர் வசதியுடன் இருப்பதும் இலங்கையில் மொத்தமாக 15% மான வீடுகளே மின் வசதி பெற்றிருக்க ( இங்கு 78 % ன வீடுகள் மின்வசதி பெற்றிருப் பதும் ) குறிப்பிடத்தக்க அம்சங்களாகும்.

மேலும் இம்மக்களின் வாழ்க்கைத் தரம் குறித்து அறிய இம்மக்களின் பாவனையி லுள்ள வீட்டு உபகரணங்களின் தன்மை குறித்தவிபரங்களும் பெறப்பட்டன. அவ்வகை யில் ஓரளவு அத்தியாவசியமான உபகரணங்கள் எனக் கருதக் கூடிய வானொலிப்பெட்டி, துவிச்சக்கரவண்டி, ஸ்திரிகைப்பெட்டி, தையல் இயந்திரம், என்பன சுமார் 75 % மான வீடுகளில் காணப்பட்டமை இம் மக்களின் ஓரளவு சிறப்பு நிலையிலுள்ள வாழ்க்கைத் த ரத்தைக் காட்டுகிறதெனலாம்.

இவ் ஆய்வுப் பகுதியின் கல்வி வாய்ப்பு வசதிகள் குறித்து ஆராய்ந்த போது இங் குள்ள 4 பாடசாலைகளிலும் மொத்தமாக சுமார் 2500 மாணவர் வரை கல்வி கற்பதும் சுமார் 90 ஆசிரியர் வரை கல்வி கற்பிப்பதும் தெரிய வந்தது. இங்குள்ள 4 பாட சாலைகளில் உரும்பிராய் இந்துக் கல்லூரியில் மட்டுமே க. பொ. த உயர்தரக் கல்வி போதிக்கப்படுகிறது. இக் கல்லூரியில் உயர்கல்வி கற்பதற்கான வாய்ப்புகள் போதிய ளவு காணப்பட்டாலும் கூட இது ஓர் ஆண் – பெண் கலவன் பாடசாலையாக இருப் பதாலும் நகர்ப்புற பிரபல கல்லூரி மாணவர்கள் என்ற சமூக அந்தஸ்தை இக் கல் லூரி வழங்கத் தவறுவதாலும் பல பெற்றோர்கள் இக் கல்லூரியில் தமது பிள்ளைகளை மேற்படிப்பு படிக்க அனுமதிக்காமையை அறியக் கூடியதாகவிருந்தது. தவிர பாடசாலை கள் மூலம் கல்வி இலவசமாக புகட்டப்பட்டாலும் கூட கல்வி கற்போரில் சுமார் 60 % மான மாணவர்கள் பிரத்தியேகக் கல்வி பெறுவதையும் அவதானிக்க முடிந்தது. இவ்வாறு பிரத்தியேகக் கல்வி பெறுவது இன்று இப்பகுதி மக்களிடையே ஏற்றுக் கொள்ளப்பட்ட ஓர் சம்பிரதாயமாகையால் பாடசாலைகளில் ஆசிரியர்களின் கற்பிக்கும் ஆர்வமும் பெரிதும் குறைவடைந்து விட்டதென்றே கூறமுடியும்.

சுகாதார மருத்துவ வசதிகள் குறித்து நோக்கும் போது சுமார் 14,000 மக்கள் வரை வாழும் இப் பகுதியில் அரசின் சார்பாக ஒரு மருத்துவ பணிமனை மட்டுமே

சேவையாற்றுவது ஒரு குறைபாடாக அவதானிக்கப்பட்டது. எனவே இங்கு உள்நோயாளர்களை வைத்துப் பராமரிக்கக் கூடிய வகையில் ஒரு அரசாங்க வைத்தியசாலையொன்று அமைக்கப்பட்டு அங்கு 24 மணி நேர வைத்திய சேவை வழங்கப்படுவது இம்மக்களைப் பொறுத்து ஒரு அவசியத்தேவை எனலாம்.

அடுத்து இவ் ஆய்வின் போது குடும்பக்கட்டுப்பாட்டுத் திட்டம் குறித்து மக்களின் அபிப்பிராயங்கள் பெறப்பட்டபோது சுமார் 21% மான மக்கள் குடும்பக் கட்டுப்பாடு வழிமுறைகள் எதுவும் தமக்குத் தெரியாதென்று கூறிய போதும் சுமார் 94% மானவர்கள் குடும்பக்கட்டுப்பாட்டை மேற்கொள்ள விரும்புவதாகக் கூறியமை இப்பகுதி மக்களின் குடும்பக்கட்டுப்பாடு குறித்த விழிப்புணர்வை சுட்டிக்காட்டுவதாயிருந்தது.

தவிர ஒரு சமூகத்தின் வாழ்க்கைத்தர முன்னேற்றத்துடன் இணைவாக தொடர்பு ஊடக பயனபாடு கருதப்படுகிறதென்ற வகையில் பத்திரிகை, வானொலி, தொலைக்காட்சி ஆகிய தொடர்பு ஊடகங்களின் பயன்பாடு பற்றியும் இப்பகுதியில் மதிப்பிடப்பட்டது. இவ் வகையில் இவ் ஆய்வுப் பிரதேசத்திலுள்ள 96% மான குடும்பங்கள் தினசரி செய்திப்பத்திரிகை படிக்கும் தன்மையானது இப்பிரிவு மக்களின் உயர்ந்த கல்வியறிவு வகிதத்தையும் நடப்பு விவகாரங்களில் இவர்கள் கொண்டிருக்கும் ஆர்வத்தையும் பிரதிபலிக்கின்றதெனலாம். அதே போல் வானொலி மூலமான பயன்பாடு பற்றி நோக்கிய போதும் 96% மான மக்கள் வானொலியைப் பயன்படுத்துவதையும் தொலைக்காட்சி மூலமான பயன்பாடு குறித்து 78% மான மக்கள் இதனைப் பயன்படுத்துவதையும் (அயல் வீட்டு தொலைக்காட்சி ஊடாகவும்) அறியமுடிந்தது. தொலைக்காட்சி பாவனை குறித்து குறிப்பிடும் போது இலங்கையில் சராசரியாக 32 நபர்களுக்கு 1 தொலைக்காட்சிப் பெட்டி இருக்கும் வேளையில் ஆய்வுப் பிரதேசத்தில் 12 நபர்களுக்கு 1 தொலைககாட்சிப் பெட்டி இருப்பது குறிப்பிடத்தக்க அம்சமாகிறது. மேலும் இவ ஆய்வு மேற்கொள்ளப்பட்ட காலத்தில் சட்டரீதியற்ற முறையில் உள்ளூர் தொலைக்காட்சி நிலையங்களால் ஒளிபரப்பப்பட்ட திரைப் படங்களே மக்கள் மத்தியில் தேசிய ரூபவாஹினி ஒளிபரப்பை விட வரவேற்பு பெற்றிருந்த தன்மையானது தொலைக்காட்சிப பயன்பாட்டை ஒரு பொழுதுபோக்கு தேவை கருதி மட்டுமே சுருக்கி விட்டிருந்ததெனக் கொள்ளலாம.

இறுதியாக ஒரு சமூதாயத்தின் அன்றாட நடவடிக்கைகளைச் சுலபமாக்கிக் கொடுக்கின்றதென்ற வகையில் அங்கு காணப்படும் போக்கு வரத்து வசதிகள் குறித்தும் மதிப்பீடு மேற்கொள்ளப்பட்டது. இவ் ஆய்வுப் பிரதேசமான உரும்பிராய் கிராமம் யாழ்நகரிலிருந்து சுமார் 4 மைல் தூரத்திலிருப்பதாலும் நாளாந்தம் பலர் இக்கிராமத்திலிருந்து குடாநாட்டின் ஏனையபகுதிகளுக்கும் செல்ல வேண்டியிருப்பதாலும் இங்கு போக்குவரத்து என்பது முக்கிய விடயமாகிறது. ஆய்வு மேற்கொள்ளப்பட்ட காலத்தில் இணுவில் புகையிரத நிலையம் ஊடாக புகையிரதப போக்குவரத்து சேவை தடைப்பட்டிருந்தமையால் வீதிப் போக்குவரத்துச் சேவை மட்டுமே இம்மக்களுக்குக் கிடைக்கக் கூடியதாக இருந்தது. இங்கு அரசபேருந்துகளுடன் தனியார் மினிபஸ் வண்டிகளும் சேவையில் ஈடுபடுவதால் யாழ் – பலாலி வீதியூடான போக்கு வரத்து ஓரளவு சிறப்பான முறைல் இயங்குகின்ற போதும் கோப்பாய் – மருதனுமடம் வீதியூடான சேவை ஓரளவு மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயேஇருந்தமை அவதானிக்கப்பட்டது. தவிர இப்பகுதி மக்களில் சுமார் 70% மானோர் தமது பிரதான போக்குவரத் ஊடகங்களாக துவிச்சக்கரவண்டிகளையும் பேருந்து வண்டிகளையுமே பயன்படுத்துவதைக் காணமுடிந்தது. இவ் ஆய்வு மேற்கொள்ளப்பட்ட காலத்தில் நிலவிய எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக போக்குவரத்து செலவுகள் சுமார் இருமடங்காக உயர்ந்து காணப்மட்டமை

தொகுத்து நோக்குமிடத்து இவ் ஆய்வுக் காலப்பகுதியில் நிலவிய சில விசேட நிலைமைகள் குறிப்பாக எரிபொருள்த் தட்டுப்பாடும் அதனுடன் இணைவாக போக்குவரத்துச் சேவைகள் சீர்குலைந்து காணப்பட்டமையும் இப் பகுதி மக்களின் பொருளாதார நிலைமையையும் வாழ்க்கைத்தரத்தையும் வெகுவாகப் பாதித்து விட்டிருந்ததைக் காண முடிந்தது. தவிர அரசியல் ரீதியாக நோக்குமிடத்தும் சிறப்பாக ஆய்வு மேற்கொள்ளப்பட்ட காலப்பகுதியில் இவ் ஆய்வுப் பிரதேசம் உட்பட்ட முழுப்பிராந்தியமும் தேசிய அரசினால் வெகுவாகப் புறக்கணிக்கப்பட்டிருந்த தன்மையும் இம் மக்களின் பொருளாதாரத் திடநிலையை குழப்பி விட்டிருந்ததுடன் இவர்களின் வாழ்க்கை நிலைமையையும் தளம்பலடையச் செய்துவிட்டிருந்ததெனலாம். எனினும் நிலவிய அசாதாரண சூழ் நிலைகள் மத்தியிலும் இப்பிரதேச மக்கள் சமூகமானது இன்று யாழ் குடாநாட்டில் மிகவும் துரிதமாக முன்னேறிவரும் சமூகங்களில் ஒன்றாகக் காணப்படுவதும் இக் கிராம சமூகத்தவரின் வாழ்க்கைத்தர நிலைமைகள் ஓரளவு மேம்பாடான நிலைமையில் காணப் டுவதும் குறிப்பிடத்தக்கதாகும்.

சமூக ஒளிக்கு எமது நல்லாசிகள்

ராஜா கிறீம் ஹவுஸ்

யாழ்ப்பாணம்.

*சுத்தமாகவும், சுகாதாரமாகவும், சுவையாகவும்*
*ஐஸ்கிறீம் வகைகள், சிற்றுண்டி வகைகள்*
*தயாரிப்பதில்*

**யாழ் நகரில் முன்னணி வகிப்போர்**

*RAJAH CREAM HOUSE*

*36, Kasturiar Road,*
*JAFFNA.*

*NEW RAJAH CREAM*
*HOUSE & CAFE*

*64, Stanley Road,*
*JAFFNA.*

அழகிற்கு அழகு செய்யும்
அழகிய தங்கப் பவுண் நகைகளுக்கு

நதியா ஜுவல்லறி

*(ஸ்ரான்லி வீதி சந்தி)*

2, கஸ்தூரியார் வீதி,

யாழ்ப்பாணம்.

**உங்கள் ஆதரவுக்கு நன்றி!**

★ ஜவுளி உலகின் புதிய சங்கமம் ★

卐 பலவகைப் பிடவைத் தினுசுகளையும்

卐 நவநாகரீக றெடிமேட் உடைகளையும்

卐 திருமணவைபவங்களுக்கேற்ற பட்டுப் பிடவைகளையும்

நியாயமான விலையில் பெற்றுக்கொள்ள

நீங்கள் நாட வேண்டிய ஸ்தாபனம்.

# மணி மாளிகை

100, கண்டி வீதி, சாவகச்சேரி.

சமூகஒளிக்கு எமது நல்லாசிகள்

## வி. எம். கே.

## ஜுவலர்ஸ்

சாவகச்சேரி

சமூக ஒளிக்கு எமது நல்லாசிகள்

## வித்தியா ரெக்ஸ்

இல 14, நவீன சந்தை,

சாவகச்சேரி

## குகன் ஸ்ரோர்ஸ்

கண்டி வீதி,

பளை.

உ

பல சரக்கு வியாபாரிகள்

பலவகைப் பிடவை. வகைகளுக்கும்

தரமான றெடிமெட் உடைகளுக்கும்
சிறந்த இடம்

## உ த ய ம் ஸ்

33, கண்டி வீதி,

பளை.

## குலம் வீடியோ ஹோம்

நவீன சந்தை,

சாவகச்சேரி.

உ

வீடியோ படப் பிடிப்பாளர்கள்

அத்துடன் வீடியோ கெசற்
வாடகைக்கும்
பெற்றுக் கொள்ளலாம்.

## கே. கணபதிப்பிள்ளை

## அன் சன்ஸ்

கண்டி வீதி, பளை.

(மாக்கற்)

பிரபல பலசரக்கு வியாபாரிகள்

With The Best Compliments
From,

# NIRU TUTION CENTRE

## A/L 91

*Arts, Commerce and Science Classes*
*Already Started*

*Best Teachers and Best Location Announcement to Parents and Guardians of Children For Future Education.*

*Contact Us:*

**Niru Tution Centre**
*KONDAVIL.*

# வெளிவாரிப் பட்டப் படிப்புகள்

கலைமானி B. A.
விஞ்ஞானமானி B. Sc.
வணிகமானி B. Com.

*க. பொ. த. உயர்தரம் 3 பாடங்களில் சித்தி அல்லது பயிற்றப்பட்ட ஆசிரியர்கள் விண்ணப்பிக்கலாம்.*

★

விபரங்களுக்கு:

**பட்டப் படிப்புக் கல்லூரி**
*148/1 ஸ்ரான்லி வீதி,*
*யாழ்ப்பாணம்.*

*PUNITHA JUWELLERY MART*

**32, *Kasthuriyar Road.* *Jaffna.***

நவநாகரீக டிசைன்களுக்கு
உத்தரவாதத்திற்கு
உறுதியான வேலைக்கு
இன்றே விஜயம் செய்யுங்கள்!

ஓடர் நகைகள் குறித்த தவணையில்
செய்து கொடுக்கப்பெறும்

**புனிதா ஜுவல்லறி மார்ட்**

32, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

*T. P.* **24279**

*GOLDEN T. V. TRADE CENTRE*

**கோல்டன் T. V. ரேட் சென்ரர்**

*Dealers in:*

*T. V. Radio, Eversilver, Presentation Articles Etc.*

*2A, Stanley Road.* *JAFFNA.*

ஓடர் நகைகள் 22 கரட்டில்
குறித்த தவணையில்
செய்து கொடுக்கப்படும்.

**செல்லையா சிவபாதலிங்கம்**

வைரக்கல் நகை வியாபாரம்

218H, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்,

தொலைபேசி: **23794**




தையல் உலகின் நவீன
முன்னோடிகள்

**ஆப்தீன்**

5, ஜும்மா பள்ளிவாசல் லேன்,
(பெரியகடை)
யாழ்ப்பாணம்.
கிளை, 108/3 நாவலர் வீதி, யாழ்.
(இந்து சந்தி அருகாமை)

*General Merchants & Commission Agents.*

*Wholesale & Retail Dealers*

*in Food Stuffs & Groceries*

**Pettah Agency**

**பெட்டா ஏஜன்சி**

*16 A Stanley Road,* *Jaffna.*

## கோபால் ஜுவல்லர்ஸ்

துரையப்பாபத்தர் கோபாலசாமி

*தங்க வைர நகை வியாபாரம்*

*நவ நாகரீக டிசைன்களிலான*
*தங்க ஆபரணங்களுக்கு*
*சிறந்த ஸ்தாபனம்.*

ஓடர் நகைகள் உத்தரவாதத்துடன்
செய்து கொடுக்கப்படும்.

*GOPAL JEWELLRS*
*Duraiappah Pathar Gopalasamy*
*Jeweller & Gem Merchant*

*82/5, Kasturiar Road,*
*Jaffna.*
*T. P.* **22170**

## கே. கே. வி.

**யாழ்ப்பாணம் நகை மாளிகை**

*தங்க வைர நகை வியாபாரம்*

*82/4 கஸ்தூரியார் வீதி,*
*யாழ்ப்பாணம்.*

ஓடர் குறித்த தவணையில்
சிறந்த முறையில் செய்து
கொடுக்கப்படும்.

*K.K.V. Jaffna Jewel House*
*84/4 Kasturiar Road, Jaffna.*
தொலைபேசி: **021-22362**

## RATHIGA JEWELLERS

*Jewellery Merchants*

*222, Kasturiar Road, Jaffna.*

## ராதிகா
## ஜுவல்லர்ஸ்

*தங்க நகை வியாபாரம்*

*222, கஸ்தூரியார் வீதி,*
*யாழ்ப்பாணம்.*

## Mathy Jewellery

*226, Kasturiar Road, Jaffna.*

*நவநாகரீக டிசைன்களுக்கு*
*உத்தரவாதத்திற்கு*
*உறுதியான வேலைக்கு*

இன்றே விஜயம் செய்யுங்கள்
ஓடர் நகைகள் குறித்த தவணையில்
செய்து கொடுக்கப் பெறும்.

## மதி ஜுவல்லறி

## ரட்ணம்ஸ்

பஸ் நிலேயம்,

பளை.

பிரபல பலசரக்கு வியாபாரம்

பல வகைப் பிடவைத்

தினுசுகளேயும் தரமான

றெடிமெட் உடைகளேயும்

தேர்ந்தெடுக்க சிறந்த ஸதாபனம்

## சிவா றெக்ஸ்ரைல்ஸ்

இல 5 கண்டி வீதி, பளை.

பிரபல பல சரக்கு வியாபாரிகள்

## சாந்தி என்ரப் பிறைஸ்

கண்டி வீதி, பளை.

தற்காலத்திற் கேற்ப அழகிய
கலே நயம்மிக்க

**22** Kt. **21** Kt. **20** Kt.
தங்க நகைகளே ஆர்டர் செய்து
பெற்றுக் கொள்ள அன்புடன்
அழைக்கின்றோம்.

## ஆர்த்தி ஜுவல்லர்ஸ்

வரையறுக்கப்பட்ட (தனியார்) நிறுவனம்
111, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

போன்: **23628**

தங்கப்பவுண் நகை வியாபாரம்

நித்திா கல்யாணி

ஜுவல்லறி

162, கஸ்தூரியார் வீதி,

யாழ்ப்பாணம்.

சமூக ஒளிக்கு எமது நல்லாசிகள்

Kalyani Cream House

73, Kasturiar Road, Jaffna.

T. P. 24077

★

Dealers in Paints & Hardwares

Murugan Traders

முருகன் ரேடர்ஸ்

21, Clock Tower Road, Jaffna.

T. P. 23873

வட இலங்கையில் எல்லா விதமான மணிக்கூடுகள், வானொலி பெட்டிகள் மற்றும் T. V., டெக், மின்சார உபகரணங்கள் திருத்துவதிலும் விற்பனையிலும் பிரசித்தி பெற்றவர்கள்.

★

Rathy Watch Works & Stores

BRANCH: T. V. RATHY

42, 44, 46, Kasturiar Road,
JAFFNA.

T. P. 23103

எல்லா வகையான கலர் சுருள்களும்
பிரிண்டிங்களும் கிடைக்கும்
இடம்

## R. G. Stores

*(B. R. C. No.* **6688***)*

*293, Clock Tower Road, Jaffna.*

*Dealers in Fancy Goods and Photographic Meterials*

## தீபா ஜுவல்லறி

தங்கப்பவுண் நகை வியாபாரம்
22 கரட் தங்க நகைகள் ஓடருக்கு
உத்தரவாதத்துடன்
செய்து தரப்படும்.

நவீன வேலைப்பாடுள்ள தங்கப்
பவுண் நகைகள் உத்தரவாதத்
துடன் கிடைக்கும்.

## Theepa Jewellery

*177, Kasturiar Road, Jaffna.*

*CHUNNAGAM CERAMIC SALES CENTRE*

*Dealers in Marble Items & S. Lon: P. V. C. Pipes Fitings Contractrors.*

## Chunnagam Ceramic Centre

*116, K. K. S. Road*
*CHUNNAGAM.*

வள்ளுவர் நெறியில் வையகம் வாழ்க.



25 மில்க்வைற் நீல சோப் மேலுறைகளை சேகரித்து அனுப்பி அழகிய மூவர்ண திருவள்ளுவர் படத்தையும் திருக்குறள் ஸ்ரிக்கரையும் பரிசாக பெற்றுக் கொள்ளுங்கள்.

நாளும் நற்பணி செய்திட தங்கள்
ஆதரவை நாடும் - மில்க்வைற் -

## மில்க்வைற் சவற்காரத் தொழிலகம்

உரிமையாளர்: கனகராசா ஜே. பி.
525/2 காங்கேசன்துறை வீதி.
த. பெ. இல. 77
யாழ்ப்பாணம்.
தொலைபேசி: **23233**

# நிரு ரியூசன் சென்ரர்

ஸ்ரேசன் றேட், கோண்டாவில்.

## A/L 90, 91ம் ஆண்டுக்கான கலை வர்த்தக விஞ்ஞான வகுப்புக்கள் நடைபெறுகின்றன.

| | | |
|---|---|---|
| *இரசாயனவியல்* | — | திரு. செல்வா |
| *பௌதீகம்* | — | திரு. கணேஸ் |
| *தாவரவியல்* | — | திரு' பாலா |
| *விலங்கியல்* | — | திரு. தங்கராஜா |
| *தூய பிரயோக கணிதம்* | — | திரு. கிருஷ்ணா |
| *பொருளியல்* | — | திரு. சின்னத்தம்பி |
| *கணக்கியல்* | — | திதி. மரியதாஸ் |
| *வர்த்தகமும் நிதியும்* | — | திரு. தேவா |
| *புவியியல்* | — | திரு. வேலா |
| *இந்து நாகரீகம்* | — | திருமதி. அருள்நங்கை |
| *அளவையியல்* | — | திரு. S. S. மனோகரன் |
| *தமிழ்* | — | திரு. குழந்தை |
| *அரசியல்* | — | திரு. ம.:றூப் |
| *வரலாறு* | — | பிரபல ஆசிரியர் |

**ஆண்டு 4 முதல் ஆண்டு 11 வரை சகல பாடங்களும்**
**தனித்துவம் மிக்க ஆசிரியர்களினால் ஒருங்கிணைந்த சேவை**

---

*Distributors of Leyden*
*Products & Dealers*
*in Textiles.*

**Leyden**
**Garments**

*249, Power House Road,* *Jaffna.*

*T. P.* **22039**

---

சமூக ஒளிக்கு
எமது நல்
வாழ்த்துக்கள்

Chunnagam Ceramic

**V. K. Rajaratnam**

★

*95, Stanley Road,* *Jaffna.*

# Duco Dulux Pentalite

*WORLD CLASS PAINTS*
*MAIN DISTRIBUTOR FOR*
*JAFFNA DISTRICT*

# The Jaffna Paint House

21, Clock Tower Road,
Jaffna.

சிறந்த முறையில் வீடியோ
படம் பிடித்திட

## வீடியோ விகொன்ஸ்

353 C, மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்.
(வெலிங்டன் சந்திக்கும் பெருமாள்
கோவிலுக்கும் இடையில்)

ஒளிப்பதிவாளர்: சி. இராஜராஜன்

*திருமண வைபவங்களுக்கேற்ற*
காஞ்சிபுரம், மணிப்புரி, பட்டு
வேட்டி, பேபி சூட், சேட்டிங்
சூட்டிங், புதிய டிசையின்
சாறி வகைகள் பிளவுஸ்
துணிகள் யாவற்றையும்
பெற்றுக்கொள்ள புதிய
ராசியான ஸ்தாபனம்

## ராசி சில்க்ஸ்

70, நவீன (சந்தை உட்புறம்)
யாழ்ப்பாணம்.

# Pushpa Trades

"Essence House"

*Importers General Merchants*
*Wholesale & Retail Dealers in*
*All Varieties of Essences Colouring*
*Matters Bakery Products &*
*Groceries*

MANIL

*131, Dam Street, COLOMBO 12* — *T. P.* **36293**
*11/4A Stanley Road, JAFFNA.* — *T. P.* **24237**

யாழ் நகரில் புதிய படங்களின் வீடியோ படப் பிரதிகளை உடனுக்குடன் பெற்றுக் கொள்ளவும். தரமான முறையில் றெக்கோடிங் செய்து கொள்வதற்கும். தமிழ், ஆங்கில ஹிந்திப் படங்களை வாடகைக்குப் பெற்றுக் கொள்வதற்கும்.

## குணம் வீடியோ சென்ரர்

42, மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்.

தொலைபேசி: 23665

*With The Best Compliments From,*

## New Lanka Traders

222, Stanley Road
Jaffna. (Ceylon)

சமூக ஒளிக்கு எமது நல்லாசிகள்

Cool Bar & Coffee Bar

## LINGAM

*52, CLOCK TOWER ROAD,*
*JAFFNA.*

உங்கள் ஆக்க பூர்வமான முயற்சிகளில் நாமும் இணைகின்றோம்.

ஐம்பது ஆண்டுகளாக யாழ் நகரில் முதன்மை பெற்ற ஸ்தாபனமாக விளங்கி இணையற்ற சேவை செய்து வரும் பாரத் ஸ்ருடியோ தாபனத்தார்பொன் விழாவில் காலடி வைக்கும் இவ் வேளையில் வாடிக்கையாளர் அனைவருக்கும் தமது நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறார்கள்.

சிறந்த புகைப்படங்களுக்கு
அன்றும்.... இன்றும்... என்றும்....

## பாரத் ஸ்ருடியோ

கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.




சைவப்பிரகாச அச்சியந்திரசாலை